T. 3037

Government of Madras.

©

# MADRAS
## GOVERNMENT ORIENTAL SERIES

*Published under the authority*
*of*
*The Government of Madras.*

General Editor :
**Sri T. CHANDRASEKHARAN, M.A., L.T.,**
*Curator, Government Oriental*
*Manuscripts Library, Madras.*

**No. CLXXIV**

# திவ்ய ப்ரபந்த அகராதி

# DIVYA PRABANDHA AKARĀDI

*Edited by :*

Vidvān Sri. T. RAMAKRISHNA AIYANGAR,
ŚIROMANI.

**GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY,**

**MADRAS.**

1961

**Price Rs. 4-75.**

PRINTED AT
THE DARWIN PRINTING WORKS, MADRAS-8.

# INTRODUCTION

The public are perhaps aware of the fact that the Government of Madras have launched upon a scheme of publication of rare manuscripts treasured in two premier Institutions of this State, namely, the Madras Government Oriental Manuscripts Library, Madras, and the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore. Financial help has also been extended to Dr. U. V. Swaminatha Iyer Library, Adyar, Madras, for similar purpose. Though the publication of rare manuscripts was started as eary as 1909 by this library, only 12 works were taken up for publication till 1942. Of these, the printing of three works has not yet been completed.

Only in the year 1949-50 a regular scheme for the publication of manuscripts was prepared and accepted by the Government of Madras under the MADRAS GOVERNMENT ORIENTAL SERIES. This scheme included the manuscripts in all the South Indian Languages in which there are manuscripts in the library. Till now 158 manuscripts in different languages have been printed. Of these, 35 manuscripts are from the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore, and three from Dr. U. V. Swaminatha Iyer Library, Adyar. In addition, four manuscripts, three from this library and one from Dr. U.V. Swaminatha Iyer Library, Adyar,are in the press.

All the munuscripts under the Madras Government Oriental Series were edited by various scholars drawn from different learned institutions. The publication of manuscripts under the Madras Government Oriental Manuscripts Series was resumed in the year 1950-51. All the manuscripts published under this series before 1942 were in Sanskrit. But since 1950-51 the manuscripts in other languages also were included. These are edited by the Curator with the assistance of

the Pandits in the respective languages. Till now 60 works have been printed including 51 works since 1951.

The Government of India also have decided upon a programme of printing rare and useful manuscripts in the different languages of India. For this purpose the Ministry of Scientific Research and Cultural Affairs has come forward with grant-in-aid for some of the manuscripts libraries maintained by the State Governments and also for certain reputed private libraries. In the year 1959-60, the Government of Madras, in G.O. No. 81859, E6/59-15, Education dated 5th January, 1960, sanctioned the publication of the following seven manuscripts.

1. Tanippādarrirattu.
2. Kēraladēśa Varalāru.
3. Kattabomman Varalāru.
4. Kalambakakkottu.
5. Uttara Rāmāyaṇa Nāṭakam.
6. Yāpparuṅkalam.
7. Palamolittirattu.

Of these, the last one was dropped as it was found to contain a large number of colloquial terms. The printing of the other six manuscripts has been completed in the Madras Government Oriental Manuscripts Series as numbers 55, 56, 67, 68, 69, and 66.

During the year 1960-61 the Government of Madras have sanctioned in Memorandum No. 47522-E6/60-9 Education, dated 30-12-60, and in G. O. No. 2749 Education, dated 31-12-60 the publication of the following manuscripts.

## TAMIL

1. Śivapurāṇaditōttiramañjari.
2. Tiruvāymoli-Ittupravēśa Saṅgraham.

3. Vētāḷakkathai.
4. Homer's Iliad.
5. Saptarishi Nāḍi-Kanyā Lagnam.
6. Kunṟakkuḍi Kumaraṉ pēril [Kīrttanaikaḷ.
7. Divya Prabandha Akarādi.

## PERSIAN

8. Tarikh-i-Hafeezullakhan.
9. Bahare-i-Azumzahe.
10. Sawanihat-i-Mumtaz.

## SANSKRIT

11. Nyāyaratna Dīpāvali.
12. Nyāyasāra.
13. Stotrārṇavam.
14. Brahmasiddhi.

## CATALOGUES

15. Triennial Catalogue of Tamil Mss. Vol. 12.
16. do 13.
17. Descriptive Catalogue of Marāṭhi Mss. Vol. 3.

The Government of India will be contributing 50% of the cost for the printing of the above works, which has to be completed by the end of March, 1961. With the exception of Brahmasiddhi in Sanskrit and the Catalogue of the Marāṭhi manuscripts, the other works may be printed before the end of the financial year. Except the catalogues and Stotrārṇava in Sanskrit, all the other works have been edited by outside scholars and hence they have been issued under the Madras Government Oriental Series as numbers 166 to 177. Stotrārṇavam in Sanskrit is edited by the Curator himself under the Madras

Government Oriental Manuscripts Series as number 70.

The Government of Madras have constituted an Expert Committee for each South Indian Language in which there are manuscripts in the Government Oriental Manuscripts Library, for the purpose of selecting rare and important maunscripts for publication in the Madras Government Oriental Series. Till now the following number of manuscripts has been published in different languages.

| | | |
|---|---|---|
| Tamil | - | 34 |
| Sanskrit | - | 23 |
| Telugu | - | 20 |
| Malayalam | - | 20 |
| Kannada | - | 14 |
| Persian | - | 8 |
| Arabic | - | 1 |

Under the same series, the number of works published from the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore is as follows.

| | | |
|---|---|---|
| Tamil | - | 12 |
| Sanskrit | - | 10 |
| Telugu | - | 5 |
| Marāṭhi | - | 6 |

The Dr. U. V. Swaminatha Iyer Library, Adyar has published under this series three Tamil works.

An Editorial Committee has been formed under the orders of the Director of Public Instruction, Madras, for selecting manuscripts in different South Indian Languages for publication in the Madras Government Oriental Manuscripts Series. The number of manuscripts published by this Library in this series is as follows:—

| | | |
|---|---|---|
| Tamil | - | 21 |
| Sanskrit | - | 18 |
| Telugu | - | 7 |
| Malayāḷam | - | 9 |
| Kannada | - | 7 |
| Marāṭhi | - | 2 |
| Persian | - | 3 |

All the manuscripts in this series are edited by the Curator of this library with the help of the staff in different languages except the Stotrārṇavam that is edited by the Curator himself.

The present edition of Divyaprabandha Akarādi is based on the following two manuscripts:

1. A palm-leaf manuscript preserved in the library described under No. R. 805. The size of the manuscript is 17½ x 1¼ inches, consisting of 99 folios having 8 lines on a page. This was presented in the year 1924-25 by the Secretary to the Trustees of the Sri Yogi Parthasarathi Aiyangar's Charities,Triplicane Madras.

2. A palm-leaf manuscript preserved in this library described under No. R. 806. The size of the manuscript is 18 x 1⅛ inches, consisting of 43 folios having 6 lines on a page. This also was presented in 1924-25 by the Secretary to the Trustees of the Sri Yogi Parthasartahi Aiyangar's Charities.

This is a Tamil Dictionary different from similar Tamil Dictionaries available in print and it gives the meanings of the words in the commentaries of the Divyaprabandha.

Some of the manuscripts taken up for publication are represented by single copies in the library

and consequently the mistakes that are found in them could not be corrected by collating them with other copies. The editors have, however, tried their best to suggest correct readings. The wrong readings are given in round brackets. When different readings are found, they have been given in the foot-notes except in the case of a few books in which the correct readings have been given in the foot-note or incorporated in the text itself in square brackets.

The Government of India and the Government of Madras have to be thanked for financing the entire scheme of publication although there is a drive for economy in all the departments. My thanks are due to the members of the Expert Committee and the Editorial committee who spared no pains in selecting the manuscripts for publication. I have also to thank the various editors, who are experts in their own field, for readily consenting to edit the manuscripts and see them through the press. The various presses that have co-operated in printing the manuscripts in the best manner possible also deserve my thanks for the patience exhibited by them in carrying out the corrections made in the proofs.

It is hoped that the Government of India will be continuing their financial grant to this library year after year for undertaking the printing of other manuscripts.

MADRAS,
21st February, 1961.

T. CHANDRASEKHARAN,
*Curator,*
*Govt. Oriental Manuscripts Library.*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

# முன்னுரை

திருமகள் கேள்வனால் ஆட்கொள்ளப்பட்ட மெய் யடியார்கள் தமது அநுபவத்தைப் பிற்பட்ட நம்போலியரும் பெற்று உய்யுமாறு அருளிய நூல்கள் அளவிறந்தன. அவற்றுள் "பாலாழி நீகிடக்கும் பண்பையாங் கேட்டேயும் காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" (பெரியதிருவந் 34.) என்றபடி பக்தி பரவசமாய்ப் பாடிய ஆழ்வார்களுடைய அருளிச் செயல்கள் ஆன்றோரால் அநவரதமும் அநுஸந்திக்கப்பட்டுத் தனிச்சிறப்புடன் கொண்டாடப்படுகின்றன. அவற்றின் ஆழ்பொருள்களை யறிவது எளிதன்று. அவற்றையறிந்து கொள்ளுமாறு சுவையே வடிவெடுத்த பல வியாக்கியாநங்களை ஆசாரியர்கள் அருளியுள்ளனர். வடமொழியில் பிரம்மஸூத்ரபாஷ்யம் போலக் கம்பீர நடைபோட்டுச் செல்லும் அவைகளையறிவதும் தற்கால மக்களுக்கு அஸாத்தியமாயிருக்கிறது. வடமொழி விரவியது மாத்திரமன்று; அக்காலத்தில் வழக்கிலிருந்து தற்சமயம் வழக்காறொழிந்த அர்த்தபுஷ்டி வாய்ந்த பல தீஞ்சுவைச் செந்தமிழ்ச் சொற்களும் கலந்திருப்பது அவற்றை மிகவும் அருமைப்படுத்தி விட்டது.

செந்தமிழ்ப்பாக்கள் வேதாந்த விழுப்பொருளை உணர்த்தும் ஆற்றைக் காட்டும் இவ்வரிய பெரிய உரை நூல்கள் பாக்கியம் படைத்த பைந்தமிழருக்குக் கிடைத்திருந்தும் அவற்றை ஆண்டநுபவிக்கத் தெரியாதிருப்பது எவ்வளவு வருந்தத்தக்கது! இந்நிலையில் அருளிச்செயல்; உரைகள் என்னுமிரண்டு பெரிய பொக்கிஷங்களில் நுழைந்து, விரும்பியபடி எல்லோரும் அங்குள்ள பொருள்களைப் பெற்றுய்யுமாறு நமது அரசாங்கத்தார் எங்கோ ஒரு மூலையிற் கிடந்த திறவுகோலை எடுத்துத் திருத்தி யச்சிட்டு

இதோ தருகின்றனர். ஞானத்தமிழ் நடைபயிலும் நாட்டிற் பிறந்த செல்வர்கள்; இனி, நற்பொருள் கண்டு நலம் பெறுவர்களாக!

சென்னை அரசாங்கக் கையெழுத்துச் சுவடி நிலையத்திலிருக்கும் R.No.1464. R.No. 1465. ஆகிய ஏடுகளிரண்டும் ஒன்றுயிணைந்து புத்தகவடிவில் இன்று வெளிப்படுகின்றன. தமிழகராதி என்னும் பெயருடன் காணப்படுமிவை திவ்யப்ரபந்தங்களுடையவும் வியாக்கியாநங்களுடையவும் பொருளைக் காண்பிப்பதிலேயே நோக்கம் கொண்டிருப்பது நன்கு புலனுதலின் "திவ்யப்ரபந்த அகராதி" எனப் பெயர் பூண்டன. இசைந்துள்ள இவ்வரிய திருநாமம் இச் சுவடி நிலையத் தலைவரவர்களால் சூட்டப்பட்டது. பரம ரஸிகரான அன்னுர் சூட்டிய திருநாமத்தை ரஸிகர்கள் ஏற்பார்களென நம்புகிறேன்.

இச்சுவடிகளில், முதற் குறிப்பிட்டது சுருக்கமாகவும் சிதிலமாகவுமுள்ளது. பின்னது, அதன் விரிவாகவும் நல்ல நிலைமையிலுள்ளதாகவுமிருந்தாலும் பிழையாக எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன. எழுத்தின் வடிவத்தைச் சில இடங்களில் பிற நூல்கள் கொண்டே நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. முதலில், முறையின்றி எழுதத் தொடங்கிப் பின்னர் அகராதிமுறை கைக்கொள்ளப் பட்டிருக்கிறது. இருந்தாலும் அகரத்தில் தொடங்கு மெழுத்துக்களாகத்தான் வரிசைப் படுத்தப்பட்டுள்ளது; உட்பிரிவுகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. திவாகரம் முதலிய நிகண்டுகளின் துணைகொண்டு பல அருஞ்சொற்கள் இவ்வேடுகளிற் சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்வகராதியில் வேறெங்குங் காணுத சில அபூர்வ பதங்கள் இடம் பெற்றிருப்பதை ரஸிகர்கள் காணலாம். பதங்களுக்கு அர்த்தம் சொல்லும் முறை வெகு விசித்ர மாயுள்ளது. கருத்துப்பொருள் ஸ்வாப்தேசப்பொருள் யாவும் அர்த்தமாய்க் குறிக்கப்படுகின்றன. கூடுமான

வரை அவற்றை விளக்கியுள்ளேன். ஸம்ஸ்கிருதத்திலேயே கூறப்பட்ட பொருள்களும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஓரிரண்டு இடங்கள் தவிர உதாஹரணம் கொடுக்கப்பட வில்லை. ப்ரகரணம் காட்டி விளக்கமின்றி விளங்காத இடங்களுக்கு நானறிந்த அளவிற காட்டி விளக்கம் செய்துள்ளேன். [ ] இந்தக் குறிகாட்டி எழுதியுள்ள விஷயங்கள் விளக்கத்திற்காக என்றுற் சேர்க்கப்பட்டன. இவ்வேட்டிலெழுதாது விடப்பட்டு, அவசியமானவை எனத்தோற்றிய சில பதங்கள்; எழுதும்போது நெஞ்சிற் பட்டவை; இந்நூலில் * இக்குறியுடன் சேர்க்கப்பட்டுள்ளன. வடமொழியறிந்தவராதலின் வடமொழிச்சொற்க ளதிகமிதி விடம்பெறவில்லை.

இவ்வகராதியிற் காட்டப்பட்ட பொருள்களின் சீர்மையை வியாக்கியாநக்ரந்தங்கள் ஸேவிக்கும் போது இதைவைத்துக் கொண்டு பார்த்தால் நனகு உணரலாம்.

இச்சுவடிகளை வெளிப்படுத்தும் பணியை மேற்கொண்ட க்யூரேடர் அவர்களையும், வெளிப்படுத்தி உதவிய சர்க்காரையும் வைணவர்கள் மாத்திரமன்றித் தமிழ்கூறு நல்லுலகமுழுதுமே பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

இந் நற்பணியில் அடியேனுக்கும் பங்கு கிடைக்குமாறு என்னை உபயோகப்படுத்திக் கொண்ட ப்ரஹ்மஸ்ரீ. க்யூரேடர்; தி. சந்திரசேகரன் அவர்கள்பா லென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

வாழ்க செந்தமிழ்! வாழ்க வையகம்!!

இங்ஙனம்,
திருமலை நல்லான்;
ராமகிருஷ்ணையங்கார்.

29, பெருமாள் முதலி தெரு,
சௌகார்பேட்டை,
மதருஸ்-1,
3-3-1961.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே ஸௌம்ய ஜாமாத்ரு முநயே நம:
ஸ்ரீமதே பக்திஸார முநயே நம:
ஸ்ரீலயை நம:

# திவ்ய ப்ரபந்த அகராதி

அபிவாத்யாஸ்மதாசார்ய பங்க்திமாபகவச்ச்ருதாம்,
வ்யுத்பத்த்யை த்ராவிடே சப்தே விலிகாமி யதாமதி.

(பொழிப்புரை). பகவான்முதல் ப்ரஸித்திபெற்ற நமது ஆசார்ய பரம்பரையை வணங்கித் தமிழ்ச்சொற்களின் பொருள் விளங்குவதற்காக யான் அறிந்த அளவில் எழுதுகின்றேன்.

*அ-ரக்ஷகனும் காரணப் பொருளாயும் உள்ள விஷ்ணு. ["அ" வ்வானவருக்கு "ம"வ்வானவரெல்லாம்: ப்ரமேயஸாரம் 1.] அகச்சுட்டு: அவன்,அவள், அது; புறச்சுட்டு: அந்நாள்; எதிர்மறை: அதர்மம்.

அஃகம்-தெப்பல்; தானியம்.

அஃகல்-விட்டுப் போதல். [அஃகாவே தீவினைகள் ஆய்ந்து: 3-ஆம் திருவந். 76] சுருங்கல். [அஃகாமற் கற்பவர் ஆழ்துயர் போயுய்யற்பாலரே: திருவாய். 4. 1. 11.]

அஃகு-தகுதி.

அஃகுதல்-சுருங்குதல்; விச்சேதம்; (இடையறுதல்) செறிகை.

அஃதே-அப்படியே; அப்படிப்பட்டதே; அதுவே. [கண்ணிணையு மரவிந்தமடியுமஃதே: திருநெடுந். 21.]

அஃறிணை - உயர்திணையல்லாதது. [மக்கள் தேவர் நரகர் என்னுமவர்களைக் குறிக்கும் சொல் உயர்திணை.]

அக்கப்பறை-அலைச்சல்.

அக்கரம்-அக்ஷரம்; (எழுத்து) கல்வி. ["அக்ஷராஸ்யன்" என்பது காண்க.]

அக்கரவு - இரக்கம்.

அக்கரை-அக்கறை; (கவனம்) ஆற்றின்மறுகரை; ஸம்ஸாரம்.[ஞானிகளுக்குத் தொலைவிலிருப்பதாய்த் தோற்றுதலின் ஸம்ஸாரம் அக்கரையாயிற்று. அக்கரை யென்னுமனத்தக்கடல்: பெரியாழ். 5. 3. 7.]

அக்கறை—கார்யம் செய்ய வேண்டிய அவசியம்; சிரத்தை.

*அக்காக்காய் - இது சிறு பிள்ளைகளைக் குழல் வாருவார் சீராட்டாகச் சொல்வது. [பெரியாழ். 2. 5. 1.]

*அக்காரம் - சர்க்கரை; மாமரம்.

*அக்காரக்கனி - சர்க்கரையினுலாகிய மரமொன்றுண்டாயின் அது பழுத்த பழம் போல இனியஞனை எம்பெருமான்; சோளசிம்மபுரத்து எம்பெருமான். [அக்காரக்கனியைஅடைந்துய்ந்து போனேனே: பெரியதிரு.8.9.4.]மாம்பழம்.

*அக்காரவடிசில் - சர்க்கரைப் பொங்கல். [அக்காரவடிசில் சொன்னேன்: நாய்ச்சி. 9. 6.]

அக்கிராமியம் - வெளிப்படையாய்ப் பச்சையாகச் சொல்லாது மறைப்பது. (அவையல் கிளவி)

அக்கு - எலும்பு [அக்கும் புலியினதளுமுடையார்: பெரியதிரு. 9. 6. 1.] சங்கு மணி. [அக்குவடமுடுத்தாமைத்தாலி பூண்ட அனந்தசயனன்: பெரியாழ். 1. 7. 2.]

அக்குமணிவடம் - சங்குமணிவடம்.

அக்நிநாஸிஞ்சேத் போலே- அஸங்கதம். [நெருப்பினுல் நனைத்தல்போலப் பொருந்தாதது என்றபடி: ஈடு, 1. 3. 8.]

*அகஞ்சுரிப்படுத்தல் - குறைத்தல். [ஈடு, 8. 2. 2.]

அகஞ்சுரிப்படுதல் - குறைதல்; ஸங்கோசப்படுதல். [ஈடு, 1. 4. 2.]

அகடு-வயிறு; [அகடுற முகடேறிப் பீலிமாமயில் நடஞ்செயும்: பெரியதிரு. 1.2.1.] நடு.

* அகப்படை - அந்தரங்க பரிகரம். [அகப்படையென்று மிடுக்கராயிருப்பாரைக் கூட்டிக் கொண்டு: ஈடு,10. 1. ப்ர.]

அகம்-சித்தம்; நெஞ்சு; உள்; இடம்; விலக்ஷணதாந்யம்; பாபம்; மரம்; மலை; நான்; [அகம் வகுத்துக் கொண்டிருந்தேன்: பெரியாழ் : 5.1. 5.] ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு; வயிறு. [அகஞரவுண்பனென்றுண்டு: 2-ஆம் திருவந். 22.]

அகம்படி-அந்தரங்க நியாம்யர்; அணுக்குத் தொண்டு புரிவோர்; உள்ளிடம். [திருவயிற்றினகம்படியில் வைத்து: பெரியதிரு: 11. 6. 8.]

அகம்படியர்-நிர்வாஹிகள்; அபிமானிகள்; அந்தரங்கர். [அகம்படியர் கிளர்ந்தால் அரசனுலும் அடக்கப் போகாதிறே: திருப்பா. 4. வியா.]

**அகம்படி வைத்த அரசு**-அந்தரங்க நியாம்யர் அமைத்த அரசு. [அகம்படி வைத்த அரசாயிருக்குமங்கு: ஈடு, 5. 8. 2.]

**அகமடை**-உள்மடை.

**அகமர்த்தம்**-ஆத்மா.

**அகமொடுக்கு**- முட்டுக்கோல்; கொள்கொம்பு.

**அகலம்**-நிலம்; (பூமி) பரப்பு; மார்பு; இடம்; ஏழனுருபு; [பெண்ணகலம் காதற் பெரிது: 3-ஆம் திருவந்.54.] வயிறு; ஸங்கற்பம். [பேரகலத்துள்ளொடுக்கும் பேராரமார்பனுர் ஓரகலத்துள்ளதுலகு: 3-ஆம் திருவந். 43]

**அகவலைப்படுத்தல்**-வலையிலகப்படுத்தல்; அகவலை-வலைக்குள்ளே; அகவிய(நெடிய) வலை. [ஈடு, 6. 2-9.]

**அகவாய்**-மனம், உள்ளிடம்.

**அகவி**-அதக்கி. (நெருக்கி)

**அகவுதல்**-மயிலொலித்தல்; அழைத்தல்; நெடிதாதல்.

**அகழ்ந்து போடுகை**-களைந்து போடுகை.

**அகற்றுகை**-விடுகை; பரவிய தாக்குகை.

**அகி**-இரும்பு; ஒருவகை மரம்; பாம்பு.

**அகிஞ்சனன்**-வறியன்; ஸாதநமில்லாதவன்.

**அகிஞ்சித்கரம்**-பயனற்றது.

**அகுகை**-புறப்பட விடுகை; ஆடுகை.

**அகைப்பு**-எழுகை; மேன்மை. [அகைப்பில் மனிசரை: 4-ஆம் திருவந். 38.]

**அங்கண்ணன்** - இளகின நெஞ்சை உடையவன்; [பந்தக கர்மங்களிலே பிரவர்த்தியா நின்ருலும் அங்கண்ணனுய்க் கொண்டு நிஷேதிக்கமாட்டாதே நிற்கும்: ஜிதந்தை. 3. வியா.] அழகிய ஸ்ᵔலபன்;அழகிய கண்களையுடையவன்;

[அங்கண்ணன் ப்பூச்சி காட்டுகின்ருன்: பெரியாழ். 2. 1. 8.] அதிசபலன். [அங்கண்ணனுண்ட என்னுருயிர்க்கோதிது: திருவாய். 9.6.6.]

**அங்கம்** - அவயவம்; வடிவம்; அடையாளம்.

* **அங்கன்** - மகன். [அங்கற்கிடரின்றி: 3-ஆம் திருவந். 65.]

**அங்காடிபாரிக்கை** - பருத்தி போடுகிறதற்கு முன்னே புடைவைக்குப் பணம்வாங்குகை; கடை பரப்பி விற்கப் பாரித்தல்; மனக்கோட்டை கட்டுதல். [கொம்பது பருத்தியாக அங்காடி பாரித்து: ஈடு, 9. 7. 5.]

**அங்காந்து** - வாயைத்திறந்து. [அங்காந்தவன் காண்மினின்ருய்ச்சியரால்: பெரிய திரு. 10. 2.1.]

**அங்காழி** - மெல்லிய மொழி.

**அங்கி** - நெருப்பு; சட்டை.

* அங்கிட்டு - அங்கே. [ஈடு, 2. 8. 11.]

அங்கோலம் - அழிஞ்சில் மரம்.

அச்சம்-பயம்.

அச்சன் - அச்சுதன்; ஐயன்; ஸ்வாமி.

அச்சில்லாக்காசு - முத்திரை இல்லாத காசு: செல்லாக் காசு.

* அச்சு - ஒரே மாதிரி இருத்தல்; உயிரெழுத்து. [ஈடு, 5. 4. 7.]

அச்சுத்தாலி - அச்சடித்தவைகளைக் கோத்துக் கழுத்திலணியும் ஆபரணம். [திருப்பா. 7. வியா.]

அச்சோ-இரக்கத்தைக் குறிப்பது; ஆச்சரியத்தைக் குறிப்பது; தாய் குழந்தையை அணைத்துக் கொள்ளும்படி அழைப்பது.

அசங்கதம்-பொய்; பொருத்தமற்றது.

அசம்-மூவாண்டு நெல்; ஆடு; பிறப்பற்றது.

அசல்-அன்னியம்.

அசல்பிளந்தேறிடுகை-ஒரு மரத்தைப் பிளந்து தெரியாதபடி மற்றொன்றை யதில் ஏறிடுகை; அந்யத்ர (மற்றோரிடம்) பெயர்ந்தேறும்படி பண்ணுகை. [ஈடு, 1.3.8. அர்ச்சிராதி 1. ப்ரகரணம்.]

அசலிட்டு-வேறுபடுத்தி.

அசலிடுகை-ஈசுவரனைவிட்டுச் சரமாவதியிலே போகை.

அசனி - வச்சிரம்; இடி.

அசிர்ப்பு-ஸந்தேஹம்.

அசுக்காட்டுகை - அநுகரிக்கை.

அசுணமா - ஒரு பக்ஷிவிசேஷம். [இசை இன்பம் நுகர்வது; விலங்கு என்பதும் உண்டு.]

அசும்பு-அசறு. [சேறு.]

அசுழம்-நாய்.

அசூயை-பொறாமை; தனக்கு ஹிதம் சொன்னவனுடைய உத்கர்ஷம் பொறாமை.

அசை - அவ்யயம்: சார்ந்து வரும் இடைச்சொல்; நேரசை, நிரையசை எனச் செய்யுளில் வரும் உறுப்புக்கள்.

அசைகை-நசையாலேவிடவும் மாட்டாதே ப்ரவர்த்திக்கவும் மாட்டாதே இருக்கை; ஸஞ்சரித்தல். [என்தலைமேலசைமின்கள்: திருவிருத். 31.]

அசைந்திடுகை-இளைக்கை.

அசையிடுதல் - அநுபவித்தல். [மாடுகள் உண்ட இரையை மீட்டும் கொணர்ந்து மெல்லுதலைக் கூறும் இச்சொல் பொதுவாக அநுபவித்தலைக் குறித்தது.]

அசைவற - பயம் இல்லாமல்.

அசைவிக்கை - பின்னிட்டோடப் பண்ணுகை.

அசைவு-சலனம்; ஸங்கோசம். [பழைய நிலைமையை இழந்ததால் ஒடுங்குதல்.

இளிவே யிழவேயசைவே: தொல்காப். பொரு. 253]

**அஞ்சம்**-அன்னம். (ஹம்ஸம்)

**அஞ்சல்**-சரணம்;பயப்படுதல். [அஞ்சல்-எதிர்மறைவியங் கோள். அபயமளித்துச் சரணுதலுக்கு ஆகிவந்தது. அஞ்சலஞ்சலென்கிலாத ஆண்மை யென்ன ஆண் மையே: கம்ப. பால.]

**அஞ்சலி** - பேதை; ஆவல்; கும்பிடுகை.

**அஞ்சனம்** - கண்ணுக்கிடும் மை; குற்றம்.

**அஞ்சனி**-காயா;[நாணற்புல்.]

**அஞ்சு** - ஐந்து. [அஞ்சிலறி யாதார் ஐம்பதிலும் தாமறி யார்: ஆர்த்திப்பிர. 38.]

**அஞ்சுகை** - பயப்படுகை; நசிக்கை.

**அட்டசோறு**-சமைத்த சோறு.

**அட்டல்**- ஜலமிச்ரமாகப் புசிக்கை; (நீரோடு உண வருந்துகை) தீர்த்ததா நம். (தண்ணீர் வழங்கல்)

**அட்டம்**-பக்கம். [அர்ச்சிராதி. 3 - ஆம் ப்ரக.]

**அட்டாலை**- துர்க்காவரணமண் டபம். (கோட்டை மதிலின் மேலுள்ள மண்டபம்)

**அட்டி**-போஜநம். (அஷ்டி)

* **அட்டை**-நீரிலுள்ள ஒருஜந்து. [ஆக்கமுண்டேல்அட்டை கள் போற்சுவைப்பர்: திரு வாய். 9. 1. 2.]

**அட**-கீழ்மகனை நோக்கித் தன் பெருமை தோன்றக் கூறும் சொல்.

**அடக்கம்**-அஃகுதல்;மனத்தை அடக்குதல்.

**அடங்க**-எல்லாம்.

**அடங்கட்டல்** - பட்டங்கட்டல்; அள்ளுக்கட்டல்.[அள்ளுக் கட்டலாவது பெட்டி முத லியவற்றை இறுக்குதல்.]

**அடங்கலர்**-சத்துருக்கள்.

**அடம்**-பொல்லாங்கு; பிடிவா தம்.

**அடம்பு**-அடப்பம் பூ. [பெரிய திரு. 6. 7. 9.]

**அடர்த்தல்**-மேலிடுதல்; நெருக் கல். [ஆர்க்கடலாம் செவ் வேயடர்த்து: பெரியதிரு வந். 69.]

**அடல்** - மிடுக்கு; யுத்தம்; கொல்லுகை;பகை; பாதித் தல்; சமைத்தல்.

**அடலை** - வெண்பொடி; சாம் பல்; போர்.

**அடி**-ஐசுவரியம்; பாதம்.

**அடிக்கழஞ்சுபெறுதல்** - மிக்கு மதிக்கப் பெறல். [ஒரு அடிக்குக் கழஞ்சு பொன் பெறுதல்.]

**அடிக்கழிவு**-தப்பு. [ஈடு, 6. 2. 6.]

**அடிக்காட்டுகை** - அள்ளிப் பிடிக்கை.

* **அடிக்குடில்** - அடிமைப்பட்ட குடும்பம். [அடியோங்க ளடிக் குடில்: திருப்பல். 10.]

அடிக்கொதித்தல் - அடிச்சுடுதல்.

அடிக்கொள்ளுதல் - அடிக்கோலுதல். (ஆரம்பித்தல்)

அடிக்கோலுதல் - ஆரம்பித்தல்.

[அடிக்கோலி ஞாலத்தாள் பின்னும் நலம் புரிந்ததென்கொலோ: 2-ஆம் திருவந். 82.]

அடிகொட்டுகை - காற்பிடிக்கை. [நாய்ச்சி. 4. 1.]

அடிச்சி - வெள்ளாட்டி.

அடிசிற்பானைபோலே - பற்றுப்பானை போலே: அதாவது பற்றறுதேயிருக்கை.

அடித்தூண் - இலக்குக் குறியிட்ட எல்லை; அடிமரம்.

அடித்தூறு - அடிக்கட்டை.

அடித்தேறு - அநியாயம்.

அடிதாறு-பாதரேகை;மரவடி.

[நிழலுமடிதாறு மானேம்: பெரிய திருவந். 31.]

அடிதொழுகை - வணங்கி வழிபடுகை.

அடிநிலை - பாதுகை.

[அடிநிலையீந்தானைப் பாடிப் பற: பெரியாழ். 3.9.6.]

அடிப்பட்ட - ஸாராம்சமான; கீழ்ப்பட்ட,

அடிப்பாடு - வழி; [போட்கன் மிதித்த அடிப்பாட்டில் : நாய்ச்சி.13.5.] உறுதி நிலை. [ஈடு, 6.3.3.] வரலாறு. [திருநெடுந். வியா.]

அடிப்பற்றின - ஸாரமான.

[4. 6. 9. ஈட்டில் "அடிப்பற்றின மருந்தன்றோ?" என வந்துள்ளது. திருவடிகளைப் பற்றின மருந்து என்றும், ஸாரமான மருந்து என்றும் அதற்கு இரண்டு பொருள்கள் கூறுவர்.]

அடிமலர் - அடித்தாமரைப் பூ.

அடியறிவார் - உற்பத்தி மூலம் அறிந்தவர். (காரணமறிந்தவர்)

* அடியனேன் - அடியேன்.

[அடியனேனும் வந்தடியிணையடைந்தேன்: பெரிய திரு. 5. 8. 3.]

அடியாட்டி - வெள்ளாட்டி.

அடியுடைமை-மூலதனம்; ப்ராதான்யம்.

அடியுடையார் - திருவடிஸம்பந்தமுடையார்; ஆஸ்பதமுடையார்.

அடியுறை - திருமுன் காணிக்கை. [எம்பெருமானுக் கடியுறையென்று: பெரியாழ். 4.3.9.]

அடியொற்றுகை - அநுஸரிக்கை. (பின்பற்றுதல்)

அடிவீழ்ச்சி - திருவடிகளிலே விழுந்து வணங்கல்.

[அடிவீழ்ச்சி விண்ணப்பம்: நாய்ச்சி. 8. 7.]

* அடுக்கும்-தகும். [ஈடு, 1. 2. ப்ர.]

அடுகு - அடுக்குச்சட்டி.

அடுகுவளம் - அடையவளைந்தான்சிறப்பு:நாநா பதார்த்த

ஸஹிதமான பல்வகைப் பொருளோடு கூடிய) சிறப்பு; அடுக்குச்சட்டி; நல்ல போஜநம்.

**அடுகை** - சமைக்கை; வெல்லுகை; தண்ணீர் வார்க்கை; இடுகை.

**அடுசோறு**-சமைக்கும் சோறு.

**அடுசரம்**-கொலையம்பு.

* **அடுத்தேறு** - அதிகம். [ஈடு, 3.8.9.]

**அடுதல்**-பாதித்தல்; சமைத்தல்.

**அடை**-விசேடணம்: (அடைமொழி) ஓலை; இலை; (இதழ்) கனம்.

**அடைகட்ட**-பட்டங் கட்ட.

**அடைகுவளம்**- அடைய வளைந்தான் சிறப்பு.

**அடைகொடுபாழ்போக்குகை** - பூசை கொண்டு கைவிடுகை; அடைக்கலம் கொண்டு கைவிடுகை. [ஈடு, 5. 10. 5.]

* **அடைத்தேற்றல்**- மேட்டுமடை; ஆகந்துகம்; இயல்பாயன்றி இடையே வந்தது. [ஈடு]

**அடைப்புண்ணும்** - அந்தர்ப்பூதமாம். (உள்ளடங்கும்) [ஈடு, 1.1.4.]

**அடைபுடை** - அஹோராத்ரம்; [அல்லும் பகலும்: பெரிய திரு. 4.7.3. வியா.]

**அடைமதிட்படுத்தல்** - அடைத்து அமிழ்த்துதல். [பதிற்றுப். 16. உரை.]

**அடைய**-பரிக்ரஹிக்க; (கைக்கொள்ள) முழுவதும்.

**அடையார்**-சத்துருக்கள்.

**அடைவுசொல்**-பிராஸம்.

**அடைவு**-ஸம்பந்தம்; முறை; யோக்கியதை. [ஞானத்துக்கு அடை வில்லாத சதுர்த்த வர்ணத்திலேபிறந்தார்: ஈடு, அவ.]

**அண்டம்**-முட்டை; ஆகாசம்; பரமபதம்; பூமி; புழுகு சட்டம்.

**அண்டர்**-தேவர்; இடையர்.

**அண்டை**-ஸமீபம்; வரம்பு. [அண்டை கொண்டு கெண்டை மேயும்: திருச்சந். 47.]

* **அண்டைகொள்ளுதல்**- துணைகொள்ளுதல்.

**அண்ணணித்து**- மிகவும் பக்கத்தது.

[அண்ணணித் தூராயின்: கலித்தொகை. 15.8. 36.]

**அண்ணல்**- ஸ்வாமி; முல்லைநிலத் தலைமகன்.

[தொல்காப்.அகத். சூ. 20. நச்சி. உரை.]

**அண்ணுத்தல்**- மேலே பார்த்தல்; வாய் திறத்தல். [அண்ணுந்திருக்கவேயாங்கவளைக் கைப்பிடித்த; நாய்ச்சி. 11. 9.]

**அண்ணிக்கை**-ரஸ்ய பதார்த்தத்தைக் கண்டால் நாவில் நீருறுகை; தித்தித்தல்.

[அண்ணிக்கு மமுதூறும்: கண்ணிநுண். 1.]

**அண்ணிமை**-ஸமீபம்.

**அண்ணினமை**- கிட்டினமை.

**அண்ணுதல்**-கிட்டுதல்.

**அணங்கு**-தெய்வமகள்; விருப்பம்; காதல் நோய்; அழகு.

**அணங்குகை**- நோவுபடுகை.

**அணர்** - ச்மச்ருப்ரதேசம். மீசை முளைக்கும் இடம்.

**அணவல்**-அணுகுதல்; புல்லுதல். [செறிமண மாடக் கொடி கதிரணவும் திரு வெள்ளியங்குடி யதுவே: பெரிய திரு. 41. 2. 4.]

* **அணன்**-பொருந்தியவன். [சீரணனையேத்தும் திறம்: நான்முகன், 67.]

**அணு** - போக்யவஸ்துவில் ஸம்சயம்.

**அணுவாய்த்து**- போக்யவஸ்துவைப் பிரீதியாலே தொடவும் மாட்டாதே விடவும் மாட்டாதே சபலத்தைப் பண்ணுகை. அணு- விநோதம். [அணு வாய்த்துக் காலங்கழிக்க:ஈடு.1.5.]

**அணுர்**-ஸாஸ்நா: மிருகத்தின் கழுத்தில்தொங்கும் ஆடு சதை.[சென்றணுர் சொரிய: பெரியாழ். 3. 5. 8.]

**அணி** - அணிவகுப்பு: பந்தி பந்தியாக வகுக்கை; [4. 6. 1. ஈடு] ஆபரணம்; அழகு; அலங்காரம்.

**அணி கலங்க**-ஓலக்கம் குலைய.

**அணிகலன்**-ஆபரணம்.

**அணிலம்**-அணில். [சலமிலா அணிலம்: திருமாலை 27.]

**அணுக்கன்**-குடை; [அணுக்கனிட வேணும்: 4. 6. 2. ஈடு] அந்தரங்கன். [அவ்வவ்விடம் புக்கவ்வாயர்பெண்டிர்க்கணுக்கனாய்: பெரியாழ். 3. 2. 5.]

**அணுகுகை**-கிட்டுகை.

**அணுக்கடித்து**-அந்தரங்கத்தைப் பாவித்து.

**அணை**-மெத்தை; கரை.

**அத்தம்**-மறைபொருள்;ஹஸ்த நக்ஷத்திரம். [அத்தத்தின் பத்தா நாள் தோன்றிய அச்சுதன்: பெரியாழ். 1. 2. 6.]

* **அத்தலைப்பட்டு**-அங்கேபோய். [ஈடு, 9. 8. ப்ர.]

**அத்தன்**-சேஷி; சுவாமி; மறைபொருள் அறிவிப்பவன். [அறியாதன அறிவித்த அத்தா: திருவாய். 2. 3. 2.]

**அத்தாணி**-அருகிருப்பு; அந்தரங்கம். [அத்தாணிச் சேவகமும்; திருப்பல். 8.]

**அத்திரம்**-அஸ்திரம்; (எறிபடை) குதிரை; கழுதை; வேர்ப்பு.

**அத்திரி** - ஒட்டகம்; கழுதை; மலை; விண்; பரி; கணை; ஒரு முனிவர்.

**அத்து**-ஒரு சாரியைச் சொல்; [ஈடு, 1.3.9.] சிவப்பு; அரைநாண்; ஓசை: ஆகுக. [அத்தி தென வுத்திபுரியாள்: மெய்விரத. 12.]

அத்தைப்பற்ற-அதைக் காட்டிலும்.

அத்தோட்டை - அதனேடொத்த.

* அதக்குதல் - அடக்குதல். [மாவலியைக் குறும்பதக்கி: பெரியாழ். 4. 9. 7.]

அதகன்-மிடுக்கன். [உறுதுயர் தீர்த்த அதகன்: பெரியாழ். 2. 1. 9.]

அதர்-புழுதி; வழி.

அதலந்தை-துன்பம்; நீர்நிலம்.

* அதவுதல்-அடர்த்தல்: [அதவிப் போர்யானை யொசித்து: 2-ஆம் திருவந். 89.]

அதள்-தோல் [புலியின் அதளுமுடையார்: பெரிய திரு. 9. 6. 1.]

அதனிலும்பர்-அதற்கு மேலே. [திருவாய்.9.9.8.]

அதிதேசம்-முன்னர்க் கூறியதை மற்றென்றிலேற்றிக் கூறுதல். [ஈடு, 10. 10. 6.]

அதிபோஜநம்-அளவு கடந்து உண்ணல்.

அதிர்ந்திருக்கப்பெருமை-த்ருணீகாரம். (அலக்ஷ்யம் செய்தல்)

அதிஷ்டிகை - பீடிகை. (முகவுரை)

அந்தகன் - யமன்; குருடன்; கொல்லுகிறவன். [இராவணந்தகனை யெம்மானை,: பெரியதிரு. 2. 3. 7.]

அந்தகன்தண்ணீர்என்னும்படி - யமன் தீர்த்தப்ராயம் என்னும்படி. [வெவ்விய அந்தகனும் குளிர்ந்தவனுய்த் தோற்றும்படி: ஈடு, 4. 8.8.]

* அந்தகாலம்-மரண வேளை. [ஆர் வினவிலும் வாய் திறவாதே அந்த கால மடைவதன் முன்னம்: பெரியாழ். 4. 5. 3.]

அந்தணமை -பிராம்மணத் தன்மை. [குறிகொளந்தணமை தன்னை ஒளித்திட்டேன்: திருமாலை. 25.]

அந்தணர்-பிராம்மணர்.

அந்தப்புரபரிகரம்-பரிஜநம். [இராணியின் பணியாட்கள்: ஈடு, 10. 10. 7.]

அந்தம்-அழகு; கேடு; முடிவு; கஸ்தூரி; அவகாசம்; இடைவெளி; ஆகாசம்; நடு; அபாயம்; துக்கம்.

* அந்தரஜாதி-தேவர்; ஹீநஜாதி; [இந்த அந்தர ஜாதிகளைத் தன்னுடனே: ஈடு, 7. 4. 5.] ஆகாசத்திற்பிறக்கும் காற்று. [அந்தர ஜாதி காலிலே துகையுண்பதே: கால்-காற்று. ஈடு, 1. 4. 7.]

அந்தரப்பட்டு -அநர்த்தப் பட்டு.

அந்தரப்படுதல்-அநர்த்தப் படுதல்.

அந்தரம்-அவகாசம்; இடைவெளி; ஆகாசம்;அபாயம்; நடு; துக்கம்.

அந்தரி-துர்க்கை. [அந்தரி சூட்டக் கனக் கண்டேன்: நாய்ச்சி. 6. 3.]

அந்தலே- அநந்விதபாஷணம். (இயைபில்லாத பேச்சு.)

அந்தி-சந்தி வேளை:[அந்தியம் போதில் அரியுருவாகி யரியை யழித்தவனை: திருப்பல். 6.] ஸந்தியாவந்தனம்; [அந்தியாலாம்பயனெங்கள்: 1-ஆம் திருவந்.33. [இரவு; [அந்தி காவலன்: பெரிய திரு. 8.5.1.] செவ்வானம். [அந்திபோல் நிறத்தாடையும்: அமலனுதி. 3. ]

அந்தித்தல்-பொருந்துதல்.

* அந்திமஸ்மிருதி–சாகும் தறுவாயில் பகவானை நினைத்தல். [அந்திம ஸ்மிருதியில்லையாகில் ஆதிபரதனைப்போலே மானுதல் மரையாதலாமித்தனை: ஈடு, 4. 1. 10.]

அந்தை–ஒருவகை நிறை.

அந்தோ-உவகைக் குறிப்பு; இரக்கக் குறிப்பு. [அந்தோ வென்னுருயிரே: பெரியதிரு. 7. 2. 6.]

* அநாதன்–தனக்கு மேற்பட்ட நாதனில்லாதவன். [ஞாலம் விழுங்கும் நாதனை: திருவிருத். 79 ]

* அப்பணே-ஆணை.

அப்பர்-ப்ரகிருதி. (ஸ்வபாவம்) [பப்ப அப்பர் மூத்தவாறு: பெரியதிரு. 1. 2. 7. பெரியவர் என்னும் பொருளே ஏற்புடையதெனத் தோற்றுகிறது. "மூப்பை ப்ரகிருதியாக்கி அதிலே மூத்த படியாக வாயிற்றுச் சொல்லுவது" என்ற வியாக்கியாந ஸ்ரீ ஸூக்தியில் வந்த ப்ரகிருதி என்னும் சொல்லேக்கண்டு அதே பொருளாக ப்ரமிக்கப்பட்டுள்ளது.

"அப்பர் (பெரியவர்) மூத்தவாறு" என்ற சொற்களின் நயத்தைக் கொண்டு ஏனையோரைப் போலே இளமையிலிருந்து முதுமையுருது, பிறப்பிலேயே இயல்பாகப் பெரியவராயுள்ளவர் மேலும் மூத்தவாறு என்பதே வியாக்கியானத்தின் சுவைப்பொருள். அப்பர் - பெரியவர் என்ற பொருளாதலே "அப்பரே என அவரும்அடியேனென்ருர்" என்ற பெரிய புராணத்தாலு மறிக. திருநாவுக்கரசு சே. 182.]

அப்பன்-தகப்பன்; உபகரிப்பவன்; காரணபூதன்.

அப்புத்தட்டுகை - யுத்தத்திலே உகளித்துத் துடை தட்டுகை; தோள் தட்டுகை. [ஈடு, 5. 4. 7.]

* அப்பூச்சிகாட்டல் - கண்ணை இறுத்துக் கொள்ளுதல்; சங்கு சக்கரங்களைக் காட்டல்.

அபதானம்- பூர்வவ்ருத்தம்; (முன்பு நடந்த செய்தி) கபளம்.

அபயம்- அச்சமின்மை; அடைக்கலம்.

அபரம்-பின்பக்கம்.

அபலாபம்-அபஹ்நவிக்கை. [மறைக்கை]

* அபவர்க்கம்-முக்தி.

அபவரகம்-அரங்கு; திருவுண்ணாழி முதலான ப்ரதக்ஷிணம்.

அபக்ஷதர்மம்-ப்ரகரண விருத்தம். (ப்ரகரணத்துக்கு முரண்பட்டது.)

அபாச்ரயம்-ஆச்ரயம். (சார்பிடம்)

* அபிசரித்தல் - மந்திரப்ரயோகத்தால் பிறருக்குத் தீங்கிழைத்தல். [சத்துருக்கள், கிடந்தவிடமறிந்து அபிசரிக்கும்படி கொடி கட்டிக்கொண்டு கிடக்க வேணுமோ: ஈடு, 8.3.5.]

அபிமதவிஷயம் இருந்த இடத்தில் தண்ணீரென்று புகுருமா போலே - இஷ்டையான ஸ்திரீ (காதலி) இருந்த இடத்திலே தீர்த்தம் வேணும் என்று வியாஜத்தையிட்டு [பருக நீர் வேண்டும் என்றுசொல்லிக் கொண்டு] புகுமாபோலே.

அபியுக்தர்-ஸர்வஸம்மதர். [யாவரும் ஒப்பும் அறிஞர்.]

அபிஸந்தி-அபிப்பிராயம்; ஆசயம்; பாவம்.

அபிஸாரிக்கை-காமுகன் காமினியண்டைக்குத் தானே வருகை.

அம்-அழகு.

அம்புணத்தி-துர்க்கை.

அம்பரம் - கடல்; புடைவை; ஆகாசம்.

அம்பலம்-சாவடி; தர்மச் சாவடி; நிந்தை; [பழிச் சொல்]

அம்பு-கணை; நீர்; புயல். [மழை பொழியும் மேகம்]

* அம்பறுத்தெய்தல் - அம்பைத் தூணியினின்றும் வாங்கி யெய்தல். [அம்பறுத்தெய்ய வேண்டும்படி விவாதம் ப்ரஸ்துதமான ஸமயத்திலே: ஈடு, 1. 2. 7.]

அம்புதம் - மேகம்; தாமரை. [அம்புசம்என்பது அம்புதம் ஆயிற்று; வியாசர் வியாதரானது போலே.]

அம்புதி-கடல்.

அம்புயம்-தாமரை; புட்டில்; பொதி.

அம்புராசி-கடல்.

* அம்புலி-சந்திரன்.

* அம்புலிஅம்மான்-சந்திரன்.

அம்போதி-கடல்; கால்; (காற்று) பாட்டின் அருத்தம்.

அம்ம - இரக்கக் குறிப்பு. [அம்ம! ஓ! கொடியவாறே: திருமாலை, 37.] அசைச் சொல்.

அம்மணவன்-சமணன்.

அம்மணி-அரைமடி.

[நின்னம்மைதன் அம்மணி மேற்கொட்டாய் சப்பாணி: பெரியாழ்.1. 6. 3.] மதிப்பிற்குரிய மாதர்.

அம்மனே-அம்மே! வியப்புக் குறிப்பு.

[உடைந்ததும் ஆச்சிபால் மத்துக்கே அம்மனே: 3-ஆம் திருவந். 28.] அச்சக் குறிப்பு. [அம்மனே அப்பூச்சி காட்டுகின்ருன்: பெரியாழ். 2. 1. 1.]

அம்மனே-ஸ்வாமிநி; தலைவி. [சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்: திருப்பா. 10.] தாய். [அம்மனைமார் காணிலொட்டார்: நாய்ச்சி. 3. 3.]

அம்மா-ஸ்வாமீ! அதிசயக் குறிப்பு; உவப்புடன் கூடிய ஆர்வக் குறிப்பு. [அம்மாவென்னும் ஆர்வச் சொல்: பெருமாள் திரு. 9. 6.]

*அம்மை-தாய்; அழகு; அழகியமை: [அம்மைத் தடங்கண் மடவாய்ச்சியரும்: பெரியாழ். 3. 5. 3.]

அம்மைச்சுவடு- கர்ப்பவாஸம். [அம்மைச் சுவடோடே கூட அவன் படிகளை அநுபவித்துப் போகாநின்றேன் என்கிறது.]

அம்மைநாயன்-தாய் தகப்பன்.

அம்மான்-பூர்ணன்; ஸர்வேசுவரன்.

அம்மான்பொடி - சொக்குப் பொடி. [நாய்ச்சி. 3. 4. வியா.]

*அமஞ்சூழ்தல்- அமைத்துப் பரவுதல்; கீழ்ப்படுத்துதல். [அமஞ்சூழ்ந்தற விளங்கித் தோன்றும்: 2-ஆம் திருவந். 98.]

அமணக் கூத்தாடுவது-லஜ்ஜையின்றி நிர்வாணமாகக் கூத்தாடுகை; அக்கிரமம். [திருமாலை 34. வியா.]

அமணன் தலையோடே-[போடும் பழியெல்லாம்] நக்நனோடே-ஜைநனோடே. அதாவது போடும் பழியெல்லாம் ஜைநன்மீது விழுகை.

"அதாவது ஒரு கள்ளன், ஒரு பிராம்மணன் கிருகத்திலே கன்னமிட, அது ஈரச்சுவராகையாலே இருத்திக்கொண்டு [1]மரிக்க, அவ்வளவில் அவன் பந்துக்கள் வந்து பிராம்மணனைப் பழிதரவேணுமென்ன, இரண்டுதிறத்தாரும்[2] ராஜாவின் பாடே போக, அந்த ராஜாவும் அவிவேகியுமாய் மூர்க்கனுமாகையாலே "பிராம்மணா! நீ ஈரச்சுவரை வைக்கையாலே யன்றோ அவன் மரித்தான்; ஆகையாலே நீ பழி கொடுக்கவேணும்" என்ன, அவன், "எனக்குத் தெரியாது; சுவரை வைத்த கூலியாளைக் கேட்கவேணும்" என்ன, அவனை அழைத்து, "நீயன்றோ ஈரச்சுவர் வைத்தாய்; நீ பழி கொடுக்கவேணும்" என்ன, அவனும், "தண்ணீர் விடுகிறவன் [3]போரவிட்டான், என்றன் செய்யலாவதென்?" என்ன, அவனை யழைத்துக் கேட்க, அவனும், "குசவன்பெரும்பானையைத் தந்தான்; அதனாலே

நீர் [4]ஏறிற்று'' என்ன, அவனையழைத்துக் கேட்க, அவனும், "என்னால்வந்ததன்று; ஒரு வேச்யை போக வரத் திரிந்தாள்; அவளைப் பார்க்கிற [5]பராக்கிலே பானை பெருத்தது'' என்ன, அவளை அழைத்துக் கேட்க, அவளும், "என்னாலன்று; வண்ணான் புடைவை தாராமையாலே போக வரத் திரிந்தேன்'' என்ன, அவனை அழைத்துக் கேட்க, அவனும், "என்னாலன்று; துறையிற் கல்லிலே ஓர் [6]அமணன் [7]வந்திருந்தான்; அவன் போகவிட்டுத் தப்ப வேண்டிற்று'' என்ன, அந்த அமணனைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து, "நீயன்றோ இத்தனையும் செய்தாய்; நீ பழி கொடுக்க வேணும்'' என்ன, அவன் [8]மௌனியாகையாலே பேசாதிருக்க, [9]உண்மைக்கு உத்தரமில்லை, என்றிருக்கிறான்; இவனே எல்லாம் செய்தான் என்று ராஜா அவன் தலையை [10]யரிந்தான்.

1. மரிக்க–சாக, 2. ராஜாவின் பாடே - அரசனிடத்திலே, 3. போர - அதிகமாக, 4. ஏறிற்று - அதிகமாயிற்று, 5. பராக்கு - கவனக் குறைவு, 6. அமணன் - ஜைநன், 7. இருந்தான்-உட்கார்ந்திருந்தான், 8. மௌனி-பேசாத விரதமுடையவன், 9. உண்மைக்கு உத்தரமில்லை-உண்மையிற் குற்றமிருப்பதால், பதில் இல்லை. 10. அரிந்தான்-அறுத்தான்.

அமணானை-மதம் பிடித்த யானை; தனித்த யானை.

* அமணானைப்படுதல் - மதம் பிடித்த யானை போற் கட்டுக்கடங்காது திரிதல்.

அமயம்-பொழுது.

அமர்-யுத்தம்; யுத்தகளம். [ஸமரம்]

அமர்தல்-கிட்டுதல்; அணைதல்; பொருந்துதல்; இருத்தல்.

அமரர்-தேவர்கள்; நித்யஸூரிகள்.

* அமரர்க்கரையன் - இந்திரன். [பெரியதிருமொழி, 2.4.2.]

* அமரர்கோன்-இந்திரன். [திருவாய். 10. 2. 6.]

அமரல்-மிகுதி; பொலிவு; பெருமை.

அமரரும் முனிவரும்-கைங்கர்ய நிஷ்டரும், குண நிஷ்டரும்.

* அமருலகு-தேவருலகம் [அதுவோ நன்றென்றங் கமருலகோ வேண்டில்: பெரிய திருவந். 6. 7.]

அமலன்-ஹேய ப்ரத்யநீகன். (குற்றமற்றவன்) [அமலனாதிபிரான்: அமலனாதி. 1.]

அமலை-சோறு; உமை. (பார்வதி)

அமளி-ஆரவாரம்; கலகம்; படுக்கை.

* அமானவன்-விரஜையாற்றின் அக்கரையில் உள்ள

ஒரு நித்யசூரி. முக்தியடை வோர் அவரால் தீண்டப் பெற்றதும் ஸூக்ஷ்மசரீரம் நீங்கித் திவ்வியரூபம் ஏற் கின்றனர். [அமானவனும் நம்மைக் கரத்தாலே தீண் டல் கடன்:உபதேசரத்தின மாலை. 74.]

அமை-மூங்கில்[அமாவாசை.]

அமைக்கும்-தெவிட்டும்.

அமைத்தல்-சமைத்தல்;பக்குவ மாக்கல்; பொருத்தல்; வாய்த்தல்.

* அமைத்திருத்தல்- பாரித்திருத் தல்; வேண்டாதிருத்தல். [பெரியதிருவந். 48.]

அமைதி - பொருந்துகை; பொலிவு; பெருமை.

அமைவு-சமைவு; பொருத்தம்.

அய்ம்பால்-ஆண்பால், பெண் பால், பலர்பால், ஒன் றன்பால், பலவின்பால்; (மகளிரின்) ஐந்து வகை யான கூந்தல் முடி.

அய்யம்-ஸந்தேஹம்; பிச்சை.

அய்யர்-ச்ரேஷ்டர்.

* அய்யன்பாழி - சாஸ்தா கோயில். [அய்யன்பாழியில் ஆனை போர்க்கு உரித்தா மன்ருயிற்று:]

அயம்-ஸந்தேஹம்;நீர்; சேறு; குதிரை (ஹயம்); ஆடு (அஜம்); இரும்பு (அயஸ்).

அயர்வு-மறப்பு; அறிவு கலங் குகை.

அயர்வெய்தல்-அறிவு கெடல். [கலைப்படைதல்]

அயல்-அசல்; (அன்னியம்) பக்கம்.

அயல் நிற்றல்-பிரிவுக்கு அஞ்சி விலகாது நிற்றல். [அயல் நின்ற வல்வினை யையஞ்சினேன்: 1-ஆம் திருவந். 57.]

* அயல்மலை-பெரிய மலையைச் சார்ந்த சிறுமலை. [அயன் மலையடைவது அது கரு மமே: திருவாய். 2.10.3.]

அயலார்-அன்னியர்; பகைவர். [அயலார் காணவிருந்தி லையே: 1-ஆம் திருவந்.24.]

அயன்-(அஜன்) பிரமன்.

அயனம்-ஆண்டிற் பாதி; (உத்தராயணம், தக்ஷிணய நம்) வழி.

அயில்-கூர்மை; இரும்பு; வேல்.

* அர்ச்சாவதாரம்-திருமாலின் ஐவகைநிலைகளில் ப்ரதிமை யாயமைந்த நிலை. [செய்ய பரத்துவமாய்ச் சீரார்..... அர்ச்சாவதார மெளிதென் ருன்:திருவாய்மொழிநூற்றந் தாதி, 26.]

அர்த்தவாதம்- ஸ்துதி; [புக ழுரை] வெற்றுரை. [இவ் விஷயத்தில் அர்த்தவாத மில்லை; புறம்புள்ளவற்றில் அர்த்தவாதமல்ல தில்லை: ஈடு, 3. 9. 2.]

* அரக்கர்-ராக்ஷஸர். [தீமனத் தரக்கர்: பெரியதிரு. 4.3.5.]

அரக்கல்-அடக்கல்; தேய்த் தல். [எண்ணெயைத் தலையிலரக்கினுன்.]

அரக்காம்பல்-செவ்வாம்பல்.

*அரக்கி - ராக்ஷஸி. [அரக்கியை மூக்கீர்ந்தாயை: திருவாய். 2. 3. 6.]

*அரங்கம்-நாட்டியமாடுமிடம்; பெரிய பிராட்டியாருக்கு நிருத்தஸ்தானம். [நாச்சியார் திரு. 11. 9. வியா.] ஸ்ரீரங்கம்; ஆற்றிடைக் குறை; ஸபை; போர்க்களம்.

*அரங்கு-ஸம்ஸாரம். [அரங்கிலவனென்னை எய்தாமற் காப்பான்: நான்முகன், 30.] வீட்டின் உள்ளறை; நாடகமாடுமிடம்;சூதாடும்இடம்.

*அரங்கன்-ஸ்ரீ ரங்க நாதன். [அண்டர் கோன் அணியரங்கன்: அமலனாதி. 10.]

அரங்குதல்-அழிதல்; [அரக்கரங் கரங்க, திருச்சந்த.32] விச்சிந்ந மாதல். (இடையறுகை)

அரசன்-மன்னன்; வியாழன்.

அரசாணி-அசுவத்த தண்டம். (அரசங்கொம்பு) [அரசாணியை வழிபட்டு: பெரியாழ். 3. 8. 3.]

அரசிப்படுதல்-கோபப் படுதல். [சொல்லிலரசிப்படுதி நங்காய்: பெரியாழ். 2. 9. 10.]

அரசு-அரசாங்கம்; அரசன்; தலைவன். [சீரரசாண்டுப் பாரர சொத்து, பாரளந்த பேரரசே:திருவிருத்தம்,30.]

அரட்டன்-தீம்பன்; மிடுக்கன். [அரட்டு-மிடுக்கு. அரட்டமுக்கி: பெரியதிரு. 3. 4.10.]

அரட்டர்-சத்துருக்கள்.

*அரட்டுப்புரட்டு - பொய்புரட்டு.

அரண்-ரக்ஷை; கோட்டை.

அரணம்-ரக்ஷகம்; புகல். [திருவாய். 9. 1.4.]

அரணியமான- சோலைச்செறிவுடைய.

அரணியவான - சொற்செறிவை உடைத்தான; [அரணியவான கவிகளைக் கொண்டு: ஈடு, 3. 9. 3.] காவலையுடையவான.

அரணியன்-நல்ல நிரூபகன். [அடைக்கலமானவன் அரணிய னென்றவர்க் கன்புகூர்ந்தனை: கம்ப. வீடண. 2.]

அரந்தை-துக்கம். [ஒரு தனிவேழத் தரந்தையை: திருவெழுகூ. 12.]

அரம்பன்- தீம்பன்; நச்சினைத் தலைக்கட்ட வல்லவன். [அரம்பா உன்னை அறிந்து கொண்டேன்: பெரியாழ். 3. 1. 6.]

அரம்பை-தேவஸ்திரீ; ஓர் அப்ஸரஸ் ஸ்திரீ; வாழை.

அரமியம்-நிலா முற்றம்.(ஹர்ம்யம்)

அரலை-பொல்லாங்கு.

அரற்றுகை-கூப்பிடுகை.

அரன்-ஹரன். (சிவன்)

*அரவணை-பாம்புப் படுக்கை (சேஷசயநம்) ; ஸந்நிதிகளிற் கடைசியாக இரவு நேரத்தில் அமுது செய்விக்

கப்படும் சர்க்கரைப் பொங்கல்.

* அரவணையான்-விஷ்ணு.

* அரவதண்டம்- யமதண்டனை. [அரவ தண்டத்திலுய்யலு மாமே: பெரியாழ். 4. 5. 3.]

* அரவப்பகை-கருடன். [பெரியாழ். 3. 5. 11.]

அரவம்-சப்தம்; பாம்பு.

* அரவிந்தலோசனன்-தாமரைக் கண்ணன்; திருமால். [திருவாய். 6. 7. 10.]

அரவிந்தப்பாவை- திருமகள். [பெரியாழ். 5. 2. 10.]

* அரவு - பாம்பு. [அரவு நீள் கொடியோன்: பெரிய திரு. 9. 1. 8.]

அரா-பாம்பு.

அராவுகை- அரத்தால் தேய்த்தல்.

அரிஅணை-சிம்மாஸநம்.

அரி-ஹரி.

அரி-வண்டு; கண்ணிலுள்ள வரி; கண்; நமன்; நெருப்பு; நெடுவரை; சோறு.

அரிகுரல்-தழுதழுத்த குரல். [அன்றிலினரி குரல் பாவியேனுவியை யடுகின்றதே: பெரிய திரு. 8. 5. 9.]

அரிகுலம்- குரங்குத்திரள். [கலங்க மாக்கடலரி குலம் பணி செய்ய: பெரிய திரு. 1. 2. 2.]

அரிசம்-மிளகு; ஹர்ஷம். (மகிழ்ச்சி)

அரிசு-மிளகு.

அரிட்டம்- ஹிம்ஸை; வேம்பு; காக்கை.

அரிட்டன்-அசுரன்; [அரிட்டம்-தீங்கு; அது இழைப்பவனுதலின் அசுரனைக் குறித்தது]

அரிணம் - மான்; சிவப்பு; ஆணை; வெள்ளை.

அரிதம்-பச்சை; திசை.

அரிமிதி-ஸாரம்; [அரிந்து மிதித்தது; அதாவது புதியது என்பதும் உண்டு.]

அரிதல்-ஈர்தல்.

அரிமா-பகையாய் வந்த கேசி என்னும் குதிரை.

அரு - அரூபி; அந்தர்யாமி: ஆத்மா; ஸூக்ஷ்மம். (நுண்ணிது)

அருகல்-ஸமீபம்; [அவனென் அருகலிலானே: திருவாய். 1. 9. 2.] சுருங்கல். (குறைகை) [அருகலிலாய பெருஞ் சீர்: திருவாய். 1. 9. 3.]

அருகாழி-பவித்திரம்.

அருகுதல்-குறைதல்; கெடுதல்

* அருங்கலம்-ஆபரணம்.

அருங்குலை-இடிகரை. (ஸூக்ஷ்மமான குலை. குலை-கரை.) [அருங்குலைக் கீழ் விளை நிலம் போலே: ஈடு, 9. 9. 3. நோக்க வரிய கரை என்கிறது அரும்பதம்.]

அருச்சுனம்-மருது; வெண்மை.

அருட்கொடை-ப்ரேமத்தோடே கொடுக்கை; ஸர்வஸ்வ

தானம். [சொத்து அணைத்தும் அளித்தல். அதாவது அருள் மிக்குத் தன் திருமேனியைத் திருமால் அடியார்கட்கு அணைத்துக் கொள்ளலாம்படி அளிப்பது.]

அருணம்- மான்; சிவப்பு; பொன்.

அருணன்-சூரியன்; சூரியன் ஸாரதி; புதன்.

அருத்தன்-அர்த்தபாகன்:பாதி பாகம் கொண்டவன்.

* அருத்தித்தல்- பிரார்த்தித்தல். [நெடுமாலே உன்னை அருத்தித்து வந்தோம்: திருப்பா. 20.]

அருதல்-மிகுகை;நெருங்குதல்.

அருந்தல்-அருமை; புசிக்கை. [உண்ணல்]

அருந்தகம்- மல்லிகை; இருவாட்சி.

அருந்துகை-உண்கை; பாநம் பண்ணுகை.

அருந்தேவை- அருமையான விதி.

அருநிலம்-பயஸ்தானம்; பயப்படுமிடம். [ஈடு, 10. 1. ப்ர.]

அருமணவனானை - நல்ல ஆகரத்திலே பிறந்த ஆனை. [ஆகரம்-பிறப்பிடம். அருமணவன் என்பது ஒரு தீவு. திருநெடுந். 14 வியா.]

அருமனானை-நல்ல யானை.

அருவிடம்-ஆகாசம்.

* அருள்மாரி- திருமங்கை யாழ்வார்.

* அருளிச் செய்வது-பெரியோர்கள் சொல்வது. [நம் முதலிகள் அருளிச் செய்வது: ஈடு, அவ.]

அருளுதல்-கொடுத்தல்.

அரைகுலையத்தலைகுலைய - அவசர அவசரமாக. [அரைகுலையத்தலைகுலையஉணர்த்தியற்று வந்து விழுந்தான். ஈடு, 3. 1. 10.]

அரைத் தொடர்- இடையிற் பூணும் அரை நாண் சங்கிலி.

அரைப்பை-ஜாளிகை: அரையிற் கட்டிக் கொள்ளும் பணப்பை.

அரையாறு படுகை - குறைவு படுகை. [பிரிவிலுமரையாறு படாதபடி காணும்: ஈடு, 7. 3. 1.]

அல்-ப்ரளயராத்ரி; இரவு; மெய்யெழுத்து; எயில்.

அல்குல்-நிதம்பம். [புற்றரவல்குல் புன மயிலே: திருப்பா. 11. பூந்துகில் அரைசேரல்குல் காமரெழில் விழலுடுத்து: பெருமாள் திரு. 9. 7.]

அல்லல்-துக்கம்; பாபம்.

அல்லி-பூவில் உள்ள தாது; பூ இதழ்;தாமரை.[திருநெடுந். 15. வியா.]

* அல்லிமாதர் - இலக்குமி. [அல்லி மாதர் புல்க நின்ற: பெரிய திரு. 1. 7. 9.]

அல் வழக்கு- வழக்கல்லாதது; முறையற்றது. [அல்வழக் கொன்று

மில்லா அணி கோட்டியர் கோன்: திருப்பல்லாண்டு. 11.]

அலக்கல்- தாங்கல்; சுருங்கல்; ராசி.

அலக்கண் - துக்கம்.

அலக்கு-நெற் கதிர்.

அலக்குப் போர்- அந்யோந்யா தாரமான ஈட்டிக் கோல். [ஒன்றுக்கொன்றுஅண்டை யாக வைக்கப் பட்ட ஈட்டி களின் திரள். அலக்குப் போர் போலே ஒருவருக் கொருவர் புகலாய்: ஈடு, 5. 3. ப்ர.]

*அலகலகாக-தனித் தனியர்க. [அலகலகாக எண்ணிக் கொள்ளலாம்: ஈடு, 3. 6.5.]

* அலகளவுகாண்கை-அளவறு கை. [அலகளவு கண்ட சீராழியாய்க்கு: 1-ஆம் திரு வந். 10.]

அலகு-மகிழம் விதை; விதை. [மகிழல கொன்றே போல் மாறும் பல்யாக்கை: 1-ஆம் திருவந். 49.] அளவு; வாய்; ஈட்டியலகு; கதிர்.

அலகிடுதல்- துடைப்பத்தாற் பெருக்குதல். [திரு மகிழடி யிலேயிருந்து சருகைத் திருவலகிடாநிற்க: ஈடு, 9. 2. 1.]

* அலகுதிருப்பணி- திருவலகிடு கிறகைங்கர்யம்[ஈடு,10.2.7.]

அலகை-பேய்.

அலங்கல்-தாங்கல்; சுருங்கல்; ராத்திரி; தளிர்; அசைவு; இலங்கல்; பூமாலை; பரவச மாதல். [ஆலங்கலான மையிலாய்ந்து:நான்முகன், 78.]

அலசு-துக்கம்.

அலசுதல்-ஆயாஸப் படுதல்; அலைதல். [மரக்கலம் அல சாதபடி கடைந்த நொய்ப் பம்: திருப்பா. 30. ஆரு யிரப்படி வியா.]

* அலவலைமை - வாயில் வந்த படி உளறும் தன்மை. [அல வலைமை தவிர்த்த அழகன்: பெரியாழ். 4. 3 .5.]

அலத்தகம்- செம்பஞ்சுக் குழம்பு.

அலத்தை - செம்பஞ்சு.

அலந்தல் - அலைந்துழலுதல். [அலந்தேன் வந்தடைந் தேன் அடியேனை யாட் கொண்டருளே: பெரிய திரு. 9. 4.]

அலந்தலை - அலமாக்கை; அநந்வித பாஷாணம்; பொ ருந்தாது பேசும்படி யான கலக்கம். [இவள் பேச்சு மலந்தலையாய்: பெரி யாழ். 3. 7. 1.]

அலந்தலைமை - கஷ்டப்படுத் தல். [அலந்தலைமை செய் துழலுமையன்: பெரிய திரு. 4. 4. 3.]

அலந்தை - நீர்நிலை; துன்பம்.

அலப்பு - கொல்லுகை; துக் கம். [அலப்பாயாகா சத்தை நோக்கியழுவன் தொழுவனே: திருவாய். 5. 8. 4.]

அலம் - கலப்பை; (ஹலம்) போதும்; கூர்மை; மது; அழகு.

அலம்பல் – ஆரவாரம்; இகழ்தல்; தளும்பல்; கழுவுதல்; அலைத்தல்; அலைதல்; அலமருகை; தத்தளிக்கை; சுழலுகை; வருந்துகை.

அலம்பா - அலையச் செய்து; தளும்பும்படி செய்து. [செய்யா வென்னும் வாய்பாட்டு வினையெச்சம். அலம்பா வெருட்டா: பெரியாழ். 4. 2. 1.]

அலம்புதல் - அலைதல் [வண்டலம்பும் சோலை: திருவாய். 2. 8. 11.]

அலம்புரிதல் – போதுமென்னுமளவும் கொடுத்தல். [அலம்புரிந்த நெடுந் தடக்கையமரர் வேந்தன்: திருநெடுந். 6.]

அலமருகை - தடுமாறுகை. [வழி திகைத்தலமருகின்றேன்: திருவாய். 3. 2. 9.]

அலயம் - உமிழ்நீர்.

அலர் - பழி; மலர்.

அலர்தல்-பரவுதல்; மலர்தல்.

அலரெடுத்த வண்ணத்தான்- இந்திரன். [3-ஆம் திருவந். 97.]

அலரெழல் - பழிச் சொல்லல்.

அலவலை - பஹுஜல்பகன்: அதிகமாய்ப் பேசுபவன். [ஒளிப்பு மறைப்பின்றி ஸங்கோசமின்றிப் பேசுகிறவன். திருவேங்கடமுடையான் அலவலையாகாதே: பெரிய திரு. 5. 8. 9. வியா.]

அலவன் - பூனை; சந்திரன் ஆண் நண்டு. [பகுவாயலவன் முகநோக்கி: பெரிய திரு. 6. 7. 7.]

அலற்றுதல்-கூப்பிடுதல்; க்ரமமின்றிப் பேசுதல். [அயர்ப்பிலனலற்றுவன்: திருவாய். 1. 3. 10.]

அலறல் - கூப்பாடுபோடுதல்.

அலி - நமன்; சோறு; நறுவிலி; (ஒருமரம்) நெருப்பு; ஆணுமல்லாதது பெண்ணுமல்லாதது.

[அல்லா அலியுமல்லன்: திருவாய். 2. 5. 10.] பலராமன். [ஹலி-கலப்பையுடையவன்]

அலை - ஸமுத்திரம்; நீர்த்திரை.

அலைகொடுக்க - வியாபாரம் (இயங்கல்) கொடுக்க; கலவிக்கிடம் கொடுக்க.

அலைசு - சோர்வு.

அலைப்பு - அசைத்தல்; வருத்தம்.

அலைபண்பு - அழியும் நீர்மை ஸமுத்ரஸத்ரு சமான' பண்பு. [வினைத்தொகையாகக் கொண்டு முதற் பொருளும், உவமைத் தொகையாகக் கொண்டு இரண்டாம் பொருளும் கூறப்பட்டன.

அலைபணிமாறுகை - கூப்பிடுகை.

அலையம் - உமிழ்நீர்.

அலையெறிகை - நெடுந்தூரம் பரவுகை. [பரமபதத்திலும் சென்று அலையெறியும்படி: திருப்பா. 1. வியா. உள்ளோடு புறம்போடு வாசியறப் பரிமளம் அலையெறிகிறபடி: 9. 6. ஈடு]

அலையேறுகை - வீசுகை. (மிகுதியாய்த் தோற்றுகை)

அவ்யபதேச்யன் - பெரியோர்களால் பெயர் சொல்லிக் குறிப்பிடத் தகாதவன்; கிருமிகண்டசோழன்.

அவ்யவஹித்ன் - அந்தரங்கன்.

அவ்வருகு - அதற்குமேல்.

அவ்வை - தாய்.

அவ்வோ - அந்தந்த.

அவகாத ஸ்வேதம்போலே - நெற்குற்றும்போது உண்டாகும் வேர்வைபோல. [நெற்குற்றினால் வேர்வை தானே உண்டாகிறது. வேர்வைக்காக நெற்குற்றுவதில்லை. பகவானுக்குக் கைங்கர்யம் செய்தால் உவப்புத்தானே உண்டாகிறது; தனக்கு உவப்பு உண்டாகவேணுமென்பதற்காகக் கைங்கர்யம் செய்வதில்லை என்பது உவமை மூலம் விளக்கப்படுகிறது. அவகாதம்-குற்றுதல். ஸ்வேதம்-வேர்வை.

அவகி(ஹி)தன்-கவனம்உள்ளவன்.

* அவத்தம் - பொல்லாங்கு; [திருவாய். 10. 3. 9.] வீண்செயல். [பூண்டவத்தம்: பெரிய திரு. 2. 5. 2.]

அவம் - வ்யர்த்தம்; (வீண்) ப்ராமாதிகபாபம்; [அறியாமற் செய்த பாபம்]

அவபிரதம் - செய்யவேண்டியதைச் செய்து தலைக்கட்டினதும் செய்யும் ஸ்நாநம்: மங்களஸ்நாநம். [அவபிரதமாட்டிய அடுதிறலயோத்தியெம்மரசே: திருப்பல். 4.]

அவயம் - அபயம்.

அவலம் - சேஷ்டை இன்றி (செயலற்று)இருத்தல்; வடிவைப் பேணுமை. [கவலையோடவலம் சேர்ந்திருந்த: பெரியதிரு. 2. 7. 7.]

அவலை - துன்பம்; காடு; ஸ்திரீ. [அபலை]

அவனி - பூமி.

அவனியாளி - பூமிபதி [அரசன்]

அவஞேட்டை-அவஞேடு. [அவஞேட்டையநுபவத்திற்கு: ஈடு.]

அவஸ்தை - கர்ப்ப, ஜந்ம, பாலிய, யௌவந, ஜரா, மரண, நரகாவஸ்தைகள் ஏழு.

அவா - ஆசை; பக்தி.

அவாவுதல் - ஆசைப்படுதல்.

அவி - ஹவிஸ். [அக்நியில் தேவர்களுக்கு இடும் உணவு. மறையவர் வேள்வியில் வகுத்த அவி. நாய்ச்சி. 1. 5.]

அவிட்சி - அவகாசம்; அஸாவதானம்.

*அவிகாரி-வேறுபாடற்றவன். [ஈடு, 8. 3. 5.]

அவிடி - விநோதோக்தி; திரைச்சீலை.

அவிதல் - அணைதல்.

அவிர் – பிரகாசம்.

* அவிழ்தல் - நெகிழ்தல். [ஆப்பவிழ்ந்தும்: திருவிருத். 95.]

அவை - சபை.

அவைதிகர் - பாஹ்யர். [புறச்சமயிகள்]

அழக்கொடி-பேய்ப் பெண். [அழக்கொடியட்டான்:திருவாய். 2. 10. 9.]

அழகியது - அர்த்தாங்கீகாரம். [பாதி ஒப்புக்கொள்ளல்]

*அழகியான் -அழகுடையவன். [அழகியான் தானே அரியுருவன்தானே:நான்முகன், 22.]

அழகு-ஸௌந்தரியம்; கண்டசர்க்கரை; நல்வழி. [அழகு மறிவோமாய் வல்வினையைத் தீர்ப்பான்:பெரியதிருவந். 31.]

அழகு செண்டேறுகை-விளையாட்டுச் சாரிகை வருகை; அழகுகாட்டிக்கொண்டு புறப்படுகை.[ஈடு, 7. 3. 1.]

*அழகோலக்கம் - அழகு தோன்ற ஆஸ்தானத்தில் கொலு வீற்றிருக்கை. [ஆதித்தியன் ராஜ்யமித்தனையும் ராத்ரிக்கு அழகோலக்கமிருக்கப் போந்த வித்தனை: திருவிருத். 13. வியா.]

அழல்-தேஜஸ்; சௌர்யம்; நெருப்பு; கோபம்; கிலேசம். [எறிந்தென்னழலைத் தீர்வேனே: நாய்ச்சி. 13. 8.]

அழற்சி-கோபம்.

அழற்றி-கோபிக்கச் செய்வது.

அழறு-சேறு. [அழறலர் தாமரைக் கண்ணன்: திருவிருத். 58.]

*அழன்-பிணம்; [தொல்காப். எழுத். 354.] பேய். [ஈடு, 2. 10. 9.]

அழிஞ்சுக்காடு-பாலை நிலம். [பெருவிடாயனுனவன் அழிஞ்சுக்காடேறப் போகமாட்டானே: ஈடு,6. 2. ப்ர.]

*அழித்தழித்து - திரும்பத் திரும்ப. [திருநெடுந். 16. வியா.]

அழித்துக்கெடுத்து ஜீவிக்கப் பார்த்தல்-அழித்து மாறி வேண்டினதைக் கொண்டு புஜிக்க (அனுபவிக்க) நினைக்கை. கெடுக்கை - ஆபரணமாக்கிப்பூணுகை. [என்னுடைய ஸ்வாநுரூபமான வ்ருத்தியிலே அந்வயித்துஅழித்துக்கெடுத்து ஜீவிக்கப் பாராநின்றேன்: ஈடு, 1. 2. 6.]

அழித்து என்பதனால் வேண்டிய ஆடை அணி முதலியனகொண்டு இன்பந் துய்ப்பதற்காகக் கீழ்க் கூறிய நிதியைச்செலவழிப்

ப்பது சொல்லப்படுவதால் ஸாதநமாயிருத்தலும், கெடுத்து என்பதால் முன்னைய நிலையை மாற்றி விரும்பிப் பூணும் வகையில் வேறேருருவம் கொடுப்பது கருதப்படுதலால் பயனு யிருத்தலும் தோற்றுகின்றன. தோற்றவே ஸாதநமும் பயனுமாகக் கொண்டு எம்பெருமானைப் புஜிக்கப் பார்த்தல் என்பது பொருளாயிற்று.]

*அழிப்பன் - அழிப்பவன். [அழிப்பனூர் : பெரியாழ். 4. 8. 6.]

அழிதல்-தணிதல்.

அழிதசன் - துஷ்டஸ்பாவமுடையவன்.

அழியமாறுதல் -தன்நிலை குலைந்து வேறுபடுதல்.

*அழிப்பு-ஸம்ஹாரம். [கருமமழிப்பளிப்பு: 2-ஆம் திருவந். 5.]

அழிவுக்கிட்டவடிவு-தன் மேன்மையை நெஞ்சிற் கொள்ளாதே விட்டு நீர்மை நிலையைக் கொண்ட உருவம். அழிவுக்கு-இழிவுக்கு-இட்ட வடிவு கொண்ட கோலம். [அழிவுக் கிட்ட வடிவு தனக்கே ஆலத்தி வழிக்க வேண்டியிருக்கும்: ஈடு, 1. 9. 2.]

"அழிவுக்கிட்டவடிவம் - வ்யயத்து (செலவழிப்பு)க்காக ஸம்பாதித்த வடிவு: அதாவது ராஜாக்கள் ஸ்வார்த்தமாக (தங்களுக்காக) நல்ல பதார்த்தங் (பொருள்)களும் ஸம்பாதியா நிற்கச்செய்தே புறச் செலவுக்காகவும் சில ஸம்பாதிக்கு மாபோல ஆச்ரிதருடைய ஆபத்ரக்ஷணார்த்தமாகக் கொண்ட வடிவு" என்கிறது அரும்பதம்.

அழுகை-கண்ணீர் விடல்; பக்தியின் மெய்ப்பாடு. [அழுவன் தொழுவனே: திருவாய். 5. 8. 4.]

*அழுகுசிறை-சாகும் வரை கிடந்து அழுகியே போம்படியான சிறை. [இராஜபுத்ரன் அழுகுசிறையிலே கிடந்தால்: ஈடு, 1. 2. 1.]

அழுங்கிய-கூப்பிட்ட; அழுந்திய.

அழுங்குதல்-நோவுபடுதல். [அழுங்கிய வானையின் அருந்துயர்கெடுத்த: திருப். 2.]

அழூப்புகம்-சுவர்க்கம்.

அழும்புதல்-செறிந்து கலத்தல். [அமரவழும்பத்துழாவி யென்னுவி: திருவாய். 1.7.9.]

அழுவம்-நடு; போர்; பரப்பு; முரசு; துர்கம்; (கோட்டை) நடுக்கம்.

அழைக்கை-கூப்பிடுகை; பெயரிடுதல். [சீரிதரா வென்றழைத்தக்கால்: பெரியாழ். 4. 6. 2.]

அழைப்பு-கூப்பிடுதல். [அப்போதொழியுமழைப்பு: நான்முகன், 38.]

**அள்ளல்** - அடிவாங்கப்படாத சேறு; நிரயம்; (நரகம்) செறிவு. [அள்ளற் பொய்ந் நிலத்தே; அள்ளற்பயலை ஊர்கின்றது:திருவிருத்.100. 12.]

* **அள்ளிப்பறித்தல்**-வாரியெடுத்தல்.
[அள்ளிப் பறித்திட்டவன் மார்பிலெறிந்தென்னழலைத் தீர்வேனே: நாய்ச்சி. 13. 8]

**அளக்கை**-அறிகை; அளவிடல். [அன்றிவ்வுலகமளந் தாய்: திருப். 24.]

**அளகைக்கோன்**-குபேரன்.

**அளப்பரும்தன்மை**-உபமாந ரஹிதமான தன்மை. (ஒப்பற்றமை)
அளப்பு, அளக்கையாய் உபமாநமின்மையைச் சொன்னபடி.

* **அளப்பு**-அளக்கை; வீண் பேச்சு.

* **அளபெடை**-எழுத்து மாத்திரை மிக்கொலித்தல்.

**அளம்**-சேறு; செறிவு.

* **அளம்பூத்தல்**-உப்புப் பொரிதல். [உளுத்து அளம் பற்றின சுவர்:திருக்குறுந். 19.]

* **அளர்க்கம்**-தூதுளைக்கீரை.

**அளவர்**-உப்பமைப்பவர்.

* **அளவியன்ற** - அபரிச்சேத்யமான; (அளவு கடந்த) ப்ரமாணத்தில்வர்த்திக்கிற. [திருவாய்.1. 4. 11. வியா.]

* **அளவிலி**- அறிவில்லாதவன்.

**அளவிறந்த**-அபரிச்சேத்யமான. (கணக்கிட முடியாத)

**அளவு** - பெருமை; அறிவு; ஸமயம்; [ஈடு, 1. 4. 4.] ப்ரமாணம்;[அளவியன்ற அந்தாதி: 1. 4. 11. பன்னீ: வியா.]பரியந்தம்.[ஸர்வேச்வரனளவிலே பர்யவஸித்தன்றி நில்லாது: ஈடு, அவ.]

* **அளவுகாண்கை** - முடிக்கை; நசிப்பிக்கை. [பேயளவு கண்ட பெருமான்: 1-ஆம் திருவந். 3.]

**அளவுபடுதல்**-அற்பமாதல்.

**அளவுபடை**-சிறிய ஸேனை. [அளவு படைக்குப் பெரும் படை தோற்பது: ஈடு, 2. 4. 7.]

* **அளவெழுதல்**-பரவுதல்.

**அளறு**-சேறு; காவிக்கல்.

* **அளற்றுப்பொடி**-காவிப்பொடி. [அளற்றுப் பொடியிலேபுடைவையைப் புரட்டி: திருப்பா.14.வியா.]

**அளாய்**-அளாவி; சுற்றி.

**அளாய்குளாய்**-ஸம்ப்ரமம். (பரபரப்பு) [ஈடு, 9. 1. 9.]

**அளாவன்**-ஸம்மிச்ரம். [கலப்பு]
[அளாவனுனஸத்துவத்தையுடையரா யிருப்பாரும்: ஈடு, 1. 1. 5.]

* **அளாவுதல்**-கலத்தல்; பொருந்துதல்; கையாலளைதல். [சிறுகையளாவிய கூழ்: திருக்குறள், 64.]

அளி - வண்டு; அருள்; குளிர்ச்சி; பக்குவம்; கொடை; அன்பு; மது; கறுப்பு.

* அளிதல்-குழைதல்; அன்பாயிருத்தல். [மந்தியளிந்த கடுவனையே நோக்கி: 3-ஆம் திருவந். 58.]

அளிக்கை - இரக்ஷிக்கை; கொடுக்கை.

அளிகூர்கை-அருளுதல்.

அளியமாந்தர் - அருமந்த மக்கள்.

* அளியன்-அருள் பெறத்தக்கவன். [அளியன் நம்பையலென்னுர்: திருமாலை, 37.]

அளை-தயிர்; புற்று; பாழி; முழை; (குகை) வெண்ணெய்.

* அளைதல்-துழாவுதல். [முழுதும் வெண்ணெயளைந்து தொட்டுண்ணும்: பெருமாள் திரு. 7. 8.]

அளைதயிர்-கடைதயிர்.

* அற்கம்-அடக்கம். [அற்கமொன்றுமறிவுறுள்: திருவாய். 6. 5. 4.]

அற்பசி-ஐப்பசி மாதம்; அச்சுவினி நட்சத்திரம்.

* அற்பம்-சிறு நாய்.

அற்புதம்-ஆச்சரியம்; அழகு; ஆயிரம் கோடி.

* அற்புதன் - ஆச்சரியமானவன்; பகவான். [அற்புதன் நாராயணனரி வாமனன்: திருவாய். 8. 6. 10.]

* அற்றகுற்றம்- தனக்கென்றன்றி மற்ருென்றிற்கேயான குறை. [அற்றகுற்றமவை தீர: நாய்ச்சி.13. 3.]

அற்றப்படுதல்- இல்லாது போதல். [ஆளற்றப்பட்டிரந்தாள்: திருவிருத். 29.]

அற்றம்-விச்சேதம்; [தொடர்ச்சி அறுகை] இல்லாமை; மறைபொருள் [அற்ற மேலொன்றறியீர். திருமா. 9.]

* அற்றவன் - ஒன்றற்கென்றே அமைந்தவன். [அற்றவன் மருதம் முறிய நடை கற்றவன்: நாய்ச்சி. 4. 6.]

அற்றிருக்கை-நிச்சயித்திருக்கை; அதீனமாயிருக்கை.

அற்று-அப்படிப்பட்டது; அது போன்றது.

அற்றுத்தீர்க்கை - நிச்சயிக்கை.

அற்றுப்போதல்-இடையறுகை; அறவே தொடர்பு நீங்குகை.

அற்றேல்-அப்படியானுல்.

அற்றை-அந்த நாளில்

* அற-மிகவும்; முழுதும்; நன்ருக; அற்றுப் போக.

* அறக்கடை-பாபம்.

* அறக்கொள்ளுதல்-அடிமைக்கு உரிமையாய்க் கொள்ளுதல். [தன்க்கேயறக்கொண்டிட்டு:திருவாய் 7. 8. 5.]

* அறங்கடை-பாவம்.

**அறச்சாலை**-தருமச்சாலை;ஸந்தி யாவந்தனம் பண்ணும் இடம்; தண்ணீர்ப் பந்தல்.

**அறத்தொடு நிற்றல்**-களவு நிலையை முறையே தமர்க்கு வெளிப்படுத்தல்.

(அறம்-முறை; கற்பாகவுமாம். பெண்டிரின் அறம் அஃதேயன்றோ?) [அறத்தொடு நிற்கிறாளாய் இது தர்மமல்ல என்ன: ஈடு, 8. 9. ப்ர.]

* **அறநூல்**-வேதம்; [அறநூல் சிங்காமைவிரித்தவன் :பெரியதிரு. 10. 6. 1.]

**அறம்**-தருமம்; எமன்.

**அறவன்**-எமன்; பகவான். [அறவனை: திருவாய். 1. 7. 1.]

**அறவிட்டு**-விற்று.

* **அறவிடுதல்**- முழுதும் (வாஸனையோடே) விடுதல்; விற்றல். [ஆபத்துக் காலத்திலே அறவிட்டு ஜீவிப்பாரும்: ஈடு, 3. 6. 9.]

**அறவிலை**-இஷ்ட விநியோகார்ஹ (ஸர்வ சுதந்தர) மாம்படி விற்றல்; சுள்ளூறியாக விற்றல். [அறவிலை செய்தனன்: திருவாய். 8. 1. 10.]

**அறவு**-துக்கம்; ஒழிகை.

* **அறவுரை**-தர்மோபதேசம்.

**அறவை**-திக்கில்லாதது.

* **அறவைச் சிறை** - வெளியேற வழியில்லாத சிறை. [ஸம்ஸாரமாகிற அறவைச் சிறை வெட்டிவிடப் பெறுபவர்கள்: ஈடு, 1. 3. 11.]

**அறன் கடை**-பாபம். [அறன் கடை நின்றாருளெல்லாம்: குறள், 142.]

**அறி**-அறிவு. [அறி கொன்றறியா னெனினும்: குறள், 638.]

**அறிக்கை**-அறிவிப்பு.

**அறிகை**- அறிதல் ; நிச்சயித்தல். [இனியறிந்தேனீசர்க்கும் நான்முகற்கும் தெய்வம்: நான்முகன்,96.] மதித்தல். [தேவு மற்றறியேன்: கண்ணிநுண். 2.]

**அறிதியாகில்** - ஞான ப்ரஸரத்வாரம் ஆகில். (அறிவலர் வாயிலாயின்) ["அறிதியாகில் நெஞ்சம்"-ஞானப்ரஸர த்வார மாகில்: பெரியதிரு. 1. 3. 3. வியா.] ["நெஞ்சம்! அறிதியாகில்" என்று நெஞ்சத்தை அறிவுடையதாகக் கூறினது அறிவலர் வாயிலாக அது இருப்பது பற்றி என்று உணர்க. அறிதி - அறிகின்றாய். "ஞான ப்ரஸ்ருதி த்வாரமான மனஸ்ஸை" என்ற ஈட்டு 1. 1. 2. ஸ்ரீஸூக்தியுமிங்குக் காணத்தக்கது.]

* **அறிஞன்**-அறிவாளி; புதன்; புலவன்.

* **அறிதுயில்**-யோக நித்திரை. [ஆடரவமளியில் அறிதுயிலமர்ந்த பரம: திருவெழு. 44.]

*அறிவியந்து - அறிவைக் கொடுத்து; அறிவைக் கடந்து. [திருவாய். 1.1.8.]

*அறிவுகேடன் - ஞானமில்லாதவன்.

அறிவுடைமை - ஞானப் பெருமையுடைமை.

*அறிவை-ஞானம். [அறிவையென்னு மமுதவாறு: பெரியாழ். 5. 4. 2.]

அறுக்கை-போக்குகை; [அறுக்கும் வினையாயின: திருவாய். 9. 8. 1.] அரிதல்; [வாளாலறுத்துச் சுடினும்: பெருமாள் திரு.4.5.] நோவுபடுத்துகை; இடைப்படுத்துகை.

அறுகம்-ஆனை; சிங்கம்; யாளி; புலி.

*அறுகால்-வண்டு; பாம்பு.

அறுகாதப் பயணம்-காத மற்றிருக்கிற பயணம்; அபரிச்சிந்நம்; [அளவு படாதது]

*அறுகாழி-ஒரு வகை மோதிரம்; [கையுமறு காழியுமான வடிவைக் காட்டி: ஈடு, 8. 10. 6.] பவித்திரம்; மெல்லிய மோதிரம்.

அறுகு-சிங்கம்; யானை; யாளி; புலி; அறுகம்புல்.

அறுகை - ஜரிக்கை; நிஷ்கர்ஷிக்கை.

*அறுசமயம்- பௌத்தம், சார்வாகம், சாக்கியம், உலூக்யம், பாசுபதம், காணபத்யம் என்னும் புறச் சமயங்களாறு.[இராமாநுஜ. வியா. 52.]

*அறுசுவை- கைப்பு, புளிப்பு, கார்ப்பு, தித்திப்பு, துவர்ப்பு, உவர்ப்பு. [ஈடு, 3. 4. 5.]

அறுதி-முடிவு;வரை. [அன்று முதலின் றறுதியா: பெரியாழ். 4. 10. 9.] இடையறுகை.

அறுதொழிலோர்- அந்தணர். வேள்வி, வேட்டல், ஓதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல் இவ்வாறும் அந்தணர் தொழிலென்ப.[அறுதொழிலந்தணர் வணங்கும் தன்மையை: திருவெழு. 14.]

*அறுபதம்-வண்டு.

அறுமான்-ஸூக்ஷ்ம ஜந்து. நுண்ணிய புழு முதலிய பிராணிகள். [அத்திக்காயில் அறுமான் போலே: ஈடு, அவ.]

அறை-பாறை; குகை; அடி; ஓசை; வீட்டுள்அறை; சுரங்கம். [பொய் யறை வாய்ப் புகப் பெய்த மல்லர்: பெரியதிரு. 2. 5. 5.]

அறைகை - சொல்லுகை; அடிக்கை; கொட்டுகை. [அறைபறைமாயன்: திருப்பா. 16.] ஒலிக்கை.

அறைகூவுதல்- போருக்கழைத்தல்.

அறை கூறுகை-ஜயத்வநி பண்ணுகை.

*அறையிடுதல்- அறைகூவுதல். [மாரிகை யேறியறையிடுங்காலத்தும்:திருவிருத். 19.]

* அறையோ - முறையிடும் சொல்; [அறையோவிதறி வரிதே: திருவிருத். 10.] ஜயகோஷம். [அறையோ வினிபோனுலே: திருவாய். 5. 1. 11.]

அன்பு - பக்தி; ப்ரீதி.

* அன்யபரதை - வேறொன்றைக் கவனித்தல். [கேட்புதியாகிலென்கிறது அன்யபரதையாலே: திருப்பா. 26. வியா.]

* அன்யாபதேசம் - உள்ளுறையல்லாத வெளிப்பொருள்.

* அன்வயம் - ஒரு சொல்லோடு மற்றைச் சொற்களுக்கு ஏற்படும் இயைபு; வம்சம்; ஸம்பந்தம்; கூடியிருத்தல். [அன்வயத்தில் தரித்தும் வ்யதிரேகத்தில் தரியாதொழிகையாலும்: ஈடு, 1. 4. ப்ர.]

அன்வர்த்தத் தேருர்கை - ராஜா தரித்திரனுல் த்ரவ்யார்த்தமாகத் (பணத்திற்காக) தேர்களிலேறித்தானே நடாத்துகை; ஸமர்த்தரான ராஜாக்கள் தம் பிரயோஜநத்துக்காகத் தேரேறி நடத்துகை; கப்பம் வாங்குவதற்காக அரசன் தேரேறிப் போகை. [அந்வர்த்த ப்ரயோஜனத் தேருருமாப் போலே: ஈடு,8. 8. 3.] [இங்கு அன்வர்த்தத்தேரென்றே எடுத்துள்ளமையின் ஈட்டில் ப்ரயோஜநபதம் இன்றி இங்ஙன் பாடமிருத்தல் கூடுமெனத் தோற்றுகிறது.

* அன்ருடு - அன்றைக்கன்று. [அன்ருடுபடிவிட வேணுமிறே: ஈடு, 4. 8. 7.]

அன்றி - அல்லாமல்; அல்லாமலும்.

* அன்றிக்கே - அல்லாமலும்.

அன்றில் - கிரவுஞ்சப்பறவை.

அன்றுதல் - சீறுதல்; [அவ்வானத்தை யன்றிச் சென்று: திருவிருத். 18.] பகைத்தல். [அன்றியவாணனுயிரம் தோள் துணியை: பெரியதிரு. 8. 3. 8.]

* அன்ன - அப்படிப்பட்ட; உவமவுருபு. [கடலன்ன காமம்.]

* அன்னம் - சோறு; ஹம்ஸபக்ஷி.

அன்னல் - புகை; வெய்யில். [அன்னலும் துன்னலுமாய்த் திரண்ட மேகத்தை: ஈடு, 8. 5. 4.]

அன்னவசம் செய்தல் - உண்ட உணவுக்கு ஏற்ப இடம் வலம் கொள்ளுதல்; உறங்குதல். திருவாய். 3. 7. 10]

அன்யதாஞானம் - வேறு வகையான ஞானம்; [சங்கைப் பொன்னிறமாகப் பார்த்தல்.]

* அன்னுன் - அவன்; அப்படிப்பட்டவன்

அன்னியம் - குயில்.

அன்னை - அம்மை.

அனங்கம் - மல்லிகை; இருவாட்சி.

அனங்கன் - மன்மதன்; விருப்பம்; அழகு.

அனத்தம் - பொல்லாங்கு. [அனத்தக் கடலுளழுந்தி: பெரியாழ். 5. 3. 7.]

அனந்தம் - முடிவில்லாதது; ஆகாசம்; பொன்.

அனந்தல் - சோம்பல். [ஆற்ற வனந்தலுடையாய்: திருப்பா. 10.] மயக்கம்; [அனந்தலன்றிலி னரிகுரல்: பெரிய திரு. 8. 5. 9] உறக்கம்.

அனந்தை - பூமி.

அனல் - அக்நி; [அம்பர மனல் கால் நிலம்: பெரிய திரு. 1. 8. 8.] வெப்பம்.

* அனலுதல் - வெப்பம் வீசுதல்.

* அனலன்-அக்நிபகவான்.

அனலோன் - அக்கிநி தேவன். [பின்னும் நேர்சரிந்தான் எரியுமனலோன்: திருவாய். 7. 4. 8.]

அனவதானம் - ப்ரமாதம்; கவனமின்மை.

அனன்ற - அக்நியாலே தப்தமான. [நெருப்பினுற்பொசுக் கப்பட்ட]

அனுத - அழியாத; ஒவ்வாத.

* அனுர் - போன்றவர். [கொம்பனுர்க்கெல்லாம் கொழுந்தே: திருப்பா. 17.]

அனுவிலன் - சுக்கிரன்.

அனிச்சம் - மோப்பக் குழையும் ஒருவகைப் பூ.

அனித்தம் - அனிச்சம்.

அனுக்கம் - பாலவ்யாதி. (குழந்தை நோய்)

அனுக்ரோசம் - கிருபை.

அனுங்குதல் - வருந்துதல்.

அனுசயிக்கை - அனுதபிக்கை. (பச்சாத்தாபப்படுகை)

அனுபபத்தி - பொருந்தாமை.

அனுபயர் - முமுக்ஷுக்கள். (முக்தர் கோடியிலும் ஸம்ஸாரிகோடியிலும் கூடாதவர்.)

அனுவாதம் - முன்னர்க் கூறியதை மீண்டும் எடுத்துக் கூறல்.

அனுவிதானம் - அநுஸரிக்கை.

அனுவயிக்கை - அனுகரிக்கை.

* அனுராகம் - பிரீதி. [அனுராகம் பொழியும்போது:திருவாய். 8. 8. 8.]

அனை - அந்த; ஒருவகை மீன்.

அனைத்து - அப்படிப்பட்டது.

* அனைத்தும்-எல்லாம். [இகழ்விலிவ் வனைத்துமென்கோ: திருவாய். 3. 4. 1.]

அனைய - அப்படிப்பட்ட.

* அனையன் - அப்படிப்பட்டவன்.

* அனையவன் - அப்படிப்பட்டவன். [ஆங்கனையவற்கிளையவர்க்கே: பெரியதிரு. 4. 6. 4.]

அனைவரும் - எல்லாரும்.

ஆ - பசு; துக்கக்குறிப்பு; ப்ரகாரம். [யாதானும் வல்லவா சிந்தித்திருப் பேற்கு; நான்முகன், 65.]

ஆ ஆ - ஐயோ ஐயோ: இரக்குக் குறிப்பு. [ஆ ஆ என்றுராய்ந்தருள்: திருப்பா. 8.]

ஆக்கம்-ஸம்பத்து; [அணைய வந்த ஆக்கமுண்டேல்: திருவாய். 9. 1. 2] ஸந்தோஷம்; விருத்தி; ஸ்ருஷ்டி; அதிசயம்; மோக்ஷம். [அழிவின்றியாக்கம் தருமே: திருவாய். 1. 6. 8.]

* ஆக்கர்- ஸ்ருஷ்டிக்கப்பட்டவர். [ஆக்கரான இந்திராதிகள்: ஈடு, 5. 2. 3.]

ஆக்கன் - புதிது; நாற்றம்; கொளுத்தினது; க்ருத்ரிமம்; செயற்கையானது. [ஆக்கனன்றிக் கேஜாதீயமான பவளப்படியும்: பெரியாழ். 1. 3. 6. வியா.]

* ஆக்குதல் - ஸ்ருஷ்டித்தல்; [ஆக்குமாறயனும்: வில்லிபா. கடவுள்வாழ்த்து. ஆக்கினன் தெய்வவுலகுகளே: திருவாய். 2. 2. 9] விருத்தி செய்தல்.

ஆக்கை - யாக்கை.

[ஆக்கை கொடுத்தளித்த கோனே: நான்முகன், 93.]

* ஆகத்தான்-சரீரத்திலிருப்பவன்.

[செஞ்சடையான் ஆகத்தான்: பெரியதிருவந். 71.]

ஆகம்-சரீரம். [அரவணை மேற்பூம்பாவை யாகம் புணர்வது:திருவாய்.2.8.1.] ஆகாசம்; மார்பு; நெஞ்சு; உள்.

* ஆகமம்-வேதம்; பாஞ்சராத்ரம் முதலிய தந்த்ரங்கள்; ஒரு சொல்லிற் புதிதாய் வருமெழுத்து.

ஆகரம்-உண்டாகுமிடம்.

ஆகரத்தில்நெருப்பு-படபாமுகாக்நி. [ஈடு, 1. 4. 7.]

ஆகல்பம் - அலங்காரம்.

ஆகவம்-யுத்தம்.

ஆகா-ஆகமாட்டா. [எண்ணினவாருகா]

* ஆகாசவாயன்-தரித்திரன்; வீடற்றவன்.

ஆகாயே-ஆகவேண்டும்.

ஆகாரம்-வடிவம்; [திருவாகாரம் குலுங்க: பெரியதிரு. 4. 4. 8.] ஊண்; (ஆஹாரம்) "ஆ" என்ற எழுத்து ஸ்வரூபம்; அவயவ அமைப்பு; கருத்துக்கிசைந்த சேஷ்டை.

* ஆகான்- முடியாதவன். [காணலுமாகான்: திருவாய். 2. 5. 10.]

* ஆகிஞ்சன்யம் - வறுமை; ஸாதநமில்லாமை.

* ஆகிடுகாண்-ஆகக்கடவது.

* ஆகு-எலி; பெருச்சாளி.

* ஆகிருதி-வடிவம்.

* ஆகிறது- அர்த்தாங்கீகாரம். [பாதி ஒப்புக்கொள்ளல்]

ஆகுலம்-துக்கம்; [ஆகுலங்கள் செய்ய: திருவாய். 6.

2. 2.] பூசல்; வருத்தம்; வேதத்தில் அபப்பிரம்சம்.

ஆகுளி-வாத்திய விசேஷம்.

*ஆகைச்சுட்டி - ஆகையாலே. [ஈடு, 7. 10. 8.]

ஆங்காது-போதாது; திருப்தி கரமாகாது.

ஆங்காரம்-செருக்கு; அபிமானம்; அஹங்காரம்; [தானுங்காரமாய்ப்புக்கு: திருவாய். 10. 7. 11. தேனுங் காரப் பொழில்: திருவாய். ஷை.மானுங்காரமனங்களே: திருவாய். ஷை.]

ஆங்ஙனம்-அங்ஙனம்.

ஆங்கு-அங்கே; அவ்விடத்திலே. [ஆங்கு மாவலி வேள்வியிற் சென்றிரந்து: பெரியதிரு. 5. 3. 9.]

ஆங்குதல்-போதுமானதாதல்.

ஆங்கை-அழகிய கை. [ஆங்கைத் திகிரி சுடரென்னும்: 3-ஆம் திருவந். 67. அங்கை என்பது எதுகை நயம் பற்றி ஆங்கை எனத் திரிந்தது.]

*ஆச்சி-தாய். [ஆச்சீ! நீர் சொல்லுகிற இவை தர்மஹாநிகிடீர். ஈடு, 4.3. ப்ர.]

*ஆச்சியம்-நெய்; (ஆஜ்யம்) பரிஹாஸத்திற் குரியது. (ஹாஸ்யம்.)

ஆச்ரயம் - விசுவாஸமாயொருவரை யடுப்பது.

ஆச்ரயாசி-ஆச்ரயத்தையழிக்கும் பதார்த்தம்: அக்நி.

*ஆச்சிரமம்-முனிவர் வாஸம் செய்யுமிடம்; பிரம்மசரியம், கிரஹஸ்தம், வானப்ரஸ்தம்,ஸந்நியாஸம் என்னும் ஆச்ரமம்.

ஆச்சிராமம்-ஆச்சிரமம் [வதரியாச்சிராமத்துள் ளானே: பெரியதிரு. 1. 4. 1.]

ஆசரித்தல்-அனுஷ்டித்தல். [ஆசரித்த ஆசாரந்தன்னை: உபதேச ரத். 67.]

ஆசாரம்-சீலம்; (ஒழுக்கம்) காட்சி.

ஆசி-வாழ்த்து; யுத்தம்.

ஆசியம்-வாய்; முகம். (ஆஸ்யம்)

ஆசிடை - கூட்டம்; தூசு வாழ்த்துதல்.

ஆசினி-ஆகாசம்; (மர) வயிரம்; மரவுரி.

ஆசீவகர்-அமணர். [சமணரில் ஒரு பிரிவாளர்.]

ஆசு-ஆயுதப்பிடி; கத்தி; யுத்தம்; குற்றம்; வேகம்; (விரைவு) கவசம்.

ஆசுலம்-இடும்பை; பூசல்.

ஆசை - கதசிந்தை; [கழிந்தது பற்றிய ஏக்கம்.]திக்கு; ஆசை; (அவா) அனுபவமில்லாதபோது தரியாதபடியான அபிநிவேசம். [அவித்யை, அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபிநிவேசம் என வடநூலுட் கூறப்படும் ஐந்து க்லேசங்களில் ஒன்று. ஆசை இத்தகைய அபிநிவேசமாதலே

360ஆம் குறள் உரையானு மறிக.]

*ஆட்கொள்ளுதல் — அடிமை கொள்ளுதல். [ஆட்கொள் ளத் தோன்றிய ஆயர்தம் கோவினை: பெரியாழ். 1. 6. 11.]

*ஆட்சி - ஆளுதல்; [ஈடு, 1. 1. 1.] வழக்கம்.

*ஆட்செய்தல்- அடிமை செய் தல். [ஆட்செய்தாழிப்பிரா னைச் சேர்ந்தவன்: திரு வாய். 4. 10. 11.]

ஆட்டத்து வெளி - வையாளி விடுகிற வெளி. [ஆட்டத்து வெளியிலே நிறுத்தினு ளுயிற்று நலிகைக்காக: ஈடு, 7. 4. 5.]

ஆட்டம்-ஸஞ்சாரம்; [அஞ்சன மேனியை யாட்டங்கா ணேன்: திருவாய்.10. 3. 3.] அசைவு; விளையாட்டு.

ஆட்டி - கண்ணடி; பெண் பிள்ளை.

ஆட்டுகை-அலைக்கை; [ஆட் டியும் தூற்றியும்: திருவாய். 7.7.2.] அசைக்கை; ஸ்நா நம் செய்விக்கை. [ஞான நீர் கொண்டாட்டு வனடிய னேனே: திருக்குறுந். 15.]

ஆட்டு வாணியன்- மாம்ஸவிக் ரயீ. [மாம்சம் விற்பவன்] [காதுகனை ஆட்டுவாணி யன் கையிலே காட்டிக் கொடுக்குமா போலே: ஸ்ரீவசனபூ. 178.]

*ஆட்படுத்தல்-உரிமைப் படுத் தல். [அடியார்க் கென்னையாட் படுத்த விமலன்: அமலனுதி. 1.]

*ஆட்படுதல் - அடிமைப் படு தல். [ஆட்பட்ட எம்மே போல்: திருவாய். 2. 1. 2.]

*ஆட்பார்த்தல்- அடிமையைத் தேடுதல். [ஆட்பார்த் துழி தருவாய்: நான்முகன், 60.]

ஆடகம்-பொன். [ஆடகக்கை மாதரார்: திருச்சந். 36. இங்குப் பொன்னினுலா கிய ஆபரணத்திற்கு ஆட கம் என்பது ஆகுபெய ராயிற்று.]

ஆடல்- வெற்றி; வார்த்தை யாடுதல்.

ஆடல் கொடுக்கை - இடம் கொடுக்கை; [இவ்வாற் ருமைக் கெல்லாம் ஆடல் கொடுத்த ஆழ்வார்: ஈடு, 8. 5. 11.] சலியாதே யிருக் கை; வ்யஸனத்தை யநுப விக்கை. [அத்தனை ஆடல் கொடுக்கைக்கு வேண்டும் ஆச்ரயம் போராது: ஈடு, 9. 9. ப்ர.]

ஆடல்மா - திருமங்கைமன் னன் குதிரை. [ஆடல்மா வலிவன் கலிகன்றி: பெரிய திரு. 5. 8. 10.]

ஆடலவர்- நாயகர். (கணவர்) [ஆடல்-புணர்ச்சியாதலின் ஆடலவர் கணவராயினர்.]

ஆடலாடல்- விளையாடல். [ஆடலாட உறுதியேல்: பெரியாழ். 1. 5. 2.]

*ஆடாமை-நடமாடாமை. (வழக்கி லில்லாமை) பார

கத் தென்று மாடாதன: திருவிருத்.2.2.] போகாமை. [மீமீதாடாவுலகத்து: நாய்ச்சி. 13. 7.]

ஆடவர்-ஆண் பிள்ளைகள்; இளையோர்.

ஆடி-கண்ணாடி. [ஆடுபவன் குடந்தைக் கிடந்த குடமாடி: நாய்ச்சி. 13. 2.]

ஆடு- மேஷம்; பெருமை; அலர்த்தி; வெற்றி; [அரக்கராடழைப்பாரில்லை: பெரியதிரு. 10. 2. 1.] பரிமளம்; கூத்து; கூர்மை.

ஆடுகை-அவகாஹிக்கை; (மூழ்குகை) ஸஞ்சரிக்கை; நடமாடுகை; உண்டாகை. [ஆடுதாமரையோனு மீசனும்: பெரியதிரு. 2. 1. 9.] அநுகரிக்கை. அஞ்சிறையபுட் கொடியே யாடும்: திருநெடுந். 12.]

*ஆடை-உடை. ஆடையுடுப்போம்: திருப்பா. 27.] பாலேடு.

ஆண்- புருஷன்; வீரன்; ஆண் பிள்ளைத்தனம். [மன்னராணுடைச் சேனை: திருவாய். 7. 4. 5.]

ஆண்டு-வருஷம்; புல்; நெல்; கொல்லம் ஆண்டு; அவ்விடம்.

ஆண்டையார்- ஆண்டிலே யுண்டானவர்; ஆச்ரயித்த பழையவர்; எங்குள்ளார். [துன்புற்று ராண்டையார்: 3-ஆம் திருவந். 27.]

ஆண்பிள்ளைச்சோருள்வி-ஸ்திரீ ரூபமான ஆண்பிள்ளை. [ஆண்பிள்ளைச் சோருள்வியை ஸ்திரீ என்று பின் தொடருமா போலே: பெரியதிரு. 1. 6. 1. வியா.]

*ஆண்மை - திறமை. [ஐங்கணை வில்லி தன்னாண்மையென்னோடாடும்: பெரியதிரு. 9. 5. 7.]

ஆணம்- அரணம்; (ரக்ஷகம்) [தேவரை யாண மென்றடைந்து: திருச்சந். 69.] ஆண்பிள்ளைத் தனம்; லஜ்ஜை.

*ஆணர் - ஆண்மையுடையவர்.

ஆணறுகை - பூர்ணமாகை. (அஹங்காரமற்ற நிலை)

ஆணுட்டமடிக்க - ஸ்வேச்சா ஸஞ்சாரம் பண்ண. (இஷ்டப்படி நடக்க)

*ஆணுடைவிடுதல்-தீம்பு செய்ய உதவுதல். ஆணுடைவிட்டிட்டிருக்கும்: நாய்ச்சி. 3. 10.]

* ஆறு - நதம்: மேற்கு நோக்கியோடுமாறு. [கிழக்கு நோக்கியோடும் ஆறு பெண்ணாறு.)

* ஆணி - இரும்பு முதலியவற்றாலாகிய ஆணி; உரையாணி; மேன்மை; சரீரம். [அக்காணிகழித்து: பெரியாழ். 5. 2. 3.]

ஆணிப்பொன் - உரையாணி. [மற்றவற்றின் மாற்றை யறிவதற்கு உபயோகப்படும்

மாற்றுயர்ந்த பொன்: பெரியாழ். 1.3.1. திருவிருத். 85.]

**ஆணுடைமை** - ஆண்பிள்ளைத் தனம்.

**ஆணை** - தடை; சபதம்; உத்தரவு.

**ஆணைமறுத்தல்** - ப்ரதிக்ஞையைத் தப்புகை.

**ஆணையிடுதல்** - கட்டளையிடுதல்; சபதம் செய்தல்; சத்யம் செய்தல். [பற்றுகிறவனாணை யிடுகிறான்: ஈடு, 8. 2. 7.]

**ஆத்தன்**-ஆப்தன்; பரமபந்து. [திருமோகூராத்தன்: திருவாய். 10. 1. 6.]

**ஆத்தனம்பி** - பரம ஆப்தன். [தொண்டர்மிண்டித் தொடர்ந்தழைக்கு மாத்தனம்பி: பெரியதிரு. 2. 2. 6.]

* **ஆத்தாள்** - தாய்.

* **ஆத்தானம்** - அரசவை.

**ஆத்திகன்**-ஆஸ்திகன்.

**ஆத்தை** - ஆத்தாள்.

* **ஆத்மஞானி** - தன்னை உணர்ந்தவன். [ஈடு, 4. 1]

**ஆத்மகாமர்** - ஸ்வார்த்தபரர். (தன்னலம் கருதுபவர்.)

* **ஆத்மகுணங்கள்** - ஆத்மாவிற்கு உரிய குணங்கள். (பொறுமை முதலியனவும், சமதமாதிகளும்.)

* **ஆத்ம நிவேதநம்**-தன்னையும் தன்னுடைமையையும் பரமாத்மாவிடம் ஸமர்ப்பிக்கை.

**ஆத்மப்ராப்தி**-தன்னையேதான் அனுபவித்துக் கொண்டிருக்கும் கைவல்ய நிலை.

* **ஆத்மாபஹாரம்** - தேஹத்தையே ஆத்மாவாகக் கருதுதலும், ஆத்மாவை ஸ்வதந்தரனாகக் கருதுதலும்.

* **ஆத்மானுபவம்** - தன்னைத் தானே அனுபவிக்கும் கைவல்யமோக்ஷம்.

**ஆதங்கம்**-நோய், சங்கை.

* **ஆதஞ்சனம்**-பாலிற் பிரை குத்தித் தோய்த்தல். [திருவாய்.8. 5. 10. அரும்பதம்.]

* **ஆததாயிகள்**-தீ வைத்தல், விஷமிடல், பணம் பறித்தல் முதலியன புரியும் தீயோர்.

**ஆதபம்**-வெய்யில்.

**ஆதர்**-அறிவுகேடர்; குருடர். [ஆணமென்றடைந்து வாழுமாதர்காள்: திருச்சந் 69.]

**ஆதரம்**-பிரீதி. [ஆதரம்பெருக வைத்தஅழகனூர்: திருமா. 16.]

**ஆதல்**-துணுக்கம்; தெரிதல். (அர்த்தமாதல்.)

* **ஆதலால்** - ஆகையால். [பெரியதிரு. 5. 8. 8.]

* **ஆதலில்**-ஆகையால். [ஆதலிலவர்க்கு நாளோலக்கமருள: திருப்பள். 9.]

**ஆதவன்**-யாதவன்; சூரியன்.

* **ஆதன்மையால்** -ஆகையால். [ஆதன்மையாலதுவே

நமதுய்விடம்: பெரியதிரு. 2. 4. 9.]

**ஆதனம்**-ஆஸனம்; பூமி;கால். [தலையினோடாதனம்தட்ட: திருவாய். 3. 5. 3.]

* **ஆதானும்**-யாதாயினும். [ஆரானுமாதானும்செய்ய: பெரிய திருவந். 25.]

**ஆதி**-மனோவியாதி; ஆரம்பம்; காரணம்.

**ஆதிகர்மணி "க்த" வாய்**-உத்யோகார்த்தே (முயற்சி என்னும் பொருளில்) "க்த" ப்ரத்யயமாய்.(க்த என்னும் விகுதியாய்.) "த்வதங்க்ரிமுத்திச்ய"எனத் தொடங்கும் ஆளவந்தார் ஸ்தோத்ர சுலோகத்திலுள்ள "க்ருத:" என்னும் பதத்தில் "க்த"என்னும் விகுதி, செயலின் தொடக்கமானமுயற்சி என்னும் பொருளில் வந்துள்ளதாக ஈடு 1. 6. ப்ர. உள்ளது.

**ஆதித்தியன்**-ஸூர்யன். [திங்களு மாதித்தியனுமெழுந்தாற்போல்: திருப்பா. 22].

* **ஆதிநூல்**-வேதம்.

**ஆதிரன்**-பெரியோன்.

* **ஆதிவாஹிகர்** - முக்தி நெறியிற்போமவர்களைஉபசரித்து அழைத்துச் செல்லும் தேவர்கள்.

**ஆதுகொலோ**-அதுவோ. [ஆது என்பது பிரியேன் என்றதனை: பெரிய திரு. 9. 5. 7. வியா. காண்க.]

**ஆதும்**-ஒன்றும் (யாதும்)

**ஆதேசம்** - சொல்லில் ஓரக்ஷரத்தைத் தள்ளிப் போகட்டு அதன் மேலே வருகிற அக்ஷரம்; உத்தரவு.

**ஆதோ**-ஆச்சரியம்.

**ஆதோரணர்**-யானைப் பாகர்.

**ஆந்தராளிகர்**-நடுவிலுள்ளவர்: ஸம்ஸாரிகளிலும் கூட்டன்றிக்கே, நித்ய ஸூரிகளிலும் கூட்டன்றிக்கேயிருக்கிற முமுக்ஷுக்கள்;ஆசாரியர்; [சேதநனுக்கும் ஈசுவரனுக்குமிடையே யிருந்து இணைப்பதால் ஆசாரியர் ஆந்தராளிகராயினர்.]

**ஆந்ருசம்ச்யம்** - பரதுக்காஸஹிஷ்ணுத்வம்;[பிறர் படும் துன்பம் கண்டு பொறுக்கொணுமை] பரஸ்யாஹிம்ஸகத்வம்வா. [பிறரைத் துன்புறுத்தாமை.]

**ஆநெய்**-பசுவின் நெய்.

**ஆப்பு**-பந்தம்; (கட்டு) சரீரம்; [அருவினைக ளாப்புன்னை யுன்னவவிழ்ந் தொழியும்: 1-ஆம் திருவந்.75. ஆப்பங் கொழியவும்: நான்முகன், 93.]

**ஆப்புண்ட மிருகம்**-அகப்பட்ட மிருகம்.

* **ஆப்பை**-அகப்பை. [ஸர்வேசுவரனுக்கும் கைக்குறியாப்பை வாங்குவ திங்கேயிறே: ஈடு, 1. 4. 6.]

**ஆபத்தேசெப்பேடாக**-செப்பேடு தாம்ரசாஸநம்; ப்ராபக

மாக என்றபடி. [ஒருவர்க்கு ஒன்றிலுள்ள உரிமைக்குச் செப்பேடு அடையாளமாயிருப்பது போல இறைவனது ரக்ஷணத்தில் அடியார்க்குள்ள உரிமைக்கு ஆபத்தே அடையாளமாக உள்ளது என்றபடி. "ஆபத்தே யடையாளமாகத் தானே ரக்ஷிக்கும்" என்ற 1-ஆம் திருவந். 12. வியாக்கியாந ஸ்ரீஸூக்தியிங்கே காணத் தக்கது. ஆபத்தே இறைவனை வருவித்துக் காக்கச் செய்யும் என்பது கருத்து. ஆபத்தே செப்பேடாக வயிற்றிலே வைத்து நோக்கும்: ஈடு, 5. 9. 7.]

**ஆபாதப்ரதீ**தி-மேலெழத் தோன்றுகை.

**ஆபாஸம்**-போலி.

**ஆபிஜாத்யம்**-குடிப்பிறப்பு.

**ஆம்**-ஆகும்; [1-ஆம்திருவந். 44.] இகழ்ச்சிக் குறிப்பு. அறிவானும் ஆலமர நீழல்....அரன்: 1-ஆம் திருவந். 4.]

**ஆம்பரம்**-மாமரம்; புளி.

**ஆம்பல்**-ஆய்க் குழல்; இலைக் குழல்; [ஈடு, 9. 9. 2.] ஒரு பண்; ஆம்பற்பூ; அல்லி; மூங்கில்; நிலா; கள்.

**ஆம்பலம்**-புளி.

***ஆமம்**-அஜீர்ணம்; [ஆமத்தையறுத்துப் பசியைய மிகுத்துச் சோறிடுவாரைப் போலே: ஈடு, அவ.]சமைக்காதது.

**ஆமயம்**-நோய்.

**ஆமர்**-தாய்.

**ஆமரி**-வார்த்தை.

**ஆமிரம்**-மாமரம்.

***ஆமாறு**-உபாயம்; (ஆகும் ஆறு) [ஆமாறறியும் பிரானே: பெரியாழ். 2.7.8.]

**ஆமின்**-ஆகுங்கள். [அண்ணலடியவராமினோ: திருவாய். 4. 1. 6.]

**ஆமைத்தாலி**-ஆமை போலேயிருக்கிற தாலி. [ஆமைத் தாலி பூண்ட அநந்தசயனன்: பெரியாழ். 1. 7. 2.]

**ஆமோதம்** - மிக்கவாஸனை; மகிழ்வு; ஸங்கர்ஷணபகவானது உலகம்.

**ஆய்**-தாய்; [ஆயுமமருலகும் துஞ்சிலும்: திருவாய். 2.1.1.] இடைச்சாதி; [ஆய்க்குலம் புக்கதும்: திருவாய். 6.4.5.] ஆகி; [நாயகனாய் நின்ற: திருப்பா. 16.] அழகு; வருத்தம்; சிறுமை.

**ஆய்ச்சி**-இடைச்சி; தாய். [ஈடு, 6. 1. 4.]

**ஆய்தல்**-தெளிதல்; தெரிதல். [ஆயிழையார் கொங்கை தங்குமக்காதல்: இராமாநுஜ. 42.] அநுஸந்தித்தல். [ஆய்ந்து கொண்டாதிப் பெருமானை: நான்முகன், 76.] அர்த்த நிரூபணம் பண்ணுதல்; [ஆய்ந்த வருமறையோன்: 3-ஆம்

திருவந். 77.] தனியாய்ப் பிறத்தல்; [மணற் சோற்றிலே கல் ஆய்வாரைப் போலே.] நன்றாகத் தேர்ந்தெடுத்தல்.

ஆய்ப்பாடி-இடைச்சேரி. [சீர் மல்குமாய்ப்பாடி: திருப்பா. 1.]

ஆய்பொன் - ஆயப்பட்ட பொன். [ஆய்பொன்னுடை மணி: பெரியாழ். 1. 6. 1.]

ஆய்மலர்-தாமரை.

ஆய்வார்-வித்துவான்கள்.

*ஆயக்காரன்-வரி வசூலிப்பவன்.

*ஆயக்கால்-சிவிகை, வாஹநம் முதலியவற்றைத் தாங்கும் முட்டுக்கால்.

ஆயசு-துக்கம்; ஆயுதம்.

ஆயத்தமாதல்-ஸித்தமாதல்.

*ஆயத்துறை-சுங்கச்சாவடி.

ஆயம்-ஸகிஸமூஹம். (தோழியர்குழாம்) [நங்கள் வரிவளையாயங்காளோ: திருவாய். 8. 2. 1.] வருவாய்; குடிமக்கள் செலுத்தும் வரி; பொன்.

ஆயர்பாடி-இடைச்சேரி. [ஆயர்பாடி கவர்ந்துண்ணும்: நாய்ச்சி. 14. 2.]

*ஆயிட்டு- ஆகையினால். [ஆயிட்டுஇவளைவேண்டா என்றன்றோ கொடுபுக்கதென்கிறாள்: ஈடு, 6. 5. 3.]

ஆயிரத்தளி-கங்கை கொண்ட சோழபுரம். [ஆயிரத்தளியிலே ராஜா இருக்கச் செய்தே: ஈடு, 3. 5. 7. க்ரிமிகண்டன் பட்டணம் என்கிறது அரும்பதம்.]

ஆயிரத்திலொன்றும் கடலில் குளப்படியும் போலே-ஆயிரத்தில் ஒன்றிருக்குமாபோலேயும், கடலில் குளப்படியிருக்குமா போலேயும்.

*ஆயோ-புனங்காக்கும் மகளிர் பறவை யோட்டும் ஒலி. [ஆயோ அடுந்தொண்டையோ: திருவிருத். 10.]

ஆர்-யார். [திருமாற்கு யாமார் வணக்கமார்: பெரிய திருவந். 11.] நிறைவு; ஆத்தி; கூர்மை; ஒத்தல்; (ஒப்பு) ஆதித்தியன்; பூமி; அழகு; ஆரக்கால்; அருமையான; ஆருயிர்; பாகு; சோதி.

ஆர்க்கும் - கதறும்; யாருக்கும்.

ஆர்க்கை – ஆரவாரிக்கை; பந்திக்கை. (கட்டுகை)

ஆர்கலி - மழை; கடல்.

ஆர்த்து – சப்தித்து.

ஆர்த்துக்கொள்ளல் - ஸம்ப்ரமிக்கை.

ஆர்த்தன் - துன்புற்றோன்.

ஆர்தல் - பூர்ணமாதல்; [ஏரார்ந்தகண்ணி: திருப்பா. 1.] திருப்தியாதல்; பருகுதல்; உண்ணல்; ஒத்தல்; [காரார்திருமேனிகாணுமளவும் போய்: சிறிய திரு. 69.] பரவுதல்; [நீரார் கமலம்

போற்செங்கண்மால். 11.] படிதல்; இடமுடைமை. [திருவாய். 4. 1. 6 வியா.]

ஆர்ப்பரவம் - த்வநி; (ஆரவாரம்) ஸ்நேஹம்.

ஆர்ப்பு-தூளி; மேற்பூச்சு; தோஷம்.[அஹங்காரமாகிற ஆர்ப்பைத் துடைத்தால்: ஸ்ரீவசநபூ. சூ. 77.]

ஆர்மை - மதில்; கூர்மை.

ஆர்வம் - ராகம் (ஆசை); ஆதரம் அபிநிவேசம்; ஸ்நேஹம்; வில்; பக்தி. [1-ஆம் திருவந். 35.]

ஆரகூடம் - பித்தளை.

ஆரணம் -வேதம்.

ஆரணியம் - காடு.

ஆரம் - முத்து; பதக்கம்; மாலை; ஆத்தி; சந்தனம். [ஆரப்பொழில் தென்குருகைப்பிரான்: இராமாநுஜ. 20.]

ஆரல் - மத்ஸ்ய விசேஷம்; (ஒருவகை மீன்)செவ்வாய்; கார்த்திகை நக்ஷத்திரம்.

ஆரலங்கல் - பாரவச்யம்.

ஆரலம் - பகை.

*ஆராமம்-உபவனம். [ஆராமம் சூழ்ந்த வரங்கம்: சிறிய திரு. 71.]

ஆராய்ச்சி - பிரஸித்தி; ஆராய்கை; பராமர்சம்.

*ஆராவமுதம் - தெவிட்டாத அமிருதம். [ஆராவமுதமங்கெய்தி: சிறியதிரு. 7.]

*ஆராவமுது - திருக்குடந்தை எம்பெருமான்.[ஆராவமுதே அடியேனுடலம்: திருவாய். 5. 8. 1.]

ஆரானுய் - அதிருப்தனுய்.

ஆரியச்சிதைவு - ஸம்ஸ்கிருதாபப்ரம்சம்; (வடசொல் விகாரம்) வேதத்திலபப்ரம்சம்.

ஆரியன் - பெரியோன்; அறிவாளி; ஆசாரியன். [தன்னாரியனுக்குத் தானடிமை செய்வது: உபதேசரத். 64.]

ஆருபதம் - பித்தளை.

ஆருவம் - நீர்.

ஆரோதம் - நிவிருத்தி விரதம்; [ஹிம்ஸை செய்யாமலிருத்தல், பொய் பேசாதிருத்தல் முதலியன நிவிருத்திவிரதங்களாகும்.] பூணை; கர்வம்; உபேக்ஷை.

ஆரோதமடித்தல் - மேன்மை பாராட்டி உபேக்ஷை செய்தல்; ஹிம்ஸிக்கலாகாதென நிவிருத்தி விரதங் கொள்கை. [யுத்தத்திலே புக்கு நின்று ஆரோதமடித்தல், ஸ்வகீய ஜந்துக்களென்று ஆந்ருசம்ஸ்யம் கொண்டாடுதல் செய்யாதே: ஈடு, 3. 10. 1.]

ஆல் - ஜலம்; ஆலமரம். [ஆலின்மேலாலமர்ந்தான்: திருவாய். 9.10.1.]ஹர்ஷம், (உவப்பு) சோகம், (வருத்தம்) இவற்றைக் குறிப்பிக்கும் இடைச்சொல்; அசைநிலை; அகல்விளக்குச் சட்டி; விஷம்.

ஆலகண்டன் - உருத்திரன்.

ஆலகாலம் - பாற்கடலிலுண்டான விஷம்.

ஆலங்கட்டி - மழை பெய்யும் போது சில வேளைகளில் விழும் உறைந்த நீர்க்கட்டி. இத்தகைய மழையே கல்மாரியாம். [9. 10. 1. ஈட்டரும்பதம்.]

ஆலத்திவழிக்கை - ஆலத்தி எடுக்கை. [ஈடு, 4. 6. 7.]

ஆலம் - ஆலமரம்; மழை; நீர்; மிகுதி; நஞ்சு; கலப்பை.

ஆலம்பநம் - அவலம்பநம். [பற்றுக்கோடு]

ஆலம்பம் – பற்றுக் கோடு; வதம்; ஹிம்ஸை.

* ஆலவட்டம்-விசிறி. [திருப்பா. 20. வியா.]

ஆலவாய் - பாம்பு; தென் மதுரை.

ஆலவாயுடையான் - மதுரை ஸோமஸுந்தரர்.

ஆலி-ஆலாங் கட்டி; மழைத் துளி; காற்று; திருவாலி என்னும் திவ்யதேசம்.

ஆலிக்கை - ஸம்ப்ரமிக்கை; (ஆரவாரிக்கை ;) தூறல்; ஒலிக்கை. [பு. வெ. 4. 4.]

* ஆலி நாடன்-திருமங்கை மன்னன்.

ஆலுதல்-ஆடுதல்; களித்தல். [திருமா. 14. வியா.]

* ஆலை-கரும்பாலை. [ஆலை நீள் கரும்பன்னவன் தாலோ: பெருமாள். 7. 1. கரும்பு; தேன்; கள்.

ஆவண ஓலை- அடிமை முறி. [க்ருஹிணிக் கென்றன்றே ஆவண ஓலை எழுதுவது: முமுக்ஷுப். ஸூ. 44. விலையோலை என வியாக்கியானம் செய்தார் மணவாள மாமுனிகள்.]

ஆவணம்-அடிமை.

* ஆவத்தனம்-ஆபத்தில் ரக்ஷகமாகும் தனம். [ஆவத்தனமென்று சேவித்திருக்கும்: பெரியாழ். 4. 2. 6.]

* ஆவத்து-ஆபத்து.

* ஆவம்-அம்பருத் தூணி.

* ஆவர் - யாவர். [ஆவரிவை செய்தறிவார்: பெரியதிரு. 3. 3. 7.]

* ஆவரணம்-மதில் ; [ஏழாவரணங்களாலும் சூழப்பட்டு: தத்த்வத்ர. அசித்ப்ர. 36.]

ஆவரி-அம்பு.

ஆவல்-அபிநிவேசம்; ஆசை; வளைவு ; ஆனி ; நாள் ; பொழுது.

ஆவலம் - புடைவை; வாயாலார்த்தல்.

ஆவலிப்பு - அவலம்பநம் [பற்றுக் கோடு] கர்வம். [ஆவலிப்புடையை கண்டாய்: திருமா. 1.]

ஆவாலம் கொட்டுகை- குதிரை நடையழுக்குக் கை கொட்டுகை.

ஆவி-மனம்; ஆத்மா; ப்ராணன்; கொட்டாவி; வலி;

புகை; நறு நாற்றம்; மூச்சு; வாவி (நீர் நிலை); நஞ்சு.

**ஆவித்தல்**-கொட்டாவி கொள்ளுதல்; ஆக்ராணம் பண்ணுதல்; (நுகர்தல்) பெருமூச்செறிதல். [அரவமாவிக்கும்: பெரியதிரு. 1. 2. 8.]

**ஆவுகம்**-வாணுள்.

* **ஆழ் பொருள்** - எளிதிலறிதற்கரிய பொருள். [அறிவித்தேனும் பொருளை: நான்முகன். 1.]

**ஆழ்தல்**-மூழ்குதல்; [இன்ப வெள்ளத் தாழ்ந்தேன்: பெரிய திரு. 6. 3. 4.] ஆழமாதல்; [ஆழ் கடலைக் கடைந்த: திருவாய்.4. 7.5.] அழுந்துதல்; விழுதல். [மாய்ந்து மாய்ந்து ஆழ்ந்தார்: திருவாய். 4. 1. 6.]

**ஆழ்வார்**-பிள்ளைதேவப் பெருமாளுடைய திருத்தகப்பனுர்; [கூரத் தாழ்வான் திருத்தகப்பனுருக்கு (கூரத்து) ஆழ்வார் என்னும் திருநாமம். 5. 5. 1. ஈட்டிற் காணப்படுகிறது.] ஆழ்பவர். [ஆசைப் பட்டாழ்வார் பலர்: நான்முகன். 14.]

**ஆழ்வாராகிருர்** - ஆழ்வார். [ஈடு, 1. 9. ப்ர.]

* **ஆழங்கால்**-ஈடுபாடு.

* **ஆழங்காற்படுதல்**-ஈடுபடுதல்.

**ஆழமோழை**- (ஆழமாய்) உள்ளே சுழித்துக் கொண்டு போகிற சுழியை உடைய கீழாறு.[பெரியாழ். 3. 7. 4.]

**ஆழல்**-கறையான்.

* **ஆழாத்தல்**-ஈடுபடுதல். [அருளின் பெரு நசையாலாழாந்து: திருவாய். 2. 1. 8.]

**ஆழி**-ஸமுத்திரம்; ஆழம்; இடமுடைமை; காம்பீர்யம்; வட்டமாயிருப்பது; ஆணையின் கைந் நுனி; மிகுதி; குளிர்ச்சி; அவகாஹநம் (மூழ்குதல்); சூரியன். [ஆழியாலன்றங்காழியை மறைத்தான்: பெரிய திரு. 5. 7. 8.] திருமாலின் திருவாழி; மோதிரம். [பொன்னுழிக்கை: திருவாய். 8. 10. 6.] பிரிந்த தலைவியரிழைக்கும் கூடற்சுழி. [சிதைக்கின்ற தாழியென்றுழியைச் சீறி: திருவிருத். 34.]

**ஆழிமூழி**- ஸமயம்; ஸங்கம்; ஆரவாரம்; ஆந்தராளிகர்.

**ஆழியார்**- ஆழ்ந்தவர்கள்; அவகாஹித்தவர்கள்; (ஆழ்ந்து மூழ்கினவர்) தலஸ்பர்சிகள்; (முழுதுமுள்ளிறங்கி ஆராய்வோர்.)

**ஆள்**-ஆண் மகன்; காலாள்; [ஆளமர் வென்றியடுகளத்துள்: 1-ஆம் திருவந். 81.]அடிமை; [ஆளும் பணியுமடியேனைக் கொண்டான்: பெரியதிரு. 6. 7. 1.] உட்படுதல்; கஷ்டத்திற்கு ஆளாவது.

* **ஆள்விடுதல்**-தூது விடுதல். [திருவண்வண்டூரிலே யறி

விப்போ மென்று அங்கே ஆள் விடுகிருர்: ஈடு, 6. 1. ப்ர.]

**ஆளத்தி**-ஆலாபம்: கானத்துக்கு(பாட்டுக்கு)முன்னுகை ஆலாபநம் பண்ணுகை. [(வண்டுகள்)ஆளத்திவையா நிற்குமாய்த்து: திருமாலை. 14. வியா.]

* **ஆளரி**-நரஸிம்மப்பெருமாள்; ஆண் சிங்கம்.

* **ஆளன்**-உடையவன்; ஆளுகிறவன். [கொண்ட லுருவாளன் வானவர்தம் உயிராளன்: பெரிய திரு. 8. 5. 1.]

**ஆளி**-சிங்கம்; யாளி (சரபம்); ஆளுபவன். [அரங்கமாளி என்னுளி: பெரிய திரு. 7. 3. 4.] கோடு; மூலம்.

**ஆளிட்டந்தி தொழுகை** - ஸந்தியா வந்தனத்தை ஒருத்தரைக் கொண்டு பண்ணுவிக்கை.

**ஆளியக்கம்**-ஜநஸஞ்சாரம்.

* **ஆளுடையான்** - அடிமை கொள்ளுபவன். [திருவாய். 5. 1. 10.]

**ஆற்ற**-பொறுக்கப் பொறுக்க. [ஆற்ற நல்லவகை காட்டுமம்மானை:திருவாய். 4.5. 5] மிக. [ஆற்றப்படைத்தான் மகனே: திருப்பா. 21.]

**ஆற்றல்**-மிடுக்கு; பொறை; சக்தி.

**ஆற்றலான்**-பெரியோன்.

**ஆற்றவும்**-மிகவும்.

**ஆற்ருமை**-பொறுக்க முடியாமை. [ஆற்ருமை சொல்லி யழுவோமை: திருவாய். 2. 1. 7.]

* **ஆற்றுதல்**-திருப்தியடைதல். [ஒன்றுமோ வாற்ருன்: பெரிய திருவந். 35.]

* **ஆறல்பீறல்** - பயனற்றது; [தன்னேடொக்க ஆறல் பீறலாயிருப்பதொரு தேவதையைப்பற்றி: ஈடு,7.4.8.]

**ஆறு**-மார்கம்; ப்ரகாரம்; உபாயம்; நதி.

**ஆறு**- பொருத்தல்; சிரித்தல்; தூளி; ஓசை.

* **ஆறுதல்** - தணிதல்; [ஆருத சினத்தின் மிகுநரகன்: பெரியதிரு. 3. 9. 8.] வற்றுதல்; [ஆரு மத யானை:திருவாய். 9. 4. 11.] அமைதியாதல்; [ஆறிய அன்பு: 1-ஆம். திருவந். 35.]

**ஆறுபதம்** - வண்டு.

**ஆன்** - ருஷபம் (காளை); பசு; பெருமை; சிங்கம்.

* **ஆன்ற** - மதிப்புக்கு உரிய; [ஆன்றதமிழ்மறைகளாயிரமும்: திருவாய். தனியன்.]

* **ஆன்றல்**- அகலம்; நீங்கல். [ஆன்றல் வேண்டும்: அகநா. 168] நிறைவு. [ஆன்றேனமரர்க்கமராமை: நான்முகன், 95.]

**ஆனகம்**-கற்பகம்; படகம்; துந்துபி.

**ஆனமட்டும்**-ஆனவரையிலும்.

* **ஆனுமை** - கெடாமை; அழியாமை. [ஆனுத செல்வத்

தரம்பையர்கள்: பெருமாள், 4.2.]

* ஆனுயன் - மாட்டிடையன். [ஆனுனுயன்: திருவாய். 1. 8. 8.]

ஆனி-கேடு (ஹாநி); மூலம்.

* ஆனிரை - பசுத்திரள். [ஆனிரை மேய்க்க நீ போதி: பெரியாழ். 2. 7. 1.]

* ஆனின் மேயவைந்து - பஞ்சகவ்யம். [திருச்சந். 94.]

* ஆனெய்-பசுவின் நெய். [ஆனெய் உண்டி: திருச்சந். 40.]

* ஆனேறு-எருது. [ஆனேறேழ் வென்றான்: பெருமாள். 4. 1.]

ஆனை-பண விசேஷம்; ருஷபம் (காளை); யானை; அத்தி மரம்.

ஆனைக் காலிட்டழிக்கை-பலாத்காரம் பண்ணுகை. [அந்தப்புரத்தை ஆனைக் காலிட்டுத் துகைப்பித்துப் புஜிக்க வொண்ணுதே. ஈடு, 6. 2. ப்ர.]

ஆனைக்குக் குதிரை வைக்கை-ஆனைக்கு முன்னே குதிரையை ஓடவிடுகை. [அதாவது ஆனையினுடைய வேக பரீக்ஷார்த்தமாகக் குதிரையை முன்னடத்தி ஆனையைப் பின்னடத்துபவர்கள்; ஆனையும் துதிக்கையாலே குதிரையைத் தொடும்படி கிட்டக் கிட்டச் சென்று பின்னையும் தொட மாட்டாத தொழியும். அதைச் சொல்லுகிறது: ஈடு, 1. 1. 1. அரும்பதம்.]

ஆனைக்குப் பாடுவாரைப் போலே இருக்கை-சதுரங்கமாடுவாரைப் போலே இருப்பது. அந்யபரதைக்கு, அதாவது கவனிக்க வேண்டிய விஷயத்தை விட்டு வேறொன்றிற் கவன முடையவனாயிருப்பதற்கு இவ்வாறு உவமை கூறப்படுகிறது. [கண்ணிலும் முகத்திலும் துவண்டு ஆனைக்குப்பாடுவாரைப் போலே இருக்கையாலே தட்டி எழுப்புகிறார்கள். திருப்பா. 26. வியா.]

ஆனைக்குப்பு-சதுரங்கம்.

ஆனைக் கூட்டத்துக்குக் கதவிடயானைகள் புணருவதற்கு மறைவு செய்ய. [முடியாமையைக் குறித்தபடி.]

ஆனைச் சாத்தன்-வலியன். [கீசுகீசென்றெங்கு மானைச் சாத்தன். திருப்பா. 7.]

ஆனைத்தாள்-ஆனைக்கால்; பெருங்கால்; தண்ணீர்க் குழாய்; பெருமடை. [அகவாயிலுள்ளதுக் கெல்லாம் ஆனைத்தாளிறே திருக்கண்கள்: ஈடு, 6. 1. 7.]

ஆனைத் தொழில் - சுதந்தரமாய்ப் புரியு மருஞ் செயல். [இவன் பெரிய ஆனைத் தொழிலைச் செய்யாநிற்கச் செய்தேயும்: ஈடு, 7. 4. 3. ஸ்ரீவசனபூ. 192.]

ஆனேப் பணி-ஆனேஜோடு.

ஆனேப் புல்லு-நெல்லு மணி.

* இ - பிரமன்; மன்மதன்; அகச்சுட்டு: இவன், இவள், இது. புறச்சுட்டு: இப்பத்து.

இஃது-இது.

* இக்கரை-இந்தப் பக்கத்துக் கரை; பரமபதம்; [இக்கரை யேறி: பெரியாழ். 5. 3. 7.]

* இக்கு - கரும்பு (இக்ஷு); ஆபத்து; புடைவையை இறுக்கும் முடிச்சு (இக்கு முடிச்சுகள்).

* இகத்தல்-கடத்தல்; விட்டு விடுதல்; நீங்குதல்; பழித்தல்.

* இகம்-இம்மை.

இகல்-மாஸஜீவிதம் [மாதச் சம்பளம்] யுத்தம்; சத்ரு; கிலேசம்; லக்ஷ்யம்; மடி; சாத்ரவம் [பகை.]

இகலிடம்-யுத்த பூமி.

* இகலுதல்-மாறுபடுதல்; ஒப்புறுதல்.

இகழ்கை- அநாதரிக்கை; விடுகை; தூஷிக்கை.

*இகழ்வு-நீங்குகை; விட்டு விடுதல். [இகழ்விலிவ்வனைத்துமென்கோ: திருவாய். 3. 4. 1.]

இகுத்தல்-செருத்தல்; வீழ்த்தல்; மீதல்; இழைத்தல்; இரிதல்; துளைத்தல்; விருந்து வைத்தல்; தாழ்த்தல்.

இகுள்-இகுளே. [எனக்கிகுளாயென்னைப் பெற்றவளாய்: திருவாய்.6. 3. 9.]

இகுளே-தோழி; நட்பு.

இகழ்வின்மை-ஒழியாமை. [விட்டுப் போகாமை: ஈடு, 3. 4. 1.]

இகழுதல்-த்யாகம் செய்தல். [3. 4. 1. ஈடு.]

*இங்கண்-இவ்விடம். [இங்கண்மாஞாலத்து:திருவாய். 9. 2. 8.]

இங்கிட்டு-இங்கே.

இங்கிதம்-குறிப்பு.

*இங்கு-இவ்விடம்; பெருங்காயம்.

*இங்குத்தை-இவ்விடம். [இங்குத்தைநின்றும் துரப்பன்: நாய்ச்சி. 5. 10.]

*இங்குத்தைக்கு-இவ்விடத்திற்கு. [நான் இங்குத்தைக்குச் செய்ய வேண்டுமடிமையை நியமிக்க வேணும்: திருப்பா. 4. விவா.]

*இங்கே-இங்கு. [இங்கே போதக் கண்டீரே: நாய்ச்சி. 14. 1.]

*இங்ஙன்-இவ்விதம். [இங்ஙன் செய்யப் போமோ என்னில்: ஈடு, 5.10. 7.]

*இங்ஙனே-இவ்விதம். [இங்ஙனே போந்தருளி: திருப்பா. 23.]

**இங்ஙனே விடியக் கண்டோம்**- இந்தப்ரகாரம் பலிக்கக் கண்டோம்.

**இங்ஙனே விழுந்து கொடுநிற்கக் கண்டோம்** - எதிர்பாராது நேர்ந்து கொண்டிருப்பதைக் கண்டோம். [தங்களையுமறியாதே எங்களையுமறியாதே இங்ஙனே விழுந்து கொடு நிற்கக் கண்டோ பித்தனை: ஈடு, 5. 9. 5.]

**இச்சந்தான சாபம்**-இந்த ஸந்தானத்திற்கான சிசு. சாபம்-சிசு. மந்திரிகள் ராஜபுத்திரர்களை வைத்துக்கொண்டு சத்ருக்களைஅழியச் செய்து, அந்த ராஜபுத்திரர்களை ராஜஸ்தானே [அரசபதவியில்] வைப்பார்கள். அந்த ராஜபுத்திரரை சந்தான சாபம் என்கிறது.

*__இச்சாண் சந்தை__ - இந்தச் சிறிய வாக்கியம்.

**இச்சை**-ஆசை; இடித்தல்; அஞ்ஞானம்; பொய்.

**இசங்குகை**-நடக்கை. [ஸ்ரீ பிருந்தாவனத்துக்கு வழி இசங்கும்படி: ஈடு, 5.10.2.]

*__இசலுதல்__ - போட்டியிடுதல். [ஒன்றுக் கொன்று இசலி வளரா நிற்கும்: ஈடு, 4. 10. 6.]

*__இசித்தல்__-இழுத்தல் [பெரிய பிராட்டியாராகிற கொடி ப்ரஜைகளை ரக்ஷிக்க வேணுமின்றிசிக்க, செய்கிறேமின்றே என்றவன் இசிக்க: பெரிய திரு. 1. 2. 6. வியா.]

**இசை**-கீதம்; கீர்த்தி; சொல்.

* **இசைகாரர்** - பாடுபவர். [பாலேய் தமிழரிசைகாரர்: திருவாய். 1. 5. 11.]

* **இசைத்தல்**-கட்டுதல்; பாடுதல்; சொல்லுதல். [இதுவோ தகவென்றிசைமின்களே: திருவிருத். 30.]

* **இசைதல்**- பொருந்துதல். [இரண்டுருவு மொன்ருயிசைந்து; 3-ஆம் திருவந். 63.] அநுமதித்தல். [போதவிசை நீயே: திருவாய். 5. 8. 8.] வாய்த்தல். [நாமாளாகவே இசையுங் கொல்: திருவாசி. 3.]

* **இசைப்பு**-சேர்த்தி. [இசைப்பின்றியே நீரணங்காடு மிளந் தெய்வமன்றிது: திருவாய். 4. 6. 2.]

* **இசைவித்தல்** - உடன்படுத்தல். [இசைவித்தென்னை: திருவாய். 5. 8. 9.]

* **இசைவு** - உடன்பாடு. [என் இசைவினை என் சொல்லி யான்விடுவேனே: திருவாய். 1. 7. 4.]

**இஞ்சி**-மதில்.

* **இட்டம்**-விருப்பம். [இட்டமா விளையாடுவோங்களை: நாய்ச்சி. 2. 8.] அன்பு. [இட்டமான பசுக்களை இனிது மறித்து நீருட்டி: நாய்ச்சி. 14. 1.]

* இட்ட வழக்கு - சொன்னபடி நடத்தல். [அது இட்ட வழக்கான நீயும், நீயிட்ட வழக்கான சேவலுமாய்; ஈடு, 1. 4. 1.]

இட்டளப்படுகை - எளிவரவு படுகை; இருந்ததாக எழுந்திராதபடி இருக்கை; ஸங்கோசப்படுகை. [இடமின்றி நெருக்குப் படுதல். ஸௌந்தர்யஸாகரம் இட்டளப்பட்டுச் சுழித்தாற் போலே: ஈடு, 10. 10. 9.]

இட்டளம்-இட நெருக்கடி; [பரமபதத்தி லிட்டளமும் தீர்ந்தது இங்கே யாயிற்று: ஈடு, 9. 8. 2.] துக்கம்; தளர்வு.

இட்டறை-ஆனை படுகுழி.

இட்டறை- ஆனையை வீழ்த்தும் கொடி; எதிர்ப்பை யிடுகை; ஸங்கோசம்.

* இட்டா தெய்வம்-இஷ்டமான தேவதை. [திருவாய். 3. 9. 6.]

இட்டி-இருப்பிடம்; யாகம்; ஈட்டி.

இட்டிகை-செங்கல்.

இட்டிடை-ஸௌக்ஷ்மம்; நுண்ணியது; நுண்ணிடை; இடையூறு.

இட்டிறை-இறையிடுகை; கப்பம் கட்டுகை.

இட்டீடு-விவாதம்; உத்தரப்ரதியுத்தரம் (பதிலுக்கு மேற் பதில் கூறுதல்.) [நீயுமவனும் மைத்துனமை யாடி ஒருவர்க் கொருவர் ஒன்றுக்கு ஒன்பது சொல்லி இட்டீடு கொள்ளும்போது: திருப்பா. 18. வியா.] பிறரை அடித்துத் தான் அடி படுதல்.

இட்டீறு - லீலாவ்யாபாரம். (களிப்புடன் புரியும் விளையாடல்) [இட்டீறிட்டு விளையாடி : நாய்ச்சி. 14. 1.]

இட்டு-இட்டளமாய்; அத்தால் ஸங்கோசமாய் நேரியது (நுண்ணியது) என்றபடி. [அசை; வந்திட்டு.]

இட்டு நீட்டுகை - (நேரே வாராது) தூதர் வாயிலாக வரவிடுகை.

* இட்டுப் பிறத்தல் - ஒன்றற்கென்றே உண்டாகை. [கைங்கர்ய ஸாம்ராஜ்யத்துக்கு இட்டுப் பிறந்து: ஈடு, 2. 3. 1.] ஒருவருக்குத் தானம் பண்ணிப் [அதன் பயனாக] பிறக்கை.

இட்டு மாறினாற் போலே-அவஸ்தாந்தரத்தைப் பஜித்தாற் போலே. [பழைமை நீங்கிப் புது நிலைமையை அடைந்தாற்போலே.]

* இடங்கை-இடக்கை.

[இடங்கை வலம்புரி நின்றார்ப்ப: 2-ஆம் திருவந். 71.]

*இடக்கைப்புரிமுறுக்கு கை-மாறுபடும் செயலைப்புரிகை.

வலக்கைப் புரி முறுக்குகைக்கு எதிராக இடக்கைப் புரி முறுக்கு தலாய் மாறுபடும் செயலை இது குறிக்கிறது.
[அவன் முடிக்க நினைக்க நாம் ஜீவிக்க எண்ணி இடக்கை வலம்புரி முறுக்குகை தவிர்ந்து நாமும் முடிகையிலே துணிந்தோம்: ஈடு, 9. 5. 10.]

*இடங்கொள்ளுதல்- வியாபித்தல்; [இடங்கொள் சமயத்தையெல்லாம்: திருவாய். 5. 2. 4.] விசாலமாதல்.
[இடங்கொண்ட நெஞ்சத் திணங்கிக் கிடப்பன: திருவெழுகூற். தனிப் பாடல்.]

*இடக்கரடக்கல்- சொல்லத்தகாததை வேறு வகையில் தக்கவாறு கூறுதல்.

*இடத்தல்-பிளத்தல்;
[பொருந்தாதான்மார் பிடந்து: 2-ஆம் திருவந். 94.] பெயர்த்தெடுத்தல்.
[இடந்தது பூமி: 1-ஆம் திருவந். 39.]

இடம்-ஸமயம்; இடப்புறம்; ஏழனுருபு; (இராமனிடம்) தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவகை இடங்கள்;விசாலம், தூரம். [திருநாவாய் எத்தனை இடம் போரும்: ஈடு, 9.8.1] வஸிக்குமிடம். [இடமாவதென்னெஞ்சம்: நான்முகன். 66.]

இடம்பாடு-அளவுடைமை; விசாலம்.

*இடம்புரி-இடப்புறம் சுழித்த சங்கு. வலம் புரிக்கு எதிரிடையானது.

*இடம் பெறுதல்-விசாலமாதல்.
[இடம்பெறத் துந்தித் தலத்து: திருவாய். 1. 3. 9.]

இட முடைமை-விசாலமானதாயிருத்தல். [ஏழுலகு முண்டிட முடைத்தால் சாழலே: பெரிய திரு. 11. 5. 3.]

இடர்-வருத்தம்; துன்பம்; [பலி திரிவோன் இடர் கெடுத்த திருவாளன்: பெரிய திரு. 6. 9. 1.]

*இடர்ப்படல் - வருத்தமுறுதல்.

*இடர்ப்பாடு-துன்பம்.

*இடல்-கொடுத்தல்; எரிதல்.

இடவகை-வஸிக்கும் இடம்.
[இடவகைகளிகழ்ந் திட்டென்பாலிடவகை கொண்டனையே: பெரியாழ். 5. 4. 10.]

இடவன்-மண்ணாங்கட்டி.
[எந்தையிடவனெழவாங்கியெடுத்த மலை: பெரியாழ். 3. 5. 5.]

இடவுளர்-குரவர்.

*இடவியது-விசாலமானது.

இடவை-வழி.

*இடறு கட்டை - முட்டுக்கட்டை. [தாய்மார்களாகிற இடறு கட்டைகளாலே: திருநெடுந்.21. வியா.]

இடறுதல்-துன்புறுதல். [ஈமினெமக்கொரு துற்றென்றிடறுவர்: திருவாய். 4. 1. 7.] காலிடறுதல்; தடையாதல்.

*இடி-இடியேறு; முழக்கம்.

*இடி சேர்-இடியை ஒத்த. [திருவாய். 4. 1. 3.]

*இடித்தல் - இடியொலித்தல்; தாக்குதல்; தகர்த்தல்; [இலங்கைக்குழா நெடுமாடம் இடித்தபிரானுர்: திருவிருத். 36.] இதத்தை வற்புறுத்திக் கூறல்.

*இடிதல்-கட்டுக்குலேதல். [நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும்: திருவாய். 9. 6. 2.]

இடுகை-பொகடுகை. [கருமுகமாலையைச் செவ்விபெறுத்த என்று நெருப்பிலே இடுவாரைப் போலே: ஈடு, 4. 6. ப்ர.] கொடுக்கை; [இடுமினோ துற்றென்றிரந்த வர்க்கு: பெரிய திரு. 1. 6. 5.] எழுதுகை; [ஒரு தமிழன் இட்டுவைக்கிருன்; இல்-கிழத்தியாய்: ஈடு, 4. 6. 2.] புண்ட்ரம் தரிக்கை; [நீறு செவ்வேயிடக் காணில்: திருவாய். 4. 4. 7.] பேரிடுகை; [கேசவன் பேரிட்டு: பெரியாழ். 4. 6. 1.] வைத்தல்; [இடுமே இனிய சுவர்க்கத்தில்: இராமாநுஜ. 98.] துணைவினை - செய்திடல்.

இடுசிவப்பு-செம்பஞ்சால்வந்த சிவப்பு; சாய மேற்றினது. [இயற்கையாலன்றிச் செயற்கையால் வந்த சிவப்பு; மேன்மை இடுசிவப்பு; வாத்ஸல்யமே உனக்கு ப்ரகிருதி: திருப்பா. 26. ஆளுவியா.]

இடுசுவைப்பு-ஆரோபிதரஸம். [செயற்கைச் சுவை.]

இடும்பர்-ராக்ஷஸர்; செருக்குடையோர்; துயர்புரிவோர்.

இடும்பை-துக்கம்; தாரித்ரியம். [இடும்பையாலடர்ப்புண்டு: பெரிய திரு. 1. 6. 5.] அஹங்கார மமகாரங்கள்.

இடை-அவகாசம்; ஸம்பந்தம்; [உங்களோடெங்களிடையில்லையே: திருவாய். 8. 2. 7.] ஒக்கலே; நடு; நிறை; அளவு.

இடை சுழி-இடைக் கட்டு. [1-ஆம் திருவந். 86.]

*இடைச் சரி-தோள்வளே. [ஈடு, 2. 5. 6.]

இடைச் சுவர் - ப்ரதிஹதி (தடங்கல்). [நடுவே நீர் இடைச்சுவரானலும் தேங்கவேண்டாவிறே உனக்கு: ஈடு, 9. 7. 9.]

இடைச் செறி கடைச் செறி-விரலில் மோதிர மணிந்தால் முன்னும் பின்னுமிடுகிற மோதிரம்; ஆபரண விசேஷம். [ஈடு, 6. 1. 1.]

இடையாட்டம்-வியாபாரம்: பாரிப்பு; விஷயம்.

[நம்பியேறு திருவுடையார் தாஸர் இடையாட்டமாகவும் நஞ்சீயர் இப்படி அருளிச் செய்தார்: திருப்பா. 9. ஆறு. வியா.] முன்னைய இரண்டு பொருள்களிலும் இச் சொல் வழங்கிய இடம் வந்துழிக்கண்டு கொள்க.

**இடையில்லை**- அவகாசமில்லை. இடை- இடையாட்டமாய்; அவகாசம் (இடம்) இல்லை என்றபடி. [திருவாய். 8. 2. 8.]

**இடையீடு**-விளம்பம்; (தாமதிப்பது) வியவதாநம்; (இடையே மறைவு) உத்தரம்; (விருவிற்கு விடை) பொறுத்திருக்கை. (இடையே விட்டு விடுதல்.)

***இடையுவா** - பௌர்ணமியில்: [நாய்ச்சி. 7. 3.]

**இடையூறு**-ஆபத்து; கிலேசம்.

**இடையெடுக்கை** - கர்மானுகுணமாய்ச் செய்கை.

***இடையொடிவு** - அவாந்தரப்ரளயம். [ஈடு, 1. 3. 3.]

**இடைவீடின்றி**- இடைவிடாதே [திருவாய். 1. 10. 8.]

**இண்டர்**-சண்டாளர். [இண்டக் குலத்தை எடுத்துக் களைந்த: திருப்பல். 5.]

**இண்டல்**-நெருங்கல். [திருப்பல். 5. வியா.]

**இண்டின இடம்**- நெருக்கமான இடம்.

**இண்டை** - செறிவு; தண்ணிமை; தாமரைப் பூ; பூமாலை. [இண்டை கொண்டு தொண்டரேத்த: பெரிய திரு. 3. 2. 10.]

***இணக்கம்**-இசைவு; பொருத்தம்.

**இணக்குகை**-இணங்கப் பண்ணுகை. [திருவாய். 6. 2. 8.]

***இணங்கல்**-உடன்படல். [இணங்கி வானவர் மணிமுடி பணிதர: பெரியதிரு. 1. 2. 6.]

**இணங்கு**-ஸத்ருசம்; [ஒப்பு.]

**இணர்**-கொழுந்து; பூங்கொத்து; பூ; விகாஸம் (மலர்ச்சி).

**இணருகை**-விகஸிக்கை [மலருதல்]. [இணருந்துழாயலங்கள்: பெரிய திருவந். 29.]

**இணை**-சேர்த்தி; ஒப்பு; இரட்டை.

**இணைகை**-தாழ்கை; இசைகை; ஒத்திருக்கை.

***இணைவன்**-ஒத்திருப்பவன். [திருவாய். 2. 8. 1.]

***இத்தலை**-இந்தவ்யக்தி.

***இத்தனை**-இவ்வளவு. [திருவாய். 9. 5. 1.]

***இத்துணை**-இவ்வளவு.

**இதணம்**-பரண்.

***இதம்**-நல்லது. (ஹிதம்).

**இதயம்**-ஹ்ருதயம்; தாத்பர்யம்.

*இதரம்-வேறு.

இதலை-கொடி; கொப்பூழ்.

இதழ்-உதடு; ஏடு; பூவின் இதழ்; [கண்ணிமை.]

இதழி-கொன்றை.

இதள்-இதழ்; பாதரஸம்.

இதிகர்த்தவ்யம்-அங்கம். [கைகால் கழுவுதல் ஆசமனத்திற்கு அங்கமாம். ஒன்றற் குறுப்பாக இங்ஙன் செய்ய வேண்டுமென விதித்தமைக் கேற்ப முறைப்படி செய்ய வேண்டியவை இதிகர்த்தவ்யங் களாகும்.]

இதுதானொரு மலையிறே-மலையத்தனையிறே, அதிகமிறே.

*இப்பேற்றுக்கு இவன் இம்மலையைச் சுமவானோ-பேற்றின் கனத்தை நோக்கும்போது இவன் செய்வது அதியற்பம் என்றபடி.
[ஏளனமாகக் கூறினமையின் விபரீத இலக்கணையால் மலைச் சிறுமையைக் குறித்தது: ஈடு, 3. 3. 6.

*இந்தளம்-கும்மட்டி.
[இந்தளத்தில் தாமரை போலே: திருப்பா. 2. ஆளு. வியா.]

இந்தனம்-புகை; இசை; எரியிடு கலன்; விறகு.

*இந்திரகோபம்-ஒரு வகைப் பூச்சி. [நாய்ச்சி. 9. 1.]

இந்திரஞாலம்-இந்திர ஜாலம்; மாயவித்தை. [திருவாய். 9. 5. 5.]

இந்திரலோகம்-இந்திரனது லோகம்; பரமபதம். [திருமா. 2.]

*இந்திரன் சிறுவன் - அர்ஜுநன். [பெரியதிரு. 2. 3. 6.]

இந்திரைகோன்-திருமால். [வேய் மருதோளிந்திரை கோன்: திருவாய். நூற்.93.]

இந்து-கரடி; கரி; சந்திரன்.

இந்துளி-பெருங்காயம்.

இப்பர்-செட்டிகள்.

இப்பை-பழி.

இம்மடி-யானை.

இம்மி-பொன்மை; புலம்; நுண்மை; அற்பம்.

இம்மை-இந்த ஜந்மம்; [இம்மைக்கு மேழேழ் பிறவிக்கும்: நாய்ச்சி. 6. 8.]
இந்த லோகம். [இம்மையேயெமக் கெய்திற்றுக் காணீர்: பெரியதிரு. 10. 2. 1.]

இமம்-பனி (ஹிமம்).
[இமஞ்சூழ்மலையும்: 3-ஆம் திருவந். 98.]
இமயம்-பொன்; ஹிமயத் பர்வதம்.
[இமயப் பெருமலை போல்: நான்முகன். 87.]

இமவந்தம்-இமயமலை.
[இமவந்தந் தொடங்கியிருங்கடலளவும்: பெரியாழ். 4. 7. 4.]

இமில்-சிமிழ்; ககுத்து.
[இமிவேற்றுவன் கூன் கோட்டிடையாடினை கூத்து: திருவிருத். 21.

இமை-கண்ணின் இமை; கரடி; மயில்; இமைப் பொழுது. [எண்ணத்தாறு மோவிமை: 1-ஆம் திருவந். 31.]

இமைக்கை-பிரகாசிக்கை; விழிக்கை; புத்திபண்ணுகை. [என்னைப்பார்க் கீசனிமை: நான்முகன்.86.]

இமைப்பு-நிமேஷம் (இமை கொட்டுதல்).

*இமையவர்-தேவர். [பெரியாழ். 4. 7. 4.]

*இமையோர்-தேவர். [திருவிருத். 1.]

இயக்கம்-ஸஞ்சாரம்; [இளைப் பிணையியக்கம் நீக்கி: திருக் குறுந். 18.]

இயக்கமறுகை-வியாபரிக்கை; ஜநஸஞ்சார சூந்யதை. (ஆள் நடமாட்டமின்மை)

இயக்கர்-யக்ஷர். [திருப் பல். 9.]

இயக்குதல்-நடையாடச் செய்தல்; ஒலிக்கச் செய்தல்.

இயக்கு-துக்கம்; நடையாட்டம்; தொடர்ச்சியாகச்செல்லுகை. [இயக்கருதபல் பிறப்பில்: திருச்சந். 120.

இயங்க-இசங்க; மயங்க; கலங்க.

இயங்கல்-செல்லுதல் [வானத்தியங்குமெரிகதிரோன் தன்னை: 1-ஆம் திருவந். 8.]

இயத்தல்-கடத்தல். [உணர்ந்துருவியந்த விந்நிலைமை: திருவாய். 1. 3. 6.]

இயத்தாரஹிதம்-அபரிச்சேத்யம் (அளவிடற்கரியது).

*இயம்-வாத்தியம்; ஒலி.

இயம்புதல்-சொல்லுதல்; கூப்பிடுதல். [நெடுவரையியம்பும் இடியுமிழ் தழங்குரல்: மலைபடு. 310.]

இயர்தல்-அறிதல்.

இயல்-மதிள்; ஸ்வபாவம்; பட்டணம்; கானம் (இசை); சாயல்; நடை; தமிழ்இயல்; நூலின் பகுதி; சப்தம். [இயலும் பொருளும் இசையத் தொடுத்து: இராமாநுஜ. 6.]

இயல்படை-விதேயமான ஆயுதம்; விதேயமான ஸேனை.

இயல்பு-ஸ்வபாவம்; இலக்கணம். [தொன்றுமுழுகு மரபிற்றம்மியல்பு வழாஅது: மலைபடு. 537.]

இயல்வு-விரகு (தக்க உபாயம்); ப்ரவிருத்தி; [ஏனமாய் நின்றார்க்கியல்வு: 1-ஆம் திருவந். 12.] ஸத்ருசம் (தகுதி); [இயல்வான வீன் துழாயானடிக்கே செல்ல: 1-ஆம் திருவந். 13.] வ்ருத்தம் (நடத்தை); [ஏதியல்வாக நின்றோர்: இராமாநுஜ. 26.] ஸ்வபாவம்; [இயல்வாயின வஞ்சநோய் கொண்டுவரவும்: திருவிருத். 24.] கூட்டரவு; உத்ஸாஹம்; அழகு.

இயலுகை-பலிக்கை; சொல்லுகை; நிர்வஹிக்கை (நடத்துகை); வர்த்திக்கை

(இருக்கை); [அளவியன்ற வந்தாதி: திருவாய். 1. 4. 11. பன்னீ. வியா.] உண்டாகை. [மூரி நீர் வேலையியன்ற மரத்தாலிலையின் மேலான்: 3-ஆம் திருவந். 5. 3.]

இயலும்-சக்யம் (முடியும்); நிறைவேறும்.

இயவர்-சண்டாளர்.

இயற்கை-யாத்ருச்சிகம் (தற்செயல்); வியாபாரம்; செயல் (வழக்கமாக); நடக்கை; ஸ்வபாவம். [இவையென்ன வுலகியற்கை: திருவாய். 4. 9. 1.]

இயற்கைப்புணர்ச்சி-தலைவனும் தலைவியும் தெய்வம் கூட்ட முதன் முதலிற் கூடும் கூட்டம்.

இயற்சி-யோக்யதை.

இயற்றல்-முயற்சி.

இயற்றி-ஆதிக்யம்; ஸாமர்த்தியம்; யோக்யதை (தகுதி). [9. 1. 4. ஈட்டரும்பதம்] ஸ்வபாவம்; யத்னம்; ருஜீஷம் (அஸாரம்).

இயற்றியில்லாதார் - ஆளில்லாதார்; உச்சராயம் (மேன்மை) இல்லாதார்.

இயற்றுக-ஸஞ்சரிக்க.

இயற்றுதல்-ஏத்தல்; உண்டாக்குதல்; ஸிருஷ்டித்தல்; கூட்டிச் செல்லுதல். [முந்துற்ற நெஞ்சே இயற்றுவாயெம்மொடு நீ கூடி: பெரியதிருவந். 1.]

இயன்ற-செய்யப்பட்ட.

இயன்று-முயன்று.

*இயைதல் - பொருந்துதல்; அனுமதித்தல்; ஒத்திருத்தல்.

*இயைபு-தொடர்பு; பொருத்தம்.

இயைவு-இசைவு; அனுமதி; சேர்க்கை.

இரக்கம்-நெஞ்சில் நெகிழ்ச்சி; ஈடுபாடு; ஈரிப்பு; [ஈடு, 2. 4. 4.] கிருபை. [இரக்கமெழீர்: திருவாய். 2. 4. 4.]

இரக்கொள்ள-இரக்க. [இண்டைச் சடை முடியீசனிரக்கொள்ள: பெரியாழ். 1. 8. 9.]

இரக்கை-அர்த்திக்கை; [இரந்துரைப்பதுண்டு: திருச்சந். 101.] காப்பு (ரக்ஷை).

இரங்குகை-ஈரம் படுகை; நோவு படுகை; நெஞ்சழிகை. [இரங்கி நாடொறும் வாய் வெரீஇ: திருவாய். 6. 5. 9.] கிருபை செய்தல். [ஏழையேதலன் கீழ் மகனென்னு திரங்கி: பெரியதிரு. 5. 8. 1.]

*இரங்கல்-பச்சாத்தாபப்படுதல்; அழுகை.

இரசதம்-வெள்ளி (ரஜதம்.)

*இரட்டித்தல்-இரண்டு மடங்காக்குதல்.

*இரட்டி-இருமடங்கு. [அன்பிரட்டி பூண்டது நான்: கம்ப. சூர்ப்ப. 133.

*இரட்டுறமொழிதல்-ஒருமொழியையோ, தொடரையோ, வாக்கியத்தையோ

இரு பொருள்படக் கூறல் ஒருத்தி. [நன். 14.]

இரட்டுறல்-சிலேடை.

இரட்டை-துப்பட்டி; உத்தரீயம். [மேலே சுற்றின இரட்டைகளும்: ஈடு. 3. 5. 4.] [இரட்டைகளழுக்காளுலும் மடி குலையாமல் வைக்குமா போலே: ஈடு, 5. 9. 3.] தம்பதிகள்; இரட்டைப்பிள்ளைகள்.

*இரண்டாம் நிலம்-மேல் நிலம்; அதாவது இரண்டாவது மாடம். [திருப்பா. 10. வியா.]

இரணம்-(ரணம்) போர்; புண் (வ்ரணம்); பொன்(ஹிரண்யம்); கடன் (ருணம்), [இரணங் கொண்டதெப்ப ராவர்: திருவாய். 9. 1. 4.]

இரணியம்-பொன்.

*இரத்தம்-ரக்தம்; சிவப்பு; பவளம்.

*இரதம்-தேர்; புணர்ச்சி; பல்சுவை; சாறு.

இரதி-பித்தளை; மன்மதன் தேவி; காந்தள்; ஆசை; புணர்ச்சி; பெண் யானை.

*இரப்பாளன்-யாசிப்பவன்.

*இரப்பு-யாசிக்கை.

இரம்பம்-கஸ்த்தூரி மிருகம்; ஈர்வாள்.

இரவலுடம்பு - சொந்தமில்லாத உடம்பு; பரதந்திரமான உடம்பு. (அப்படியே திரும்பக் கொடுப்பதாகப் பிறரிடமிருந்து கைக்கொண்ட பொருள் இரவல் எனப்படும். இதனுல் இஷ்டப்படி உபயோகித்துக் கொள்ள இயலாமை இங்குக் குறிக்கப் படுகிறது. படவே, சுதந்தரமன்று, பரதந்திரம் என்றதாயிற்று. கணவருக்குத் தம்மை அர்ப்பணித்து விட்டபடியால், கற்புடைப் பெண்டிர் தமதுடலை இரவலுடம்பாகக் கருதுவரேயன்றித் தமது இஷ்டப்படி அதனை உபயோகிப்பதில்லை. எனவே இரவலுடம்பு பரதந்திரமான பெண்ணுடம்பு எனத் தேறிற்று.) [இது ஏதேனு மிரவலுடம்போ, சுமந்து கொண்டிருக்கைக்கு: ஈடு, 2. 4. 2.]

*இரவன்-சந்திரன்.

இரவி-ஸூர்யன்; மலை; வாணிகத்தொழில்.

*இரவியர்- சூரியர்: த்வாதசாதித்தியர். [இரவியர் மணி நெடுந் தேரொடு மிவரோ: திருப்பள். 6.]

*இரவு- இராத்திரி; மஞ்சள்; யாசிக்கை.

*இரா-இரவு; இருந்து.

*இராகம்-ஆசை; சிவப்பு; பண்; ஆதரிக்கை. [என் கலிராகமிலாதான்: திருவாய். 1. 6. 5.]

*இராச்சியம்-ராஜ்யம். [இராச்சியமு மாங் கொழிய: பெரியாழ். 4. 8. 4.]

**இராடம்**- கழுதை; பெருங் காயம்.

*__இராத் திருநாள்__ - இராத்திரி உற்சவம்; அத்யயந உற்சவத்தில் இராப்பத்து உற்சவம். [இராத் திருநாள் ஸேவித்தார்கள் போலே யிருக்கை: திருப்பா. 1. ஆரு. வியா.]

**இராப்படைஏறுவாரைப்போலே** - ராத்ரியிலே சண்டை பண்ணுவாரைப்போலே.

*__இரா மடம்__-பெருங்காயம்.

**இராமட மூட்டு வாரைப்போலே**- தம் கண்ணெதிரே வராது கண்டபடி திரியும் தம் மக்களை அவர்கள் அறியாத வாறு இரவில் மடத்தில் உணவருந்தும்படி செய்யும் தாய்மாரைப்போலே. [ஸர்வேசுவரன் இராமட மூட்டுவாரைப்போலே முகந் தோற்ருதே அந்த ராத்மாவாய் நின்று நடத்துகையாலே: ஈடு, 1. 1. 5.]

*__இராமாறு__-இரவெல்லாம். [ப்ரணயிநி யௌவனம் குடி புகுந்தால் இராமாறு நாயகனுக்கு அலை கொடுக்கையாலே உறக்கமில்லை: ஈடு, 7. 2. 1.]

**இராவணம்**-விளக்கு.

**இரிகை**- அஞ்சுகை; ஆரவாரிக்கை; ஓடுகை; சிதறுகை. [இருளிரியச் சுடர் மணிகளிமைக்கும் நெற்றி: பெருமாள். 1. 1.]

**இரிய**- போக; பெரிய; ஆரவாரப்படும்படி. [கடல் வண்ணன் பூதங்கள் மண் மேலிரியப் புகுந்து: திருவாய். 5. 2. 3.]

*__இரீஇ__ - இருத்தி. [வைகல் வைகலிரீஇ உன்னையென்னுள் வைத்தனை: திருவாய். 2. 7. 9.]

*__இருக்கு__-வேதம்; [இருக்கார் மொழியால்: திருவிருத். 64.] முதல் வேதம் [பெரியாழ். 5. 1. 6.]

*__இரு கரையன்__ - மற்ருென்றிலும் பற்றுதல் உடையவன். [அது செய்யுமிடத்தில் இருகரையனுகை யன்றிக்கே புறம்புள்ள பற்று அற்றே புல்கு: ஈடு, 1. 2. 4.]

*__இருகால்__-இரண்டு தடவை.

*__இருகால்மட்டு__-இரண்டு தரம். [முதல் ‘ஆடி’ என்றதிற் காட்டில் இருகால் மட்டு ஆடி என்றதில்: ஈடு, 2. 4. 1.]

**இருகை மதவாரணம்** - திருவேளைக் காரனுக்குப் பேர். இருகை மதவாரண மென்றும் கர்ப்பதாஸர்களென்றும் கோயிற்பணிப் பெண்டாட்டி பிள்ளைகளுக்குப் பட்டர் ஸாதித்த பெயர்; [ஈடு, 9. 4. 10.]

**இருசு**- செம்மை; வண்டி அச்சு.

*__இரு சுடர்__-சூர்ய சந்திரர்கள். [இரு சுடர் மீதினிலியங்கா மும்மதிளிலங்கை; திருவெழு கூற். 3.]

*இருட்சி-இருட்டு.

**இருணுள்** - கிருஷ்ணபக்ஷத்து அஷ்டமி. [இருணுள் பிறந்த வம்மாணே: பெரிய திரு. 8. 8. 9. கிருஷ்ண பக்ஷத்து நாள் என்பதே நேரிய பொருளாயினும் கண்ணன் அவதாரத்தைக் கூறுதலின் அஷ்டமி எனப் பொருள் உரைக்கப் பட்டிருக்கிறது.]

***இருத்தி** - செழிப்பு; (ருத்தி) இருக்கச் செய்து.

***இருத்திச் செய்தல்** - நிர்ப்பந் தித்துச் செய்தல். [இருத் திச் செய்கிருளல்லவிறே இவள்: நாய்ச்சி. 5. 10. வியா.]

***இருதலேத்த நெஞ்சு** - வெவ் வேருன இரண்டு விஷ யங்களி லீடுபட்ட நெஞ்சு. [இருதலேத்த நெஞ்சின் றிக்கே: ஈடு. 9. 8. 3.]

**இருந்ததே குடியாக**- எல்லாரும் ஒக்க. [இருந்ததே குடியா கக் காணும்படி: ஈடு, 4. 1. 1.]

**இருந்திடு வானுக்கென்று** - இருந்து போகிருன் என்று; இருக்கக் கடவன் என்று.

**இருந்தில்**-கரி. [எழுந்த மலர்க் கரு நீல மிருந்தில் காட்ட: பெரிய திரு. 2. 10. 3.]

**இருப்புலி**-துவரை.

**இரும்பு**- கரும் பொன்; ஆயு தம்.

**இரும்பை**-பாம்பு, குடம்.

**இரு மருங்கு**-இரண்டு பக்கம்.

**இருமருங்குந் துய்யான்** - உப யகுல சுத்தன். (இரண்டு குலமும் சுத்தமானவன்) [தாய் வழியிலும் தந்தை வழியிலும் இழுக்கற்றவன் என்றபடி. "இருவர்ச் சுட் டிய பல்வேறு தொல்குடி" என்ற திருமுருகாற்றுப் படையும் அதன் உரையு மிங்குக் காணத் தக்கன. '**இருமருங்குந்துய்யான்**' என்னுமா போலேயிறே கவிபாடுவது: ஈடு, 3. 9. ப்ர.]

**இருமை**-கருமை; பெருமை; பரப்பு; இம்மை மறுமை; இரண்டு. [இருமை வினை கடிவாரே: திருவாய். [1. 6. 9.]

**இருவி**-தினையரிதாள்.

***இருவினை** - புண்ணிய பாபங் கள்.

**இருள்** - அந்தகாரம்; நிரயம் (நரகம்); கறுப்பு; மையல்; யானை; இருள்; துயக்கு; மயக்கு; மறப்பு—ஞாநா நுதய, ஸம்சய, விபர்யய விஸ்மிருதிகள். [அறிவு பிறவாமை, ஐயம், மருள், மறதிகள். இதனுல் அஞ் ஞானத்தின் உட்பிரிவுகள் கூறப்படுகின்றன. ஞாநா நுதயமாவது அடியோடு அறிவே தோன்ருமை. ஸம்சயமாவது "இது தூணே, மனிதனே" என்று ஒரு பொருளை

இன்ன தெனத் துணிய மாட்டாது பல தலைத்தாய அறிவு. விபர்யயமாவது பொருளல்ல வற்றைப் பொருளென்றுணருகை; அதாவது தாம்பைப் பாம் பாகப் பார்ப்பது. விஸ் மிருதியாவது முன்னைய அனுபவத்தா லேற்பட்ட ஸம்ஸ்காரத்தால் அநுப வித்ததைப் பற்றிய அறிவு எழாமலொழிகை. ஆசார்ய ஹ்ருதயம் 2 ஆம் ப்ரக. சூ. 12.]

*இரை- ஒலி; பிராணிகளின் உணவு.

*இரைத்தல்-ஒலித்தல்; கோபித் தல்.

*இரை தேர்தல்-உணவு தேடு தல். [இரை தேர் வண் சிறு குருகே: திருவாய். 1. 4. 5.]

இல் - கிருஹம் (வீடு); ஸ்தா னம் (இடம்); இன்மை; கிழத்தி(தலைவி); கிருஹிணி (மனையாள்); சரீரம். [ஈடு, 4.6.2. ஆன்மா. இன்ப துன் பந்துய்ப்பதற்குச் சரீரம் இடமாயிருத்தலின் அதுவும் இல் எனலாயிற்றென்க.]

இல்லம் - அகம் (கிருகம்).

*இல்லாள் - மனைவி.

*இல்லை செய்தல் - மறுத்தல்.

*இலக்கணம் - அடையாளம்; அழகு; வியாகரணம்.

*இலக்கியம்-இலக்கணத்திற்கு அமைந்த - சிறந்த நூல்; குறி.

*இலக்கு-குறி. [என்னுடைய நெஞ்சமே இலக்காக வெய் கின்றான்: பெரிய திரும 87.]

இலக்கை - மாஸ ஜீவிதம்; (மாதச் சம்பளம்). [ஈடு 4. 8. 8. அரும்பதம்.]

*இலகுதல் - விளங்குதல். [வெண்பலிலகுசுடரிலகு விலகுமகர குண்டலத்தன்: திருவாய். 8. 8. 1.]

இலங்குதல் - விளங்குதல். [இலங்குவான் யாவரு மேறுவர்; திருவாய்,3.8.11.]

இலச்சினை - அடையாளம்; முத்திரை. [இருகாலுங் கொண்டங் கங்கெழுதினற் போலிலச் சினைபட நடந்து: பெரியாழ். 1. 7. 6.]

*இலச்சை - வெட்கம் (லஜ்ஜை). [மோடியோடி லச்சை யாய சாப மெய்தி: திருச்சந். 53.]

இலஞ்சி - குணம்; மதிள்; புன்கு; மாமரம்; வேலி; கிடங்கு; அங்காடி; காவற் காடு.

*இலட்டுவம் - இலட்டு, [கன் னலிலட்டுவத்தோடு சீடை: பெரியாழ். 2. 9. 9.]

இலடு-குதிரை.

இலதை-கொடி (லதா).

இலலாடம்-நெற்றி (லலாடம்).

இலவங்கம்-கிராம்பு (லவங் கம்).

இலாங்கலி - நாளி கேரம் (தென்னை); செங்காந்தள்; கலப்பை.

இலாழி-குதிரையின் வாய் நீர்.

*இலி-இல்லாதவன். [பிறப் பிலியாய்: திருநெடுந். 1.]

*இலிங்கியர்-தார்க்கிகர். [திரு வாய். 4. 10. 5.]

இலைக்குரம்பை - பர்ணசாலை. [துன்னுமிலைக் குரம்பைத் துஞ்சியும்: பெரிய திரும.13.]

*இலைக்குழல்- இலையினாலாகிய ஊதுகருவி. [அண்ணலி லைக் குழலூதி; பெரியதிரு. 10. 7. 6.]

இலைத்தலைச்சரம் - வாயம்பு; (கூரம்பு). [இலைபோலே யிருக்கிற தலையை உடைத் தான சரம். இலைத்தலைச் சரம் துரந்திலங்கை கட் டழித்தவன்: திருச்சந். 54.]

*இலைமலிபள்ளி - பர்ணசாலை. [இலைமலிபள்ளி யெய்தி: பெரிய திரு. 11. 4. 7.]

இலையகலப்படுத்தல் - மிகவும் பாரிக்கை; ஒருவனுக்கொரு வஸ்துவிலே அபிநிவேச முண்டானால் அந்த வஸ்து வைரவம் வித(ய) மாய் (இத்தகைய வகையாய்) அனுபவிக்க வேணுமென் கிற பாரிப்பு. [தாம் புகழப் புக்கவாறே, பசியர் உண்ண என்று இலையக லப் படுக்குமாபோலே தம் குணங்களைக் கேட்கப்பாரிக் கப்புக. பெரிய திருவந். 2. வியா.]

இலையம்-உள்ஜலம்; உமிழ்நீர். [இல் - உள். அயம் - நீர். இலையம்-வாய்க்குள் இருக் கும் நீர். திருநாமமிழ்டங் கோரிலையந் தன்னால்: பெரியாழ். 3. 4. 8.]

இவ்வருகே-இப்பால்.

*இவண்-இவ்விடம், இம்மை.

இவர்தல்-ஏறுதல்; செல்லுதல்; எழுதல்.

*இவரித்தல் - எதிர்த்தல். [இவரித்தரசர் தடுமாற. பெரிய திரு. 8. 8. 9.]

*இவறல்-உலோபம்.

*இவுளி-குதிரை.

இழக்கை-கைவிடுகை; சாகக் கொடுக்கை [மக்களவரைக் கல் லிடைமோத இழந்த வள்: பெரியாழ் 5. 3. 1.]

*இழந்தநாள் - வீணாய்ப்போன நாள்.

இழப்பு-இழக்கை.

இழவு-இழத்தல் [இழவு தரி யாத தோரீற்றுப் பிடி: பெரி யாழ். 3. 5. 2.]

இழிதல்-இறங்குதல், தாழ்தல். [குலந்தாங்கு சாதிகள் நாலி லும் கீழிருந்து: திருவாய். 3. 7. 9.]

*இழித்தல்-இறக்குதல்; நிந்தித் தல்.

இழிகுலம்-ஹீநகுலம் [ஈனவம் சம்.]

இழிதகன்-தண்ணியன்.

இழிப்பு-பழிப்பு.

இழியுந்துறை - இளைப்பாறுகிற இடம்.

இழிவு-தாழ்வு; பள்ளம்.

இழுக்கு-தண்ணிமை, வழு.

இழுகுகை-பரவுகை. படிகை; பூசுகை.

இழுது-நெய்; வெண்ணெய்.

இழுதை-பேதைமை; பேய்; பொய்.

இழை - ஆபரணம்; ஸ்வாப தேசத்தில் சமதமாதிகள் ; நூல்.

இழைத்தல்-நூற்றல்; மாற்றம்; தருதல்; கூறுதல்; உய்த்தல்; பதித்தல்; நினைத்தல்; செதுக்குதல், [என்பு இழைக்கும் இளங்கிளியே: திருவாய். 1. 4. 7.]

இழையீடு - நூலிட்டுத் தைத்தல்; பொல்லாங்கு; [கண்டதிறே இதனுடைய இழையீடு: ஈடு, 10. 2. 5.]

*இளக்கம்-நெகிழ்வு.

*இளக்குழல் — இளகச் செய்தல்.

இளகுதல் - நெகிழ்தல்; கட்டுக்குலைதல்.

இளக-மறைய. [தாம்பாலாப் புண்டாலுமத்தழும்பு தானிளக. பெரிய திருவந். 18.]

இளகிப்பதிக்கை - இளமையேவிருத்தியடைகை.

*இளங்கொடி - சிறு பெண். [இளங்கொடியிவளுக்கென்னினைந் திருந்தாய்: பெரியதிரு. 2. 7. 7.]

*இளங்கோ-யுவராஜன்; இலக்குமன். [நேரிழையுமிளங்கோவும் பின்பு போக: பெருமாள். 9. 2.]

இளங்கோயில்- பாலாலயம்: [வெள்ளத்திளங் கோயிற் கைவிடேலென்று: 2-ஆம் திருவந். 54.]

*இளந்தெய்வம் - க்ஷுத்ர தேவதை. [இன்மொழி கேட்குமிளந் தெய்வமன்றிது: திருவிருத். 20.]

*இளநீர்க்குழம்பிடுதல் - இளநீராலாகிய மருந்தைக் கண்ணிலிடுதல். [இம்மருந்து கண்ணிற்குக் குளிர்ச்சி தருவது. இதை ஒரு குச்சியிற்ை கண்ணிலிடுவர். "இளநீர்க் குழம்பை யிடுகிற துரும்பை" என்னும் 5. 6. 1. ஈட்டரும்பதம் காண்க. [இச் சேஷ்டிதங்களைக் கண்டவர்கள் கண்கள் இளநீர்க் குழம்பிட்டாற்போலே குளிரும்படியாக: பெரியாழ். 1. 5. 8. வியா.]

இளம்படியர்-இளம் பெண்கள். [வானிளம்படியர் வந்துவந்தீண்டி. பெரியாழ்: 3. 6. 3.]

இளம்பிடி - இளம் பெண், யானை, பெண்.

*இளமணற்பாய்தல் - நெஞ்சு இளகி யீடுபடுதல். [நவநீத சௌர்ய நகரக்ஷோபத்திலே யகப்பட்டு இளமணற் பாய்ந்து எத்திறம் என்று மோஹித்துக் கிடக்கிறார்: ஈடு, 1. 3. ப்ர.]

இளமறி-குதிரைக் குட்டி.

**இளமை** - தண்மை (தாழ்வு); காமம்; இளம் பருவம். [கிளரொளி இளமை கெடுவதன் முன்னம்: திருவாய். 2. 10. 1.]

*__இளவணி__ - காலாள். [தூசியேறினவர்கள் பொரப்புக்க வாறே நின்ற இளவணி கலங்கி மேலே நடக்குமா போலே: ஈடு, 7. 4. 1.]

**இளவாடை** - ஸூக்ஷ்ம வஸ்திரம்; ஆடை; புடைவை. இளமையான வாடை. வாடை-வடகாற்று. [இன்னிள வாடை: பெரியதிரு. 9. 5. 2.]

*__இளிதல்__-எளியனுதல்.

*__இளித்தல்__-பல்லைக்காட்டுதல்; பரிஹஸித்தல்; அவமதித்தல்.

*__இளிகண்ணன்__ - பீளைக்கண்ணன். [இளிகண்ணனைப் புண்டரீகாக்ஷன் என்றும்: ஈடு, 3. 9. ப்ர.]

**இளிம்பன்** - ஸுலபன்; கோழைத்தனம் உள்ளவன்.

**இளிம்பு**-அசாதுர்யம் (திறமையின்மை.) [இடையரிளிம்பு கண்டால் சிரிப்பன பசுக்களிறே: ஈடு, 3. 5. 3.]

*__இளிவு__ - இகழ்வு. [இளிவென்னு மேதப்பாடஞ்சுபவர், திருக்குறள் 464.]

*__இளை__-பூமி; மேகம்; இளமை; காவற்காடு. [இளையுங் கிடங்குஞ்சிதைய: பு. வெ. 5. 3.]

*__இளைஞர்__-வாலிபர். [கொலையில் வெய்ய கடுங்காலிளைஞர்: திருவிருத். 37.]

*__இளைத்தல்__ - மெலிதல்; சோர்தல். [இளைப்பாய் இளையாப்பாய் நெஞ்சமே சொன்னேன், இளைக்க நமன் தமர்கள் பற்றி: பெரிய திருவந். 23.]

*__இளைத்துக்காட்டல்__ - குழைத்துக்காட்டல். [பிறரறியாதபடி மறைத்தல் என்பது கருத்து; உண்டவன் அதை மறைக்க வயிற்றைக் குழைத்துக்காட்டலை யிங்கு நினைக்க. இங்குண்டோ என இளைத்துக்காட்டலாம்படி முன்புத்தையதொன்றும் தெரியாதபடி வைக்கும்: ஈடு, 2. 8. 7.]

*__இளைப்பு__-சோர்வு. [இளைப்பெய்த நாய் தந்துமோதாமல்: பெரியதிருவந். 23.] அவித்யை, அஸ்மிதை, ராகம், த்வேஷம் அபிநிவேசம் எனப்படும் ஐவகை க்லேசம். [இளைப்பினையியக்கம் நீக்கி: திருக்குறுந். 18.]

*__இளையவர்__-இளமகளிர். [இளையவர் கலவியின் திறத்தை நாணினேன்: பெரியதிரு. 1. 6. 1.]

*__இளையவன்__-தம்பி.

*__இளையார்__-இளம் பெண்டிர். [முற்றிளையார் விளையாட்டொடு: பெரியதிரு. 3.8.8.]

*__இளையாள்__-இலக்குமி; தங்கை; இளைய மனைவி.

*இற்பிறப்பு - நற்குடிப் பிறப்பு. [இற்பிறப்பறியீர்: பெரிய திரு. 1. 1. 7.]

**இற்றிற்றுவீழ்தல்**- விட்டுவிட்டு நீர்சொட்டுதல். [செவ்வாய் ஊறி ஊறியிற்றிற்று வீழ நின்று: பெரியாழ். 1. 7. 7.]

***இற்று** - இத்தகைத்து; ஒரு சாரியை.

***இற்றை**-இன்றைக்கு. [இற்றைப்பறை கொள்வானன்று காண்: திருப்பா. 29.]

***இறக்கம்**-இறங்குகை; தாழ்வு; இறங்கும் துறை.

***இறக்குதல்** - இறங்கச் செய்தல்; கொல்லுதல்.

***இறங்கலிடுவித்தல்** - போகும்படி பண்ணுதல். [ஏதங்களாயின வெல்லாமிறங்க விடுவித்து: பெரியாழ். 5. 2. 8.]

***இறங்குதல்**-இழிதல்; குறைதல்; பணிதல்.

***இறஞ்சி**-மரவுரி. (ஒருவகை ஆடை) [சிலப். 14. 108. உரை.]

***இறட்டுதல்** - நீரைவாரி இறைத்தல். [முகத்திலேயிறட்டிக் கொள்ளுதல்: திருமா. 36. வியா.]

**இறத்தல்**-கடத்தல்; மிகுதல்; சாதல்.

**இறப்பு**-மிகுதி; போக்கு; சாவு; கைவல்யமோக்ஷம். [இறுகலிறப்பென்னும் ஞானிக்கும்: திருவாய். 4. 1. 10.] ஆன்மா பிரிவது தேஹத்திற்கு மரணமாதல் போல, ப்ரகிருதி ஸம்பந்த மற்றுத் தன்னையே தான் அநுபவித்துக் கொண்டிருக்கையாகிற கைவல்ய நிலையில் ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவின் அநுபவமில்லாமையின் பரமாத்மா பிரிந்து நிற்பது பற்றிக் கைவல்ய மோக்ஷம் ஜீவாத்மாவிற்கு இருப்பு ஆகிறதென்று உணர்க.]

**இறவல்**-ஆசை; அறவி.

**இறவு**-நாசம்; சாவு. [இறவு செய்யும் பாவக்காடு: பெரியாழ். 5. 4. 2.]

**இறவுபடாமல்** - தப்பாமல். [இறவுபடாமலிருந்த எண்மருலோக பாலீர்கள்: பெரியாழ். 5. 2. 9.]

**இறவுளர்**-குறவர்:குறிஞ்சி நில மக்கள்.

**இறவை**-ஏணி; புட்டில்; ஸர்வஸ்வரமி; வழி.

***இருஞ்சுதல்**-சமயம் பார்த்துப் பறித்தல். [பருந்து இருஞ்சினாற் போலே: ஈடு. 7. 6 1.]

***இருஞ்சிக் கொள்ளுதல்**-பறித்துக் கொள்ளுதல். [தன்னதான பூமியை மஹாபலி போல்வார் இருஞ்சிக் கொள்ள: ஈடு, 2. 8. 7.]

***இருய்த்தல்**-பின் வாங்குதல், [நீருக்கும் சேற்றுக்கும் இருயாத வடிவைக் கொண்டா

ஞயத்து: நாய்ச்சி. 11. 8. வியா.]

இறுக்குவாதம்-நரம்பை யிழுத்திறுகப் பிடித்துக்கொண்டு மூச்சுவிடப் போகாவாதம்; அதாவது அவிக்ருதராய்ச் சற்றும்சலியாதே இருக்கை. [நாம் அவிகிருதராயிருக்க வேணும் என்று கூறிக் கொண்டு இறுக்குவாதம் பற்றினாற் போலேயிருப்பது: ஈடு, 3. 5. 2.]

இறுக்கை-ஒடிக் கை; அழிக் கை; [வில்லிறுத்து: திருநெடுந். 13.]

இறுகல்-ஸங்கோசம்; சிக்கெனவாதல். [இறுகலிறப்பென்னும் ஞானிக்கும், திருவாய். 4. 1. 10.]

இறுத்தல்-வரி செலுத்தல்; [இறுக்குமிறை இறுத்துண்ணும். திருவாய்: 5. 2. 8.] தங்குதல்;விடை யிறுத்தல்; கேள்விகேட்டல்.

*இறுதல்-முறிதல்; முடிந்து போதல்; இற்றிற்றழிதல். [இறுகின்ற தாலி வளாகம். திருவிருத். 81.]

இறுப்பு-வரி செலுத்தல்.

*இறும்பூது-அதிசயம்; மலை; தளிர்.

*இறே-அன்றோ.

இறை-ஸ்வாமி; அற்பம். அரசிற்குச் செலுத்தும் கட்டு சரீரக் கடமை. [இறைகளவை நெறுநெறெனா: பெரியதிரு. 5. 10. 4.]

*இறைஞ்சுதல்-வணங்குதல்.

*இறையிலி-வரி செலுத்த வேண்டாத நிலம்; மானிய நிலம்.

*இன்கவி-இனிய கவிதை. [இன்கவி பாடும் பரம கவிகளால்: திருவாய். 7. 9. 6.]

*இன்சொல்-இனிய பேச்சு. [வாயிலோரின் சொலில்லை: திருமா. 30.]

இன்பம்-ஸுகம்; ஆசை; காமம்; காட்சி; மணம்; இனிமை.

இன்பு-இனிமை; ரஸம். [இன்புதுன்பனி. திருவாசி. 6.]

*இன்மை-இல்லாமை; [உண்மையாயின்மையாய்: திருவாய். 6. 3. 4.] வறுமை. [இருள் கொள் துன்பத்தின்மைகாணில்: திருவாய்: 9. 1. 3.]

இன்றியமையாமை - இல்லாது பொருந்தாமை; மிதுனத்தில் ஒன்று இல்லாமற் போனால் மற்றதுவுமில்லா போகை.

*இன்ன - இத்தன்மையான; ஓர் உவமவுருபு; இத்தன்மையன.

இன்னதனை-இம்மாத்திரம்.

*இன்னுடி-இங்கே. [இன்னுடியும் வந்து நமக்கு உபகரித்தான் காணும்:மித்ரபாவேர்; தனிச்லோகம்.]

இன்னாதாகை-வெறுக்கை. [நான் நோவுபட வேண்டுகிறது அவனுக்கவள் முகங்

கொடுத்து அங்கே துவக்கு கையிறே என்று இன்னுதாகிருள்: ஈடு, 1. 4. 7.]

**இன்னுப்பு**-வெறுப்பு.[இன்னுப் பாலே சொல்லுகிருர்: ஈடு, 5. 4. 3.]

***இன்னுரினேயார்** - இவரிப் படிப்பட்டவர். [இன்னுரி னேயா ரென்றெண்ணுவா ரில்லே காண்: நாய்ச்சி 7.5.]

**இன்னியர்**-பாணர்; பாடுகிற வர்கள்.

**இன்னே**-இப்படியே; இவ்விடமே; இப்பொழுதே.

**இனம்**-ஸங்கம். கிளே; (சுற்றம்) அமைச்சு; ஸமூஹம்;ஒப்பு. [இனமேது மிலானே: திருவாய். 9. 3. 5. ]

**இனன்**-ஏவம்விதன் (இப் படிப்பட்டவன்.) உபமா மானம்; [திருவாய். 1.1.2.]

**இனிமை**-ரஸ்யதை;'இனிப்பு; நலம் 'இன்பம்.'

**இனியர்**-பாணர்; (பாடலால் இன்பம் தருபவர்); பெண்டிர்.

**இனேதல்**-இரங்கல்; வருந்தல்; பயப்படுதல்.

**இஷ்டஸித்தி**-ப்ரயோஜநாந்தரங்களேச் சொல்லுகிற நூல். [திருமாலே7.வியா.][அழகர் திருமலேயில் உள்ள பொய்கையொன்று இஷ்டஸித்தி எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது.]

**ஈ** - நாசம்; [ஈபாவஞ் செய் தருளாலளிப்பாரார்: திருவாய். 2. 2. 2.] தேனீ; வண்டு; சிறகு; அதிசயத்தைக் குறிப்பது. [நீர்மை தரை காண ஒண்ணுதா யிருந்த வீடு: ஈடு, 1. 3. 1.]

**ஈக்குகை**-நடத்துகை.

**ஈகம்**-சந்தன மரம்.

**ஈகை**-அழிகை; கொடுக்கை; கடைகை; வாங்குகை; ஈகைச் செட்டி; சந்தனம்.

**ஈங்கு**-இங்கே.

***ஈசன்**-பகவான்; [இளந்தளிரிற் கண் வளர்ந்த ஈசன் தன்னே: பெரிய திரு. 2. 10. 1. ] சிவன்; [ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்; நான் முகன். 96.] அரசன்; குரு: தலேவன்; மூத்தவன்.

***ஈசி**-அருவருப்புக் குறிப்பு. [ஈசிபோமினிங்கி ரேன்மின்: பெரிய திரு. 1. 3. 8.]

**ஈட்டம்**-கூட்டம்; விருஷபம். [மெய்யடியார்கள்தம் ஈட்டம் கண்டிடக் கூடுமேல்: பெருமாள் திரு. 2. 1.]

**ஈட்டுதல்**-திரட்டுதல் [ஈட்டிய வெண்ணெய்; திருவிருத். 21.]

**ஈடழிகை**-கெட்டுப் போகை; பலஹானி; [ஈடழியப் போயினவால்: நாய்ச்சி. 8. 3.] ஒப்பாகாமை: ஈடு- ஒப்பு; அழிகை-ஆகாமை.

***ஈடறவு**- சீர்கேடு. [என்னிவனென்னப் படுகின்ற ஈடறவும்: பெரிய திரும. 143.]

ஈடு-இடுகை; வலிமை; ஜோடு; பணயம்; ஸத்ருசம் (பொருத்தம்); யுக்தம் (தகுதி); [ஆட்செய்யுமீடே: திருவாய். 1. 6. 2.] ஒப்பு; [ஈடுமெடுப்புமிலீசன் திருவாய். 1. 6. 3.] கவசம். [ஆர் எதிராக உடம்புக்கு ஈடிடுகிறது; ஈடு, 9. 9. 2.]

ஈடுபடுகை - அவகாஹிக்கை; (நன்கு அனுபவிக்கை); நோவு படுகை.

ஈடுபாடு- ப்ராவண்யம். (நன்ருக மனம் பதிகை).

*ஈடேறுதல்-உஜ்ஜீவித்தல்.

ஈண்டு-இப்போது; இவ்விடத்தில்.

ஈண்டுதல் - திரளுதல்; விரைதல்.

ஈண்டென-சீக்கிரமாக.

ஈத்தொற்றி - ஈ முதலான ஜந்துக்கள் விழாமல் கட்டுகிற மேற் கட்டி.

ஈதல்-கொடுத்தல்.

ஈமவனம்-சுடுகாடு.

ஈயுவன்-இராவணன்.

*ஈர்த்தல்-இழுத்தல். [நெடுங் கயிறு படுத்தி யென்னை யீர்த்துக் கொண்டு விளையாடும்; நாய்ச்சி: 14. 4.]

ஈர்மை-ஈருகை; ஈரப்பாடு; ஈடுபடுதல். [என்னை யீர்மை செய்து: திருவாய். 9. 6. 3.]

ஈரக்கையாலேஸ்பரிச்சித்து-கிருபையாலே கடாட்சித்து.

ஈர்ஷ்யை- பரோச்ச்ராயம், பொருமை. [பிறர் மேன்மையைக் கண்டு ஸஹிக்க மாட்டாமை.

ஈரப்பாடு - ஸ்நேஹம். [ஈரப் பாட்டை விளைத்து: ஈடு, 9. 6. 4.]

ஈரம்-குளிர்ச்சி; ஸ்நேஹம்; ஈரப்பாடு; கருணை.

ஈரவன்-சந்திரன்.

ஈரல்-இரண்டு பிளவு செய்தல்: வருத்துதல். [பாதக வர்க்கத்துக்கு ஈரலாம்படி: 9. 6. ப்ர.]

ஈரியாய் இருக்கை - நெஞ்சு நெகிழாநிற்கை. [என் கண்ணனுக்கென் நீ ரி யாயிருப் பாள்: திருவாய். 6. 7. 9.]

ஈரிலை-சூரியன்.

ஈருகை-அறுக்கை; ஈரப்பாடு; ஸங்கம்.

*ஈவு-நாசம்;[ஈவிலாத தீவினைகள்: திருவாய். 4. 7. 3.] கொடை; பங்கீடு.

ஈழம்-கள்; பொன்; வேத்ரப்ரசுரதேசம் (மூங்கில் மலிந்த தேசம்); சிங்களம்.

ஈளை-கோழை. [ஈளையேங்கியிருமி: பெரியதிரு. 1. 3. 6.]

ஈறிலி-தெய்வம்.

ஈறு-கடைசி; எல்லை; மரணம்.

ஈன்-ரஸம்; குளிர்ச்சி.

ஈன்ற-பெற்ற.

ஈன்ருன்-பிதா; பிரமன்.

ஈனம்-முயல்; இழிவு; குறைபாடு; தண்ணியது.

*ஈனவன்-இழிவானவன். [ஈன வரேயாதலாலின்று: நான் முகன். 6.]

ஈனனம்-வெள்ளி.

*உ-அகச்சுட்டு: உவன். புறச் சுட்டு: உப்பக்கம்.

உக்க-முடிய.

உக்கம்-கோழி; மருங்கு; பசு; ஆலவட்டம். [உக்கமும் தட்டொளியுந் தந்து: திருப்பா. 20.]

உக்குகை-முடிகை; மக்கிப் போகை.

உகட்டு-தலை மண்டையிட்டு. [கோகுகட் டுண்டுழலா தார்: திருவாய். 3. 5. 4.]

உகத்தல்-ஸந்தோஷித்தல். [உகந்து முலையுண் பாய் போலே: 2-ஆம் திருவந். 8.]

உகப்பு - விரும்பியுறையுமிடம். [எய்தானுகப்பு: நான்மு கன். 28.]

உகம்-பூமி; ஊழி; முடிவு; உரகம்; நாள்; இரண்டு; (யுகம்).

உகவை-உகப்பு; விருப்பு; காமம். [உகவையால் நெஞ்சமுள்ளுருகி: திரு வாய். 6. 2. 8.]

உகளித்தல்-மகிழ்வுதலை மண் டையிடுதல். [மேலைத் தொண்டுகளித்து: திரு வாய். 10. 8. 7.]

உகளுகை -ஸம்ப்ரமமாக ஸஞ் சரிக்கை.

உகிர்-நகம்.

உகினம்-புளிமா.

உகைத்தல்-உபேக்ஷித்தல். [உகைக்குமேல் எத்தேவர் வாலாட்டும்: நான்முகன், 38.]

*உங்கு-உவ்விடம்.

உச்சி-முடி; நடுப்பகல்; உச் சந் தலை; [உச்சியிலெண் ணெயும்: பெரியாழ். 4. 6. 3.] நுனி; மலையுச்சி.

உச்சிவீடு-பகல் விடுகை.

உச்சி-பகல்; வீடு - விடுகை. மத்யானவேளையில் ஓய்வு விடுகை. இதனால் இடை விடுதல் கருதப்படுகிறது. [உச்சி வீடு விடாதே இத் தையே மநோரதியா நின் றது: ஈடு, 9. 3. 7.]

உசாத்துணை-பேச்சுத்துணை.

உசாவுகை-பரஸ்பரம் சொல் லுகை; சாஸ்திர விசாரம் செய்கை.

உசிதன்-பாண்டியன்.

*உட்கண்-ஞானக்கண் [நெஞ் சென்னுமுட் கண்ணேற் காணும்: பெரிய திருவந்; 28.]

*உட்செல்லுதல் - மனத்திலே படுதல். [உட்செல்ல வுணர்த்தி: திருவாய். 1.9.11.]

உடக்கு-திருகாணிச் சுரையின் உட்புரி.

உடங்கு - பக்கம்; ஒருபடி யாக.

உடம்பிடி-கைவேல்.

உடம்புவெளுக்கை- வைவர்ண்யம் (நிற வேறு பாடு).

உடல்-அலங்காரம்; பாலியம்; உற்பத்தி; ஐசுவரியம்; தேஹம்; [5. 10. 1. ஈட்டரும்பதம்] உடைமை; ஸாதனம்; ஹேது. [பயப்படுகைக்கு உடலன்று: ஈடு, 1.2.6.]

உடலான - விஸூசகமான, நிர்வாஹமான.

உடன்-ஸாபிப்பிராயமாக (கருத்துடன்). [இவை பத்துமுடன் பாடி: திருவாய். 2.3.11.]

உடன்கேடன் - மற்றொருவன் கேடே தன் கேடாயிருப்பவன். [உடன் கேடனாய் நின்றுநோக்கும்:ஈடு,1.1.3.]

உடன்படுகை-சம்மதிக்கை.

உடன்வந்தி-ஸஹஜம். [உடன் வந்தியான வல்வினை: ஈடு, 5.8.5.]

உடன்று-கோபித்து.

*உடுத்தல்-ஆடை அணிதல்.

உடை-செல்வம்; கூறை (ஆடை); வேலமரம்; உள்; அரை.

உடைகுலைப்படுகை-கரையுடைந்து போகை; நிலைகுலைந்து போகை. [உடை குலைப் படுகிற மனசு: ஈடு, 5.1.4.]

உடைகை - ஹேயப்படுகை; எளிமைப் படுகை; நெஞ்சு குலைகை: அழிகை.

உடையார்-ஸ்வாமி.

உடையார் கூறினால் ஓடா காதே-உடைமை உடையவன் சொன்னால் தன்னது நல்லதென்பானே ஒழிய வழங்கர்தென்னானே.

உடைவாள்-உடையிலேசெருகி இருக்கிறவாள்; வங்கி.

உடோ-அடா.

[நேரே நின்றன்றோ உடோ பரிமாறுவது: ஈடு, 4.8.2.]

உண்டதுருக்காட்டாமை - சாப்பாடு உடம்பில் ஒட்டாமை. ஆகார ஸௌக்கியம் தேஹத்தில் தெரியாதிருக்கை, கவலை என்றபடி.

உண்டறுத்தல் - உணவருந்தி ஜீர்ணமாக்குதல்; அநுபவிக்கும் திறமை. [உண்டறுக்க மாட்டாத போக்யதாதிசயம்: ஈடு, 10.3.2.]

*உண்டி உடல்காட்டல்-உடம்பு உணவு ஸூகத்தைத் தெரிவித்தல். [உடம்பைக் கண்ட மாத்திரத்திலேயே ‘இவன் இத்தகைய போஜநமருந்துகிறவன் என்பது தெரியும் என்றபடி: ஈடு, 5.10.6.]

உண்டற்றல்-நெஞ்சு உளுக்கிவித்தரா (ஈடுபடு)தல்.

*உண்டை-கவளம்; குறுக்கிழை[மடிப்புடைவை வெந்தால் உண்டையும் பாவுமொத்துக்கிடக்கும்; ஸ்ரீவசனபூ. 2.19.1.]

*உண்டைவில்-சுண்டுவில்.

[உண்டைவில் நிறத்தில் தெரித்தாய்: திருவாய் 1.5.5.]

*உண்ணுழிகை-கர்ப்பகிரஹம்.

*உண்ணுதல்-சாப்பிடுதல். ஸம்ஹரித்தல். [இவை யுண்ட சுரனே: திருவாய். 1.1.7.]

உண்மை-ஸ்வபாவம்;யாதார்த்த்யம்.

உணக்கி-துவளும்படிபண்ணி. [உணக்கி நீ வளைத்தால்: திருவாய். 6.2.8.]

உணக்குகை-தவிக்கமாட்டாதே துவளும்படிபண்ணுகை; சுவை மணமறுகை. [உணக்கு மின்பசையற: திருவாய். 1.3.5.]

*உணங்கல்-உலர்ந்ததானியம்; புழுங்கல் நெல். [உணங்கல் கெடக்கழுதையுதடாட்டங்கண் டென்பயன்: திருவாய். 4.6.7.]

உணங்கு - வியாதி; நெல்; கழுது; பேய்: பரண்;இளைக்கை.

உணர்ச்சி-ஞானம்.

உணர்த்தல் - அறிவித்தல். [உருகுமென்றுணர்த்துமினே: திருவாய். 6.1.4.] தலைவியின் ஊடலை நீக்கித் தெளிவித்தல்;
உன்னை அணைக்கைக்காகக் குளித்தேன்; பூச்சூடினேன் என்னும் இன்னுரையானும் கலத்தலானும் மயக்கி ஊடலை நீக்கித் தெளிவித்தலென்க.குறள்1246 காண்க.

உணர்தல்-அறிதல்; அநுபவித்தல்; உண்மையாக் கொள்ளுதல். [உணர்குவனல்லேன்: அகநா. 2.6.] தலைவி ஊடல் நீங்கித் தெளிகை. அதாவது நான்பறிக்கிற பூவைப் பறித்தாய்; உன்னுடைய பூ நாள் நின்றது என்று உரையாடும் படி ஊடல் நீங்கித் தெளிகை. [ஊடல் உணர்தல் பிரிதல். குறள் 1109]

உணர்வினர் - ஞானத்தை உடையவர்கள்.

உணர்வு-ஞானம்.

உணவு-ஊண்.

*உத்தரவேதி-யாகசாலை [உத்தரவேதியில் நின்ற ஒருவனை: பெரியாழ். 1.9.6.]

*உத்தானம்-பிறந்த குழந்தையை வெளிக்கொணருதல். [உத்தானம் செய்து கந்தனராயரே: பெரியாழ். 1.8.1.]

உத்தேசியர் - ஆதரணீயர்; (ஆதரிக்கத் தக்கவர்;).

உத்பத்தி-உண்டாகை.

உதகம்-நீர்.

உதந்யா - உதகம் ஆதாதும் இச்சா; பாநேச்சா; நீர் உட்கொள்ள விருப்பம்; நீர் வேட்கை.

உதரபந்தனம்அரைப்பட்டிகை. [அமலனுதி. 4.]

உதவி-உபகாரம். [பெருநல்லுதவிக் கைம்மாறு: திருவாய். 2.3.4.]

உதறிப்படுத்தல் - நிஸ்ஸம்சயமாகுதல்: (ஐயம் களைதல்);

உரஜஸ்ஸ (ரஜோகுணமும் புழுதியும்)போய்த்தே ஜிஷ்டம் (ஒளிருவது)ஆகை.

உதிகுவடு-பாண்டி; சோறு.

உதிர் நெல்லுப் பொறுக்குகை-அறுவடையில் ஏராளமாய் விளைந்திருக்க உதிர்ந்த நெல்லைப் பொறுக்கிக் கொண்டிருக்கை.[விளைந்து கிடக்க உதிர் நெல் பொறுக்குகிறுயோ: திருப்பா. 13. வியா.)

உதிரத்தெறிப்பு -ரக்த ஸம்பந்தமான உறவு.

*உதிரி-உதிர்ந்தது. [உதிரி முளைத்துப் பல பர்யந்த மாமா போலே: ஸ்ரீவசனபூ. 389,]

*உதைப்பளவு - ஒரு நொடிப் பொழுது. [உதைப்பளவு போது போக்கின்றி: நான்முகன். 32.]

உந்த-உங்கேயுள்ள; தள்ள.

உந்தி - திருநாபி; ['உந்தி' யென்றும் 'துந்தி'யென்றும் திருநாபிக்குப் பேர்: ஈடு, 1. 3. 9.] நீர்ச்சுழி; கடல்; நடு; உயர்ச்சி; தேரின் உருளை.

உந்தி பறக்கை - குதித்துப் பறக்கை. [மகளிர் கூடியாடிப் பாடி விளையாடுகை. உந்தி பறந்த ஒளியிழை யார்கள்: பெரியாழ். 3.9.11.]

உந்துகை-எழும்புகை; நடத்துகை; தள்ளுகை. [உந்து மதகளிற்றன்: திருப்பா. 18.]

உந்தையாவன் - உன் தமப்பன் யார். [உந்தையாவனென்றுரைப்ப: பெருமாள் திரு. 7. 3.]

உப்பு-இலவணம்; உவர்ப்பு; கடல்; மகளிர் விளையாடல்.

*உப்புச்சாறு—அமிருதம். [உப்புச்சாறு கிளருவது எப்போதோ என்று கிடக்கிற தேவ ஜாதி: ஈடு, 1. 3. 11.]

உபயோகி - உபயோகப்படுகிறவன்: உதவுகிறவன்.

உபலக்ஷணம் - அடையாளம். [ஒரு இடத்தைக் குறிப்பிடுவதற்கு உதவும் அறிகுறி; காகமுள்ள இடம் பொன்னன் வயலென்றுல் வயலுக்குக் காகம் உபலக்ஷணமாகும். ஒருமொழி தன் பொருளை யுணர்த்துவதோடு அதன் இனத்தை யுங்குறிப்பதும் உபலக்ஷணமாம்.]

உபஜீவனம்-ப்ரபத்தி.உபாதார, உபகரண, ஸம்ப்ரதார, ப்ரயோஜந அபிஜ்ஞ கர்த்ருகம்-உபாதானம் முதலியவற்றை அறிந்த ஒருவனே செய்வது உலகிலுள்ள ஒவ்வொரு பொருளும்.

உபாதானம் - முதற்காரணம். உபகரணம்-ஸாதனம். ஸம்ப்ரதானம் உபயோகிப்பவன். ப்ரயோஜநம் - விநியோகம். [குடத்தைச் செய்பவன், முதற்காரணமாகிய மண்ணையும், ஸாதனமா

கிய தண்டம் முதலியவற்றையும், அதனை உபயோகிப்போரையும், விநியோக முறையையும் அறிந்தே குடம் செய்வதைப் பார்க்கிறோமன்றோ! இது சாஸ்த்ரயோநித்வாதி கரண பாஷ்யம் முதலியவற்றில் காணத்தக்கது.]

**உபாயத்திலேசெலவெழுதி**-அந்யதாஸித்தி பண்ணி.

**உபோத்காதம்**-ஆரம்பம்.

**உம்பர்**-மேலிடம்; தேவர்கள். [உலகாளு மும்பர் தாமே: பெரியதிரு: 7. 8. 10.] உயர்ச்சி; மேலே; [உண்டு களித்தேற் கும்பரென் குறை: திருவாய். 10. 8. 7.]

* **உம்பர்கோன்**-இந்திரன். [உம்பர் கோனுமுல கேழும் வந்தீண்டி வணங்கும்: பெரிய திரு. 5. 4. 5.]

**உம்பர்வாய்**-ஆகாசம்.

**உமணர்**-உப்பு வாணியர்.

**உமிழ்தல்**-உமிதல்; வெளிப்படுத்தல். [வெளிநாடு காண உமிழும்: ஈடு 2. 8. 7.]

**உய்கை**—அனுபவிக்கை; உஜ்ஜீவிக்கை.

**உய்த்தல்**-உஜ்ஜீவிக்கச் செய்தல்; நடத்துதல்; செலுத்துதல்.

**உய்தல்**-பிழைத்தல்; தப்புதல்.

* **உய்த்துணர்வு**-ஞானம். [உய்த்துணர் வென்னுமொளி கொள் விளக்கு: 3-ஆம். திருவந். 94.]

**உய்யக் கொள்ளுகை** - உஜ்ஜீவிக்கும்படி செய்கை.

**உய்யானம்**-சோலை (உத்யாநம்).

* **உய்வுபாயம்**-ஈடேறும் வழி. [உய்வுபாய மற்றின்மை தேறி: திருவாய். 4. 9. 11.]

**உயங்கல்**-வருத்தம்.

**உயர்திணை**-அஃறிணை யல்லாதது; மக்கள் தேவர், நரகரைக் குறிக்கும் சொல்.

**உயர்ந்தோர்**-ஞானிகள்.

**உயர்ந்தோர்மாடு**-ஞானிகளிடம். [உலகமென்பதுயர்ந்தோர் மாட்டே: தொல்காப்.]

**உயர்வு**-மேன்மை; வருத்தம் [உயர்வறவுயர் நலம்: திருவாய். 1. 1. 1.]

**உயவுகை**-உசாவுகை; வார்த்தை சொல்லுகை. [உயவேனுயர்ந்த வரோடல்லாமல்: 1ஆம் திருவந். 64.]

**உயவு**-வருத்தம்; உசாவுகை.

**உயிர்**—ஆத்மா; தேகம்; பிராணன்; மனம்; காற்று; ஜீவன்.

**உயிர்க்கொலை** - சித்திரவதை. [உயிர்க்கொலையாகக் கொல்ல வேணும்: ஈடு, 9. 9. 1.]

**உயிர்த்தல்**-சிருஷ்டித்தல்; உயிரைப் பெறுகை; மூச்சு விடுகை.

**உயிர்ப்பிடம்**-மூச்சுவிடுமிடம்.

**உயிர்ப்பெறல்**-பிராணன் உண்டாகை.

உரகம்-பன்னகம் (பாம்பு).

**உரண்டம்**-காக்கை.

*__உரப்பு__-நெஞ்சுரம்.

*__உரப்புதல்__ - அதட்டுதல். [உரப்பி ஓராயிரம் பண வெங்கோவியல் நாகத்தை: சிறியதிரு. 37.]

**உரம்**-வலிமை; ஞானம்;மார்பு; ஊக்கம்.

*__உரவியன்__ - வலிமையுடைய வன். [முன் கை யுரவிய ராயிருப்பார்: திருப்பா. 3. வியா.]

உரவு-உரப்பு; மார்பு; விஷம்; [உரவுநீர்ப் பொய்கை நாகங்காய்ந்ததும்: திருவாய். 6. 4. 1.] உரகம் (பாம்பு); உதரம் (வயிறு); பலம். [உரவிடையாப் புண்டு: திருவாய். 1. 3. 1.]

உரி-தோல்; பட்டை. [மர வுரி.]

உரிச்சொல்-நிகண்டு. [பிங்கல முதலா நல்லோருரிச் சொலின்: நன். 460.]

உரிசூறை கொள்ளுகை - வஸ் திரம் முதலாகக் கொள்ளை யிடுகை. [இத்தலையை உரி சூறை கொண்டு போனவனை; ஈடு, 7. 3. 4.]

உரித்தாதல்-அந்தரங்கமாதல்; தகுதியாதல். [உனக்குரித் தாக்கினையே; பெரியாழ். 5. 4. 7.]

*__உரித்து வைத்தல்__ - உண்மை நிலையை வெளிப்படுத்தல். [உரித்து வைத்தாரிறே அவர்கள் ஸ்வரூபத்தை: ஈடு, 3. 9. 2.]

உரிமை-ப்ராப்தம்; (பாத்திய தை) பரிவு; அடிமை. [எந்த மக்குரிமை செய்யென: பெரிய திரு. 2. 3. 6.]

உரிய-தகுதியான.

**உரியோர்**-தக்கோர்; யோக்கி யர்.

உரு-சரீரம்; வஸ்து; விக்கிர கம்; மான்; அழகு; மிடுக்கு; [கானிடையுருவைச் சுடு சரர் துரந்து: பெரிய திரு 1. 4. 2.] விருஷபம்; தழும்பு; ஜபம். [ஓதியுரு வெண்ணு மந்தியால்: 1-அம். திருவந். 33.]

*__உருக்காட்டல்__ - உரு வெளிப் பாடாகத் தோன்றுகை. [மாயவன் வந்துருக் காட்டு கின்றான்: நாய்ச்சி. 12. 3.]

*__உருக்குதல்__-உருகச் செய்தல்.

*__உருகு பதம்__ - உருகுதற்குரிய நிலைமை. [உருகு பதத் திலே வளைந்தவை நிமிர்க்க வொண்ணா தாப்போலே: ஈடு, 1. 4. 3.]

உருத்தல் - கோபித்தல்; தோற்றுதல்.

உருத்து-மிகவும் கோபித்து.

உருப்பம்-வெப்பம்; கோபம்.

உருப்பினி-ருக்மிணி.

உருப்பு- மிகுதி; வெப்பு; கொடுமை.

உருப்பொலிகை - தழும் பேறுகை [உருப் பொலிந்த

நாவினேனை: பெரியாழ்: 5. 4. 7.]

*உரும்-இடி; பயம்.

உருமகம்-நரமேதம்; உரு சரீரம்: மகம்-யாகம்; நரமேதமாவது யுத்தம். [உருமகத்தே வீழாமே: பெரியாழ். 4. 8. 3.]

உருமாய்கை - ஸ்வரூபம் நாசமடைகை. [நெருப்பிலிட்ட பஞ்சுக்குவை போல உருமாய்ந்து போம்: திருப்பா. 5. வியா.]

*உருவ-நன்கு; முடிய.

உருவம்—அழகு; ரூபம் (நிறம்); தேகம்.

உருவறை- ரூபஹீநம் (அழகில்லாதது).

உருவாரம்-வெள்ளரி.

உருவி-பூமி; (உர்வி).

உருவிலி-மன்மதன்.

உருவெளிப்பாடு - ப்ரத்யக்ஷம் என்னும்படி மானஸஸாக்ஷாத்காரம்: நேரிலுள்ளது போன்று மனத்திற்குத் தோற்றம். [உருவெளிப்பாடா உரைத்த: திருவாய் நூற். 45.]

உருளரிசி-கொத்துமலி.

உரை-ராமாயணம்; சப்தம்; வியாக்கியாநம்; கீர்த்தி.

உரைக்கை-சொல்லுகை; மாற்றறிவதற்குத் தேய்க்கை. [உரைகல்மீதே நிறமெழவுரைத்தாற்போல்: பெரியாழ். 5. 4. 5.] மெருகிடுகை. [சுட்டுரைத்த நன் பொன்: திருவாய்: 3. 1. 2.]

உரை செய்தல் - சொல்லுதல். [இருந்த வாற்றையுரை செய்தான்: திருவாய்நூற். 99.]

உரோடம்-கோபம் (ரோஷம்); [உரோட மென்று மிலோங் கண்டாய்: நாய்ச்சி. 2. 5.]

உலகம்-குணம்: பூமி: திசை; உயர்ந்தோர்.

உலகு-லோகம்; சாஸ்திரம்.

உலங்கு - பெருநுளம்பு. (பெருங்கொசுகு) [உலங்குண்ட விளங்கனிபோல்: நாய்ச்சி. 8. 7.]

உலத்தல்-அழிதல்; குறைதல்; பூர்த்தியாதல். [எங்குலக்க ஓதுவனே: திருவாய். 3. 1. 5.]

உலப்பு-முடிவு; நாசம்; அளவு. [உலப்பில் கீர்த்தியம் மானே: திருவாய்: 6. 10. 1.]

உலம்- கல் திரள்; திரண்ட கல்; வலி; நீர்; காற்று; துன்பம்.

உலவம்-உலோபம்.

உலவலர்-துறந்தோர்.

உலவி-மதிள்.

உலவுதல்-ஸஞ்சரித்தல்.

உலறுதல்-கோபித்தல்; பசையறுதல்.

உலறி-உதறி. [மாசுடையுடம்பொடுதலையுலறி: நாய்ச்சி. 1. 8. அரும்பதம்.]

உலாவுகை-ஸஞ்சரிக்கை.

உலூகலம்-உரல்.

**உலோபுகை**- உ லோ பி க்கை. [ஏது முலோபாய் காண்: பெரியாழ்: 2. 7. 6.]

**உவட்டுகை**-குமட்டுகை, தெவிட்டுகை.

**உவணப்புள்**-கருடன்.

**உவணம்** - கருடன்: [சிறையுவண மூர்ந்தாய்: 1 ஆம். திருவந். 22] கழுகு.

**உவத்தல்**- விரும்புதல்; மகிழ்தல். [உவந்தவுள்ளத்தனாய்: அமலனாதி. 2.]

**உவத்தி** - ஸந்தோஷிக்கிறாய். திவத்திலும் பசு நிரை மேய்ப்புவத்தி: திருவாய். 10. 3. 10.]

**உவமை**-உபமை.

**உவர்**-உப்புச் சுவை; களர் நிலம்; கடல்.

**உவர்த்தல்**-உப்புக் கரித்தல்; அருவருத்தல். [இனித்தல் என்றும் ஒருபொருளுண்டு. அப்பொருளில் "உவர்க்கும் கருங்கடல் நீருள்ளான்" (3 ஆம் திருவந். 37.) என்னுமிடத்து வியாக்யாநம் செய்யப்பட்டுள்ளது. "திருப்பாற் கடலை வாஸஸ்த்தானமாகவுடையனாய்" என்பது வியாக்கியாநஸூக்தி "வீங்குவர்க் கவவினீங் கல் செல்லேம்" (நற். 52) என்பதிலும் இனிமை எனப் பொருள் படுதல் காண்க.]

**உவர்த்தலை**-வெறுப்பை உடையை. உவர்த்தல் வெறுப்பு. [இராமனை ய முவர்த் தலை: திருவாய். 10.3.10.]

***உவலை**-ஹேயம்; (இழிவு). [சிறுமனிசருவலையாக்கை: திருவாய் 1.5.8.]

**உவன்**-அதூரவிப்ரக்ருஷ்டன். (நெடுந் தொலைவிலில்லாதவன் சிறிதுதொலைவில் முன்னிற்பவனைச் சுட்டுவது.)

**உவனியம்**-உபநயநம். [ஓதுவாய்மையு முவனியப் பிறப்பும்; பெரியதிரு. 5.8.7.]

உவரி-ஸமுத்திரம்; உப்பு நீர். [உவரிக் கடனஞ்ச முண்டான்: நான்முகன். 56]

உவா-பருவம். [அமாவாசை பௌர்ணமி முதலிய நாட்கள் பருவ மெனப்படும்; உவா என்பதுஅமாவாஸை பௌர்ணமி எனுமிரு நாட்களையே கூறும்]

உவாத்து-உபாத்தியாயன். [அவனுக்குப் பொறைக்கு உவாத்தாய்ப் பொறை விளையும் படியான ஸ்ரீபூமிப் பிராட்டி: ஈடு, 1.9.4.]

உவாலம்பம்-நிந்தை. (உபாலம்பம்]

உழக்கி-மிதித்து: தேய்த்து நசுக்கி.

உழக்குகை-செருக்குடன் ஸஞ்சரிக்கை, மர்த்திக்கை. (துகைக்கை). [காரேறுழக்க உழக்குண்டு: நாய்ச்சி13.4.]

*உழக்கோல்-தாற்றுக்கோல். [மிகைத்தாளுகில் உழக்

கோல் கொண்டு தகர்க்கி ரேமென்றிருப்பர். திருப்பா. 18. ஆரு-வியா.]

**உழத்தல்**-அழிதல்; பிரயாஸப்படுதல் வெல்லுதல்.

**உழந்தாள்**-ஆயாஸித்தவள். [உழந்தாள் நறு நெய்: பெரியாழ். 1.2.4.]

**உழந்து**-துக்கப்பட்டு.

**உழப்பு**-உற்சாகம்; வலிமை; வருத்தம்; முயற்சி.

**உழலுகை**-அலமருகை; சுழலுகை; ஸஞ்சரிக்கை. [திருவடியே சுமந்துழல: திருவாய். 4.9.9.]

**உழலை**-பலகணி; உழலைத்தடி. [உழலை யென்பிற்பேச்சி: திருவாய்: 5.8.11.]

**உழவு**-கிருஷி; (உழுகை)

**உழவுகோல்**-தாற்றுக்கோல். [கையும் உழவுகோலும் பிடித்த சிறு வாய்க் கயிறு ஸாரத்ய வேஷத்தை முமுக்ஷுப். 22.3.]

***உழற்றுதல்**-அலைத்தல்; சுழற்றுதல்.

**உழறுதல்** - கலங்குதல். [என்னைக் கண்டு முருநெகிழ்ந்தாய்; பெருமாள் 6.8.] ஸஞ்சரித்தல்:[நீண்ட வண்டத் துழறலர் ஞானச் சுடர் விளக்காய்: திருவிருத். 58.]

**உழிதருகை**-ஸஞ்சரிக்கை.

**உழுதுபால்** - குழம்புப்பால் [திருப்பா. 4. ஆரு. வியா.]

**உழுவை** - புலி; ஒரு வகை மீன்.

**உழை**-இடம்; மான். [உழைக் கோர்புள்ளி மிகையன்று கண்டாய்: பெரியாழ்: 5.1.2.]

**உழக்கை**-பிரயாஸப் படுகை; [பிறர்க்கே யுழைத்தேழை யானேன்: பெரியதிரு. 1.9.7.] நோவுபடுகை. [வலையுட்பட்டுழக்கின் றேற்கு; திருமா. 36.]

**உள்**-மனம்; உள்ளிடம். இடம்; ஏழனுருபு; [என்னுள்] தொழிற் பெயர் விகுதி. [செய்யுள்.]

**உள் நடுக்கம்**-அந்தர்பீதி (உள்ளச்சம்).

**உள்மானம் புறமானமாராய்கை**-உள்ளங்காற்சிவப்பும் மேற்கறுப்பும் கவனிக்கை: உள்ளும்புறமும் நன்கு ஆராய்கை.

**உள்மானம்** - உள்ளங்காற்சிவப்பு. புறமானம்; மேற்கறுப்பு.

**உள்வாங்குதல்**- உள்ளொடுக்குதல்; ஸம்ஹாரம் செய்தல். [ஒரு நான்று நீயுயர்த்தி உள்வாங்கி நீயே: நான்முகன், 5.]

**உள்வால்வேண்டுதல்**-நீருள் நீச்சலுக்குப் புணையாகப் பசுக்களின் வாலைப் பிடிக்க வேண்டியிருத்தல். ஆறுகளிலே பசுக்களை

யோட்டி வாலைப் பிடித்து நீந்துவார்கள்.

**உள்வெதுப்பு**- உட்சுரம்[அவன் பரமபதத்தில் உள்வெதுப் போடேபோலே காணு மிருப்பது; ஈடு, 4.10.2.]

**உள்ளம்**-மனம்; கருத்து.

***உள்ளழிதல்** - நெஞ்சழிதல். [உள்ளழியா நின்ருள்: ஈடு 4.2.1.]

**உள்ளி**-ஓர்ந்து; விசாரித்து.

**உள்ளீடு**-விஷயம். [மந்திரத் திற்கு உள்ளீடான வஸ்து விலும். முமுக்ஷூப்.] தாரகம்: (தரித்துக் கொண்டிருப் பது) அந்தராத்மா. [காரணமான பூதபஞ்சகத்துக் கும் உள்ளீடாய்: ஈடு, 1.10.2.]

**உள்ளுகை**- உள்ளத்திலே வைக்கை; நினைக்கை; ஆராய்கை.

***உள்ளுச்செல்லுதலை** - அறிவு முதிர்ச்சி. [ஸர்வஜ்ஞனை வனை உணர்த்த வேண்டி யிறே உள்ளுச் செல்லு கிறது: திருப்பா. 21.வியா]

**உள்ளுறை**-உள்விஷயம். கருத் துப் பொருள்.

**உளர்**-துளர் (களைக் கொட்டு)

**உளர்தல்**-சிதறுதல் தடவுதல்.

**உளவாக** - உண்டானவை களாக; துப்பாளாக: ஒற்ற ருக. உளவு-ஒற்றன்.

***உளறுதல்**-வாயில் வந்தபடி பிதற்றுதல்.

**உளியம்**-கரடி.

**உளைகை**-ஈடுபடுகை. நோவுறு கை; துக்கப்படுகை. ஆர வாரிக்கை. தோல்வியுறல். [சுடருக்குளைந்து: திரு விருத். 69.]

**உளைமயிர்**-பிடரிமயிர். [திருமே னியும் உளைமயிருமாய் நின்றநிலை: ஈடு, 1.9.2.]

**உற்பலம்**-செங்கழுநீர்; கருநெய் தல்.

**உற்ருர்**-பந்துக்கள் [உரைக்கி லோர் சுற்றத்தாருற்ரு ரென் ருரே: பெரிய திருவந். 77.]

**உற்றிருக்கை** - ஸ்நேஹமதிச யித்திருக்கை.

***உறகுதல்**-உறங்குதல்-[உறக லொண்சுடராழியே சங்கே: பெரியாழ். 5.2.9.]

**உறக்சம்**-ப்ரபலம்.

**உறல்**-ஸ்பரிசம். [சுவையொலி யூறலாகி நின்ற: திருவாய். 3.6.6.] அடைகை.

**உருவுதல்** - துக்கப் படுதல்; [ஒரு நீர்ச்சாவியாயுருவின எங்கள் பக்கலிலே: திருமா. 22 ஆரு. வியா.]

***உறிஞ்சுதல்**-வாயினுல் உள் ளிழுத்துப் பருகுதல்; [மூக் கால் உறிஞ்சுதல். மூக் குறிஞ்சி முலை யுணுயே: பெரியாழ். 2.2.2.]

**உறுகை**-கிட்டுகை; ஸத்ரு சமாகை; சேருகை; பிர யோஜநகபரிசிக்கை [கண்டு கேட்டுற்று: திரு வாய். 4.9.10.]

உறுத்துகை - க்லேசப்படுத்துகை.

*உறுக்குகை- அதட்டுகை. [முலைக்கண் நெறித்து க்லேசப்படா நின்றேன்; உண் என்று உறுக்கிக் கொடுக்க: ஈடு, 1.9.5.]

உறுதல்-ஊற்றம்; தீண்டல்.

உறுப்பு-அவயவம்; ஸாதனம்; பிரயோஜனம்; உபயோகம்; தேஹம்.

உறுப்புத்தோல் - கிருஷ்ணாஜினம்; முழுத் தோல். [உறுப்புத் தோலும் வெண்ணெய் பூசின உடம்புமான யஜமாந வேஷத்தோடே: ஈடு, 4.8.4 ]

உறுவது-உற்றது; ப்ராப்தம் (தக்கது). [திருவாய். 4.10.4.]

உறைப்பு - நல்ல வாய்ப்பு; [கூடிற்ருகில் நல்லுறைப்பே: திருவாய். 8.8.8.] ஊற்றம். [சேஷித்வ உறைப்புத் தோற்ற: ஈடு, 2.5.8.]

உறைப்பன்-மிடுக்கன். [உறைப்பனூர்: பெரியாழ்; 4.8.2.]

உறையல்-பிணக்கல்.

உறையூர்-மருத நிலத்தூர்; சோழநாட்டின் பழைய தலைநகர்.

உன்னம்-அன்னம்.

உன்னல்-ஆராய்தல்; நினைத்தல்; ஆசைப்படுதல்; மனம்.

உன்னி-ஓர்ந்து; த்யாநத்திற்குரிய பொருள். [ஞால முன்னியைக் காண்டும்: பெரியதிரு. 10.1.3.]

உன்னுகை-ஓர்கை; நினைக்கை; உத்தேசிக்கை.

உன்னித்தல் - த்யானித்தல். [கழல் வாழ்த்துமி னுன்னித்தே; திருவாய்: 4. 6. 9.]

உன்னோடு தோழமை கொள்ளுவன்-உன்னோடு தோழமை கொள்ளுவிப்பன். பிற வினையில் வந்த தன் வினை.

ஊக்கம்-உண்மை; மிகுதி; முயற்சி; உயர்ச்சி; கர்வம்; மிடுக்கு. [ஒள்ளெரி மண்டியுண்ணப் பணித்த ஊக்க மதனை நினைந்தோ: பெரிய திரு. 10. 9. 1.]

ஊகம்-புலி; குரங்கு.

ஊச்சு-பயம்.

ஊசல்-ஊஞ்சல்; உஞ்சல்.

ஊசி-எழுத்தாணி; தைக்கும் ஊசி.

*ஊட்டம்-உணவு. [ஊட்டமின்றித் துறந்தாலொக்குமே: நாய்ச்சி. 1. 9.]

ஊட்டி-கழுத்து; போக்யம்; ஆஹாரம்; [வரபலம் புஜ பலம் ஊட்டியாக வளர்த்த சரீரமானது: ஈடு, 2. 6. 6.]

ஊட்டியாக-கழுத்தாக:போக்யமாக. [ருஷபங்களேழையும் ஊட்டியாக ஒருகாலே தழுவினான்: ஈடு, 1. 5. 1.]

ஊடல்-ஸம்போக மத்யத்திலே பிறக்கும் கலஹம்.

ஊடறுக்கை-விவேகிக்கை.

*ஊடாடுதல்- நடுவே திரிதல். [ஊடாடு பனி வாடாய்: திருவாய். 1. 4. 9.]

ஊடு-உள்; நடுவு; அந்தரங்கம்.

ஊணத்தியாயம்-ஊணன் உண்கைக்குப் பாரிக்கை.

*ஊத்து-காஹளத்வநி. [புறம்பு ஊத்தும் சுவடு மற்றுக்கிடக்கவும் வேணுமோ: திருநெடுந். 8. வியா.]

*ஊத்தை-அசுத்தம். [ஊத்தைக் குழியி லமுதம் பாய்வது போல்: பெரியாழ். 4. 6. 10.]

ஊதி-பரி; சிவிகை; பண்டி; கஜவிஷாணம்; தேர்.

ஊதியம் - விருத்தி; வட்டி; பயன்; கல்வி.

ஊதியன்-சேரன்.

ஊதை-குளிர் காற்று. ஊதையும் கூதையும் குளிர் பனிக் காற்று.

ஊமைக்கூறன்- அநக்ஷரமாக (எழுத்துத் தெரியாது) சொல்லுகை; [ஊமைக் கூறநுகக் கூப்பிடுவது: ஈடு, 2. 1. 3.]

ஊர்தல்-நடத்தல்; [புள்ளூருங் கள்வா: திருநெடுந். 23.] பரவுதல்; ஒழுகுதல். [திருநெடுந். 23.]

ஊரழி பூசல் - ஊரழிந்து போகும்படியான கலகம்.

ஊரா-ஊர்ப் பசு. [ஊராமிலைக்க: திருவிருத். 94.]

ஊருணி-ஊர்க்காரருண்ணும் குளம். [ஊருணியிலே கள்ளியை வெட்டி எறிவாரைப் போலவும்: ஈடு, 1. 5. ப்ர.]

ஊழ்-முறை; பழமை; பகை.

ஊழ்மை-பழமை; முறைமை. [ஊழ்மையிற் கண்ண பிரான் கழல் வாழ்த்துமின். திருவாய். 4. 6. 9.]

ஊழி-முறைமை; ப்ரளயம்; யுகம்; பூமி; ஸம்ஸாரம்; விதி; நெடுங்காலம்.

ஊழித்தீ-வடவை. (வடவாமுகாக்நி)

ஊழிலை-பழுத்து விழுந்த இலை.

ஊளி-சப்தம்; பசி. [ஊளியெழவுலக முண்டவூணே: திருவாய். 7. 4. 4.]

ஊற்றங்கோல்-ஊன்றுகோல்.

ஊற்றம்-உறைப்பு; அநுஸந்தானம்; நிலையுடைமை; மேம்பாடு.

ஊற்றிருக்கை-ஊறிக் கொண்டிருக்கை.

ஊற்று - ஊன்றுகோல்; நீர் ஊற்று; சுரப்பு.

ஊறல்-பசுமை.

ஊறு-தீமை; கொலை; உடல். [அரவூறுசுலாய்: திருவாய். 7. 4. 2.] ஸ்பர்சம் (பரிசம்).

ஊறெண்ணெய் - உச்சியிலூறும் எண்ணெய்; எண்ணெயாடல்;[எல்லார்தலையிலும் ஊறெண்ணெய் வார்த்தாற்

போலே: திருப்பா. 17 வியா.]

**ஊன்**-மாம்ஸம்; தசை; சரீரம்.

**ஊன்றி**-உரகம். (ஒரு வகைப் பாம்பு.)

**ஊன்று**-சார்பு.

**ஊனம்**-மிகுதி; குறை.

**ஊனகாரகர்** - பிறரைக் கொண்டு தீமை செய்பவர். [ஊனமாயினகள்செய்யுனோகாரகர்களேலும்: திருமா. 41.]

**எ**-அகவினு: எவன். புறவினு: எக்கொற்றன்.

**எஃகு**-கூர்மை; வேல்.

**எஃகுகை**-ஏவுகை; எழும்புகை; தள்ளுகை; எட்டுகை; பன்னுகை; ஆராய்கை.

**எக்கம்**-ஏகதந்திரி என்னும் வாத்தியம்.

**எக்கமத்தளி**-பறை விசேஷம். [ஏதமில் தண்ணுமையெக்கமத்தளி: திருப்பள். 9.]

**எக்கல்**-மணல்மேடு. [கடலெக்கலினுண் மணரிற்பலர்: திருவாய். 4. 1. 4.]

**எக்கே**-இதென்ன கஷ்டமோ. வருத்தக் குறிப்பு. [எக்கே இதுவென்: பெரியதிரு. 10. 8. 8.]

**எங்ஙனே**-எந்தப் பிரகாரம்.

**எச்சம்**-குறை; வேள்வி (யக்ஞம்);புத்திரன்; ஸந்தானம்.

**எஞ்சல்**-சுருங்கல்; ஒழிதல்; குன்றுமை; கேடு.

**எசு**-யஜுர்வேதம். [இருக்கெசுச் சாமவேத: பெரியாழ். 5. 1. 6.]

**எட்டியர்**-செட்டிகள். [வைசியர் பெறும் பட்டப் பெயர்.]

**எட்டுக்கெழுநாக்கு**-ஓலைமுறி.

**எட்டுணை**-எள்ளளவு, (ஸ்வல்பம்). [எட்டுணைப்போது: திருநெடுந். 11.]

**எட்டம்**-நீளம். [பின்பு கொண்டு வந்திணைக்க எட்டம் போராமையாலே: ஈடு, 4. 1. 5.]

**எடுக்கல்**-அளவிட்டறிதல். [ஞானங்களா லெடுக்கலெழாத வெந்தாய்: திருவாய். 2. 3. 5.]

**எடுத்துவிடுதல்** - படையெடுத்தல். [காங்கேயன் தெற்கே படையெடுத்து விட்டபோது: கண்ணிநுண். 3. வியா.]

**எடுப்பு**-ஏற்றம்; [ஈடுமெடுப்புமிலீசன்: திருவாய். 1. 6. 3.] புதையல். [இவன் எடுப்பெடுத்தான்: ஈடு, 8. 1. 3.]

**எடையெடுக்கை**-நிறுக்கை.

**எண்**-மனோரதம்; மனசு; கணக்கிடுகை எட்டுத் திக்கு. [எண்ணிலும் வரும்: திருவாய். 1. 10. 2.]

**எண்கு**-கரடி [கான எண்கும் குரங்கும்:? 6. 10. 6.]

**எண்டோளீசன்**-எட்டுத்தோள்களை உடைய ஈசன். [எண்டோளீசர்க்கு எழில்மாடம்: பெரியதிரு: 6. 6. 8.]

எண்டோளி-துர்கை.

எத்தகம்-அகம் (கிருஹம்); அதிசயம்; விலக்ஷணதாந்யம்.

எத்தனைகுளிக்குநிற்கும் — பரிமளம் பல எண்ணெய்க் குளி வரையிலும் நிற்கும்.

எத்தாது-எட்டாது.

எதிர்ச் செறிக்க - எதிர்நீச்சலாகப் போக. [பெருங்காற்றை எதிர்ச்செறிக்க மாட்டாதாப் போலே: திருநெடுந். 21. வியா.]

எதிர்சூழல்புக்கு - (ஒருவனை அகப்படுத்துவதற்கு) எதிராகச் சூழ்ச்சியுடன் வந்து. [எதிர்சூழல் புக்கு எனைத்தோர் பிறப்பும்: திருவாய். 2. 7. 6.]

*எதிர்தல்-ஒப்பாதல். [பிஞ்ஞகன் தன்னோடெதிர்வன்: நான்முகன். 8. 4.]

எதிர்ப்பறை-எதிர்த்துஉத்தரஞ் சொல்லுகை.

எதின்-தோல்.

எந்தை-என் தந்தை உபகாரகன்; ஸ்வாமி.

எந்நாள்-எந்தக் காலம்;அநேககாலம்.

எப்பேர்ப்பட்ட- எப்படிப்பட்ட.

எம்மனா-எமது ராஜாவே; [எம்+மனா] எமது தாய் போலே பரிவனானவனே. [எம்+அனா] [எம்மனா என் குல தெய்வமே: பெரியாழ். 5. 4. 3.]

எம்மைக்கும்-எற்றைக்கும்; எப்பிறப்புக்கும்.

எம்மைத்தொற்றி - எம்மைமத் தொடங்கி.

எம்மனை-எம் தாயார்.

எம்மனோர்கள்-எம்மைப் போன்றோர்.

எம்மா-ரக்ஷை; கட்டழகு.

எம்மான்-எம்முடைய பிதா; எம்முடைய ஸ்வாமி.

எய்-அம்பு; முள்ளம்பன்றி.

எய்க்கை-இளைக்கை; [திருவாய். 8. 8. 7.] பலஹாநி; [எய்த்த சொல்லோடு: பெரியதிரு. 1. 3. 6.]

எய்த்தல்-மனக்கிலேசம்; இளைத்தல்.

எய்த்து-இளைத்து.

எய்தலர்-கிட்டாதவர்கள்.

எய்துகை-கிட்டுகை; அடைகை; பொருந்துகை.

எய்ப்பு-இளைப்பு; ஆபத்து.

எய்யாது-ஓயாது; மறவாது.

எய்யாமை-அறியாமை.

எயில்-பட்டணம்; திரிபுரம்; [எயிலெரித்தான்] மதிள்.

எரி-கேட்டை நக்ஷத்திரம். [ஈடு, 5.8.7.] பிரகாசம் [எரி கொள் செந் நாயிறு; திருவிருத். 82.] கிளி.

*எரிவு-கோபம்.[இழந்தா ளெரிவினாலீர்த்து: பெரியாழ். 1.2.4.]

எருத்தம்-கழுத்து,

எருத்து-கழுத்து.

எருமணம்-செங்குவளை.

**எருவை**-கழுகு; கழுதை; கொறுக்கை.

**எல்**-தகுதி, இரவு.

**எல்கல்**-எதிர்த்தல்.

**எல்லவன்**-சந்திரன்.

**எல்லரி**-கைம்மணி.

**எல்லி** - ராத்திரி; [எல்லிப்பகலென்னுது: பெரிய திருவந். 19] ஸந்தியாகாலம்.

**எல்லே**-ஆச்சரியச்சொல்; இரக்கச்சொல்; [திருமா. 26.] எல்லே என்னே ஏடி-இவை தோழியை முன்னிலையாக ஸம்போதிப்பவை.

**எல்லை**-வரம்பு; முடிவு; காலம், (ஸமயம்).

**எல்லைசதிரி**-மிக்க சாமர்த்திய சாலி.

**எல்லை நிலம்**-ஸீமர்பூமி (முடிவிடம்).

**எலி**-கள்ளி.

**எலியெலும்பன்**-அற்பசக்தியுள்ளவன். [எலியெலும்பனை அடியேன் பக்கலிலும் செய்வதோ: ஈடு, 9.2.4.]

**எலுநன்**-தோழன்.

**எவ்வம்**-துன்பம். [எவ்வநோய் தவிர்ப்பான்: பெரியதிரு. 9.10.2.]

**எவ்வல்**-துன்பப்படுத்தல். [எவ்வும் வெவ்வேற்பொன் பெயரோன்: பெரியதிரு. 1.7.4.]

**எழல்**-புறப்படுகை.

**எழநண்ணி**-போக்கிலே யொருப்பட்டு [எழ நண்ணி நாமும்: திருவாய். 9.5.10.]

**எழப்பரிய**- அணுக அரிய; நினைக்க அரிய.

**எழப்பாய்ந்து** - உயரக்கிளம்பி; [எழப்பாய்ந்து பிடித்துக் கொள்ளும்: பெரியாழ். 1.4.7.]

**எழவாங்கல்**-தூரப் போதல். [முகங்காட்டாதே எழவாங்கி யிருக்கை: ஈடு, 4.7.2.]

**எழில்** - வர்ணம்; இளமை; அழகு; நிறம்; நன்மை.

**எழிலி** - மேகம்.

**எழுகை**-போகை.

**எழுச்சி**-புறப்பாடு; உதயம்; பெருமை; ஞானம். [எழுச்சியாவது சதுர்தச புவனத்துக்கும் நிர்வாஹகஅளவுடைமை: ஈடு,1.3.9.]

**எழுச்சிகொட்டுகை** - புறப்பாடு கொட்டுகை. [கோயில்களில் பெருமாள் புறப்பாட்டுக்கு அறிகுறியாகக் கொட்டுவது வழக்கம். எழுச்சி கொட்டா திருக்க நினைவின்றியிலே வந்து கொடு நின்ருர் காண். திருநெடுந். 21. வியா.]

**எழுத்திடுதல்** - கையெழுத்துப் போடுதல். [எழுத்திட்டுத் தாருங்கோ ளென்ன, அப்படியே பலரும் எழுதியெழுத்திடாநிற்கச்செய்தே. ஈடு. 5.10.4.]

**எழுத்து**-மார்வெழுத்து; இன்ருருக்கு [அடிமைஎனமார்

பில் இருக்கும் எழுத்து. தலைவிதி; சொல். திருப்பல். 10. வியா.]

எழுத்து வாங்கல்-அடிமைப் படுதலுக் கறிகுறியாக மார் பில் ஆண்டாள் பெயரை எழுதிக் கொள்ளுகை.[தேவ ஜாதியானது எழுத்து வாங் கும்படியாக வாயிற்று: ஈடு, 1.3.11.]

எழுதல்-தோன்றுதல்; வளர்த் தல்.

எழும்பூண்டெல்லாம்-முளைக்கிற முளையெல்லாம்.

எழுநரகம்-ஏழுவகையான நரகங்கள்; கூடாசலம், கும்பிபாகம், அள்ளல். அதோகதி, ஆர்வம், பூதி, செந்து என்பன. [இனி யார் புகுவா ரெழுநரக வா சல். 1-ஆம் திருவந். 87.]

எழுமை-ஏழு ஜந்மங்கள்: கால மெல்லாம். [எழுமைக்கு மெனதாவிக் கின்னமுதத் தினை: திருவாய். 3.6.7.]

எள்குதல்-இரங்குதல்; இகழ் தல். [எள்கலிராக மிலா தான்:திருவாய்:1.6.5.] பயந் தொடுங்குதல். [அடிப்பதற் கெள்குநிலையும்: பெருமாள். 7.8.] எய்த்தல். [என்மகளை யெள்கி: பெரியாழ். 3.7.4.] வருந்துதல். [செங்களம் பற்றி நின்றெள்குபுன் மாலை திருவிருத். 77.]

எள்கும்-ஈடுபடும்.

எள்நெய்-நல்ல எண்ணெய்.

எளிமை-புல்லிமை; ஸுலபம்.

எளிவரவு - ஸுலபமாகை; இழிவாகை. [எளிவருமியல் பினன்: திருவாய்; 1.2.3.]

எற்றுதல்-புடைத்தல்;எறிதல்; உதைத்தல்; இடித்தல்.

எற்றே-என்னே; ஆச்சரியக் குறிப்பு.[எற்றேயோ: பெரிய திருவந். 5.]

எறக்கொழிக்க-மேலே தள்ள.

எறட்டுதல்-வீசியெறிதல். [பெரியதிரு. 8.5.3. வியா.]

எறிக்கை-ஒளி வீசுகை.

எறிகை- அறுக்கை; அளிக் கை.

எறிஞர்-சத்ருக்கள்.

எறிதருகை-வீசுகை.

எறிப்பு-ப்ரகாசம்.

எறும்பி-யானை.

எறுழ்-வலி; தூண்.

எறுழி-பன்றி.

என்பு-புல்லு; எலும்பு.

என்செய்யானும்-என்ன செய் யாதானும்.

என்கிற கணக்கிலே - என்கிற பிரகாரத்திலே; மரியாதை யிலே.

என்றிய-எதற்காக. [ஈடு, 7.9. 2.] எப்படி. [ஈடு, 4.10.11.]

*என்றேய என்னில் - ஏனென் னில் [என்றேய வென் னில் பிரிவை ப்ரஸங்கித்த போதே பிரிவுதானுமத்தனை யிறே: திருவிருத். 30. வியா.]

என்னம்பது-எதுதான்.

என்னைமார் - தமையன்மார்;

ஆணுடன் பிறந்தார். [வேலைப் பிடித்தென்னை மார்கள் ஓட்டி லென்ன விளையாட்டோ: நாய்ச்சி. 3.5.]

**என்னே என்பாரும் இல்லை**-ஐயோ என்பாரும் இல்லை. [திருவாய். 9.1.3.]

**ஏ**-விளி; இகழ்ச்சி; தேற்றம்; வினு; எண்; பிரிவுநிலைக் குறிப்பு; ஈற்றசை; எய்தல்; அம்பு.

**ஏக்கம்**-பயம்; விசாரம்.

**ஏக்கற்றவன்**-எய்யக்கற்றவன்.

**ஏகாந்தம்**-அத்விதீயம்; (இன்னொருவரில்லாத இடம்: நிச்சயம்; ரஹஸ்யம்.

**ஏங்கல்**-ஒலித்தல்; இரங்கல்; பயப்படல்; அழுதல்.

**ஏங்கி**- இளைத்து; பயப்பட்டு; விசாரப்பட்டு,

**ஏங்குகை**-பொருமுகை; அழுகையின் விகாரம்.

**ஏச்சு**-ஏசுகை; பழிப்பு. [பாவிகாளுங்களுக்கேச்சுக் கொலோ: நாய்ச்சி. 12.8.]

**ஏசறுகை**-துக்கப் படுகை; பழிக்கை. [ஏசறு மூரவர் கவ்வை: திருவாய். 5.3.1.]

**ஏசுதல்**-பழித்தல்.

**ஏட்சி**-எழுச்சி.

**ஏடி**-என்னடி.

**ஏடு**-இதழ்; மலர்; பொல்லாங்கு; பால்-ஆடை; ஸூக்ஷ்ம சரீரம்[ஏடு நிலத்திலிடுவதன் முன்னம்: திருப்பல். 4.]

**ஏண்**-எல்லை;உயர்ச்சி. [ஏணிலேனிருந்தேன்: பெரியதிரு. 1.6.1.]

**ஏணம்**-மான்.

**ஏணி**-ஏறுகருவி. [பெரியாழ்: 4.9.3.]

**ஏத்தல்**-துதித்தல்; பெருமை.

**ஏதம்**-வருத்தம்; குற்றம்;பொல்லாங்கு.

**ஏதி**-ஆயுதம்; வாள்.

**ஏதலன்**-சத்துரு. ஏதலனின்னுயிரைவவ்வி: பெரியதிரு. 1.7.4.]

**ஏந்தல்** - தேங்கல்; தாங்கல். [திருச்சந்த. 6.]

**ஏந்துகை**-வஹிக்கை.

**ஏமம்**-காவல்; [ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ: திருப்பா. 9.] சாமம்; இரவு; மையல்; ஏமாப்பு.

**ஏமாந்துபோகை**-ஏமாறுகை.

**ஏமாற்றம்**- தெளிவின்மை. [ஏமாற்றமென்னைத் தவிர்த்தாய்: பெரியாழ்: 2.7.8.]

**ஏய்கை**-பொருந்துகை [ஏய்ந்தபேழ்வாய்: பெரியதிரு. 1.7.3.] ஒத்திருக்கை. [பாலேய்தமிழர்: திருவாய். 1.5.11.]

**ஏய்த்தல்** - ஒத்தல் ; பொருந்தவிடுதல்.

**ஏயான்** - தகாதவன். [ஏயானிரப்ப : பெரியதிரு . 1. 5. 6.]

***ஏயில்**-இசை. [ஈடு, 4. 6. 2.]

**ஏர்** - அழகு.

ஏர்பு - எழுச்சி.

ஏர்வு - ஒப்பு.

ஏரண்டம் - ஆமணக்கு.

ஏல் - பொருத்தம்.

*ஏலக்கோலி - ஏற்கவே விசாரித்து. [ஈடு, 2. 8.7.]

ஏலம் - நறு நாற்றம் [ஏல நாறு தண்டடம் பொழில்: பெரியதிரு. 1. 2. 1.] மயிர்ச் சாந்து ; ஏலம்.

எலா - தகுதி இல்லாத. [ஏலாப் பொய்களுரைப் பாணை: நாய்ச்சி. 14. 3.]

ஏலும் - ஏற்கும்.

ஏவல்ல - எய்ய வல்ல. [ஏவல்ல வெந்தைக்கிடம்: 2-ஆம் திருவந். 73.]

ஏவலர் - அம்பு.

ஏவாய - எய்யப்பட்ட.

ஏவு-அம்பு; ஏவுகை.

ஏவுண்ட-எய்யப்பட்ட.

ஏழ்ச்சி-எழுச்சி. [ஏழ்ச்சிக் கேடின்றி: திருவாய். 3. 2. 4.]

ஏழ்மை-ஏழு. [ஏழ்மைப் பிறப்புக்கும் சேமம்: திருவாய். 1. 6. 9.]

ஏழை - அறிவிலாதவன். [ஏழை ஏதலன்: பெரிய திரு. 5. 8. 1.] பெண்.

ஏழைமை - ஹீநஸ்த்திதி; அறியாமை.

*ஏற்கவே-முன்பாகவே. [ஏற் கவே கடலிடங் கொண்டவனை ; ஈடு, 3. 6. 2.]

ஏற்பன-தக்கன. [திருப்பள் 8.]

ஏற்பு-யோக்யதை (தகுதி).

ஏற்றிலக்கை-அதிகச் சம்பளம். [ஏற்றிலக்கை பெற்றுண்கிற மிடுக்கையுடைய : ஈடு, 7. 4. 5.]

ஏற்றுகை-உயர்த்துகை.

ஏற-முடிய; உயர; அதிகமாக.

*ஏறவாங்குகை-விலகுகை.

ஏறவேறி-முடிய ஏறி.

*ஏறிட்டுக் கொள்ளுதல்-மேலே போட்டுக் கொள்ளுதல். [கருமுக மாலை போலே எடுத்தேறிட்டுக் கொண்டு போனுன்: ஈடு, 1. 3. 1.]

ஏறினப்ரயோஜநம்- பலித்தப் பிரயோஜநம்.

ஏறு-சிம்ஹம்; விருஷபம்; வெட்டு வேதனை; கொட்டு வேதனை.[வாளேறு காணத் தேளேறுமாயுமா போலே: ஈடு, 3. 9. ப்ர. வேலேறு படத்தோளேறு மாய்ந்தாற் போலே என இறையனுர் களவியலுரை கூறுவதும் காண்க.]

ஏறுகை-முடிகை; மேலே போகை; ஆவேசிக்கை; [ஈசன் வந்தேறக்கொலோ: திருவாய். 5. 6. 1.]

ஏறுவான்சாருங்குதிரை-ஏறுகிற நலக் குதிரை.

ஏன்றுகை - பொருந்துகை. [ஏன்றேனடிமை: நான்முகன். 95.]

ஏன்று கொண்டு-ஏறிட்டுக் கொண்டு.

ஏனம்-பன்றி; பாபம்; (ஏநஸ்).

*ஏனென்னுதல்-சிறிது கவனித்

தல். [ஐசுவரியம் மிக்கால் பந்துக்களை ஏன் என்னலாகாதோ. திருப்பா. 10 வியா.]

ஏனோர்-மற்றையோர்.

ஐ-அழகு; மென்மை; கோழை; அரசன்; குரு; பிதா; இருமல்; சாரியை.

ஈடுபடுகை-அடிப்படுகை; துக்கம்; நோவு படுகை.

ஐங்கணையான்-காமன்.

ஐங்கரன்-கணபதி.

ஐசுகைசு-அத்யற்பம். [ஐசுகைசான இருட்கொழுந்துகளை: திருவிருத் 69.வியா.].

ஐஞ்சீலம்-கற்பூரம்; லவங்கம், தக்கோலம்; ஏலம்; சாதிக்காய்.

*ஐஞ்ஞூறு-ஐந்நூறு. [ஈரைஞ்ஞூறெப்பொழுதும்: 2 ஆம் திருவந். 77.]

ஐஞ்ஞை-ஆடு; அழகு; அறிவுகேடன்.

ஐது-நுண்ணியது; அழகியது; மெல்லியது.

ஐதுநொய்தாக-மிகவும் அற்பமாக. [அனந்தன்பாலும் கருடன் பாலும் ஐது நொய்தாக வைத்து: பெரியாழ். 5. 4. 8.]

ஐம்பால்-ஐந்து வகையாக முடிக்கும் கூந்தல். [மடவாரைம் பாலணையும்: பெரியதிரு. 7. 5. 3. என்னுமிடத்து, "ஐம்பாலென்று அஞ்சு வகையாக மயிர்முடியைச் சொல்லுகிறது எனப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியாநமருளினார். ஐந்து வகையாவன:-கொண்டை, குழல், பனிச்சை, முடி, சுருள் என்பன. இனி, ஐந்து தன்மைகள் கொண்டதாகக் கூந்தலைக் கூறுதலுமுண்டு. பெரிய வாச்சான் பிள்ளையே "ஐம்பாலோதியையாகத்திருத்தினை" என்னுமிடத்து (திருவெழுக்.) "ஐந்து லக்ஷணமுடைய திருக்குழற் கற்றை" என வியாக்கியாநம் செய்தருளினார். ஐந்து லக்ஷணங்களாவன:- மென்மை, குளிர்ச்சி, நாற்றம், நெடுமை, கறுப்பு என அரும்பதம் கூறுகிறது. (பெரிய திருமொழி. 7.5.3.) கந்தம், மது, மார்தவம், ஸ்நிக்ததை, இருட்சி என ஐந்துவகை என்கிறது அரும்பதம். இவ்வாசிரியர் "சுருண்டு, நெய்த்து, கறுத்து, மென்மையுடன் நீண்டிருத்தல்" மயிர்முடியின் ஐந்து குணங்களென்கிறார்.]

ஐய-அதிசயிக்கத்தக்க; அழகு வாய்ந்த.

ஐயம்-உபாதானம் (பிச்சை) இடுகை; ஸம்சயம்; கப்பரை (பிச்சைக்கலன்), சிறுபொழுது, அனுமானம்.

ஐயமார்-மூத்தவர்கள்; முனிவர்கள்.

ஐயர்-முனிவர்; தேவர்.

ஐயன்-ஸ்வாமி; அப்பன்; மூத்தோன்; சாத்தன்.

ஐயன்பாழி-சாஸ்தா கோயில். [ஈடு, 1. 1. 5.]

ஐயை-துர்க்கை; காளி; தலைவி; அருந்தவப் பெண்மை; இடைச்சி.

ஐவகைப்பொன்-பஞ்சலோஹம். [பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் இவை பஞ்சலோஹங்கள்.]

ஐவனம்-மலைச் சாரலில் விளையும் நெல்.

ஒக்க - ஒருமிக்க [ஒக்கத் தொழுகிற்றிராகில்: திருவாய்: 5. 2. 10.]

ஒக்கம்-உயர்ச்சி; ஊர்ப்பொது.

ஒக்கல்-சுற்றம்.

ஒக்கலிக்கை-வாத்ய விசேஷங் கொட்டுகை.

ஒக்கலை-பக்கம்; இடுப்பு.

ஒக்குமேல்-தகுமாகில்; கொப்பளிக்குமாகில்; உபேக்ஷிக்குமாகில்.

ஒசித்தல்-இறுத்தல். [போர்க் கோடொசித்தனவும்:1-ஆந் திருவந். 27.]

*ஒசிதல்-முறிதல். [தொடுங் காலொசியுமிடை: திருவிருத். 37.] தளருகை; பரவசமாகை.

ஒசிவு-ஸம்போகத் தளர்ச்சி.

ஒட்டி-ஒட்டொட்டி; ஒட்டி நிற்கும் பொருள்; ஒட்டிக் கொண்டு.

ஒட்டு-கூடுகை (சேருகை); ஸத்ருசமாகை. [ஒட்டுரைத் திவ்வுலகுன்னை: திருவாய். 3. 1. 2.]

ஒட்டுகை-இசைகை [யானொட்டியென்னுள்: திருவாய். 1. 7. 7.] ப்ரதிஜ்ஞை செய்கை; [தானொட்டி வந்து: திருவாய். 1. 7. 7.] பசையறுகை. [நாக்கு ஒட்டுமா போலே: ஈடு, 1. 3. 9.]

ஒட்டுவட்டில்-கலசப் பானை; ஆராதனை வட்டில்.

ஒடியெறிகை-காட்டு வழியிலே யிரண்டருகும் மரத்தை வெட்டித் தள்ளுகை; அர்த்தஜீவகப் பண்ணுகை (குற்றுயிராக்குகை;) [கண்ணழகாலேயாயிற்று இவரை யொடியெறிந்தது: ஈடு, 3. 4. 2.]

ஒடுக்கம்-வெட்கம்.

ஒடுக்குமாடு-திருட்டுச் சொத்து; சேர்த்த சொத்து; இடையே வந்த சொத்து; முட்டுக்கோல்; கொள்ளைச் சொத்து. [ஈடு, 5. 3.9.]

ஒடுங்கல்-ஸங்கோசம்; இளைப்பு; குவிகை. [தடம் போதொடுங்க: திருவிருத். 76.]

ஒண்ணுகை-இயலுகை.

ஒண்ணுதல் - ப்ரகாசமான நெற்றியை உடைய பெண். [ஒண்ணுதல்மாமை: திருவிருத். 50.]

ஒண்மை-அறிவு; விளங்குகை; ச்லாக்யதை.

ஒத்த-நியாம்யஞக இசைந்த.

ஒத்ததரத்தஞய் - ஒத்திருந்து.

ஒத்தல்-நீங்கல்; ஒத்தல்.

ஒத்துதல்-அறிதல்; ஒற்றுதல்.

ஒதுங்கல்-போகல்; ஒதுங்குகை.

ஒப்பமிடுகை-மெருகிடுகை; ஓலைக்கொப்பமிடுகை.

ஒப்பனை -அலங்காரம், உவமை.

ஒப்பு-இசைவு; உவமை; கட்டழகு.

ஒப்பூண்-ஸஹபோஜநம்; ஸமமாகச் சாப்பிடுதல்.

ஒரு-ஆடு.

ஒருக்கடுத்தல்-ஸமமாக நினைத்தல். [திருக்கடித்தானமுமென்னுடைச் சிந்தையும் ஒருக்கடித்து: திருவாய். 8. 6. 2.]

ஒருக்கணித்தல் - ஒரு பக்கமாகச் சாய்ந்து படுத்தல். [ஒருக்கணித்தோமல்லாந்தோ கண் வளர்ந்தருளுகிறது: திருமா. 23. வியா.]

ஒருகுண்டு-அடக்குண்டு.

ஒருக்கெடுத்து-ஒரு தன்மையாக எடுத்து.

ஒருக்கு-ஒரு தன்மை.

ஒருகுலைக்காய்-ஒரே குலத்திலுதித்தவன்.

ஒருங்க-ஒருப்படிப்பட [நினதாள்ஒருங்கப் பிடித்து: திருவாய்: 5. 8. 8.]

ஒருங்கவிடுகை - ஸமாதானம் பண்ணுகை; ஒன்றுபடுத்துகை.

ஒருங்காக - ஒருபடிப்பட்டதாக.

ஒருங்கே - ஓரிடத்திலேயே போக[ஒருங்கேபிறழவைத்தார்: திருவிருத். 4. 5.]

*ஒருச்சரித்தல்-கதவைச்சிறிது திறத்தல். [கதவை ஒருச்சரித்து: ஈடு. 10.8. 3.]

ஒருத்தல்-புலி; யானை.

ஒருத்தலைத்து-ஏகீபவித்து; ஒருமித்து.

ஒருத்தலைத்தல்-ஒருமித்தல்.

ஒருதலை-ஒருதட்டு; (ஒரு பக்கம்.) நிச்சயம்.

ஒருதலைக்காமம்-ஒரு பக்கமான காதல்.

ஒருதலையாஞல் - ஒரு பக்கமாஞல்.

ஒருநான்று-ஒரு நாள். [ஒருநான்று தடிபிணக்கே; திருவாய்; 6. 2. 7.]

ஒருநிலை - பிடிவாதமாய் நிற்கை.

ஒருநீர்ச்சாவி - ஒருமழையில்லாதே பட்டுப்போகை.

ஒருப்பட-உத்யோகிக்க; தத்பரதை கொள்ள; (கவனிக்க.)

ஒருப்படுத்துதல் - வழிவிடுதல். [திருவணுக்கன் வாசலளவும் ஒருப்படுத்தி; ஈடு, 7. 3. ப்ர.]

ஒருப்பாடு-உத்யோகம்: கார்யௌன் முக்யம். (செயலிலீடுபடல்) [ஈடு, 6. 1. 8.]

ஒருபடி சாத்தினுப்போலே-வஜ்ரப்படி; மாணிக்கப்படி; முத்துப்படி; ஆபரண விசேஷம் சாத்தினுப்போலே.

ஒருபடிப்படுதல் - ஒருவிதமாகுதல். [ஈடு. 6. 8. 4.]

ஒருபாட்டம்-ஒருபாறல் மழை. [ஒருபாட்டம் மழை விழுந்தாற்போலே: ஈடு, 4. 5. 2.]

ஒருபோகி-நடுச்சுவர் இல்லாத வெளி; ஒரே விஷயம். [காலத்தையடைய ஒரு போகியாக்கி: ஈடு, 9. 3. 10.]

ஒருபோலியாக - ஒரு ப்ரகாரமாக.

ஒருமடை செய்தல்-ஒரே விஷயமாக்குதல்.

ஒருமரம்-செம்மரம்.

ஒருமார்வெழுத்தாக்கி- பொறுப்பித்து; அடிமையாக்கி.

ஒருமுகஞ்செய்கை - ஒரே நோக்க மாகுகை.

ஒருமை-விலே; ஏகத்வம்; நிச்சயம்; ஒற்றுமை.

ஒருமைப்படல் - நன்கு மனத்தைச் செலுத்துகை. [சாஸ்திரங்களிற் சொல்லுகிற வழியே நெஞ்சு ஒருமைப்பட்டு; ஈடு, 10. 4. 10.]

ஒருவந்தம் - சம்பந்தம்; நிச்சயம்.

ஒருவர் கூறையை எழுவர் உடுக்கை-கலஹத்திலே ஒருவர் புடவையை ஏழு பேர் பறிக்கை; தாரித்ரியத்தினுலே ஒருவர் புடவையை ஏழு பேர் உடுக்கை. [ஒருவர் கூறையை எழுவருடுக்கிறதேசம்; ஈடு, 5. 9. 7.]

ஒருவு-ஆடு; நீங்குகை.

ஒருவுதல்-விடுதல்; நீங்குதல்.

ஒல்-முடிவிடம்.

ஒல்கி-ஒடுங்கி.

ஒல்கியொல்கி - அடிமேலடி வைத்து.

ஒல்லாமை - இகழ்ச்சி; அவாவின்மை.

ஒல்லே-த்வரையாய். [ஒல்லே நீபோதாய்; திருப்பா. 15.]

ஒலி-இடி; ஓசை; காற்று; சப்தம்.

ஒலியல் - புடவை (ஆடை); நோய்; வீதி; நதி; தோல்.

ஒலுகுதல்-ஒடுங்குதல்.

ஒவ்வாமை-பொருந்தாமை.

ஒவ்வுதல்-பொருந்துதல்.

ஒவ்வோக்குழி-பாலர் நிலத்தில் விரலால் எழுத்தெழுதிப் பழகும் குழி. [பகவத் விஷயத்தி லொவ்வோக்குழியிடாதேயிருக்கிற; ஈடு, 5. 6. 2.]

ஒழுக-இசைய.

ஒழுகல்-நெடுகல்; ப்ரவாஹம்.

ஒழுகாத-சொல்வழி வராத.

ஒழுகுகை-கூடப் போகை.

ஒழுகை-பண்டி.

ஒழிஞ்சான்முட்டு-உறுப்பாகாத முட்டு.

ஒள்ளி-பொன்; சுக்கிரன்.

ஒளி-மறைகை; மறைவிடம்; பிரகாசம்.

ஒளியம்பு-மறைந்திருந்து எய்யும் அம்பு.

ஒளியிழை-ஒளிரும் அணிகள்; ஆத்ம பூஷணங்கள்.

ஒளிவட்டம்-கண்ணுடி; சக்கராயுதம்; பிரபை. [சுற்று மொளி வட்டம் சூழ்ந்து; பெரியாழ். 1. 4. 3.]

ஒளிவனே – அநந்யார்ஹ சின்னம். (பகவானுக்கே உரிமை பெற்றதற்கு உரிய அடையாளம்.)

ஒளிறு - வெளுப்பு ; பிரகாசம்.

ஒற்கம் – ஒடுக்கம்; வறுமை; லஜ்ஜை; குறைவு; தளர்ச்சி.

ஒற்றைக்குழை - ஒரு காதில் ஆபரணம். [பலராமன் ஒற்றைக் குழையினனுகக் கூறப்படுகிறுன்.ஒருகுழையவன் மார்பில் ஒண்டார் போல்: கலித், 105. 11.]

ஒறுத்தல் - நோவு படுத்துதல்.

ஒறுவாய்போதல் - பக்நமாதல்; வாய் ஒடிதல்.

ஒன்றுதல்-கூடுதல்; ஒருப்படுகை; சேருகை.

ஒன்னலர்-சத்ருக்கள்.

ஒன்னுர்-சத்ருக்கள்.

ஓ-வியப்புக்குறிப்பு: மகிழ்ச்சிக் குறிப்பு: இரக்கக் குறிப்பு.

ஓக்கம்-உயரம்: பெருமை.

ஓக்குதல் - உயர்த்துதல்: தருதல்: ஆக்குதல்: [ஓக்கினேன் என்னேயும்: 2 ஆம் திருவந். 59.]

ஓங்கல் - உயர்வு; மலே; தலேவன்.

ஓச்ச-அடிக்க.

ஓச்சல்-ஓட்டல்: அடித்தல்.

ஓச்சி-அடித்து.

ஓசழக்கு-அநாதரம்; (பெரிதாகக்கொள்ளாமை.) [ஒரு சிலாமாத்திரத்தை யெடுத்தாற் போலே ஓசழக்காகச் சொல்லுகிருள்; திருநெடுந். 13. வியா.]

ஓசனே-நாலுகாதம், (யோஜனை.)

ஓசை-ஒலி; கீர்த்தி; பாட்டு: வாழை.

ஓட்டருதல்-ஓடிவருதல்.

ஓட்டற்றபொன்-அபரஞ்சி. கல்மஷமற்றது; ஓடவைக்கப் போகாத பொன். [ஓட்டற்ற செம்பொன் போலே; ஈடு, 1.10.9.]

*ஓட்டை-ஓடு; (மூன்ரும் வேற்றுமை யுருபு) ஒத்த.

*ஓடவைத்தல்-நிஷ்கர்ஷித்தல்.

ஓடித்திரிதல்-அலேதல். [ஓடித் திரியும் யோகிகளும். திருவாய். 8.8.9.]

ஓடுகை- நடையாடுகை; [ஓடாத தோள்வலியன்; திருப்பா. 18.] நேரிடுகை; தீர்மானிக்கை. [இதிலோடுகிற விஷயம் என்னென்னில்: ஈடு, 2. 9. ப்ர.]

ஓடை-முகப்படாம் ; சோடு; பட்டம்; கிடங்கு; நீர்நிலே; மலேயின் வழி; மணிப்பட்டம்.

ஓணம்-ஆறு; திருவோணம்.

ஓணவிழவு-திருவோண உத்ஸவம். [ஓணவிழவி லொலியதிர; நான்முகன் 41.]

ஓத்து - அத்யயனம்; (வேதமோதுகை) வேதம், [மாதவன் பேர்சொல்லுவதே ஓத்தின் சுருக்கு. 2-ஆம் திருவந். 39.]

ஓதம்சீற்றத்தீ-வடவா முகாக்நி.

ஓதம்-உப்புகை; ஈரம்; வெள்ளம்; கடல்; அலை. [கடலோதங் காலலைப்பக் கண்வளரும்; 1 ஆம் திருவந். 16.]

ஓதல்-அத்யயனம்.

ஓதனம்-உண்டி: சோறு; பெருமை.

ஓதி-பெண்களின் தலைமயிர்: அத்யயனம்.

ஓபாதி-ஒப்பு; அம்சம். [நம்மோபாதியா லுள்ள ரக்ஷணம்; ஈடு, 5.4. ப்ர.]

ஓம்-அங்கீகாரம்;(ஆம்ஏனல்.) ஆச்சரியம்.

ஓம்கொடுத்து- அநுமதி பண்ணி.

ஓம்படை-காவல்; காக்குமிடம்.

ஓம்பி- பேணி; பாதுகாத்து; வளர்த்து.

ஓம்புகை-பேணுகை; பாதுகாக்கை; வளர்க்கை.

ஓமை-மாமரம்.

ஓய்வு-ஒழிவு; தளர்வு; முடிவு.

ஓய்கை-பலஹாநி; முடிகை; அழிகை. [ஒன்றுமே தொழ நம்வினை யோயுமே: திருவாய். 3. 3.8.]

ஓர்ச்சி-ஆராய்ச்சி; உணர்ச்சி.

ஓர்தல்-ஆராய்தல்;உணர்தல்.

ஓர்ந்து-ஆராய்ந்து.

ஓர்ப்பால் - விசாரிப்பால்; (ஆராய்ந்தறிகையால்.) [ஓர்ப்பாலிவ் வொண்ணுதலுற்ற நன்னோயிது தேறினோம்; திருவாய். 4. 6. 1.]

ஓர்ப்பு- விசாரித்தறிகை; பொறுமை.

ஓர்பு-ஆராய்கை.

ஓர்மை-ஒற்றுமை; ஒரே நோக்கம்.

ஓர்வு-நிருபணம்; ஓர்பு.

ஓரம்-பக்ஷபாதம் ; ஸஹாயம்; நுனி.

ஓரளவிலே - ஒரு அவஸரத்திலே. (ஒரு ஸமயத்திலே.)

ஓராண்வழி-தொடர்ந்து வரும் ஸம்பிரதாயம். [ஓராண் வழியாயுபதேசித்தார் முன்னோர்; உபதேசரத். 37.]

ஓராெருரு-ஏதோ ஒன்று.

ஓரை-பெண்கள் குழாம் ; மகளிர் விளையாட்டு ; இராசி ; முகூர்த்தம் ; நேரம்.

ஓரொன்று - ஒவ்வொன்று ; [ஓரொன்று தானே யமையாதோ: தேசிக தனியன்,]

ஓலக்கம்-ஆஸ்த்தான மண்டபம் ; கொலுவீற்றிருக்கை. [நாளோலக்கமருள ; திருப்பள் 9.]

ஓலக்கவார்த்தை - கூட்டத்திற் சொல்லும் பயனில்லாத டம்பப் பேச்சு.

ஓலம்-சப்தம் ; அபயக்குரல்.

ஓலமிடல்-அபயக் குரலிடுதல். [ஓலமிட்டு நானழைத் தால் ; திருவாய். 4. 3. 6.]

ஓலே-பனை ஓலை ; காதணி.

ஓலைப்படாத நூல் - எழுதப் படாத வேத சாஸ்திரம்.

ஓலைப்புறம்-உத்தரவு; [ஓலைப் புறத்திற் செல்லாத தேசத் திலே எடுத்து விடும் ராஜாக்களைப் போலே.] சாஸ்திரம். [ஓலைப்புறத் திலே கேட்டுப் போகை யன்றிக்கே.]

ஓலைமுறி-ஓலைச்சீட்டு.

ஓவி-ஓவியம். [ஓவி நல்லார் ; பெரியதிரு. 2. 8. 7.]

ஓவியம்-சித்திரம்.

ஓவியர்-சித்திரகாரர்.

ஓவிற்று-முடிந்தது. [கூப்பீடு ஓவிற்று ; ஈடு, 2. 9. 1.]

ஓவுதல்-ஓய்தல். [ஓவுதலின்றி யுன் கழல் வணங்கிற்றி லேன் ; திருவாய். 3. 2. 8.]

ஔவை-தாய் ; ஒரு பெண் புலவர்.

ஔவியம்-மனக் கோட்டம்; பொறாமை ; வஞ்சனை.

கங்கணம்-கைவளை ; ரக்ஷா பந்தனம்.

கச்சு-கொங்கைக் கச்சு.

கசிகை-ஈரமாகை ; நெஞ்சு நெகிழ்கை.

கசை-பசை ; சாட்டை; (அடிக்கும் சவுக்கு.)[உபாத் தியாயன் கையில் கசை கண்டு ; திருமா. 11. வியா.]

கட்கிலி - கண்ணுக்குப் புல னாகாதவன். [கட்கிலீ உன் னைக் காணுமாறருளாய் ; திருவாய். 7. 2. 3.]

கட்கண் - ஊனக்கண். [உட் கண்ணாற் காணாத அவ் வுருவை ; பெரிய திருவந். 28.]

கட்டக்குடி-கஷ்டப்படும் குடும் பம். [ஈடு, 2. 2. 3.]

கட்டக்குடியன் - பொல்லாத வன்.

கட்டடங்க-முழுதும். [கட்ட டங்க இவனையே சொல்லு கையாலே ; ஈடு, 3. 4.6.]

கட்டணம்-கட்டடம்.

கட்டம்-கஷ்டம். [கட்டமே காதல் ; திருவாய். 7. 2. 4.]

கட்டல்-களையெடுத்தல்.

கட்டழிதல் - கூட்டுக்குலைதல். [சரீரம் கட்டழிந்து ; ஈடு, 6. 1. 4.]

கட்டழித்தல்-நிலை குலைத்தல். [இலங்கை கட்டவிழ்த் தவன் ; திருச்சந். 5. 4.]

கட்டளை-திருத்தம் ; அளவு ; [கழுத்தே கட்டளையாக நீரை முகந்து: ஈடு, 5. 6. 8.]

கட்டளைப் படுதல்- ஒழுங்கு படு தல் ; [வேதம் கட்டளைப் பட்டது: ஈடு, 6. 5. 8.] [காவலான் உடைமை; கட் டளைப் பட்ட லங்கை யென்கை ; திருநெடுந். 20. வியா.]

கட்டு-அரண்; பந்தம்; மரியாதை. [கற்புடையாட்டியிழந்தது கட்டே; திருவாய். 6. 6. 10.]

கட்டுகை-நிரஸிக்கை; [1.3.6. ஈடு.] பிணிக்கை; பேணுகை. [நான் என்னுடம்பைக் கட்டிக்கொண்டு கிடக்கவோ: ஈடு, 4. 8. 9.]

கட்டுரை - நற்சொல்; தெளிவுச்சொல். [திருமாலே கட்டுரையே; திருவாய். 3. 1. 1.]

கடக்கை-தாண்டுகை.

கடகு-ரக்ஷகம்; பரிசை.

கடம்-ஆனைமதம்; காட்டுவழி; பாபம். [கடமுண்டார் கல்லாதவர்; நான்முகன். 5. 2.]

கடமை-வரியிறுக்கை.

கடவுள்-தேவதை.

கடன் - கடமை; பாபம்; ருணம்.

கடா-மதம்; ஆண் ஆடு; வினா.

கடாய்-நடத்தி.

கடாவுகை - பிரயோகிக்கை; [கடாயின கொண்டொல்கும்; திருவிருத்: 6.] ஊர்கை. [புள்ளைக் கடாவுகின்ற வாற்றை; திருவாய். 7. 3. 1.]

கடி-சிறப்பு; தேன்; பெருமை; அழகு; ஒளி; புதுமை; அரண்; செவ்வி; பரிமளம்.

கடிது-சீக்கிரம்.

கடிப்பு-குண்டலம்.

கடியன் - கடுமையானவன்; ஸ்வகார்யபரன்; (தன்னலமே கருதுபவன்.)

கடிறு-யானை. [கடிறு பல திரிகானதரிடை; பெரியாழ்: 3. 2. 6.]

கடை-வாயில்; [கடை திறவாய்; திருப்பா; 8.] தலக்கடை; இடம்; கீழ்மை; கடைசி; பாகவத சேஷத்வம்.

கடைக் கூட்டு-நிர்வஹிக்கை. [கிருஷ்ணனிதற்குக் கடைக் கூட்டனுகவுங் கடவன்; திருப்பா: 1. வியா.]

கடை கட்டுகை-நிறுத்துகை.

கடைத்தலை - கடைத்தலை வாயில். [கடைத் தலையிருந்து வாழுஞ் சோம்பரை யுகத்திபோலும்; திருமா: 38.]

கடைப்பணிக் கூடம்-பிடரியில் கொக்குவாய் முதலான பூஷணங்கள் செய்யுமிடம்.

கடைப்பிடிக்கை - பிடித்து விடாதே யிருக்கை.

கடையர்-மூங்கிற் பறையர்; மருத நிலத்தவர்.

கடையா-கறக்கிறமூங்கிற்கலம்; துஷ்டப் பசு. [கடையாவின் கழி; திருவாய். 4. 8. 4.]

கண்-கிருபை; இடம்; நிர்வாஹகன்; நயநம்; விலக்ஷணன்; பீலிக்கண்.

**கண்குழிவு** - ஆர்த்தி; தீநதசை. [தன்னிற் காட்டிலும் கண்குழிவுடையார்: ஈடு, 3. 3. 1.]

**கண்செறிவு** - வியாபிக்கை. [ஆகாசத்தைக் கண்செறியிட்டாற்போலே யிருக்கை. ஈடு: 5. 9. 1.]

**கண்டல்**-தாழை.

**கண்ணறையர்**- நிர்த்தயர்; (கண்ணோட்டமற்றவர்;) குருடர்.

**கண்ணன்** - நிர்வாஹகன்; கிருஷ்ணன்.

**கண்ணணி** - கருவிழி; கண்ணனவாணி; கண்ணெப்பன்.[கண்ணணியாகவிறே காண்பது; ஈடு, 4. 7. 4.]

**கண்ணெந்தாரகம்** - ஒளியற்ற இடம். கண் நொந்தார் அகம்-கண் நோவுக்காரர்களுடைய அகம் (க்ருஹம்;) கண் நோவுக்காரருக்கு விளக்கொளி கூசுமாதலின் அவர்களது இல்லம் ஒளியற்று இருக்கும்; ஆதலின் ஒளியற்ற இடம்.

**கண்ணோட்டம்**-க்ருபை.

**கண்வட்டக் கள்ளன்**-கண்முன்னிலக்கைபட்ட கள்வன்; புது நாணயம் போடுகிற கள்வன்.

**கண்வட்டம்** - ப்ரத்யக்ஷமான இடம்; (கண்ணுக்குப்படுகிற இடம்), நாணயம் செய்யுமிடம்.

**கணம்** - கூட்டம்; அற்பகாலம் (க்ஷணம்).

**கணவலர்** - அலரி; [கள்ளார் துழாயுங் கணவலரும்; பெரிய திரு: 11. 7. 6.]

**கணிசங் கொள்கை** - சப்தங்கொள்கை; வசீகரிக்கை. [பெருமாளை குயத்தி வசமாக்கிக் கணிசங்கொண்டு: ஈடு, 6. 9. 3.]

**கணிசிக்கை**-சிந்திக்கை; பரிச்சேதிக்கை; வசமாக்குகை; அபேக்ஷிக்கை. [சேஷபூதன் சேஷிபக்கல்கணிசிப்பது திருவடிகளையிறே: ஈடு, 1.1.1.]

**கணையம்**-கோட்டை மதிள்; [அஞ்சுவர்களே கணையத்துக்குள்ளே யிருப்பார்: ஈடு, 5. 4. 7.] உழலைமரம்; தழும்பு; கோட்டைக்கதவுத்தாழ்ப்பாள்.

கதம்-கோபம்; மதம்.

கதகதெனல் - உஷ்ணமாகை; (சீற்றங்கொள்கை), பொருமைப் படுகை.

கதி-வழி; நடை, புகல்.

கதிப்பு-கொழுப்பு; இறுகல்.

கதிர்-கிரணம்; சூரியன்; சந்திரன்.

கதிரம்-கருங்காலி.

கதுவாய்-குறைகை. [கதுவாய்ப்பட நீர்முகந்தேறி; பெரியாழ்: 3. 5.4.]

கதுவுதல்-பற்றுதல். [கராவதன் காலினைக்கதுவ:பெரிய திரு. 2. 3. 9.]

கதை-பெரிய விஷயம்; [கருமாயம் பேசிற் கதை: நான்

முகன்.31.] இதிஹாஸம் முதலியன; [கதையின் பெரும் பொருளும் கண்ணு; 2-ஆம் திருவந். 64.] சரித்திரம்.

**கந்தம்**-வாஸனை; சந்தனம்; கிழங்கு.

**கந்தல்**-கந்தை; ஒழுக்கமின்மை; அஞ்ஞாந கல்மஷம். [கந்தல் கழிந்தால்; ஸ்ரீவசநபூ. 239.]

**கப்படம்**-ஏழைமையைக் காட்டும் கந்தல் துணி. [தேவஜாதி கப்படங் கட்டிக் கொண்டு செல்ல; ஈடு, 6. 4. 5.]

**கப்படம்**-தைன்ய ஸூசகபட விசேஷம்.

**கப்பணம்**-கழுத்திலணிவது.

**கப்பம்**-அரசர்விதிக்கும் இறை.

**கப்பு** - கிளை; தோள். [கப்பாலாயர்கள் காவிற் கொணர்ந்த; பெரியாழ்: 3.1.5.] [ரக்ஷ்யரக்ஷக ஆச்ரய பாவம் தன்கப்பிலே கிடக்கும்; ஸ்ரீவசநபூ. 244.]

**கபாலி** - ருத்ரன்; காபாலிக விரதமுள்ளவன். [பெரியாழ். 2. 8. 8.]

**கம்பு**-கழி; கட்டுத்தறி.

**கமை**-பொறுமை.

**கயம்**-பெருமை; குறை; கசம்; க்ஷய ரோகம்; யானை, (கஜம்).

**கயவர்**-நிர்க்ருணர்; (கொடியவர்), முன்கை உரம் உடையவர்கள்.

**கயிறு**-நரம்பு; வடம்.

**கரக்க**-ஒளிக்க.

**கரக்கை**-கொடாது மறுக்கை; ஒளிக்கை; தூந்வநம் (உதறுகை.)

**கரம்**-த்ருடம்; [ஈடு, 1.1.11.] ஸ்வச்சம்; கிரணம், கழுதை, குடியிறை.

**கரவு**-ஒளிப்பு; வஞ்சனை; களவு.

**கரா**-முதலை.

**கரி**-ஸாக்ஷி; [கற்றைச் சடையான் கரி கண்டாய்: நான்முகன். 26.] யானை.

**கரியநாழிகை**-அந்திகாலம்.

**கரு**-கர்ப்பம்; கர்ப்பாதானம்; சரீரம்; கார்யம்; வேர்; மூலம்.

**கருத்து**-மனஸ்ஸு; ஸாமர்த்தியம்; சக்தி; [கருத்தேயுன்னைக் கருதி: திருவாய். 9. 4. 6.] ஸங்கற்பம். [கருத்தில் தேவும் எல்லாப் பொருளும்: திருவாய். 2. 2. 8.]

**கருதலர்**-சத்ருக்கள்.

**கருதுகை**-நினைக்கை; விரும்புகை. த்வரிக்கை.

**கருந்தரை**-பாழ் நிலம்.

**கருமை**-கறுப்பு; இருட்சி; பெருமை.

**கருவி**-கரணம்; ஸாதனம்; கத்தி; சித்ரம்; இந்திரியம்.

**கருவிப்பை**-ஆயுதப் பை.

**கருவிலி**-ஆண்பிள்ளை.

**கருவிளை**-காக்கணம்

**கருவுகலம்**-பொக்கிஷம்; ஸ்ரீபண்டாரம்.

கரை-கோஷம்; (ஒலி); நதிக்கரை; இடம்; எல்லை.

கரைபுரள-விஞ்ச; அதிகமாக; பெருக்கெடுக்கை.

கரையுரல்-பெரிய உரல்; சுற்றிலும் வரம்பு இருக்கின்ற உரல்.

கல்லுகை-த்வனிக்கை;தோண்டுகை.

கல்வி-சாதுர்யம்; மிடுக்கு. [கண்ணபிரான் கற்ற கல்வி தன்னை: பெரியாழ்.2. 9. 1.]

கலந்துகட்டி-நல்லதும் தீதும் கலந்தது. [தேவதாந்தரங்களையுங் கலந்து கட்டியாக ப்ரதிபாதிக்கையாலும்; ஈடு, 4. 10. ப்ர.]

கலப்பு-ஸ்நேஹம்; கூடுகை.

கலம்-கப்பல்; ஆபரணம்;பாத்திரம்.

கலம்பகம்-பல பூக் கலந்த விசித்ரமாலை; கலவை; பலவகைச் செய்யுள்களாலாகிய ஒரு ப்ரபந்தம்.

கலம்பகம்-கதம்பகந்தம்.

கலவிருக்கை-கொலுச் சாவடி; ஓலக்கம்;நெஞ்சு பொருந்தியிருக்குமிடம். [பாதாளங் கலவிருக்கை: பெரியாழ்: 4. 9. 7.]

கலி-ஆரவாரம்; மிடுக்கு; மிகுதி; அரணிமை.

கலிக்கட்டு-நாராலே இறுக்கக் கட்டுகை.

கலியன்-க்ஷுதார்த்தன்; பசியுடையவன்.

கலுழி-கலங்கல்நீர்.

கலை-வஸ்த்ரம்; சாஸ்த்ரம்.

கவ்வம்-சப்தம்.

கவ்வை-ஆரவாரம்; பழிச்சொல்; [ஊரவர் கவ்வையெருவிட்டு: திருவாய். 5. 3. 4.] கார்யம்.

கவர்வு-க்லேசம்; விருப்பம்.

கவரி-சாமரம்.

கவருகை-ஸ்வீகரிக்கை; ஹிம்ஸை; பிரிக்கை; துக்கம்.

கவலை-மறப்பு; துக்கம்; மனோவ்யதை; சிந்தை;

கவளம் - ஆனைக்குத்தரு முணவு; கபடம்;சௌர்யம்.

கவின்-அழகு.

கவுசி-ஒருவகை வரிக்கூத்து.

கவுள்-மதம்; கதுப்பு.

கவை-கிளையாய்; நிச்சய ஞானமில்லாம லிருக்கை.

கழகம்-திரள்; ஓலக்கம்.

கழஞ்சி-எடுத்தலளவு.

கழறுகை- அபிபவித்து வார்த்தை சொல்லுகை; [இடித்துரைக்கை.] [எம்மையாருங் கழறலரே: திருவிருத். 57.]

கழிவு-இறந்த காலம்; பிராயச்சித்தம்.

கழுத்துக்கட்டி - பாதகம்; (இடைஞ்சல்). [ஞான பக்திகளிரண்டும் கழுத்துக் கட்டியாய்விட்டன: ஈடு, 4. 7. 10.]

கழுது-பேய்; காவற்பரண்; வண்டு.

கழுந்தர்-ஸ்ரீசார்ங்கம்;(கழுந்து-விற்கழுத்து.) அறிவுமழுங்கினவர்.

கழுநீர் - செங்குவளை; அரிசி கழுவின நீர்; புண்ணிய தீர்த்தம்.

கழை-மூங்கில்; கரும்பு; குத்துக்கோல்; புனர்பூசம்.

கள்-தேன்; மது; வண்டு.

கள்வம் - திருட்டுச் செயல்; க்ருத்ரிமம். [கண்ணன் கள்வங்களே; திருவாய்: 9. 6. 5.]

களவம்-ஹம்ஸம்;[பெரியதிரு: 6. 9. 10. வியா.] சாந்து; நெற்கதிர்.

களவு-திருடுகை; வஞ்சனை; களவொழுக்கம்; மறைக்கை; யௌவநம், [களவுக்குக் காரணமாதலின் யௌவநத்திற்குக் களவு ஆகுபெயராயிற்று என்பது ஆசிரியர் கருத்து.]

களி-தேன்; செருக்கு; களிப்பு.

களிச்சி-ஸந்தோஷம்.

களிப்பு - வெறியுறுதல்; கர்விக்கை; மகிழ்வு.

கற்பு-அடக்கம்; வித்யை; மரியாதை; ஞானம்; பாதிவ்ரத்யம்; ஸ்திரீத்வம்;

கற்று - இளங்கன்று. [கற்றுக் கறவை என்னும் திருப்பாவைப் பாசுரத்திலுள்ள பதத்தை நெஞ்சிற்கொண்டு இப்பதத்துக்குப் பொருள் கூறுகிறார்.]

கறங்குகை - சப்திக்கை; சுழலுகை.

கறுப்பு-கருமை; வெகுளி; குற்றம்; நீலம்; மலினம்.

கறுவி - கோபித்து; ஆக்ரஹித்து.

கறுவுதல்-ஆக்ரஹபூர்வக அத்யவஸாயம்; (பிடிவாதமாகத் தீங்கிழைக்கும் துணிவு.)

கறை-கறுப்பு.

கறையடி-யானை; கறை; உரல்; உரல்போலே இருக்கிற அடி.

கன்று காலமாறுகை-கெட்ட கன்றுகளைப் பிறரதாகக் காட்டி நல்ல கன்றுகளைத் தங்களதாக்கிக் கொள்ளுகை.

கன்றுகாலியாய்ப் படுகை - கன்றுன பருவத்தில் தனியாய் மூலைக்கடிப்புப் பொறுக்க மாட்டாது கஷ்டப்படுகை.

கன்னம் - செவி; (கர்ணம்,) கதுப்பு.

கன்னல்-வெல்லம்; கரும்பு.

கனகம்-பொன்.

கனங்குழை- கனவிய குழையமைந்த பெண்; ஸ்வாபதேசத்தில், ச்ரோதாக்கள்.

கனம்-பொன்;பாரம்;பெருமை; உறுதி; [கனமே சொல்லினேன்; திருவாய். 9. 3. 5.] மேகம்.

கனன்று-காய்ந்து; சீறி.

கனிய-பழுக்க; மனமிளக.

கா-உத்யானம்; பாதுகாப்பு; துலாக்கோல்; விருத்தம்; வலி.

கா-காக்க வேண்டும்; [முன்னிலை வினைமுற்று.]

காகோடியர்-கழைக்கூத்தர்.

காசறை - கஸ்தூரி; மணி; மயிர்ச்சாந்து; கஸ்தூரி மிருகம்.

காசு-கோழை; மாணிக்கம்; அச்சுத்தாலி; [காசும் பிறப்பும் கலகலப்ப; திருப்பா. 7.] பொன்; நாணயம்.

காசை-காயா; நாணல்; க்ஷயரோகம்.

காசையாடை-காவி வஸ்திரம். [காசையாடை மூடியோடிக் காதல் செய்தான்; பெரிய திரு. 2. 2. 1.]

காஞ்சுகம்-சட்டை.

காஞ்சுகி - கஞ்சுகி; சட்டையிட்ட மெய்காப்பாளர்.

காட்டம்-விறகு; வெண்கலம்; ஸமித்து.

காட்டி-பிடாரி; பன்றி.

காட்டில்-உடனே. [ஒரு குயில் ஒருகாற் கூவுங் காட்டில் விடிந்ததோ; திருப்பா. 18. வியா.]

காடி-நெய்; புளித்த கஞ்சி; ஊறுகாய்.

காடிச்சால் - கஞ்சி வைக்கும் பானை.

காடு கத்தல்-அரண்ய ரோதனம்; ஆளில்லாத காட்டில் அழுதல்.

காடு படுதல்-நிறைதல்; [ஐச்வர்யம் அவனுக்குக் காடு பட்டிறே அவன்பார்த்தது; ஈடு, 5. 9. 5.] வீணாகுதல். [இப்பரப்பெல்லாம்... காடு பட்டுக் கிடக்குமோ; ஈடு, 1. 1. 1.]

காடுபடும்படி - ஸமிர்த்தமாம்படி; நிறையும்படி.

காடு மோடை- விஷமஸ்தலம்; மேடு பள்ளம்.

காண்டலுமே - கண்டவளவிலே. [கமலமலர்ப்பாதம் காண்டலுமே விண்டே யொழிந்த வினையாயின வெல்லாம்; திருவாய். 10. 5. 9.]

காணம் - கொள்ளு; பொன்; செக்கு.

காணல்-காண்கை.

காணி - நிலம். [ஊரிலேன் காணியில்லை: திருமா. 29.]

காத்திரம்-உடல்; உறுப்பு; கூத்து; சீற்றம்; (க்ஷாத்ரம்).

காத்தூட்டவல்ல - மகிழ்விக்கவல்ல.

காத்தூட்டுகை-மேலே மேலே ரசிப்பிக்கை.

காதலி-அன்புடையாள்.

காந்தர்ப்பர்-நட்டுவர்; கந்தர்வர்.

காப்பியன்-சுக்கிரன்.

காப்பு-காவலாய் உள்ளது; கை அணி.

காபாலி-சிவன்.

காபாலி கந்தர்-சிவனும் ஸுப்ரம்மண்யனும்.

காம்பு-மூங்கில், பூ, இலை முதலியவற்றின் தாள்; வஸ்தி

ரக் கரை, [காம்பு துகிலவை கீறி; பெரியாழ்.2.7.3.]சிறுக் காம்பன் சேலை; ஒருவகை ஆடை. [பெரியாழ். 1. 3. 8.]

**காம்புத்துகில்**-எழுத்துச் சேலை; சித்திர வேலைப்பாடமைந்த கரையுள்ள வஸ்திரம்.

**காமர்**-அழகு; விருப்பம்.

**காமரம்**-கான விசேஷம்.

**காமன்**-வண்டு; திப்பிலி; மன்மதன்; இந்திரன்.

**காமுறுகை**-ஆசைப்படுகை.

**காய்கை**-ஓட்டுகை; சீறுகை; வெறுத்தல்; உஷ்ணமாதல்.

**காய்தல்**-கொல்லல். [கஞ்சனைக் காய்ந்தானை: பெரிய திரு. 7. 6. 5.]

**காய்ப்பு**-தகண் ஏறுதல்; தழும்பு உண்டாகை.

**கார்**-குளிர்ச்சி; கறுப்பு; அழகு; மேகம்; வர்ஷாகாலம்; இருள்; கருங்குரங்கு.

**கார்கா**-இந்தளம்; கும்மட்டி.

**கார்த்தல்**-கறுப்பாதல்; அரும்புதல். [வண்கொன்றைகள் கார்த்தனவே; திருவிருத். 68.]

**கார்முகம்**-வில்.

**கார்வலயம்**-கடல்.

**காரண்டம்**-நீர்க்காக்கை.

**காரிகை**-அழகு; அலங்காரம்; பெண்.

**காரிகையார்**-அழகிய பெண்கள்; பக்தி பாரவச்யமுடையார். [காரிகையார் நிறை காப்பவ ராரென்று; திருவிருத். 19.]

**காரியப்பாடற**-பிரயோஜனந்தரமின்றிக்கே. [காரியப்பாடறக் கண்ணாலே அவனை ஒருகால் நோக்கினால்; ஈடு, 1. 5. 5.]

**காரோதத்தீ**-படபாமுகாக்கினி; வடவைக் கனல்.

**கால்**-வெற்றிலைக் கால்; வண்டி; பர்யந்த பர்வதம்; வேர்; காற்று.

**கால்கட்டு**-பந்தகம்.

**கால்கட்டுகை**-ப்ரபத்தி பண்ணுகை.

**கால்தாழுகை**-விளம்பிக்கை ஆழங்காற்படுகை.

**கால்சம்**-ஆலவட்டம்; காற்று.

**காலதர்**-பலகணி.

**காலிடைப்பாசம்**-பெண்ஆசை.

**காலிலி**-உரகம்; காற்று; அருணன்.

**காலெடுத்தல்**-தொடங்குதல்; அநுமதித்தல். [ஒன்றின் நினைவிற்கு ஒன்றுகாலெடுக்க அமைந்திருக்கை: ஈடு, 1. 4.]

**காவலம்**-நெருப்பு.

**காவற்கலி**-வாழை.

**காவற் சோர்வு**-பாதுகாப்பில் சோர்வுறுகை.

**காவனம்**-பந்தல்.

**காவி**-கரு நெய்தல்.

**காவில்**-காவடி.

**காழ்ப்பு**-அழலுகை; வைரம் பற்றுகை; ஸாரம்; [வெளி

றும் காழ்ப்புமாகச் சொல்லி: ஈடு, 6. 7. 1.] கொட்டை.

**காழகம்**-புடவை; கறுப்பு; கழுதை.

**காளவனம்**-சுடுகாடு.

**காளி** - தேன்; சிங்கம்; துர்க்கை.

**காளை**-பாலைநிலத்தலைவன்.

**காற்றுதல்** - பிரகாசப்படுத்துகை; அழிக்கை.

**காற்றுவானம்** - காற்றுவாக்கு; காற்றடிக்குமிடம்.

***காறை**-பெண்கள்கழுத்தணி; [காறைபூணும் கண்ணாடி காணும்; பெரியாழ். 3.7.8.] வண்டி. [காறை முறிப் போருக்குக் காப்பிடவேணுமிறே. திருப்பா. 26. ஆரு. வியா.]

**கானவன்**-வேடன்; குரங்கு.

**கான்**-கானகம்; வாஸனை; [கானமர்வேழம்கையெடுத்தலற; பெரியதிரு. 2.3.9.] தேன்; வண்டு. (?)

**கான்று** - உமிழ்ந்தது; உண்டாக்கி, (ஸிருஷ்டித்து.)

**கானகம்படி**-வனபூமி.

**கானகநாடன்**- முல்லைத்தலைமகன்.

**கானல்** - மிருகத்ருஷ்ணிகா; பேய்த்தேர்; நீர்நிலம்; ரவி; கடற்கரைச்சோலை, நெய்தல்நிலம்;(ஸூர்ய)கிரணம்; உப்பளம்.

**கிங்கரர்**-ஏவுற்றுச் செயலாளர்.

**கிச்சன்**-நெருப்பு.

**கிசலம்**-தளிர்.

***கிஞ்சித் கரித்தல்**- ஏதோபணி புரிதல்.

**கிஞ்சுகம்** - பாலாசு; கிளி; சிவப்பு.

**கிஞ்சுமம்** - முதலை.

**கிட்டம்**-பீச்சாங்கட்டி;[உலோகக் கட்டி; இரண்டு கிட்டம் சேரக் கிடக்க: ஈடு, 5. 1. ப்ர.] ரத்நத்திலுள்ள கரடு; வண்டல்; இறுகல்.

**கிட்டி**-தலையீற்றுப்பசு; தாளம்; இறுக்குந்தடி.

**கிடக்கை** - படுத்திருக்கை; [கிடந்ததோர் கிடக்கை: திருமா. 23.] படுக்கை.

**கிடத்தல்**-படுத்தல்; [கிடந்த நாள் கிடந்தாய் எத்தனை காலங் கிடத்தி; திருவாய். 9. 2. 3.]

**கிடிகோள்**- காண்மினென்னும் பொருளில் வந்த முன்னிலையசை; [இழக்க வேண்டா கிடிகோள்; ஒருமையில் கிடாய் எனவரும். (உ-ம்) ஸர்ப்பம் கிடாய்.]

**கிடீர்** - கிடிகோள்; [வெண்ணெய் விலக்கினுர் புக்கலோகம் புகுவீர்; கிடீர்; ஈடு, 1. 5. ப்ர.]

**கிடை**-கிடக்கை; வேதபாடசாலை. [ஒருகிடையிலே பல பிள்ளைக ளோதாநின்ருல்: திருப்பா. 10. ஆரு. வியா.]

**கிண்கிணிவாய்ச்செய்தல்**—சதங்கைவாய்போற் சிறிது மலர்தல்; [திருப்பா. 22.]

**கிண்டல்**-கிளறுகை.

*கிண்டி-தாரைவார்க்கும் பாத்திரம்; [பொற் கிண்டியைக் கொண்டு உதகம் பண்ணப் புக; திருநெடுந். 13. வியாக்.]

கிண்டுகை-கிளறுகை; கோதுகை; தோண்டுகை.

கிண்ணகம்-ஆற்றுப்பெருக்கு. [ஆறு கிண்ணகமெடுத்தால் நேர் நின்ற மரங்கள் பறியுண்டு போய்க் கடலிலே புகும்; ஈடு, 1.1.1.]

கிணறுவார - தூர்வை வார: புதுப்பிக்க.

கிணுக்க-ஸங்கேதம் பண்ண.

கிரிசை-கிரியை; [நம்பாவைக்குச் செய்யுங் கிரிசைகள் கேளீரோ; திருப்பா. 2.] பார்வதி.

கிரிவம்-க்ரீவம்; கழுத்து.

கிருமி-புழு; (க்ருமி), [மெல்லியலாக்கைக் கிருமி; திருவிருத். 48.]

கிருஷி - ஸாதநாநுஷ்டாநம்; உழுது பயிரிடுகை.

கில்லான்-அஸமர்த்தன். [என்னுடை நன்னெஞ்சந்தன்னையகல்விக்கத் தானுங் கில்லானினி; திருவாய். 1. 7. 8.]

கில்லேன்-மாட்டேன்; [கிற்பன் கில்லேன் என்றிலன் முன நாளால்; திருவாய். 3. 2. 6]

கிலாம்-வேடிக்கை; பிரணய ரோஷம்; [கிலாந் தோற்றச் சொல்லுகிறுன்; ஈடு, 6. 1. 1.] வெறுப்பு; ஆகிஞ்சந்யம்.]

கிலாய்க்கை - பிரணயகலஹத்தில் உக்தி. [பிரணய ரோஷந் தலையெடுத்துக் கிலாய்ப்பதும்; ஈடு, 8.1.2.] வெறுக்கை; [தனிமையைப் பார்த்துக் கிலாய்க்கையும்; திருநெடுந். 9. வியா.]

கிழக்கு வெளுத்தல்-போது விடிதல். [பகற் கண்டேனென்கிற தோற்றரவுகளுக்குக் கிழக்கு வெளுக்கிறபடி; ஈடு, 6. 1. 11.]

*கிழங்கு-காரணம். [நாபிக் கமல முதற் கிழங்கே; திருவாய். 10.10.3.]

*கிழங்கெடுத்தல் - அடியோடு நாசம் செய்தல். [அநாசரிதரைக் கிழங்கெடுத்துப் புகட்டானித்தனை; ஈடு, 8. 1. 4.]

கிழத்தி-உரியவள்; யோக்யை; நாயகி.

கிழார் கிழார்-பெரியவருக்கும் பெரியவர்; மிகப்பெரியவர். [எத்தனை யேனுங் கிழார் கிழார்க்கும்; ஈடு, 6. 3. 7.]

கிழான்-சக்திமான்; பெரியவன்.

கிழிக்குறை-அஸம்பூர்த்தி, (நிறைவின்மை).

கிழிச் சீரை-பணம் வைத்த சீலை· பணமுடிப்பு. [கிழிச் சீரையோடே தநத்தைக் கொடுப்பாரைப் போலே: பெரியதிரு. 1. 1. 1. வியா.]

கிழியறுத்தல்-வாதில் வென்று பொற்கிழி பெறுதல்.

[வேண்டியவேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்; திருப்பல். தனியன்.]

**கிள்ளை**-கிளி ; குதிரை.

* **கிள்ளிக் களைதல்**-சிரமமின்றி யழித்தல் ; [பொல்லாவரக் களைக் கிள்ளிக் களைந் தானை : திருப்பா. 13.]

**கிளப்பம்**-கிளர்ச்சி ; உயர்ச்சி ; (எழுச்சி) மிகுதி.

**கிளமா**-கிளி; குதிரை.

**கிளவி**-வார்த்தை ; பேச்சு; அகப்பொருட்டுறை; **சிளவித் தலைமகன்** - அகப் பொருட்டலைவன் ; ஸ்வாப தேசத்தில் பாகவதர்களைச் சொல்லுகிறது. பாட் டுடைத் தலைவன்; ஈசு வரன். [இந்நிலை திரு விருத்தத்திலே.]

**கிளர்த்தி** - கிளர்ந்தெழுகை; கொந்தளிக்கை; மிகுதி. [ஸ்வஸந்நிதியாலே கிளர்த் தியை யுடைத்தாயிருக்கை; ஈடு, 3. 6. 3.]

**கிளறுகை** - கோட் சொல் லுகை ; கலக்குகை; நன்கு ஆராய்கை; வெளிப்படுத் துகை.

**கிளை**-த்வநி; பந்து; ஸ்கந்தம்; (மரக்கிளை.) உறவு ; விபா கம் ; (உட்பிரிவு) இனம் ; ஓரிசை ; ஒளி ; நண்பகல் ; நல்லிரவு.

**கிளைஞர்**-ஸம்பந்திகள் ; மருத நிலத்தவர்.

**கிளைத்தல்**-கிளைவிடுதல்; விளை தல்; [உழுநீர் வயலுட் பொன் கிளைப்ப ; பெரிய திரு. 8. 8. 5.] நெருங்கு தல் ; அநுபவித்தல் ; சப் தித்தல்.

**கிளைத்தலைவி**-குடும்பத்தில் சிரேஷ்டை.

**கிறி**-வழி; பொய்; மாயம்; தந்திரம்; (விரகு), [மாவலி மாட்டிருங்குறளாகி இசை யவோர் மூவடி வேண்டிச் சென்ற பெருங்கிறியானை : திருவிருத். 91.] முன்கையி லணியும் பவளத்திர ளாகிய ஓரணி. [கிண்கிணி கட்டிக்கிறிகட்டி: பெரி யாழ். 1. 9. 2.]

**கினிய**-கபளீகரிக்க. (முற்றும் கவிய) [ஒரு மேருவைக் கினியக் காளமேகம் படிந்தாற் போலே: ஈடு, 3. 8. 1.]

**கீசகம்**-குரங்கு; மூங்கில்; தலைப் பாகை. [கீசகத்தோடே போக்குமென்னுதல்: திருமா. 40. வியா.]

**கீதம்**-இசை; மூங்கில் வண்டு;

**கீதை**-பகவத்கீதை.

**கீர்த்தி**-இசை.

**கீர்த்திமை**-புகழ்தல். [தன் சொல்லால் தான் தன்னைக் கீர்த்தித்த மாயன்: திரு வாய். 7. 9. 2.]

**கீர்த்திமை**-கீர்த்தி. [கீர்த்திமை பாடிப்போய்: திருப்பா.13.]

**கீரம்**-பால்; கிளி; காரிப்புள்; (கருங்கிளி), தீபம்.

**கீராதே**-சொல்லாதே.

கீழ்க்கன்று-தம்பி. [பல தேவர்க்கோர் கீழ்க் கன்றாய்: நாய்ச்சி. 14. 1.]

கீழ்மகன்-நீசன். [கீழ்மகனென்றொதிரங்கி: பெரிய திரு. 5. 8. 1.]

கீழ்மை-தாழ்ச்சி.

கீழாண்டைச்சிகை - நிலுவை; பழங் கணக்கிலே நிலுவை. [நான் படுகிற கிலேசம் போதாதென்று கீழாண்டைச் சிகைவாசியா நின்றார்: ஈடு, 1. 4. 7.]

கீழோலை-உள்ளோலை.

குக்கர்-ச்வபசர்; (மிகவும் கடைப்பட்டோர்.) [குடிமையிற் கடைமைப்பட்ட குக்கரில்: திருமா. 39.]

குக்கில்-செம்போத்து.

குக்கூடல்-முட்டாக்கு.[பொன்னெத்தவாடை குக்கூடலிட்டு: பெருமாள். 6. 5.]

குக்குகை-தடுமாறுகை; இருமுகை.

குசாண்டு-மிறுக்கு; குஸிருஷ்டி; சிலர் சொல்லுகிறப் போலே உபேக்ஷிக்கை. [நன்மை தீமைகளைக் கணக்கிட்டுப் படி வைக்கும் குசாண்டுள்ள ஈசுவர கோஷ்டியைப் பார்த்து விஷமமாக வருஷியாதே: திருப்பா. 4. வியா.]

குசை-வேகம்; தருப்பை; கடிவாளம்.

குசைதாங்குகை- கடிவாளத்தை எட்டிப் பிடிக்கை; வேகத்தை நிறுத்துகை. [திருவடிகள் பூமியை யளக்கவென்று உத்யோகித்த உத்யோகத்தே குசை தாங்கின வருமையெல்லாந் தோற்றுகிற தாயிற்று : திருநெடுந். 3. வியா.]

குஞ்சம்-நாழி; கொய்சகம்; சவரி: குச்சு; நூலிழையின் ஓரளவு.

குஞ்சரம்-யானை; கருங்குவளை.

குஞ்சி-மயிர்முடி; பரிமளம்;

குட்டம்-குளம்; பள்ளம்; குட்டநாடு; [மலையாளத்தைச் சேர்ந்த ஒரு பகுதி.] குரங்குக்குட்டி. [பெரியாழ். 3. 5. 7.]

குட்டன்-பிள்ளை. [என் சிறுக் குட்டன்: பெரியாழ். 1. 4. 2.]

குட்டிக்காடு-குப்பம்.

குட்டிச்சுவர்-ஏகாந்த இடம். [சிறிய இடிசுவர்: அது ஜந ஸஞ்சாரமில்லாத இடத்தைக் குறிக்கிறது: அவன் குணங்கள் நடையாடாத தோரிடத்திலே கிடக்க வேணுமென்று போய், ஒரு குட்டிச் சுவரிலே முட்டாக்கிட்டுக் கொண்டு கிடந்தார்: ஈடு, 1. 10. 8.]

குட்டேறு-ககுத்து; (திமில்), வ்ருஷபம் (இளங்காளை), [குட்டேற்றைக் கோவர்த்தனனைக் கண்டீரே: நாய்ச்சி. 14. 2.]

குட்டைநாழி - [குறுணி எனத் தொல்காப்பிய உரை கூறு கிறது: சொல். 400.] குள்ள மானது; சிறு துணி.

குடங்கர்-குடிசை; கும்ப ராசி.

குடங்கால்-மடி. [எட்டுணைப் போதென் குடங்காலிருக்க கில்லாள்: திருநெடுந். 11.]

குடங்கை-உள்ளங்கை. [தன் குடங்கை நீரேற்ருன் தாழ்வு: 3-ஆம் திருவந். 62.]

குடதிசை-மேற்குத்திக்கு.[குட திசை முடியை வைத்து: திருமா. 9.]

குடந்தம்-திரட்சி; குடம்; வணங்கிக்கும்பிடுகை.

குட நீராட்டுகை - அபிஷேகம் பண்ணுகை.

குடநீர் வழிய-குட நீர் சொரிய; முடிய.

குடநீர்வார்க்கை - குடத்தாலே நீர் வார்க்கை. (ஊழியஞ் செய்கை) [பகவத்ஸமாச் ரயணம் பண்ணுவார்க்குத் தேவதைகள் வந்து குட நீர் வார்க்கக் கடவதிறே. திருப்பா. 4. வியா.]

*குடநீரோடேபோதல் - உறவற் றுப் போதல்: [நீர்க்குடத் தையுடைத்தொரு சடங்கு செயின் உறவற்று விடுகிற தென்பது கூறப்படுகிறது. ஆனல் அது ஒரு குட நீரோடே போகிறது: திருப்பா. 28. வியா.]

*குடப்பாம்பிற்கையிடுதல் -பாம் புள்ள குடத்திற்கையிட்டு ஸத்யம் செய்தல். [குடப் பாம்பிற் கையிட்டவன்: பெருமாள், தனியன்.]

குடம்-திரட்சி; பூசம்; எருமை; கும்பராசி;பசு; குடக்கூத்து; கருப்பங்கட்டி; நகரம்.

குடம்பை-முட்டை; கூடு; எரி.

குடற்றுடக்கு-சரீர சரீரிபாவ ஸம்பந்தம்; சரீரசம்பந்த மான உறவு; உத்பத்திசம் பந்தம். [குடற்றுடக் குண் டான இடத்தில் ஸ்வாதந் திரியம் ஜீவிக்குமோ: திருப்பா. 28. ஆரு. வியா].

குடி - கிராமம்; பிரஜைகள்; குலம்; புருவம்.

*குடிக்கிடத்தல் - குலமரி யாதை தப்பாதபடி இருத் தல். [குடிக்கிடந்தாக்கஞ் செய்து; திருவாய். 9. 2. 2.]

குடிஞை-குடிசை, நதி; புள் ளின் பொது; கூகை.

குடிமக்கள்-அடிமைகள். [இந் திரியங்களுக்குக் குடிமக்க ளாய் வர்த்திக்கிற லீலா விபூதி; திருமா. 13. வியா.]

குடிமை - அடிமை; குடிப் பிறப்பு; ஒழுக்கம்.

குடிமைகொள்கின்ற - ப்ராப்தம் (ஏற்புடையதை) பண்ணிக் கொள்கிற.

குடில்-குடிசை

குடிவாயுடன்பாடி - எல்லாரும் சங்கேதத்துடன் பாடி.

குடுமி-சிகை; மலையுச்சி. [மதி தவழ் குடுமி; திருவாய். 2. 10. 2.]

குடைந்து - அவவாஹித்து. [குடைந்து நீராடாதே; திருப்பா. 13.]

குண்டர்-நீசர்.

குண்டு-ஆழம்; [அத்தாலே தாழ்ச்சியைச் சொல்லி அத் தாலே நீசர் என்கிறது.]

குண்டு-ஆழம்; [குண்டு நீருறை கோளரி: நாய்ச்சி. 2. 3.] தாழ்வு; மிருகங்களின் விதை; ஆண்குதிரை.

குணதிசை - கிழக்குத்திக்கு. [கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்; திருப்பள். 1.]

குணம்-பிணம்; முக்குணங் கள்; தன்மை; கயிறு; நாண் கயிறு.

குணலம் - குணலக் கூத்து; தலைகீழாக ஆடுகின்ற கூத்து விசேஷம். [குணலை மாடித் திரிமினோ; பெரி யாழ். 4. 6. 9.]

குணில் - கணக்குக்கயிறு; கவண்; குறுந்தடி; [கன்று குனிலாவெறிந்தாய்; திருப் பா. 26.] பறைகொட்டுங் கடிப்பு.

குணுங்கு-நாற்றம்; முடைநாற் றம். [வெண்ணெயளைந்த குணுங்கும்; பெரியாழ். 2. 4. 1.]

குத்துடைவாள்-அறையிற்கத்தி

குத்துண்கை - தள்ளப்படுகை; (இழிவுபடுகை.)

குதர்-பிரிவு.

குதற்றுகை- மிறுக்குகளைப்பண் ணுகை; துக்கத்தைப் பண்ணுகை. [குதற்று வல்லசுரர்கள் கூற்றம்; திரு வாய். 10.1.6.]

குதிக்கை-தாவுகை.

குதிரி - அடங்காப் பெண்; [குதிரியாய் மடலூர்துமே; திருவாய். 5. 3. 9.] செப்பு; நாணைப் பெண். குந்திரி என்று முண்டு.

குதூகலிக்கை- கௌதூஹலம் கொள்கை; ஸம்ப்ரமிக்கை.

குதை- அம்பு; வில்லின்குதை; பணிப்பூட்டு; உத்யோகம்; தடுமாற்றம்; பசி; (முயற்சி); (க்ஷுதா)[கொண்ட குதை மாறுதே; ஈடு, 6. 10. 2.]

குந்தம் - நோய்; [மெய்குந்த மாக விரும்புவரே; நான் முகன் 79.] வெளுப்பு; குருந்தம்; வேலாயுதம்; குற்றம்.

குந்தளம்-மயிர்க்குழற்சி.

*குந்தனம்-ரத்நம்பதிக்குமிடம். [திருநெடுந். 21. வியா.]

குந்தாமை -தப்பிப்போகாதிருக் கை. [செய்-குந்தா அருந் தீமையுன்னடியார்க்குத் தீர்த்து: திருவாய். 2.6.1.]

குந்திநடக்கை - முன்னங்கால் கள் மட்டும் தரையிற்படும் படி நடத்தல்; [ஆசாரசீலர் இங்ஙனம் நடப்பர். தீண்டி னுருண்டாகில் முகத்தைப் பொல்லாதாகப்பண்ணி;

குந்தி நடந்து; நாய்ச்சி. 6. 4.]

குந்தி நிற்றல்-குந்திக்கொண்டு நிற்கை; ஒற்றைக் காலால் நிற்கை.

குப்பாயம்-அரைச் சட்டை.

**குப்பைக் காலன்**-நல்ல காலை உடையவன்; (அதிருஷ்டக்காரன்), [ஒருவன் செய்தது வாய்த்து வரப் புக்கவாறே அவன் குப்பைக் காலன்காண் என்னக் கடவது; ஈடு, 7. 9. 9.]

குபேரன்-நிலவு; (சந்திரன்.)

கும்மாயம்-குழையச் சமைத்த பருப்பு.

கும்பி-யானை; சேறு; நிரயம். [திருவாய். 3. 7. 8.]

குமர தண்டம்-குமர (அறுமுக)னது தேவர் படை. [திருப்பள். 6.]

குமரி-குமாரி; கன்னி; காளி; கற்றாழை.

**குமரிருக்கை**-அநுபவ யோக்யதை அன்றிக்கே இருக்கை. [குமர் கிடக்கை என்றலுமுண்டு; மற்றுள்ள அவயவங்கள் குமர் கிடந்து போமித்தனை; ஈடு, 6. 10. 10.]

குமல்-அரிவாள்.

குமிழி-ஊற்றுவாய். [கிண்ணகத்திற் குமிழிக் கீழே சாவி போமா போலே; ஈடு, 5. 3. 7.]

**குமிழி நீர் உண்கை**-அமிழ்ந்து ஸ்தல பரிசையாகை; ஆழ்ந்தநுபவிக்கை. [திருவாய்ப்பாடியிலே கிருஷ்ணனும் பெண்களுமாய்த் திருக்குரவை கோத்து அதிரஸம் செல்லா நிற்க, ப்ரீதியாலே குமிழி நீருண்டு; திருப்பா. வியா. அவ.]

குமுதம்-அரக்காம்பல்; செவ்வாம்பல்; நெய்தல்; பேரொலி.

**குமுறுகை**-தடுமாறுகை; வாய் விடமாட்டாதே உள்ளே கிலேசப்படுகை. [கண்கள் நீர்மல்க நின்று நின்று குமுறுமே; திருவாய். 6. 5. 1.]

**குமை**-அழிவு; துன்பம்; [குமை தீற்றி: திருவாய். 7. 1. 1.] அடி. [திருவாய். 4. 1. 2.]

குமைத்து-துவைத்து.

குயம்-இளமை; முலை; (குசம்), அரிவாள்.

குயவு-சுகந்தம்; தேர்; புகை.

குயில்-முகில்; துளை; சொல்.

குரக்கு-குரங்கு. [குரக்கரசாவ தறிந்தோம்; நாய்ச்சி 8.4.]

குரக்குக்கை-வணக்கு வாதம் பிடித்த கை. [குரக்குக்கை கொடு கூழ்துழாவி: ஈடு, 9. 2. 4.]

குரங்கன்-சந்திரன்.

குரங்குதல்-வளைதல்.

குரண்டம்-கொக்கு.

குரம்பை-குடிசை; சரீரம்.

குரல்-சாரீரம்; இன்னிசை.

குரவர்-சௌரவ்யர்.

குரவு-வ்ருக்ஷவிசேஷம்; ஆசிரியத் தன்மை.

குரவை - திருக்குரவை; குரவைக்கூத்து.

குரா-வன்யபுஷ்யம் [குராநற் செழும்போது கொண்டு; 2-ஆம் திருவந். 32.]

குரு-ச்லாக்யம்; பெருமை; புண். [மெல்லியலாக் கிருமி குருவில் மிளிர்தந்து; திருவிருத் 48.] நிறம்; வியாழன்; கனம்.

குருக்கண்-ஸ்தனம்.

குருகு - கொய்யடிநாரை; கோழி; மூலநாள்; வெண்மை; குருக்கத்தி; குவளை; விலங்கு முதலியவற்றின் இளமை. [சிங்கக் குருகு; திருப்பா. 1. வியா.]

குருசில்-அரசன்.

குருடன்-சுக்கிரன்; அந்தன்; திருதராஷ்டிரன். [அந்தகன் சிறுவன்; பெரியதிரு. 2.3.6.]

குருதி-ரத்தம்; செவ்வாய்; மூளை; சிவப்பு.

குருவி-மூலநட்சத்திரம்; ஒருவகைப்புள்; குன்றிமணி.

குருளை-பிள்ளை; (குழந்தை), மிருகம் முதலியவற்றின் குட்டி.

குரை-சப்தம்; பெருமை; [ஈடு, 4. 9. 9.]

குலம் -நிறம்; [குலமென்று வர்ணமாய் அத்தாலே நிறத்தைச் சொல்கிறது;] கோத்திரம்; திரள்; இல்லம்; ஜாதி.

குலாவுவகை - ஸஞ்சரிக்கை; வளைவு; வசப்படுதல்; கொண்டாடுதல்.

குலிங்கம்-ஊர்க்குருவி; குதிரை.

குலை-கரை.

குவடு-சிகரம்; மலை; மலையின் உச்சி.

குவலயம்-நெய்தல்; குவளை; பூமி.

குவளை-கருநெய்தல்; விழி; செங்கழுநீர்.

குவால்-பெருமை; அதிகம். [இவள் நெஞ்சிலே உணர்த்தி யுண்டானால் நமக்கு அவனைப் பெறலாவது என்றுகுவாலாக உணர்த்துகிறார்கள்; திருப்பா. ஆறு. வியா.]

குவிமுலையீர் - பக்திவர்த்தகர்களே. [ஸ்வாபதேசத்தில் கொங்கை என்பது பக்தியாதலின் ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார்.]

குழகன்-பவ்யன்; விரகன்; சுலபன்; சிறுபிள்ளை; இணங்குபவன். [குரவை கோத்த குழகனை; திருவாய். 3. 6.3.]

குழகுதல்-லீலாசாரம் கொண்டாடுகை; வசீகரித்தல். [குழகியெங்கள் குழமணன் கொண்டு; திருவாய். 6.2.6.]

குழமணன்-லீலோபகரண ப்ரதிமை; மரப்பாச்சி. [எங்கள் குழமணன் கொண்டு; திருவாய். 6. 2. 6.]

குழமணிதூரம்-தோற்றவர்கள் தோல்விக்கு ஈடாக ஆடுவதொரு கூத்து.

குழல்-இலேக்குழல்; ஆய்க் குழல்;

குழல்வங்கியம்-குடில வளேப்பு.

குழவி-குழந்தை.

குழவு-இளமைப் பருவம்.

குழறுகை-அக்ஷரத் தெளிவில் லாமல் பேசுதல். [குழறு பூவையொடும் கிளியோ டும் குழகேலே: திருவாய். 6. 2. 5]

குழன்று-கூடி.

குழாம்-சமூஹம்.

குழி-வயிறு; பள்ளம்.

குழியில்கால்கழுவுகை - சிராத் தம் செய்கை. [சிராத்தத் தில் பாத்யோபசாரமாகக் குழியில் கால் கழுவுவது மரபு.]

குழு-திரள்.

குழும்புஜாதி - க்ஷ த்ரஜாதி; (தாழ்ந்த ஜாதி).

குழுமி-கலசி; (கலந்து).

குழுமுகை - கலசுகை (கலந்து கொள்.)

குழை-தளிர்; சேறு; குண்ட லம்.

குழைக்கை-கலக்கை.[உன்னே யென்னுள்ளே குழைத்த வெம்மைந்தா: திருவாய். 2. 6. 9.]

குழைகை - மிருதுவாகை; நெகிழ்கை.

குழைச் சரக்கு - அஸாரமான பொருள்; [குழைச் சரக் கேயாகிலும் விடாவொண் ணுத; திருப்பா. 4. வியா.] காக்கப்பட வேண்டிய பொருள். [நாங்கள் உனக் குக் குழைச் சரக்கானபடி அழகிதாயிருந்தது: திருப்பா. 10. வியா.] [குழைச் சரக்கு என்றும் கொண்டு நெஞ்சை இள கச் செய்யும் சரக்கு என் றும் இவ்வாசிரியரால் பொருள் கூறப்படுகிறது.]

குளப்புக்கூறு-துகைப்பு. [திரு மாலாற் குளப்புக் கூறு கொளப்பட்டு; நாய்ச்சி. 13. 6.]

குளம்-நுதல்; வெல்லம்.

குளம்பு-மாடு முதலிய மிருகங் களின் பாதம்.

குளவி-பச்சிலே மரம்.

குளியம் - வேங்கைப் புலி; உருண்டை.

குற்றேவல் - அந்தரங்கப் பிரவருத்தி; கைங்கரி யம்; உசிததாஸ்யம்.

குறக்கை- வெளிப்படுத்துகை; [கொந்தக் குழலேக் குறந்த புழுகட்டி: பெரியாழ்; 2. 5. 8.]

குறங்கு-துடை. [குறங்குகளே வந்து காணீரே; பெரியாழ்; 1. 2. 5.]

குறடு-கதுப்பு; பற்றுக் கோடு; பாதக்குறடு; திண்ணே.

குறள்-குறுமை; குள்ளன்.

குறளே-கோட்சொல்; வறுமை; [தீக்குறளே சென்றே தோம்; திருப்பா 2.]

குறி-குறிப்பு ; இலக்கு; அடையாளம்.

குறிக் கொள்கை-இதயத்திலே கொள்ளுகை. [என்னை நீ குறிக்கொள்ளே: திருவாய். 2. 3. 7.] கவனமாய்க் காத்தல். [பள்ளியறை குறிக்கொண்மின் ; பெரியாழ். 5. 2. 9.]

குறிஞ்சி-குறிஞ்சிப் பாட்டு; ஓர் பண் ; மலைச் சாரல் ; செம்முள்ளி.

குறிஞர்-அறிவார்.

குறித்தல்-நினைத்தல் ; கருத்தில் படியச் செய்தல் ; கறுத்தறுதி காட்டல் ; கோடு வரைதல் ; [புழுக் குறித்தது எழுத்தானாற் போலே ; ஈடு, 2. 4. 3.]

குறிப்பு-நினைவு ; [இனியென் திருக்குறிப்பே : பெரியாழ். 5. 4. 1.] மனம் ; லட்சியம்; அடையாளம்.

குறியாப்பை - ஆப்பையாலே கடன் வாங்குகை.

குறுக்குதல்-குறுகச் செய்தல்; [திரு நாவாய் குறிக்கும் வகையுண்டு கொலோ ; திருவாய். 9. 8. 1.] அணித்தாதல். [திருநாவா யெத்தனையிடம் போருமென்று எதிரே வருகின்றார் சிலரைக் கேட்டருள, குறுக்கும் என்றார்களாய்: ஈடு, 9. 8. 1.]

குறுந்தலை-தறுதலை ; தாய்தமப் பருக்கு அடங்காத பிள்ளை.

குறும்பு-அநீதி ; பாலை நிலத்தார்; குறுநிலமன்னர் ; பகைவர்; வலிமை. [வஞ்ச முக் குறும்பாம் குழியை ; இராமா. 7.]

குறுமை-தண்மை ; குறைவு; ஸமீபம்.

குறும்பன் - இடையன் ; [கொள்ளை கொள்ளிக் குறும்பனைக் கோவர்த்தனனை ; நாய்ச்சி. 13. 8. என்னுமிடத்து வியாக்கியாநத்தில், நந்தகோபன் பிள்ளை பெற்று விட்டதாகக் கூறப்பட்டிருப்பது கொண்டு இங்கனமாசிரியர் பொருள் கூறினர் போலும் ; குறும்படித்துத் தன்னிஷ்டப்படி திரிகின்றவன் என்பது அங்குக் கூறிய பொருளாகும்.]

குறும்பர்-இந்திரியங்கள்.[மனமாளு மோரைவர் வன் குறும்பர் தம்மை ; பெரிய திருவந். 51. என்னும் பாசுரத்திலுள்ள பதத்தின் பொருள் கூறபபடுகிறது.]

குறை-திருமுடிக் குறை. [திருமுடிக் குறை-பெருமாளுடைய சிரோபாகப்ரதேச மான உபய காவேரீ மத்யப்ரதேசம். என்று 5. 9. 1. ஈட்டரும்பதம் கூறுகிறது.

"குறை" ஆற்றிடைக் குறையைக் குறிக்கிறது. "குறையெலாஞ் சோலையாகி" என்னும் (கம்ப. பூக்கொய். 2.) பாடலும் காண்க.]

குறையிரத்தல் - யாசித்தல். [மாலைக் குறை யிரந்து; 2. ஆம். திருவந். 17.]

குறைவறுப்பு - உலுப்பை. [உலுப்பை-பெரியோர்களுக்கு மரியாதையாக அனுப்பும் உணவுப் பண்டம்.]

குன்றர்-குறிஞ்சி நிலமக்கள்.

குன்றி சூட்டு - குன்றிமணிக் கொண்டை.

குன்றுவர்-குறவர். (குறிஞ்சி நில மக்கள்.)

குன்ஞுங் குருச்சி - காதிலே ஏகாந்தமாகச் சொல்லுகை. [இங்ஙன் குன்ஞுங் குருச்சியாகக் கேட்டருள வொண்ணுது; திருப்பா. 23. ஆரு. வியா.]

குனிக்கை- கூத்தாடுகை; வளைக்கை.

*கூக்குரல்-பேரொலி. [நும்மோங்கு கூக்குரல் கேட்டுமே; திருவாய். 9. 5. 3.]

கூகை-கோட்டான்.

கூச்சம்-பயம்; கூசுகை.

கூச்சு முறை-கூச வேண்டு முறை.

கூசம்-கூச்சம்.

கூட்டம்-பிண்ணுக்கு.

கூட்டுகை-உபதேசிக்கை.

கூடம்-சம்மட்டி; வஞ்சனை; பொய்.

கூடல்-மதுரை; பாண்டியன் படை வீடு; குறி பார்க்கும் சுழி; நாயகி வட்டமாக கோட்டைக் கீறி சுழி சுழியாகச் சுற்றும் சுழிகள் சுழித்து எண்ணுகையில் இரண்டு சுழியாகக் கூடினுல் நாயகன் வந்து கூடுகையும் இல்லாமற் போனுல் கூடாமையுமாமெனக் கொண்டு சுழிப்பாள். அதற்குக் கூடல் என்று பெயர்; கூடுகை; ஊடினபின் கூடுகை.

கூடலர்-சத்துருக்கள்.

கூடற்கோன்- மதுரைக் கரசன்; மலையத்வஜன் (பாண்டியன்.)

கூடார்-சத்துருக்கள்.

கூடுபூரிக்கை-குவிக்கை; கூட்டைப் பூரிக்கை; [உள்ளு கூடு பூரித்ததில்லையாகில் எங்களார்த்தத்வநி கேட்டாற் கண்ணுறங்குமோ; திருப்பா. 11. ஆரு. வியா.]

கூத்து-நடநம். [ஆடுதுங் கூத்தே: திருவாய். 10.1.5,] ஒருத்தன்வேஷபாஷையை யநுசரிக்கை. (நடிப்பது) [பிறவி மாமாயக் கூத்தினையே:திருவாய். 8. 4. 11.]

கூதல்-குளிர்ச்சி.[பனிக்கூதல்: பெருமாள். 6. 1.]

கூதை-மூளி; [காது செய்வான் கூதை செய்து: திருவாய். 9. 1. 9.] பனிக் காற்று; கூதையு மூதையும் குளிர்பனிக் காற்று.

கூந்தல்-மயிர்; (பெண்களின் தலை மயிர்) பீலி; குதிரை; கேசி; (ஓரசுரன்), கமுகு, பனை இவற்றின் ஓலை.

கூர்தல்-மிகுதல்.

கூரம்பர் - பகவத்ப்ரபந்நர். [கூரம்பனல்லால் துணை இ(ல்)லை என(நான்முகன். 8.)க் கூறியபடி பேற்றுக்குத் தம் கை பாராது பெருமாள் வலிமையையே நம்பியிருப்பது பற்றிப் பெருமாளுடைய அம்பின் கூர்மையையே துணையாகக் கொண்டவர்களாயினர் ப்ரபந்நர். கீழ்க் காட்டிய பாசுர வியாக்கியாக்கியாநத்தின் ஸ்ரீஸூக்தி யிங்குக் காணத் தக்கது: "இவர்கள் சக்ரவர்த்தித் திருமகன் அம்பின் கூர்மையைத் தஞ்சமாக நினைத்திருப்பார்கள்."]

கூரன்-வெட்டியன்; குரூரன்; நாய்.

கூரியர் - ஸூக்ஷ்மஞர்; கூர்மையை யுடையவர்.

கூலம்-நீர்க்கரை; முறை; வரம்பு; கடைவீதி; பாகல்; வால்; வானரம்.

கூவல்-கூவுகை; அழைத்தல்; கிணறு.

கூவி-கூப்பிட்டு. [கூவிக் கூவிக்கொடுவினைத்தூற்றுணின்று: திருவாய்: 3. 2. 9.]

கூவியர்-மடையர்; சமைப்போர்.

கூவிரம்-தேர்; வில்வம்.

கூவிளம்-வில்வம்.

கூவுதல்-பறவை யொலித்தல்; [குயிலினங்கள் கூவின காண்: திருப்பா. 18.] அழைத்தல்[மழலை முற்குத இளம் சொல்லா லுன்னைக் கூவுகின்றுன்: பெரியாழ். 1. 4. 5.]

கூழ்-சோறு. [கூழாட்பட்டு நின்றீர்களை: திருப்பல். 3.]

*கூழ்த்தல்-ஸந்தேஹித்தல். [அவனிவனென்று கூழேன்மின்: திருவாய். 3. 6. 9.]

கூழ்ப்பம்-உரகம்.

கூழ்ப்பு-ஸம்சயம். [திருவாய். 8. 2. 6.]

கூழை-ஸூலபன்; இறகு; பீலி; உரகம்; நடு; சேறு; மாதர் தலை மயிர்; குட்டை; [நாய் கூழைவாலால். திருவாய். 9. 4. 3.] பின் வரிசை. [அவன் தான் பிற்கூழையிலே நிற்குமாயிற்று: ஈடு, 9. 9. ப்ர.] "கூழை குழலோதி மயிர் முடி."

கூழைத்தனம்-ஏமாற்றுகை; ஈடுபடுகை.

கூழைப்பார்வை-கள்ள நோக்கு. [கூழைப் பார்வைக்கார் வயல்மேயுங் குறுங்குடியே: பெரியதிரு. 9. 6. 1.]

கூழைமை - க்ருத்ருமம்; குழைந்துநடக்கை. [கொவ்வைக்கனிவாய்கொடுத்துக் கூழைமை செய்யோமே; பெரியாழ். 3. 2. 5.]

கூறு-துண்டு; பங்கு.

கூறுகை - சொல்லுகை; பிரஸித்தமாக்குகை.

கூறு செய்கை - மணியம்பண்ணுகை. [ராஜாக்கள் ஊர் தோறும் கூறு செய்வார்களை வைக்குமா போலே: ஈடு, 5.2.8.]

கூறுசெய்வான்-கோயில் தீம்பன். மணியகாரன்.

*கூறைப்பை- வஸ்திரம்வைக்கும்பை.] தானே கூறைப்பையும் சுமந்து கொண்டு போய்: ஈடு, 4.1.2.]

கூனல்-சங்கு; வளைவு.

கூனிகுயம்-அரிவாள்

கெச்சம்-முல்லை.

கெடிலணங்கு-மூதேவி.

கெடுபடை- ஓடிப்போகிற சேனை.

கெடுமரக்கலம்-கெட்டசரக்குக் கப்பல்.

கெண்டல்-கிளறுகை; நெருக்கம்.

கெண்டுரம்-கண்டௌஷதம்.

கெழுமுகை-மிகுதி;கிளம்புகை; முளைக்கை; சேருகை.

கேகயம் - மயில்; ஹேய தேசம்.

கேசரி-உளைமயிருள்ளது; ஸிம்ஹம்.

கேடகம் - பரிசை; பாசறை; மலைகளை யடுத்த ஊர்.

கேடு-குறைவு; அழிவு; ஸம்ஹாரம்; ஸங்கோசம்; நிக்கிரகம்.

கேண்மை-நட்பு; உறவு.

கேணி-கிணறு; சிறுகுளம்.

கேதம்-துக்கம்.

கேதன்-காமன்.

கேதாரம்- ஒரு பட்டணம்; மயில்; நெல்லுப் பயிர் விளை நிலம்.

கேதுகை-அழுகை.

கேயம்-கே(க)யம்; பாட்டு.

கேரண்டம்-காக்கை.

கேரளன்-சேரன்; கேரளநாட்டவன்.

கேவலம்-தனிமை; முக்தி; அற்பம்; மாத்திரம். [கேவலமன்று கடலின்னோசை:பெரிய திரு. 9.5.8.]

கேவலன்-கைவல்யத்தையடைந்தவன்.

கேழ்-ஒளி; நிறம்; அழகு. ஒப்பு.

கேழ்த்த-செறிந்த; விஜ்ரும்பணமான. [கேழ்த்தசீரான்: திருவாய். 3.1.7.]

*கேழ்பவர் - நன்மை யுடையவர்.[ஒருவர் நம்போல் வருங் கேழ்பவருளரே: திருவிருத். 45.]

கேழல்-பன்றி; இபம்.

கேள்-நட்பு; உறவு; நண்பன்; கணவன்.

கேள்வன்.-நாயகன்; தோழன்.

கேள்வி-சப்தம்; புராணம்; சாஸ்திரம் கேட்டல்; வேதம்; அறிவு.

கேள்விகொள்கை - அறிவிறுத்துகை; விசாரிக்கை. [ஸர்

வேசுவரனைக் கேள்வி கொள்ள வேண்டாதபடி: ஈடு, 1.5.3.]

**கேளி**-மங்கையர் விளையாட்டு.

**கை**-பக்ஷபாதம்; வ்யூஹம் கொடுக்கை; ஞானம்; பொருள்; எல்லைக் கோல்; வெற்றிலைக்கிளை; ஒழுக்கம்; இடம்; குற்றம்; சிறுமை; சார்பு; படையின் வகிப்பு; ஒப்பனை.

**கைக்கடங்கினது**-வளை. [கைக் கடங்கினதையுங்கொண்டு மடிச்சரக்கையுங் கொண்டு போனான்: ஈடு, 9.7.7.]

**கைக்கிளை**-யாழின் நரம்பு; ஒரு தலைக் காமம்; இசை ஏழனுள் ஒன்று.

**கைக்கிளை**-ஒருதலைக்காமம்.

**கைக்குறியாப்பை**-அகப்பை யாலே கடன் வாங்குகை.

**கைக்கூட்டம்**-யுத்தக் கூட்டம்; (போரில் அணி வகுப்புக் கூட்டம்). [கைக்கூட்ட மிட்டாற்போலே என்னவுமாம்: பெரியாழ். 5. 2. 1. வியா.]

**கைக்கூட்டமிட்டாப்போலே**-அணி வகுத்தாப்போலே.

**கைக்கூட்டன்**-காவற்காரன். கைக்கூட்டனாவது இரண்டு பேரைக் கூட்டிக் கையிலே விலங்கு போடுபவன். [ராஜபுத்திரனைச் சிறையிலிட்டு வைத்தால் கைக்கூட்டனுக்குப் பாலும் சோறும் இடுவாரைப் போலே: ஈடு, 7. 10. 8.]

**கைக்கொடுமானம்**-கைக்கொள்ளுகை.

**கைக்கோலி**-கைக்கூப்பி.

**கைகரக்கை**-ஒளிக்கை; கையிலிருப்பதை மறைக்கை.

**கைகழிகை**-கைதப்பிப் போகை.

**கைச்சங்கம்**-சக்கை; வாத்ய விசேஷம்.

**கைச்சொல்லுகை**-கூப்பிடுகை; கைச்சாடையாற் கருத்தை யறிவிக்கை.

**கைசிகர்**-வன்னியர்.

**கைசெய்கை**-ஸஹாயஞ் செய்யுகை; [ஈடு, 4. 8.7.] அலங்கரிக்கை; [கானார் நறுந் துழாய் கை செய்தகண்ணியும்: பெரியாழ். 1. 3. 7.] தொழில் செய்கை; [மெய் வருத்திக் கைசெய்துய்ம்மினோ: திருவாய். 3. 9. 6.] நிர்வஹிக்கை; [பாரதம் கை செய்த: பெரியாழ். 2. 1. 1.] அணிவகுக்கை; வஞ்சிக்கை.

**கைத்தல்**-கடிதல்; நிரஸிக்கை; கசத்தல்; வெறுத்தல்.

**கைத்தளை**-கை விலங்கு.

**கைத்து**-பொருள்; பொன்; வெறுப்பு.

**கைதவம்**-க்ருத்திரிமம்; கபடம்; வஞ்சநம்; பொய்; துக்கம்.

**கைதவன்**-பாண்டியன்.

**கைதொட்டு**-நோக்கி; உதவி செய்து; கையினால் தீண்டி.

[சக்ரவர்த்தித் திருமகன் இத்தைக் கைதொட்டு: ஈடு, 4. 2.8.]

**கை தொடனாய்** - கைவிடாதவனாய். [தூசித்தலையிலவர்களே கைதொடாராய்: ஈடு, 7. 4. 1.] வேணுமென்று செய்பவன். [ஐநநிபக்கலபராதத்திற் கைதொடனாயிருக்க: ஈடு, 6. 10. 10.]

**கைதொடுமானம்**- ஸாதநம். [தன் வெறுமையைக் கைதொடுமானமாகக் கொண்டு: ஈடு, 6. 10. 8.]

**கைதோடன்**-ஸஹாயம்.

**கைதை**-தாழை.

**கைந்நிரை**-கைவிளக்கு; கைகளுடைய ஸமூகம்.

**கைநிரை**-நிரைச்சல். [கைநிரைகட்டிக் கொண்டிருக்கிற நாளிலே: ஈடு, 4. 6. 6.]

**கைப்பட்டது**-பலவந்தமாகக் கைப் புகுந்தது: ஸ்வ்யதனமாக வந்தது. [ஸாதநாந்தரம் என்றபடி.]

**கைப்பற்றுகை** - வசப்படுத்துகை.

**கைப்பற்று**-ஸாதநாந்தரம். [தான் தோன்றியானகைப்பற்றடியாக வந்ததொன்றல்ல: ஈடு, 9. 4. 9.]

**கைப்பாணியிட்டு** - மணியாசனப் பலகையிட்டு; [கைப்பாணியிட்டு மெழுகு வாசியிலே ப்ரமிக்கும்படி: ஈடு, 5. 1. 5.]

**கைப்புடை**-குடவறை; (வாயிற் காவலர் தங்கும் சிறிய அறை.) [தங்கள் கைப்புடைகளிலேயிருத்தி: ஈடு, 10. 9. 9.]

**கைப்புலி**-யானை.

**கைப்பொருள்**-ஆத்மீயம்; (தன்னைச் சேர்ந்த பொருள்); [இல்லாதோம் கைப் பொருளுமெய்துவானொத்துளனே: நாய்ச்சி. 11. 6.] கைம்முதல்.

**கைப்போது**-அஞ்சலி; கையிற் பூ.

**கைபுகுருகை**-ஸ்வசமாகை.

**கைபுனை**-அலங்கரிக்கை; பூத்தொடுக்கை.

**கைம்மலை**-குஞ்சரம்; (யானை).

**கைம்மா**-யானை.

**கைம்மாறு**-ப்ரத்யுபகாரம்.

**கைம்முதல்**-கைப்பொருள்; ஸாதநம்.

**கைம்மை**-பொய். கைமையென்றும், பொய் என்றும் பர்யாயம். [கைம்மை சொல்லி: திருவாய். 5.1.1.]

**கைமிகுகை**-கரைபுரளுகை.

**கைமேலே**-ஸத்ய:; (உடனே ப்ரத்யக்ஷமாக.)

**கைமேலேகாணலாம்**-கரதலமலகம் போலே காணலாம்; (கையிலங்கு நெல்லிக்கனியெனக் காணலாம்.) உடனே காணலாம்.

**கையடியுண்டு**-ஈடுபட்டு. [இங்கு இவன் நீர்மையிலே கையடியுண்டிருக்கையாலே ஈடு, 9.9. ப்ர.]

**கையடை**-அடைக்கலம்.

கையடைப்பாக்குகை-கையில் ஒப்படைக்கை; கரஸ்தமாக்குகை.

கையடைப்பு- கைப்பற்றின பொருள். [நெஞ்சம் இவள் தனக்குக் கையடைப் பாகையாலே: ஈடு, 2.4.1.]

கையணி-படையில் வ்யூகம்; (அணிவகுப்பு).

கையர்-கள்ளர்; மூடர்.

கையறவு-இழவு;துன்பம்; தரித்திரம்.

கையார்சக்கரம்-திருவீதி சோதநம். [உத்ஸவத்திற்குமுன் நாள் சேனை முதலியார் திருவீதியில் புறப்படுகை.]

கையாள்-சேவகன்; தொண்டு புரிபவன்.

கையிலக்கை-அஞ்சலி; நித்ய சம்பளம்; (நாட்கூலி.)

கையுடை-கைக்கவசம்.

கையோலைசெய்கை- முறியெழுதிக் கொடுக்கை.

கைவந்தபடி- விதேயனுயிருந்தபடி; கைக்குப்ரயோஜனமானபடி.

கைவருகை-நினைத்தபடி காரியம் கொள்ளுகை.

கைவளைக்கை-அபிநயம் பிடிக்கை; தெரிக்கை.

கைவாரம்-வாழ்த்துதல்.

கைவிஞ்சுகை- ஆதிக்கியம் மட்டு விஞ்சுகை.

கைவிட்டு-ஆசைவிட்டு.

கைவிளிக்கை- கையாலே அழைக்கை.

கைவைக்கை-ஆரம்பிக்கை.

கொக்கரை-சங்கு;வளைவு;வில்; பரணி.

கொக்கின்பழம்-மாம்பழம்.

கொக்குவாயும் படுகண்ணியும்- ஆபரணத்தைப் பூட்டுவதற்கு உரிய கண்ணியும் அதில் செருகும் கொக்கியும்.

கொங்கன்- கொங்கு நாட்டுக் காரன்; சேரன்.

கொங்கு-தேன்; பரிமளம்; கொங்குநாடு; பூந்தாது.

கொங்குமரம்-மாமரம்.

கொங்கை-ஸ்தநம்.

கொச்சகம்-கொச்சை.

கொஞ்சுதல்-மழலைச் சொல் பேசுதல்; ஸரஸமாய்ப் பேசுதல்.

கொட்டகம்-கொறடு, கொட்டகை.

கொட்டி-கூட்டம்; வாயில்; தாளம்.

கொட்டிலி-குயவன் தட்டுப் பலகை.

கொட்டு - கரை; கொம்பு; மிடுக்கு; அழகு; ஒளி, இளமை; ஸ்வபாவம்; கொள்ளப்படுகை.

கொட்டை-பஞ்சுச்சுருள்.

கொடி-ஸ்திரீ, (கொடிபோன்றவள்).

கொடிச்சி-குறமகள்.

கொடிஞ்சி-தேர்மொட்டு.

கொடியன்-ஸ்வார்த்தபரன்.

கொடிறு-கதுப்பு; பூசம்.

கொடுங்கை-மடித்தகை.

**கொடும்பை**-குளம்; அருவி; பச்சிலை.

**கொடுவை** - துஷ்டத்தனம். [கொடுவைப் பசுக்களை : ஈடு.]

**கொண்டகுதை**- கொண்டஉத்யோகம்;(கொண்டமுயற்சி) [கொண்ட குதை மாருதே: ஈடு.]

**கொண்டல்**- கீழ்க் காற்று; மேகம்.

**கொண்டி**களவு. [களவுகாணப் புக்குக் கொண்டியிலே பிடியுண்டு: ஈடு, 7.7.2.]

**கொண்டை** - இலந்தையின் கனி; மயிர்முடி.

**கொண்டைக்கோல்**- ஆழத்தை அறிவதற்குநீரிடையேநடும் கோல்.
[ஆழங்காலிலே இழிந்து அமிழ்ந்துவார் அவ்விடத்தே கொண்டைக்கோல் நாட்டுமா போலே: ஈடு, 10.7.1.]

**கொத்திலக்கை** - சம்பளம்; கொத்து வேலைக் கூலி.

**கொத்தை** - குறை.

**கொந்தம்** - நெறிப்பு;[கொந்தக் குழலை: பெரியாழ். 2.5.8.]

**கொந்தளம்**-சிலுகிடுகை; குழற் கொத்து.

**கொந்தி**- கொத்தி.

**கொந்து**-கொத்து; [கொந்தார் தண்ணந்துழாயினுயமுதே: திருவாய். 2.6.9] திரள்; கோபம்.

**கொப்பூழ்**- திருநாபி.

**கொம்பு**- கொம்புபோலிருக்கும் ஸ்திரீ.

**கொம்மை**-திரட்சி; திண்மை; பெருமை; வட்டம்; அழகு; கொங்கை.

**கொய்தல்**-பறித்தல்.

**கொயல்**-வட்டணிப்பு; போக்கியதை. [கொயல் வாய் மலர்மேல்: திருவிருத். 24.]

**கொரிகை**-அகப்பை.

**கொல்**- ஸம்ஸயப் பொருளில் வரும் இடைச்சொல்;வருத்தம்; கொலை.

**கொல்லி**- தேசவிசேஷம்; ஒரு மலை.

**கொல்லை**-வரம்பு; கடந்தவள். [கொல்லையரக்கியை மூக்கரிந்திட்டகுமரனார்.நாய்ச்சி. 10.4.]

**கொலை**-கொடுமை; உயிர் வதை.

**கொழுந்து**-தலைமை; [கொம்பனார்க்கெல்லாம்கொழுந்தே. திருப்பா. 17.] இளந்தளிர்.

**கொழுநன்**-நாயகன்.

**கொழுத்தல்** - மதமடைதல்; பருத்தல்.

**கொழுமை**-அழகு; செழுமை; செல்வி.

**கொழுவி**-கோத்து.

**கொள்**-ஒரு நிறையளவு; காணம்.

**கொள்க**– நிச்சயிக்க.

**கொள்கை**-செருக்கு; கரஸிக்கை; கோட்பாடு. விழுங்குகை; வாங்குகை; உடைத்

த்ாகை;ஸ்வபாவம்;கொடுக்கை. ["அவன் செவியில் மந்திரங் கொள்வாயே போலும்" நாய்ச்சி.7.4.] ஒப்புக் கொள்கை.

கொள்ளம்-குழைசேறு.

கொள்ளி வட்டம் - குறைக் கொள்ளியைச் சுழற்றுகையில் தோன்றும் வட்டம்.

கொள்ளுகை - வாக்விஷயமாகை.

கொளுந்துவிக்கை - நெருப்புப் பற்றுவிக்கை; பிடித்துக் கொள்ளுகை.

கொளுவி-கொக்கி; கோத்து.

கொளு - பாட்டுக்கருத்தை விளக்கும் சொற்றொடர்.

கொற்றம் - பலம்; வெற்றி; ஐச்வர்யம்.

கொற்றவன்.ஸ்வாமி; அரசன்; வெற்றியுடையவன்.

கொற்றவை-துர்க்கை.

கொற்றி-துர்கை; பசுவின் இளங்கன்று.

கொன்-அச்சம்; பெருமை; பொழுது; பயன் இல்லாமை.

கோக்கை-தொடுக்கை;முறைப் படுத்துகை; மணிக்குள் நூலைப் புகுத்தி யிணைக்கை; சேர்க்கை. [கோமின் துழாய்முடி யாதியஞ் சோதிகுணங்களே: திருவாய். 4. 1. 7.]

கோகனகம்-தாமரை; கரும்பு.

கோகனகத்தவள்-பெரிய பிராட்டியார். [கோகனகத்தவள் கேள்வன்: திருவாய். 9. 8. 2.]

கோகனம்-தகரை; (ஒரு சிறு செடி), நிலக்கடம்பு.

கோகிலம் - பல்லி; துளை; இலந்தை; குரங்கு; குயில்.

கோகு-அடைவுகேடு. [கோகு கட்டுண்டுழலாதார்: திருவாய். 3.5.4.]

கோகு கட்டு-ஆவலம் கொட்டுகை; (ஆரவாரிக்கை.)

கோங்கு-ஒரு மரம்.

கோசம்-முட்டை; பொக்கிஷம்.

கோசரம்-விஷயம். [சிந்தைக்குங் கோசரமல்லன்: திருவாய். 1. 9. 6.]

கோசிகம்-பட்டாடை; சாம வேதம்.

கோட்டம்-கோணல்; பகைமை; நாடு; கோயில்; பக்ஷபாதம்; குரா; பசுவின் கூட்டம்; தர்மம்; குளம்; வயல்; உரம்; வலி (ஆகப் பன்னிரண்டு.)

கோட்பாடு-கொண்ட உத்யோகம்; கட்டளைப்பாடு; கோலுபாடு; கொள்கை.

கோட்பு-கொள்ளுகை; வலிமை.

கோடரம்-சோலை; குதிரை; குரங்கு; மயிற்சாந்து; மரச் செறிவு; வளை; பிறை போலே பண்ணப்பட்ட வாரம்.

கோடல்-வெண் காந்தள்; சிவனார்க் கொடி; கொள்ளுதல்.

கோடாலம் - பிறை போல் வளைந்தஹாரம். [குளிர்முத்தின் கோடாலமும்: பெரியாழ். 3. 3. 1.] கோடாரம் என்றுமுண்டு.

கோடிகம்-பூந்தட்டு; துகில்; குண்டிகை.

கோடு-கரை; சங்கு; வளைவு; சிகரம்; கொடுமை; கொம்பு.

கோணம்-குதிரை; மூக்கு; வாள்.

கோணை-வலிமை; கொடுமை; மிறுக்கு; [கோணை பெரிதுடைத்தெம்மானைக் கூறுதலே: திருவாய். 2. 5. 10.]

கோத்தல்-சேர்த்தல்;

கோத்திரம்-குலம்; பேர்; மலை.

கோதம்-வட்டில்; சினம்.(க்ரோதம்.)

கோது-சக்கை; [நன்னீரறமென்று கோது கொண்ட வேனிலஞ் செல்வன்: திருவிருத். 26.]

கோதுகலம்-கௌதூஹலம்.

கோதை - சூடிக் கொடுத்தாள்; பெண்கள் தலைமயிர்; பூமாலை.

கோப்பு-விசித்திரஸந்நிவேசம். [கோப்புடைய சீரிய (வியக்கத்தக்க அமைப்பு) சிங்காசனத்திருந்து: திருப்பா. 23.]

கோமளம்-மாணிக்கம்; இளமை; அழகு; மென்மை.

கோமான்-மூத்தோன்; குரு; அரசன்; பன்றி.

கோமுற்றவர்-அரசர்.

கோமுறை-மிறுக்கு; அரசாட்சி.

கோயிலாய்த்தானுக்கு பட்டர் வார்த்தை-புத்ர வியோகத்திலே தேவர் திருநாமமே என்ன, நானிருக்கிறேனே என்றது. [கோயிலாய்த்தான் என்பவர் பட்டருடைய சீடர். அவர் தமது புதல்வனுக்குப் பட்டர் திருநாமம் சாற்றியிருந்தார். அப்புதல்வன் பரமபதம் சார, அவர் சோகமெல்லாந் தோற்றப் பட்டர் திருவடிகளில் வந்து விழுந்து தேவர் திருநாமமிட்டேனே; அந்தப் பிள்ளை போய் விட்டானேஎன்று கிலேசப்பட, பட்டார் தம்மைப் போலேயொரு விக்கிரஹத்தை ஏறியருளப்பண்ணிக் கொடுத்து "நம்முடைய பெயர் இட்ட பிள்ளை போனானே என்று வருந்த வேண்டாம்; அப்பெயருடைய நாமிருக்கிறோமே" என்று அருளிச் செய்தார். இதனை 9. 3. 1. ஈட்டிலும் அரும்பதத்திலுங் காண்க.]

கோயிற் கட்டணம்-அந்தப்புரம்; [பெரிய பிராட்டியார் எழுந்தருளியிருக்கிற கோயிற் கட்டணமாய், ஈடு, 10. 10. 9.]

கோயிற் கூழைத்தனம்- ச்லாக்யமான க்ருத்ரிமம்; நல்ல கருத்ரிமம். [நீங்கள் கோயிற் கூழைத்தனமடிக்கிறபடி யிதுவோ: திருவிருத். 9. 9. .9 வியா.]

**கோயிற்சாந்து**- ச்லாக்கியமான சாந்து; கோவென்று ராஜாவாய் ராஜார்ஹமானச்லாக்கியமான சாந்து. [கோயிற் சாந்தையுன்னுலே யொளிக்கப் போமோ: திருப்பா. 10. வியா.]

**கோயின்மை** - ஸ்வாதந்திரியக்ருத்யம்; அநீதி; வேண்டப்பாடு. அதாவது பெருமை. [அடிமை யென்னு முக் கோயின்மையாலே: பெரியாழ். 5. 1. 4.] கோ-ராஜா; இன்மையாவதுஇல்லாமை; நிவாரகர் இல்லாமை என்றபடி: ஆராய்ச்சியில்லாத செயல்; கேள்விகேட்பாரற்றுச் செருக்கிச் செய்வது. [கொங்கை நஞ்சுண்ட கோயின்மை கொலோ: பெரியதிரு. 11. 1. 4.]

**கோரண்டம்**-குறிஞ்சி.

**கோரம்** - வட்டில்; கொடுமை; குதிரை; பூமொட்டு.

**கோரம்பு**-தீம்பு. [அதுவுமுன் கோரம்புக் கேற்குமன்றே: பெருமாள். 6. 4.]

**கோல்**- அம்புக்கோல்; செங்கோல்; ஏவல்; விழி; பசு; கணை; மன்னன்; திசை.

**கோல்வளை**-மழுங்கல்; வளை; த்ருச்யமானவளை [அழகிய வளை.]

**கோல்வாசி**-நிலமளக்கிறகோல் வாசி.

**கோல்விழுக்காடு** - கோலின் விழுக்காடு; எண்ணினப் பிரகாரம் ஸம்பவிக்கை. இனி; கோல் என்பதை அளவுகோலாகக்கொண்டு, பாகப்பிரிவினையில்ஏற்கவே ஒருவன் விரும்பின நிலத்திலே அளக்குங்கோல் அவனது பாகத்தைச் சேர்ந்ததாகக்காண்பிக்கும் முறையில் தானே வந்து விழுதலைக் கூறலுமாம். எவ்வாறுயினும் தற்செயல் என்றபடி. [கோல் விழுக்காட்டாலே பரிஹாரமா யிருக்கையன்றிக்கே: ஈடு, 4.10.5.]

**கோலம்**-நீர்ப்பெருக்கு; ஒருப்பாடு (முயற்சி); பலகோலம் (பலவேஷம்);பாக்கு; பீர்க்கு; இலந்தையின் கனி; ப்ரபத்தி; அழகு; ஒப்பனை; பன்றி.

**கோலி**-மயிர்; இலந்தை.

**கோவணன்**-ஈசன்; நாயகன்; வசிஷ்டன்.

**கோவினயகன்**-கோபிநாயகன்; கோவில்லாத நாயகன்; நியாமகரில்லாதவன். ['ன' வுக்கும் "ந"வுக்கும் பேதம் கருதாதிங்ஙனம் கூறப்பட்டது.]

**கோவியன்**-யமன்.

**கோவை** - மாலை; சேர்த்த; கோத்த மாலை.

**கோழம்பம்**-குழப்பம்;ஸம்ஸயம் [கொடீராகிற் கோழம்பமே: பெரியாழ். 3.4.5.]

**கோழி**-மயில்; உறையூர்.

**கோழை**-க்ஷுத்ரன்; நெஞ்சுரமில்லாதவன்; ச்லேஷ்மம்.

கோள்-மிடுக்கு; அழகு; ஒளி; பாம்பு; இராகு; சிறை; ம்ருத்யு.

கோள்சொல்லுகை - இல்லா ததை இட்டுச் சொல்லுகை.

கோள்பட்ட - கொள்ளப்பட்ட; அபஹரிக்கப் பட்ட.

கோள்பாடு-ஸாமர்த்தியம்; உத்யோகம்.

கோள்புக-அரும்ப; நூதநபலன் கிடட;நூதனமாகப் புஷ்பிக்கை; பறியுண்ண; வியாதி வர.

கோள்புக-பழுக்க.

கோள்வாய்-புதுப்புண்.[கலந்து பிரிந்தகோள்வாய்பொறுக்க வரிதாயிருக்கும்: ஈடு, 6. 2. ப்ர.]

கோளகம் - போஜநம். கண்ணுணி(கண்ணிற் பாவை).

கோளி-கொள்வோன்; பூவாது காய்க்கும் மரம்.

கோளுண்கை-ஸ்வீகரிக்கப் படுகை.

கோளை-இசை; பாட்டு; எலிகுவளை.

கோற்றும்பி - கோல்களிலும் பணைகளிலுமிருக்கிற மதுவைபானம் பண்ணுகிற தும்பி

கோற்றேன் - கொம்புத்தேன் [கோற்றேன் பாய்ந்தொழுகும் கமலச்சுனை வேங்கடவா; பெரியதிரு.1.9.8.]

கோன்-அரசன்;தலைவன்.

கோன்மை-அரசாட்சி.

கோனேரி- திருமலையிலுள்ள ஸ்வாமி புஷ்பகரிணி. [கோனேரி வாழுங் குருகாய்ப் பிறப்பேனே: பெருமாள். 4.1.]

சக்கரம்-மலை; ஆழி; பூமி; வட்டம்; பிறப்பு; ஓர் புள்.

சக்கரவத்து-விருது.

சக்த்ய வஸ்தப்ரபை - பொடி மூடின தணல்.

சகடை-வண்டி; பொய்.

சகுடம்-செம்பு; நாய்.

சகுலி-அப்பம்.

சகுனம்-புள்ளு; கிழங்கு; நிமித்தம்.

சகுனி-நிமித்தம் பார்ப்போன்; பறவை; துரியோதனன் மாமன்; கூகை.

சங்கம்-சங்கு; கூட்டம்; தமிழ்ச் சங்கம்; ஸம்போகம்; கையில் வளை.

சங்காயம்-பயிரென்று சங்கிக்கப் படுவதான புல்: அதாவது ஆனைப்புல்; நெல் மணி. [மூன்று களையும் பறித்துச் சங்காயமும் வாரினபயிர்: ஈடு, 4.2. ப்ர.]

சங்கு-கோழி; சங்கு; குச்சிக் கோல். ["சங்கிடுவான்." என்னக் கடவதிறே. திருப்பா; 14.]

சங்கை-ஸங்கியை (எண்); அளவு; சங்கை; ஐயம்; ஸங்கம்; பெருமை (கனம்).

சங்கையற்றிருந்தேன்-வளை இழந்திருந்தேன்; சங்கையற்றிருந்தேன்.

சங்கு-குச்சிக்கோல். [சங்கிடுவான் என்னக் கடவதிறே.]

சட்டித்தல்-அழித்தல்; கொல்லுதல்.

சட்டைப்புணு-அங்கியின்புரை.

சடக்கு-வேகம்.

சடங்கு-ஆசாரம்; அதிகாரத்திற் கேற்பப்புரியும் வ்ரதாதி கர்மங்கள்.

சடை-வேர்; ஜடை.

சத்திரம்-சஸ்த்திரம்; கத்தி;கைவேல்; குடை; பன்னுட்கள் புரியும் வேள்வி; அன்னசாலை.

சதி-கற்புடைமகள்; கர்ப்பூரம்; ரோஹிணி; வஞ்சனை; வட்டம்; நிலவு; கடல்; விரைவு; மழை.

சதிர்-நேர்பாடு; அழகு; உறுவது; பயன்; [மாசதிரிது பெற்று: திருவாய். 2. 7. 1.] நிலைமை; [முற்றுந்தவிர்ந்த சதிர் நினைந்தால்: திருவாய். 8. 10. 1.]ஸாமர்த்தியம்.

சதுக்கம்-நாற்சந்தி.

சதுரம்-சதுரங்கம்; சாதுரியம்; நான்கு கோணமுள்ளது; விவேகம்.

சந்தம்-அழகு;சந்தஸ்; ஸுகம்; நினைவு; நிறம்; வேதம்; சந்தநம்.

சந்தானச்சாபம் - சந்தானுர்த்தமானசாபம். (வமிசவிருத்திக்கான குழந்தை.)

சந்தி-சந்தியா காலம்; சமாதானம்.

சந்திக்கை-ஸந்திக்கை; கிட்டுகை; சேருகை.

சந்திரம் - பொன்; கர்ப்பூரம்; மிருக சீர்ஷம்.

சந்தோகன் - சாந்தோக்கியப் பிரதிபாத்யன்.[சாந்தோக்ய உபநிஷத்தின் பொருளானவன்.]

சந்தை-வாக்கியம். [ஆளவந்தாரருளிச் செய்த சந்தை; ஈடு, 1. 1. 1.] குருமுன்னர்ச் சொல்ல அதனை மாணுக்கர் திரும்ப இரண்டு அல்லது மூன்று முறை ஓதுவது; வேதம்.

சப்பம்-எலுமிச்சை; வயிரம்;

சப்பரை-மூடன்.

சப்பாணி-கைகொட்டுகை.

சம்பாரம்-உபகரணம்.

சம்பாவிக்கை- ஸம்பாவனை செய்கை.

சம்பு-சிவன்; பிரமன் (ஸ்வயம் பூ); ஜம்பூத்வீபம்; நாவல்; நரி (ஜம்புகம்); சூரியன்; எலுமிச்சை (ஜம்பீரம்.)

சம்புகன்-ஜம்புகன்.

சம்போர்-பூதம்.

சம்மதிக்கை- ஸம்மதிக்கை (உடன்படுகை); பெருமை பாராட்டிக் கொள்கை. [சதுரமென்று தம்மைத் தாமே சம்மதித்து: திருவாய். 9. 1. 5.]

சமண்-ஜைநசித்தாந்தம். [தருக்கினுற் சமண்செய்து: பெரியதிரு. 2. 1. 7.]

சமணர்-க்ஷணகர் (ஜைநர்).

சமபாதி-ஸமபாகம்; பேர்பாதி.

சமம்-ஒப்பு (ஸமம்); சங்கிராமம்; (போர்); அந்தக்கரண நியமநம்; பாஹ்யகரண நியமநம் தமமெனப்படும்.

சமழ்த்தல்-நாண்; வருத்தம்.

சமிதை பாதி சாவித்ரி பாதி-ஆவணி யவிட்டத்திற்கு மற்றை நாள் ப்ரும்ஹச்சாரிகள் ஆயிரம் சமிதைகளை அக்நியிலிடல். இல்லாவிடில் ஆயிரம் காயத்ரி ஜபம் பண்ணுதல். அன்றிக்கே ஐந்நூறு ஸமிதையும் ஐந்நூறு ஸாவித்ரியுமாகப் பண்ணலாகாது என்கை.

சமிதையிடாமணி-சமிதைப்புழு (ஒருவகைப் புழு.)

சமைக்கை-போக்யமாகப் பண்ணுகை; (அநுபவிக்கத் தக்கவாறு செய்கை.)

சமைகை-பக்குவமாகை.

சயம்-ஜயம்; ஸமூஹம்; சிதைவு (க்ஷயம்); சூரியன்; ஸ்வயம் (தரன்).[ சயமேயடிமை தலைநின்றார்: திருவாய். 8. 10. 2.]

சயமரம்-தோரணமரம்; ஸ்வயம்வரம்.

சரக்கற-வஸ்துவாகமதியாதே; அலக்ஷ்யமாக.

சரக்கறுதி-அபதார்த்தம்; பிரயோஜநம் இல்லாமை.

சரக்காளாய்-பதார்த்தத்தை (பொருளை) உடையவனாய்; விஷயமறிந்தவனாய்.

சரக்கிலேவாங்கி-தன்னுடைமையாக அபிமாநித்து.

சரக்கு-வஸ்த்து; பதார்த்தம்.

சரதம்-நிச்சயம்.

சரம்-நீர்; ஜங்கமம்; அம்பு; நாணல்; மணி வடம்.

சரவணம்-பந்தல்; பரிசல்; நாணற்காடு.

சரவிடுநாண்-சரப்பளி.

சரி - கையிடுவளை; ஒப்பு; வழி.

சரிக்கை-ஸஞ்சரிக்கை; சரிந்து விழச் செய்கை; சாய்க்கை.

சரிதை-பிச்சை; சரிதம்.

சரிவளை-வளைவிசேஷம்.

சருவம்-சட்டுவம்; பானை.

சரு-தெய்வவுணவு; சோறு.

சல்லியம் - முள்ளம் பன்றி; ஆணி; ஈட்டி; எலும்பு; செஞ்சந்தனம்.

சலகு-செத்தை; முத்துச்சிப்பி. [சலகிற் கிடந்தமுத்துக்கும்: ஈடு, 5.1.5.]

சலசயநம்-ஜலசயநம். [“ஜலசயநன்” என்பது சிறுபுலியூர் எம்பெருமான் திருநாமம். ஜலசயநன் எழுந்தருளியிருக்கும் ஊர் சலசயநம் எனப்படுகிறது.]

சலஞ்சலம்-சங்கு. [வலம்புரியாயிரமுள்ள சங்கு சலஞ்சலமெனப்படும்.]

சலநிதி-கடல்.

சலம்-வியாஜம்; வெறுப்பு; கோபம்; பிடித்ததை முட்டஸாதிக்கை; வைரம்; போட்டி. [சலங்கொண்டு

மலர் சொரியும்: பெரியதிரு. 3.9.1.]

சலார்பிலார்-ஓர் ஒலிக்குறிப்பு. [சலார் பிலாரென்ன; பெரியாழ். 1.7.1.]

சவடி - பூணூல்; ஆபரணம்; முத்துமாலை.

சவகு-முத்து; முத்துச்சிப்பி.

சவி-ஒளி; அழகு; செவ்வி; மணிக்கோவை. காந்தி; வளப்பு.

சழக்கு-தோஷம்;பொல்லாங்கு [சழக்கு நாக்கொடு: பெரியாழ். 5.11.2.] குற்றம்.

சரும்புதல் - பேணுதிருத்தல். [சரும்பியிருக்கையாய் உடம்பைப் பேணுதிருக்கையென்னுதல்: ஈடு, 4 8.4.]

சறை-சறைமணி;[ஈடு 4.8.4.] தாழ்வு.

சறைமணி-இடையர் அரையிற் கட்டிக் கொள்ளும் மணி;நாகமணி[ஈடு,4 8.4.]

சறையினுன்-உடம்பைப்பேணுதவன். [சறையினுர் கவராத: திருவாய். 4.8.4.]

சன்னிவேசம் - அவயவஸம்ஸ்தாநம்; (உறுப்பமைப்பு).

சாக்கியர்-பௌத்தர்.

சாகசம்-மெய்ம்மை; இபம்; (யானை); துணிவு.

சாகதுண்டம்-அகில்.

சாகம்-வெள்ளாடு; தேக்கு; கீரை; தாழை; தேனீ.

சாகரம்-கடல்; ஜாகரம்;(விழித்திருக்கை,) பதினுயிரங்கோடி.

சாகாடு-பண்டி, (வண்டி); வண்டியுருளை; ரோஹிணி.

சாட்டு-பாதிக்கை; குற்றவாளியாக்குகை.

சாடு-சகடு; வண்டு; பேச்சுச்சாதுர்யம்; பண்டிதன்.

சாடுகை-உதைக்கை; கொல்லுகை. நலிகை;

சாணுச்சீரை - சாணுத்துணி: அதாவது அயோக்யமென்றபடி.

சாத்தன்-அருகன்; புத்தன்; ஸூர்யன்; அரிஹரபுத்ரன். [சாத்தற்குத் தான் பின்னும் நேராதனவொன்று. நேர்ந்தாள்: சிறியதிரு. 17.]

சாத்தா-சாஸ்த்தா (ஐயனுர்).

சாத்தாக-ஸமூஹமாக; (திரளாக).[திருவனந்தபுரத்துக்குச் சாத்தாகப்போகா நிற்கச் செய்தே: ஈடு,8.10.11.]

சாத்து-சாத்ரவம்; (பகைமை), திருநாள் முடிவு; ஸமூஹகம். வணிகர்திரள்; சாத்துமுறை; சாத்துகை.

சாத்துகை-அணிகை; கதவடைக்கை. [ஐந்து பொறி வாசல் போர்க்கதவம் சாத்தி: 1-ஆம். திருவந். 4.]

சாதாரி-ராகம்.

சாதி-ஜாதி; தேக்கு; சிறுசண்பகம்; சீந்தல்; பிரப்பு; மூங்கில்; கள்ளு; குலம்; இனம். சிறப்புடையது; [சாதி மாணிக்கம்:திருவாய்.3.4.4.] பிறப்பு; ஜாதிமல்லிகை.

சாது-நன்றாக; நல்லவன்; தயிர்.

சாதுர்த்திகம்-நாலு நாளைக்கு ஒருமுறை வரும் ஒரு வகை முறை ஜ்வரம்.[ஈடு, 3.5.2.]

சாதுத்திக மன்றே-பௌதிகத்தினால்-வந்ததன்றே என்றபடி.

சாந்தாற்றி-சிறிய ஆலவட்டம்; பீலி; விசிறி.

சாபம்-குட்டி; சபிக்கை; வில்.

சாபிப்ராயம்-ஸஹ்ருதயம். (கருத்துடன்),சிரத்தையுடன்.

சாம்பு-பறை; நாவல்; பொன்; படுக்கை.

சாம்புதல்-கூம்புதல்; சாய்தல்.

சாமம்-பொன்ச்லாக்யம்ஏழரை நாழிகைஇரவு;ஸாமவேதம் ஸாமோபாயம்; கருமை; (ச்யாமம்).[சாயற்சாமத்திருமேனி: திருவாய் 8.5.1.]

*சாய்-நிறம்; [சாயாற்கரியானை: பெரியதிருவந். 14.] ஒளி; அழகு. [சங்கஞ்சரிந்தனசாயிழந்தேன்:திருவாய் 8.2.1.]

சாய்கரம்-தண்ணீர்ப் பந்தலில் நீர்வார்க்கும் கரகம்;[அவ்வமிர்தம், புஜிப்பார்க்குச் சாய்கரகம்பேரிலே உயரத்திலே யணித்தாக நிற்கிறபடி: ஈடு, 6.10.7.]

சாய்வில்லாத குறுந்தலை-தாய்க் கடங்காத தறுதலை.

சாயல்-நிறம்; அழகு; ஒரு வணப்போலே இருக்கை; ஸமுதாய சோபை; மேம்பாடு; மேன்மை; ஒப்பு; ஸாந்யவயவிநாசம்,ஸ்வஸ்தாந்தரபத்தி.

சாயை-ஒப்பு; நிழல்; ஒளி; அழகு; நிறம்; லாவண்யம். புகழ்; [நின்சாயையழிவு கண்டாய்: பெரியாழ். 5.3.3.] ப்ரதேசம். [ஒரு சாயையிலே மேகம் வர்ஷியா நின்றால்; ஈடு, 4.5.2.]

*சார்கை-அடைகை. [எம்மா மூர்த்தியைச் சார்ந்தே. திருவாய். 1.5.9.]

சார்வு-ரக்ஷகம்; அண்டை; அடைகை;துணை.புகலிடம்; பக்ஷபாதம்; அபாச்ரயம்; (ஆதாரம்).

சாரங்கம்-மான்; வண்டு; சாதகப்புள்; வில்; ஓரி; நாகம்.

சாரசம்-ஸாரஸபக்ஷி; பெருநாரை; குருகு; தாமரை; (ஸாரஸம).

சாரல்-பர்வதபர்யந்தம்; ஸாநு; (மலைப்பக்கம்); அடைகை; தூவானம்.

சாரார்-கிட்டார்.

சாரிகை-மண்டலாகார கதி; (வட்டமாய் நடைபோடுகை.) [சாரிகைப் புள்ளர்: திருவிருத். 19.] நாகணவாய்ப்புள்.

சாரிகை வந்த சடக்கு-சாரியாக வந்த வேகம்; யுத்த பூமியிலே சுழன்று வந்த வேகம்.

சாரியைச் சொல்-சார்ந்துவரும் இடைச் சொல்.

சால-மிகவும்.

சாலகம்-பூமொட்டு; பறவைக் கூடு; வலை; (ஜாலகம்); பல கணி. [மங்கைமார் சாலக வாசல் பற்றி: பெரியாழ். 3.4.1.]

சாலது-சால்வது.

சாலப் பணியுடைத்தாயிருக்கும்-மிகவும் ப்ரயாசத்தையுடை தாய் இருக்கும்.

சாலினி-கள்வாணிச்சி.

சாவகன்-சனி.

சாவணம்-நாணல்.

சாவம்-வில்; சாபம்.

சாழல் - முன்னிரண்டிகளில் வினவும்; பின்னிரண்டடி களில் விடையுமாய் இறுதி யிற் சாழலெனும் சொல் லையமைத்துப் பாடுவது; [பெரியதிரு. 1.5.] பெண் களின் விளையாட்டு; வரிக் கூத்து; கரடி. [11.5. பெரிய திருமொழி யரும்பதத்தில் சாழல் என் பது தோழியை விளிப்பதாக உரைக்கப் பட்டுள்ளது. இவ்வாசிரியரும் அப்பொரு ளைக் கூறியிருப்பதோடு வேறுசில பொருள்களும் கூறியுள்ளார். அவை கீழே தரப்படுகின்றன:] தோழி நாயகன் விளையாட்டு; ஸந் தேஹப் பேச்சு;ஒருத்திபேர்; நிகிருஷ்ட பாத்திரத்திற்குச் சாற்றியிருக்கைசுழற்காற்று; பூவை; சுங்கம்;

சாற்று வெள்ளம்-வாகமிருதம்; சொல்லமுதம்.

சாறு-சாரம்; ரஸம்;உத்ஸவம்; பூஜை; மரத்தின் குலை.

சானகம்-பக்ஷபாதம்; வில்.

சானகி-திருமகள்.

சானு-முழந்தாள்; (ஜானு); வரையின்சாரல்; (ஸாநு.)

சாஸ்திரார்த்தம்-உத்தரக்ரியை.

சிக்கம்-தூக்கணாங் குருவி.

* சிக்கென-திருடமாக[உன்னை நான் பிடித்தேன்கொள்சிக் கெனவே: திருவாய். 2.6.1 ]

சிகண்டி-மயில்; அலி.

சிகழிகை-வாசிகை; (தலையிற் சுற்றியணியும் மாலை); மயிர் முடி.

சிகி-கொண்டை உடையது; (மயில்), தீ; கேது; மலை; மரம்.

சிகை-நிலுவை; குடுமி; மயி லின் கொண்டை; வட்டி. [பின்பு இவனிட்ட காசு தன்னையடையத்தன் பேரிலே செலவெழுதச் சிகைக்கட்டிப்பிக்கும்: ஈடு, 4.9.6.] இலங்கை; போட் கன்; பொய்யன்.

சிங்கல்-குன்றல்; கெடல்.

சிங்க விளக்கு எரிக்கை-பாதக விளக்கு எரிக்கை; தலை யிலே சாணியை வைத்து விளக்கேற்றுகை; வாலிலே பந்தங் கட்டி எரிக்கை. [உன்னைச் சிங்க விளக் கெரித்துக் கொல்லாதே

நற்கொலையாகக் கொல்லும் போதும் அவரைப்பற்ற வேணுங்காண்: ஈடு, 8.1.1.]

சிங்காமை - ஸங்கோசியாமல். [சிங்காமை விரித்தவன்: பெரியதிரு. 10. 6. 1.]

சிங்காமல்-நீங்குதல்; கேடு; குறைவு.

சித்தர்-ஸித்தர்.

சித்திரப்படம்-எழுத்துச் சேலை.

சித்திரபானு-இரவி; தீ.

சித்திரன்-தச்சன்; ஓவியன்.

சிதகு-குற்றம். [தாமரையாளாகிலுஞ் சிதகுரைக்கு மேல்: பெரியாழ். 4. 9. 2.]

சிதடன்-அந்தகன்; மூடன்.

சிதலை-நோய்; கரையான்; துணி.

சிதை-கீழ் மகள்; ஈமவிறகு; இழிவான சொற்கள்.

சிதைக்கை- செதுக்குகை. [சிதைக்கின்ற தாழியென் ருழியைச் சீறி: திருவிருத். 34.]

சிதைவு-அழிவு; குறைவு.

சிந்தம்-புளியமரம்.

சிந்தாமணி-சேதநர் விரும்பும் ஹிதங்களைப் பண்ணிக் கொண்டிருக்கிற மணி.

சிந்து-பாட்டு; கடல்; நதி; ஒரு தேசம்.

சிந்துக்காடுகை- பாட்டுக்கு அநுகுணமாக ஆடுகை.

சிந்துக்கு-பாட்டுக்கு.

சிந்துக்கோன்-சிந்து தேசாதிபன்; ஜயத்ரதன்.

சிந்துகை-சிதறுகை.

சிந்துதல்-சிதறுதல்; போக்குதல்.

சிந்துரம்-சிவப்பு; சாதிலிங்கம்; யானை; புளிய மரம்.[சிந்துர மிலங்கத் திருநெற்றிமேல்: பெரியாழ். 3. 4. 6.]

சிந்துவிக்கை- சிதலமாக்குகை.

சிந்தை-மனசு; மனோவ்யாபாரம்; ஹ்ருதயம்.

சிந்தைநோய்-மனப்பீடை.

சிமையம்-மலையுச்சி. [சிமையம் மிசை திருவேங்கடத்து வன்தாள் மின்மினிரிய போவான்: திருவிருத். 31.]

சிமி-குடுமி; சிகரம்.

சிரஞ்செய்ய-சிரஞ் செய்ய. (தாமஸிக்க.)

சிரத்தை-சிரத்தை, (ச்ரத்தை).

சிரம்-நெடுங்காலம்; சென்னி; உச்சி.

சிரமம்-சிரமம்; (ச்ரமம்); களைப்பு. [நினைந்திருந்தே சிரமந்தீர்ந்தேன்: பெரியாழ். 5. 4. 8.]

சிராய்க்கை-உராய்ந்து காயப் படுகை.

சிரை-நரம்பு; (ஸிரை);குரங்கு; தாரை.

சிரைத்தல்-க்ஷவரம் செய்தல்; [தலையைச் சிரைத்திட்டான்: பெரியாழ். 3. 9. 3.] செதுக்குதல். [புற்சிரைத்தல் செய்யமாட்டீர்களோ: ஈடு, 3. 9. 6.]

சில்லிகை-நல்லாடை; சிள் வண்டு; (சுவர்க்கோழி.)

சில்லு-துண்டு.

சில்லெனல்-குளிர்ச்சிக் குறிப்பு; இன்பக் குறிப்பு; இடைஞ்சற் குறிப்பு; [சில்லென் றழையேன்மின்: திருப்பா. 15.] ஒலிக் குறிப்பு. [சில் லென்றெல்லருத: பெரிய திரு. 1. 7. 9.]

சிலதர்-ஏவல் செய்வோர்; ஆரியர்; தூது செல்வோர்; தோழர்.

சிலபதார்த்தம்-பெருச்சாளி; பார்வை; ஸூக்ஷ்மம்; சிள் வீடு; சிள்வண்டு.

சிலம்-ஸிலம்; உதிர் நெல்லு.

சிலம்பி-சிலந்தி.

சிலம்பு-மலை; காலணி.

சிலவம்-சட்டுவம்.

சிலவர்-வேடர்.

சிலிங்காரம்-சிருங்காரம்; அலங்காரம். [சிலிங்காரத்தாற் குழல்தாழ விட்டு: பெரியாழ். 3. 4. 9.]

சிலிர்த்தல்-தளிர்த்தல்; புளகமுறல்; மெய் சிலிர்த்தல்.

சிலீமுகம்-வண்டு; அம்பு.

சிலுகு-சண்டை; கூச்சல்; நிலை குலைகை; இடைஞ்சல். [விக்கினமாகையாலே சிலுகிடாதே கொள்ளுங் கோளென்கிறாள். திருப்பா. 15. வியா.]

சிலுசிலுக்கை - மயிர்க்குச் செறிகை.

சிலும்புகை-ஒலிக்கை; பெருகுகை; கலங்குகை; மயிர் சிலிர்க்கை.

சிலை-வில்; சீற்றம்; முழக்கம்; சிலை என்று வில்லாய்க் காந்தியைச் சொல்கிறது. [சிலையிலங்குமணி மாடத்து: பெரியதிரு. 3. 9. 4.]

சிவணுகை-அணுகுகை; ஒத்திருக்கை; ஸ்நேஹிக்கை; கூடுகை.

சிவந்து-சீறி; கோபித்து.

சிவம்-நன்மை; முக்தி.

சிவளிகைக்கச்சு-(உடைமேல்) கட்டுங்கச்சு: [செவ்வரத்தவுடையாடையதன் மேலோர் சிவிளிகைக்கச் சென்கின்றாளால் : பெரிய திரு.8. 1. 7.] பொன்னெழுதின கச்சு.

சிவிகை-பல்லக்கு.

சிவிட்கு-தெப்பம்; கோபம்; துக்கம்; ஆக்ரஹம்.

சிவிட்கென்று-சீக்கிரமாக; கோபமாக. [பின்னையுமுணரக் காணுமையாலே சிவிட்கென்று உன் மகள் தான் ஊமையோ வென்கிறார்கள்: திருப்பா. 9. வியா.]

சிவீலென்கை- பொறுக்கப் போகாமை. [நம்முடைய ஸ்வரூப, ரூப குண விபூதிகளைச் சொன்னவிடத்தில் சிவீலென்றிருந்திலை: ஈடு, 3. 5. 6.]

*சிழகுதல்-பொருமுதல். [சிழகிச்சிழகியழுதால்: ஈடு, 3. 2. 7.]

சிளேக்கை-இளேக்கை. [அவனைப் போலே பிரிவுக்குச் சிளேயாதபடி: ஈடு, 9. 5. 3.]

சிறைக்கோல்-அம்பு.

சிற்றவை-சிறுதாயார். [சிற்றவை பணியால் முடி துறந்தானை: பெரியதிரு. 2. 3. 1.]

சிற்ருட் கொண்டான் - ஆசார்யர்.

சிற்றில்-மணற் கொட்டகம்; [சிறுமியர்கட்டி விளையாடும் மணல் வீடு.]

சிறப்பு-போஜன ஸம்ருத்தி; பெட்டி; ஸம்பத்து; மோக்ஷம்; அதிசயம்;நன்றி; தகுதி.

சிருங்கை-கையளவு. [எனக்குமொருசிருங்கை இடவல்லிகோளே: திருமாலை. 19.]

சிரும்பி-தீனராய் ஸங்கோசித்து. [சிரும்பியிரப்பாளனாய் நின்ற நிலை, ஈடு, 2.6.1.]

சிரும்புதல் ஸங்கோசிக்கை;

*சிருய்-மரத்துண்டு. [ஒரு சிருயை விசுவஸித்து: ஈடு, 3.6.8.]

சிருர்-சிறுபிள்ளைகள்.

சிறுக்கன்-சிறுபிள்ளை. [ஆலினிலை வளர்ந்த சிறுக்கன்: பெரியாழ். 1.4.7.]

சிறுகளம்புச் சேலை - எழுத்துச் சேலை.

சிறுகுரம்பை-சிறிய குடிசை.

சிறுக்கை-சீறுகை.

சிறுசொல்-பழிச்சொல்.

சிறுசோறு-திப்பிச் சோறு. [சிறு பிள்ளைகள் விளையாட்டிற்குச் சமைக்குஞ் சோறு]

சிறுப்பு-ஸங்கோசம்

சிறுபுறம் - ஸ்நேஹத்தாலே சொல்லுகிற புன்மை; பிடர்.

சிறுமுறி-சீட்டு. [பரமபதம் தங்கள் சிறுமுறிப்படி செல்லும்படி: ஈடு, 4.3.11.]

சிறுமை-குற்றம்; இளமை. அற்பத்தனம்.

சிறுவிரல்-சுண்டுவிரல்.

சிறுவீடு-பனிப்புல் மேய்க்க விடுகை.வைகறைக்கு அடையாளமிது [கறப்பதற்கு முன்பு சிறிது நேரம் மாடுகளைப்பனிப்புல்மேயவிடுகை. எருமை சிறுவீடு மேய்வான் பரந்தனகாண்: திருப்பா. 8.]

சிறை-சிறகு; சிறைச்சாலை; மதில்;வரம்பு.

சிறைவைக்கை- ஸ்மிருதமாக்குகை: நினைவில் வைக்கை; காவலிலடைக்கை.

சின்மொழி-மிதபாஷினி. [பழியாய் விளைந்த தென்சின் மொழிக்கே: திருவிருத்: 19.]

சின்னம்-பொன்; [நாலுசின்னம்.கைப்பட்டவாறே: ஈடு, 4.9.2.]அடையாளம்; முறம்; முறிந்தது. சிறுமை. சில்வானம்.

சின்னப்பூ-புஷ்ப விசேஷம்; விடுபூ.

சினம் - கோபம்; யுத்தம்; நெருப்பு.

சினை-கவடு; கிளை; உறுப்பு; மூங்கில்.

சினையாறுபடுகை- பெருக்குக்கு முன்னமே ஆற்றில் நீர் பொசிகை. [ஈடு, 1.6.2.]

சிஷ்டகர்ஹை- பெரியோர் கடிந்து கூறல்.

சீக்கை-விலக்குகை; சீவுகை; திருவலகிடுகை. [துடைப் பத்தால் சுத்தமாக்குகை].

சீத்த-பருத்த.

சீத்தர்-அசடர்;

சீத்திகை-கழிகை; இளப்பம்.

சீதகன்-சுக்கிரன்; சந்திரன்; சோம்பலுடையவன்.

சீதை-உழும்படைச்சால்.

சீய்க்கை-தீய்க்கை; திருவல கிடுகை. [கடைத்தலைசீய்க் கப் பெற்ருல் கடுவினை களையலாமே: திருவாய் 10.2.7.]

சீயம்-சிம்ஹம்.

சீர்-குணம்; அழகு; பாவில் ஏகதேசம்; (செய்யுள் உறுப்பு), நன்மை; புகழ்; செல்வம்; பாரம்; ஓசை.

சீர்க்க-பெருக்க.

சீர்பெற-நிறமாம் படியாக.

சீர்மை-ஸ்வபாவம்; பெருமை.

சீரம்-மரவுரி.

சீரகம்-திவலை; ஒருநிறை; பன்றி.

சீரியது-நன்ருயிருப்பது.

சீருளியம்-தாம்பரம்.

சீலம்-ஸ்வபாவம்; நல்லொழுக் கம்.

சீலிக்கை-பரிசயம்.

சீவிக்கப் புக்கவாறே -ஸம்பத் துண்டானவாறே; ஜீவநம். ஸம்பத்து.

சீவை-நாடகம்.

சீழ்கி-ஏங்கி; சிணுங்கி; [பால ரைப் போல்சீழ்கிப் பரனள வில் வேட்கையால்: திரு வாய் நூற். 32.] சிணுங்கி; சிதிலமாய் இளைத்து.

சீற்றம்-சினம்.

சீற்றத்தீ-கோபாக்கினி.

சீறுகை-கோபிக்கை.

சுக்கை-வான்மீன்; புஷ்ப மாலை.

சுகம்-இன்பம்: நன்மை; கிளி.

சுகிர்ந்து-வகிர்ந்து.

சுகிருகை-வகிர்கை; பிளக்கை; பஞ்சு எஃகு கை.

சுட்டி-லலாடாபரணம்;(நெற்றி யணி) ஹேது; குறித்து; நெற்றிப் பட்டம்; நாக்கு.

சுடர்-ஒளி, சூரியன்; சந்திரன்; நெருப்பு; ஜ்வாலா;விளக்கு.

சுடர்க்கறை - மின்மினி; மயில்.

சுடலை-சுடுகாடு.

சுடிகை-சுட்டி; மயிர்முடி; தில கம்; தலை; உச்சி.

சுடுவன்-உதிரம்; (குருதி).

சுண்டன்-மூஞ்சூறு; சதயம்.

சுண்டாயம் - ஸ்வார்த்தப்ரவ்

ருத்தி; கிருத்ரிமம்; லீலை. [உன்னுடைய சுண்டாயம் நானறிவன். திருவாய் 6.2.1.]

**சுண்டை**-சுண்டைச் செடி; ஆனைத்தும்பிக்கை.

**சுண்ணம்**-சூரணம்; சுண்ணும்பு; சதயம்.

**சுணங்கன்**-நாய்.

**சுணங்கு**-- நல்லதேமல்; மெலிவு.

**சுணங்கை**-துணங்கை ஆடுகை; துணங்கைக் கூத்து என்று கைதட்டியாடுவதொரு கூத்துண்டு; அத்தைச் சொல்லிற்றுதல்; சுணம் என்றத்தைச் சுண்ணமென்றுக்கி மஞ்சட் பொடியைக் கையிலே பிடித்து ஒருவர்க் கொருவர் எறிந்து ஆடுவதொன்றுண்டு; அத்தைச் சொல்லிற்றுதல். [சுணங்கையெறிந்து நுந்தோள் குலைக் கப்படுமன்னைமீர்: திருவாய். 4.6.7.]

**சுணம்**-முலைமேல் தோன்றும் நிறம்; (தேமல்); [சுண நன்றணிமுலையுண்ண: பெரியாழ். 2.3.1.] சுணை; சூர்ணம், அதாவது மஞ்சட் பொடி முதலியன.

**சுணை**-அபிமானம்; லஜ்ஜை.

**சுணையுடைமை** - உணர்ச்சியுடைமை; சுரணையுடைமை.

**சுணைகேடன்**-வெட்கங் கெட்டவன்.

**சுதை**-வெண்மை; அமுதம்; மகள்;(ஸுதா);சுண்ணும்பு; உடுவு; (நக்ஷத்திரம்).

**சுத்தப்பிரபுத்தநியாயம்**-உறங்கினவன்; உணர்ந்த முறை; விஸ்மிருதஸ்மரணம் [மறந்ததை நினைத்தல்].

**சுந்தரம்**-சாதிலிங்கம்; சிந்தூரம்; அழகு.

**சுந்தரர்**-கந்தருவர். [சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க: திருப்பள்: 7.]

**சும்புள்**-கடம்பு.

**சும்மை**-சுமை; நெற்போர்.

**சும்மெனுதே**- மூச்சு விடாதே. (குறிப்புச் சொல்). [சும் மெனுதே கைவிட்டோடி: பெரியாழ்: 5.4,3.]

**சுமடர்**-போகிகள்; கீழ்மக்கள்; சுமைகாரர்.

**சுமடு**-சரீரம்; [அது நிற்கச் சுமடுதந்தாய்: திருவாய். 7.1.10.] சும்மாடு.

**சுமாலி**-கள் ; சுயம்பாகம் தவிர்ந்தேன்; தனக்கெனச் சமைத்தலை விட்டேன்; இவ்விபூதி யெல்லா மெனக்கு என்றிருக்கை தவிர்த்தேன்.

**சுரநதி**-ஸுரநதி; கங்கை.

**சுரம்**-பாலை நிலம்; காடு; ஜ்வரம்; நெறி; அருநெறி.

**சுரர்குரு**-வியாழன்; இந்திரன்.

**சுரவன்பாக்கு** - ச்லாக்யமான பாக்கு. [திருவாலி நாடு தாஸர் நல்லன சில சுரவன் பாக்குக்களைப் பட்டருக்குக்

கொடுத்தாராய்; ஈடு, 10.2.2.]

சுரி-நரி; சுழி; [சுரிச்சுரியேறு சங்கினாய்: 3 ஆம் திருவந். 49.] ஸுஷிரம்; (துளை).

சுரிகுழல்-சுருண்ட கூந்தலுடையாள்; பெண். ஸ்வாபதேசத்தில் (உள்ளுறையில்) அடக்கத்துடன் பணிந்து ஒழுகுவார் என்பது பொருள்,

சுரிகை-சூர்கத்தி;உடைவாள்.

சுரிமுகம்-சங்கு.

சுருக்கம்-ஸங்கோசம்;சிறுமை; வறுமை.

சுருக்கல்-கட்டு; சுருக்குதல்.

சுருதி-வேதம்; ஓவ்வி. ஓவ்வியாவது பாடுகிற போது கூட அநக்ஷரமாக தாலு அஷ்டபுடவாக் வ்யாபாரமின்றிக்கே மிடற்றோசையால் ஆலாபிக்கிற ஆலாபம்.

சுரும்பு-வண்டுகளிலே (ஒரு வகை)பேதம்.

சுரை-பசு; பசுவின் முலை; அம்புத்தலை; கள்; தேன்; துளை; திருகாணி பேர்டும். குழாய்.

சுலவு-செம்பு.

சுலவுதல்-சுழற்றுதல்;சுற்றுதல் [அரவூறு சுலாய் மலை தேய்க்கும்: திருவாய் 7.4.2.]

சுலாவ-சுற்ற.

சுலாவி-சுற்றி.

சுலாவுகை-சுற்றுகை.

சுலோகி-கள்.

சுவடு-அடையாளம்; [அருகும் சுவடுந்தெரிவுணரோம் பெரியதிருவந். 8.] ஒப்பம்; ரஸம்; [ஈடு, 2.6.5.] மாடு கட்டும் கருவி.

சுவர்-மதில்: அரண்.

சுவல்-மயிர்முடி; மேடு;முதுகு; பிடர்; கொக்கு.

சுவாமி-பொன்; ஸ்வாதி; முருகன்.

சுவை-ரஸம்.

சுழகு-சுளகு.

சுழலை-வலை; கொள்கலம். [துக்கச் சுழலையை: பெரியாழ்: 5.3.1.] க்ருத்ரிமம். [சுழலை பெரிதுடைத்துச் சோதனை: பெரியாழ். 1.5.8.]

சுழற்றி-கைவிசிறி.

சுழியாறு-சுழியிலே ஆழ்த்துகிற ஆறு. ஆழ்த்துகை-அழுத்துகை.

சுள்ளி-உலர்ந்துபோன சிறு கொம்பு.

சுளகு-முறம்; விசாகம்.

சுளைப்பிடம் - பச்சையிட்ட பச்சை.

சுற்றத்தவர் - ஞாதிகள் [கொண்ட பெண்டிர் மக்கள் உள்ளார் சுற்றத்தவர் பிறரும்: திருவாய். 9.1.1.]

சுற்றம்-ஞாதி; பந்து.

சுற்றல்-எண்ணல்.

சுற்றியும் சூழ்ந்தும் - போயும் வந்தும்.

சுறவம் - மத்ஸ்யவிசேஷம்.

சுரு-மகரமீன்.

சுனை-லஜ்ஜை; சுணை; அபிமானம்; நீர்நிலை; ஊற்றுள்ள இடம்; தினவு.

சூக்கை-முடிக்கை; சூழ்கை; ஆணையிடுகை.

சூகை-யானை; சிகை; சிற்றெறும்பு.

சூடுகை-ஸ்வீகரிக்கை.

சூட்டு-நெற்றி; முகப்பு; மாலை; நெற்றியணி.

சூடகம்-கைகட்டு; சரி (வளை).

சூடி-புக்த்வா; (நுகர்ந்து).

சூடிகை-மயிர்முடி; சுட்டி.

சூதகம்-மாமரம்; [பெரியதிரு. 4. 2. 1.]

சூதம்-மாமரம்; வண்டு; பிறப்பு.

சூதன்-தேர்ப்பாகன்; சூதுகாரன்; சூதையுடையவன்.

சூது-தாமரை; சூரிய காந்தி; சூதாட்டம்; சூதாடு கருவி; உசிதமானது; உபாயம்; உறுவது. [மாலிருஞ்சோலை தொழக் கருதுவதே துணிவது சூதே: திருவாய். 2. 10. 9.]

சூர்-அணங்கு; தெய்வப்பெண்

சூர்ப்பம்-சுளகு; அதாவது முறம்.

சூர்மகள்-வஞ்சப்பெண்.

சூர்வு-சுகிர்வு.

சூரல்-பிரம்பு.

சூரன்-இரவி; தீ; நாய்; சௌர்யம்(சூரத்தன்மை)உடையவன்.

சூல்- கர்ப்பம். "சூலேசூழ்தல் சினை".

சூலப்பெண்-கர்ப்பிணி.

சூலி-சிவன்; காளி; கர்ப்பவதி.

சூலிகை-சூலம். [மாடநெடுமுகட்டின் சூலிகை: பெரிய திரு 8. 3. 3.]

சூழ்ச்சி-விசாரம்; விரகு; க்ருத்ரிமம்; துக்கம்; உபாயம்; வியாபத்தி; ப்ராகாரம்;ஆவரணம்.

சூழ்தல்-ஆராய்தல்; விசாரித்தல்; எண்ணல்; [தொல்லை வேங்கடமாட்டவும் சூழ்கின்றிலர்: திருவிருத். 81.] திரளுதல்.

சூழல்-மணற்குன்று; சுழிக்காற்று; க்ருத்ரிமம்; திரளுதல்; விரகு; வளைக்கை; பர்யந்தம்; ப்ராகாரம்; அவதாரம்.

சூழிகை-கள்.

சூழி-நீர்நிலை; ஆனை முகப்படாம்;கடல்; உச்சி.

சூளி-உச்சி.

சூளிகை-சுட்டி; ஸ்தூபி.

சூளுறவு-ஆணையிடுகை.

சூளுறுதல்-ஆணையிடுதல்.

சூளுறும்-ஆணையிடும்.

சூறன்-மூஞ்சூறு.

சூறுவளி-சுழிக்காற்று.

சூறி-வரிக்கோணி.

சூன்றல்-தோண்டல்.

செக்கம்-மரணம்; கோபம்; சிவப்பு. [ஈடு,1.9.5.] [செக்கஞ்செகவென் றவள்பால்

உயிர் செகவுண்ட பெருமான்: திருவாய். 1. 9. 5.]

செக்கர்-செவ்வானம்; சிவப்பை உடைத்தானது. [செக்கர் மாமுகிலுடுத்து: திருவாசி. 1.]

செக-முடிய. [உயிர் செகவுண்ட பெருமான்: திருவாய். 1. 9. 5.]

செகில்-சிவப்பு.[திருவிருத்.69]

செகுத்தல்-கொல்லுதல்; வெல்லுதல்.

செகுகை-நசிக்கை.

செங்களம்-சிவந்த யுத்த பூமி. [தன் செங்கோலரசு பட்ட செங்களம் பற்றி: திருவிருத். 77.]

செங்கற்சீரைவளைக்கை-ஸந்நியஸிக்கை.

செங்கீரை ஆடுகை - சாய்ந்தாடுகை. [குழந்தை பிறந்த ஐந்தா மாதம் தன் தலையை இங்குமங்கும் அசைத்தாடுகை.]

செங்கொடுகுட்டர் - க்ருஹீதக்ராஹிகள்; (தாங்களறிந்ததற்குமே லெதையுமறியகிலாதவர்கள். விவேகமற்றவர்கள்.) பரிமிதப்ரதர். (அளவுபடுத்தி அளிப்பவர்.) லுப்தர். (உலோபிகள்).

செங்கொடு குட்டை - செவ்வகையாகக் கொடுக்கிற குட்டை நாழி. எட்டுக்குட்டை நாழி செவ்வையாகக் கொடுக்கப்புகின் நாழியரிசியாகாது. பிடித்ததையே பிடித்துக் கொண்டிருக்கிற பேர்வழிகள். ஆகையாலே பரிமிதப்ரதர். [துரும்ப நறுக்கலாகாது என்றிருக்கிற செங்கொடு குட்டைகளுக்குச் சொல்லவோ: ஈடு, 9. 7. 6.]

செட்டி-வைசியன்; வாணிபம் செய்வோன்; முருகன்.

செடி-பாபம்; அசிறு; சவறு; அதாவது சிக்கு.

செண்டன்-தூர்த்தன்; செண்டையை (கொட்டும் வாத்தியம்) உடைத்தானவன்.

செண்டுகோல்-லீலாயஷ்டி;பந்தடிக்குங் கோல். [சுரிகையுந் தெறிவில்லுஞ் செண்டுகோலும்: பெரியாழ். 3.4.3.]

செண்டு-கூர்மை; பூச்செண்டு; பந்து.

*செண்டேறுதல் - சாரிகைபுறப்படுதல்.

செதுக்கு-மந்தி; பூதம்; சேறு; பூவாடுகை; செதுக்குகை.

செதுகு-கூளம்.

செதுகை-பதர்; கூளம்; தீமை.

செதும்பு-சேறுகை.

செந்தமிழ் - ஸ்வாப்த்த ப்ரகாசகமானதமிழ். (பொருளைச் செம்மையாக அளிக்குந் தமிழ்).

செந்தலிப்பு - சந்தோஷம்; செழிப்பு. [அவனுடைய செந்தலிப் பேயிறே அத்தேசத்திற்குஞ் செந்தலிப்பு: திருநெடுந். 12. வியா.]

செந்து-அனு; நிரயம்; ஒலி.
செந்தெங்கு-செவ்விளநீர்.
செப்பம்-அரணிமை; செவ்வை; [செப்பமுடையாய்: திருப்பா. 20.] நடுநிலைமை.
செப்பு-வயல்; குற்றம்; அழகு; சொல்; கரண்டகம்; உத்தரம்; (வினாவிற்கு விடை) பாத்திரம்.
செப்பேடு-தாம்பர சாசனம்; பாரபகம்.
செம்-நிறம்; கூறுபாடு; ப்ரகாரம்.
செம்பளிக்கை - கண்மூடுகை; [அஞ்சிக் கண்ணைச் செம்பளித்தவாறே: ஈடு, 5.5.3.]
செம்பாடு - செம்மண் தரை. [செம்பாட்டுத் தரையிலே மலையருவிகள் விழுந்தாற் போலே; பெருமாள். 10. 2. வியா].
செம்பாதி-சமபாகம்.
செம்பால்-சிவப்பு; ரக்தம்;ஸமபாகம்.
செம்பாலே- செம்புநாழியாலே. [ஸாமந்தர்க்குப் புறம்பே நாடுகள் கனக்கவுண்டாகிலும் மாளிகைக்குள்ளே செம்பாலேநாழி யரிசியைத் தங்களுக்கு வரிசையாக நினைத்திருப்பர் களிறே; ஈடு, 1.3.9.]
செம்பியங்கோச் செங்கணான்-ஓரரசன். [செம்பியங்கோச் செங்கணான் சேர்ந்த கோயில்: பெரிய திரு. 6. 6. 1. இவன் ஈசற்கு எழில்மாடம் எழுபது செய்தவன்.]
செம்பு-தாம்பரம்; பொன்; நாவல்.
செம்புலம் - பாலைநிலம்; சுடுகாடு; போர்க்களம்.
செம்மாது-பிராட்டி. [பூமேய செம்மாதை நின்மார்விற் சேர்வித்த: பெரிய திருவந். 7.]
செம்மாப்பு-செவ்வை.
செம்முகை - தாளிடுகை; பந்திக்கை. [வாசல் செம்மினால் வாயும் செம்மவேணுமோ: திருப்பா. 10. வியா.]
செம்மை-சிவப்பு; அழகு; செவ்வை; ருஜுத்வம்; (நேர்மை), பெருமை; சுத்தம்.
செய்கால்-விளைநிலம். [தரிசு கிடந்த தரையைச் செய்காலாம்படி திருத்துவாரைப் போலே: ஈடு. 2. 7. 4.]
செய்ய.அழகிய; சிவந்த.
செய்யாள்-பிராட்டி.
செய்யுட்பாடு - சந்தஸ்பூர்ணம்; (அசைவுநிலை).
செய்யுளின்பம்-அவ்யயம்.
செயலறுதி-செயல் மாட்சி.
செயலறுதியாலே - காரியம் வேறு இல்லாமையாலே.
செயிர்-சினம்; குற்றம்.
செரு-யுத்தம்; பலம்.
செருக்கு - கர்வம்; கறுவுதல்; யௌவன கர்வம்.
செருந்தி-சுரபுன்னை.

செருநர்-யுத்தோந்முகர்.

செல்-மேகம்.

செல்லாமை-தரிக்கமாட்டாமை.

செல்லுகை - போகை; குறைகை.

செல்வம்-ஸம்பத்து.

செல-செல; நடத்த.

செலவு - சிறகு; செல்லுகை; போகை.

செவ்வி-காந்தி; அழகு.

செவ்வியது - ருஜுவானது; அழகியது.

செவ்வியனுய் -செவ்வையாய்; ஆர்ஜவ குணயுக்தனுய்.

செவி-காது; கேள்வி.

செவி-ஜபம் செய்.

செவிக்கை-; ஜபிக்கை.

செவிசீப்பாய்ந்து - மிகவுமாதரித்து.

செவிதெரியான்- திருவநந்தாழ்வான்.

செவிப்பறைபறைகை - செவியோடே சொல்லுகை; ஜபிக்கை.

செவியேற்ருலே - செவியாலே கேட்கையாலே.

செவிலி - வளர்ப்புத்தாய்; தோழி.

செழியன்-பாண்டியன்.

செழுமை - செழிப்பு; அழகு; கொழிப்பு,

செற்பு - நன்றி; ஸம்பத்து; முக்தி; ஏற்றம்; அதிசயம்.

செற்றம் - அடங்காத சீற்றம்; த்வேஷம்; அஸூயை; பகைமை.

செற்றல்-கேடு; ஈமுட்டை.

செற்று-யுத்தம் செய்து,

செறி-அடக்கம்.

செறிகை-கிட்டுகை; திடமாகை.

செறிப்பு-செறிவு; சிறுமை.

செறுக்க-பாதிக்க.

செறுகை-நெருக்குகை; தரையைக் காலாலே பிராண்டுகை.

சென்றற்றது - சென்று முடிந்தது.

சென்று - வந்து; குறித்து; கிட்டி, வற்றிப்போய்.

சென்னி-நெற்றி; தலை; அழகு; ச்லாக்யம்.

சென்னியர்-பாணர்; கூத்தர்.

சென்னீர்-உதிரம்; (ரக்தம்.)

சென்னெற்கூழை- செந்நெற்பயிர்.

சேட்டை-தவ்வை; தவ்வையாவது, ஜ்யேஷ்டாதேவி.

சேடம்-சேஷம்; மிச்சம்.

சேடர்கள்-யுவாக்கள். நெசவுத்தொழில் செய்வோர்; முன்னேர்.

சேடு-இளமை; நன்மை; பெருமை, திரட்சி.

சேடுவாய்-சர்ந்தரமாய்; நெருக்கமாய்.

சேதனர்-சேதனர்; அறிவுடையவர்.

சேது-திருவணை.

[சேதுபந்தனத்திற்கு ஸ்ரீ நளன் வார்த்தை: சேது பந்தனத்திற்கு நான் சக்தன்; அப்படியே விநியோகங் கொண்டருள வேண்டும் என்றது. அதவா, ஸ்ரீவாநரவீரர்கள் மலையைக் கொண்டு கடலையணை செய்கை ஸம்பாவிதமோ? என்ன, பெருமான் காடேற எழுந்தருளுகையும், பிராட்டியை ரக்ஷஸ்ஸு அபஹரிக்கப் பெருமாள் சோகிக்கையும் ஸம்பாவிதமோ? ஏதாகிலும் வருமவைதப்பாதிறே என்றது].

**சேமம்**-சேமத்தளிகை; தெளிகை; சோறு; க்ஷேமம்.

**சேமஞ்சாற்றி**-சேமஞ் செய்து; சலனமன்றிக்கே பண்ணி.

**சேய்** - உயர்ச்சி: அதாவது ஸ்வாபதேசத்தில் ஆத்மபூஷணம்; பிள்ளை; ருத்திரன்; க்ஷேத்ரபாலகன்; ஒக்கம்.

**சேய்த்து**-தூரியது; தூரம்.

**சேயம்**-நடுநிலை; வீதி; நெஞ்சம்; செப்பு.

**சேயரி**-செவ்வரி; குற்றம்.

**சேயன்**-தூரஸ்த்தன்.

**சேயிழையீர்**-ஆர்த்திப் பிரகாசமான ஆத்ம பூஷணங்களை உடையவர்களே.

**சேயுரியார்**-பரணர்.

**சேர்**-சேர்கை; நெற்குதிர்; நிறுத்தலளவை.

**சேர்க்கை**-ஒன்று சேருகை; சேர்க்கையாவது ஸம்ஹாரம்.

**சேர்க்கைப் பல்லி** - ஸ்தாலந்தரத்தில் கொடுவந்தபல்லி; தொடர்பல்லி. [இவர்க்காகிலிது சேர்க்கைப் பல்லிபோலேபணியன்றோ? என்றிருக்க வொண்ணாது: ஈடு, 4. 9. 3. "சேர்க்கைப் பல்லி-நிலைப் பல்லி. சேர்க்கைப் பல்லியானது ஒரு இடத்திலே பலகாலும் சொல்லிக்கொண்டிருக்கும். அந்தப் பல்லிபோலே இது பணியன்றோ என்றிருக்க வொண்ணாதென்றார் என்றபடி" என்பது அவ்விடத்திய அரும்பதம்.]

**சேர்ப்பன்**-நெய்தல் நிலத் தலைமகன்: துறைவன் என்றும் கூறுவர்.

**சேர்ப்பால்** - குழம்புப் பால். [சேர்ப்பாலும் கண்ட சர்க்கரையும் போலே: ஈடு, 9. 3. 7.]

**சேரபாண்டியன்** - திருவபிஷேகம். [நம்பெருமாளது திவ்ய ஸிம்மாஸநம் என்பதுநேர். நம்பெருமாள் கோயிலாழ்வார் நின்றும் புறப்பட்டருளி பெரிய திருமண்டபத்திலே சேர பாண்டியனிலே நாய்ச்சியாரோடே கூட இருந்து நினைப்பிட்டதென்றால் தப்பாதாப் போலே: திருப்பா. 23. ஆறு-வியா.]

**சேவல்** - நாயகன்; ஆண் பறவை, காவல்; சேறு.

சேவலம் - கல்வி; சுவர்க்கம்; செல்வம்.

சேழ்-நெடுமை. [சேழுயர்ந்த மணிமாடம்: பெரியதிரு. 4. 4. 9.]

சேறு-விளை நிலம்.

சொங்கு-கப்பல்.

சொட்டை-ஆயுதம்; (வாள்). நாதமுநிகள் திருவம்சத்தின் பெயர்.

சொப்பட-நன்றாக. [சொப்பட நீராட வேண்டும்: பெரியாழ். 2. 4. 5.]

சொப்பன-நன்றாய்.

சொப்புகை-அடிக்கை.

சொல்லுரும்பர்-மந்திரி.

சொலம்-மது; புகழ்; வார்த்தைகள்; நெல்.

சொற்கம்-முலை; ஸ்வர்க்கம்;

சொற்பம்-சோம்பல்.

சொன்றி-சோறு.

சோணம்-சிவப்பு.

சோணை-விடாதே பெய்யும் மழை; திருவோணம்.

சோத்தம்-அஞ்சலி. [சோத்த நம்பி சுக்கிரீவா: பெரிய திரு. 10. 3.1.]

சோத்தியம் - ஆக்ஷேபம்; சங்கை.

சோதி - திருமேனி; காந்தி; ஸ்வாதி நட்சத்திரம்; சுடர்; அருக்கன்.

சோபர்—தமோகுண நிஷ்டர்.

சோமி-துர்கை.

சோமு-ஸோம யாகம். [தூய நான்மறையாளர் சோமுச் செய்ய: பெரியதிரு, 2.10. 1.]

சோர்ந்து-தளர்ந்து.

சோர்வு-தப்பு; காணுமல்வைத்தல்; களவு;பிரிவு;அவிட்சி; அவசரம்.

சோரன்-திருடன்.

சோருகை-அபஹரிக்கை.

சோலையைப் பரர்ப்பாரைப் போலே - ஸமுதாயேநபார்ப்பாரைப் போலே. (நன்கு ஒவ்வொன்றுய்க் கவனியாமல் மொத்தமாய் மேலெழப் பார்ப்பாரைப் போலே.) அந்ய பரதாவா [கவனிப்பதைவிட்டு மற்றென்றைக் கவனித்தலுமாம்.]

சோளேந்திர சிங்கன் - பெரிய பெருமாள்; பட்டத்தானைக்குப் பெயர்.

சோற்று-சௌரியம்.

சோறுதல்-சுவறுதல்; கொட்டிப் போகை; சங்கோசம்; முடிதல்.

தக்கன்-தக்ஷன்.

தக்கிலமே-தகோமே; ஆகாமோ.

தக்கை-பல்வகைப் பறை.

தக்கோர்-ஸம்சாரிகள்; ஸத்ருசர் (தகுதியுடையோர்.)

தக்கோர்மை - நன்மை; பெரியதனம்; குணேத்கர்ஷம்; தேபோக்தி.

தகண்—தழும்பு.

தகணேறுகை- தழும்பேறுகை.

தகர்-ஆடு; மேடு; சிதறினது; பூமி.

தகர்த்துகை - நெருங்குகை; நம்பிக்கை; நோவுபடுத்துகை.

த க ரு கை - நொறுங்குகை; நெரிந்து போகை.

தகவு-கிருபை; தகுதி;தெளிவு; பொறை;ஸ்வபாவம்; ப்ரகாரம்; ஞானம்.

தகுதி-பொறை; சத்ருசம்; பொருத்தம்.

தகை-இயல்வு; ஸ்வபாவம்; ஞானம்; விஷயம்; அளவு; அழகு.

தகைத்தல்-செறிதல்.

தங்குகை-இருக்கை.

தட்டி-கொட்டம்; சிறை; [தட்டியிலிருந்தவன் முடிசூடிஞற் போலே: ஈடு, 5.7.1.]

தட்டு - இதழ். [தட்டலர்த்த பொன்னேயலர்கோங்கின்: பெரியதிரு.7.3.6]முட்பாடு; தேர்நடு; தட்டுகை; அடி; தடை; குற்றம்; சிறுசெய்.

தட்டுகை - கொட்டுகை; மோதுகை; தாக்குகை.

தட்டுப்படுகை- தடைப்படுகை; குறைப்படுகை.

தட்டுப்பாய - தன் கப்பிலேயிருந்து எதிர்கப்பிலேபாய.

தட்டொளி-கண்ணுடி. [உக்கமுந் தட்டொளியுந் தந்து; திருப்பா. 20.]

தட்பம்-குளிர்ச்சி; கட்டளைப்பாடு.

தடம்-பெருமை; சுற்றுடமை; வளைவு; தடாகம்; சுவடு; கரை; விஸ்தாரம்; கயம்; குளம்; நளியுட் கரை; தடம்.

தடவந்து-தடவி. [மந்தமாருதம் தடவந்து வலிசெய்வது: பெரிய திரு. 8. 5. 1.]

தடவாரி-பல்வகைப் பறை.

தடவு-மலை; குளம்; பெருகுந்தளம்.

தடஸ்தம்-பஹிரங்கம். [நேர் ஸம்பந்தமற்றது.]

தடா-மிடா. [நூறு தடா நிறைந்த வக்கார வடிசில் : நாய்ச்சி. 9. 6.]

*தடாவுதல்-முறிதல். [தடாவிய வம்பும்: திருவிருத். 6.]

தடி-உலக்கை; வில்; தண்டு; படை; மின்; குழாய்; வரம்பு.

தடிக்கூறு-கோலாலே அளந்து பாகமாகப் பிரிக்கை.

தடிக்கை-பூரிக்கை; கனக்கை.

தடிகை-ஹிம்ஸிக்கை; வெட்டுகை; அழிக்கை.

தடிந்து-ஹிம்ஸித்து.

தடியர்-கதாபாணிகள்.

தடுகுட்டம் - கால் தரையில் பாவா தாடும் கூத்து. [தடுகுட்டமாய்ப் பறவாதார்; திருவாய். 3. 5. 3.]

தடுமாற்றம்-அலைச்சல்; ப்ரதிஹதி.

தடுளுப்பு-தடுமாற்றம்.

தடை-கவசம்; தடுத்தல்; மனையாள்.

தடையோடே முடிந்தேனே-ராவணனைத் தடுக்கப்போய் முடிந்தேனே.

**தண்**-குளிர்ச்சி; அருள்; தண்ணிமை; தாழ்கை.

**தண்டகை**-தயைக்காரன்; தண்டகாரணியம்.

**தண்டம்** - ஊன்றுகோல்; குடைக்காம்பு.

**தண்டல்** - சேனை; ஆயுத பேதம்.

**தண்டாமை**-நீங்காமை.

**தண்டு**-சிவிகை; தண்டாயம்; வீணை; தண்டம்.

**தண்டை** - காவல்; கால் தண்டை.

**தண்ணடை**-உடுக்கை; நாடு; மருதநிலத்தூர்; காடு; பச்சிலை.

**தண்ணது** - சப்பரை; நிகிருஷ்டம்.

**தண்ணம்**-ஒருகட்பறை; மழு; குளிர்ச்சி; காடு.

**தண்ணியன்**-நிகிருஷ்ட்டன்.

**தண்ணீர்**-ஜீவனம்.

**தண்ணீர்த் துரும்பு**-ப்ரதிஹதி; தடங்கல்.

**தண்ணீர்த்துரும்பற** - அப்ரதிஹதியாக; தடங்கலின்றி.

**தண்ணுமை**-சிறுபறை.

**தண்மை**-தட்பம்; அமைதி; தாழ்ச்சி; மான்கன்று; கட்டளைப்பாடு.

**தணத்தல்**-பிரித்தல்; பிரிதல்.

**தணம்**-பரண்.

**தணிக்கை** - சமிபிக்கை; குறைக்கை.

**தணிகை**-சமிகை; குறைகை; ஒழிகை. [தணியும் பொழுதின்றி நீரணங்காடுதிர்: திருவாய். 4.6.6.]

**தணிசு**-மலிவு.

**தணிவின்மை** - ஓய்வில்லாதேமை.

**தணிவிலர்**-பூர்த்தி இல்லாதவர்.

**தணிவு**-தணிகை; தணிகையாவது போதுமென்றிருக்கை; பூர்த்தி; ஓய்வு;தாழ்வு; பணிவு.

**தத்து**-ஆபத்து.

**தத்துகை** - கஷ்ட்டப்படுகை ; ததும்புகை.

**தத்துவம்**-ஸத்யம்; சொரூபம். [தத்துவமன்று தகவு: திருப்பா. 19.]

**தத்துவன்**-மெய்யன்; ஸத்தாஹேதுவானவன்(ஆத்மா). [என் தத்துவனை வரக்கூகிற்றியாகில்; நாய்ச்சி. 5. 6.]

**தத்துறுகை**-கிட்டுகை;தட்டுப்படுகை. [சொல்லாய் யானுன்னைத் தத்துறுமாறே: பெரியதிரு. 5. 1. 6.]

**தத்தை**-கிளி; மூத்த ஸஹோதரி.

*** ததர்கை**-நெரிகை[ஊணுடை மல்லர் ததர்ந்தவொலி: திருவாய். 7. 4. 5.]

***ததர்க்கை**-வருத்துகை. [என்னைத் ததர்த்தாதே நீயுங் குயிலே: நாய்ச்சி. 5. 10.]

**ததி**-தயிர்.

***ததைத்தல்**-நிறைதல். [தண்டார் ததைக்கின்ற தண்

ணந்துழாய்: திருவிருத். 34.]

தந்தாமது-தங்கள் தங்களுடையது.

தந்து-கால்; (ஸந்ததி), நூல்.

தபதியர்-தச்சர்; சிற்பிகள்.

தபனகூ-தீ; இரவி.

தம்பம்-ஸ்தம்பம்; கவசம்.

தம்மனே-தாய்.

தமர்-தாஸபூதர்; ஞாதிகள்.

தமலி-சட்டுவம்.

தமனகம்-தவனம்; மருக்கொழுந்து. [பச்சைத்தமனகத்தோடு பாதிரிப் பூச்சூட்டவாராய்: பெரியாழ். 2. 7. 3.]

தமனியம்-தபநீயம்; பொன்.

தமியம்- தனிமையுடையோம்.

தமிலம்-மயிர்முடி.

தமிழ்-இனிமை; நீர்மை; தமிழ்மொழி.

தயக்கொள்கை- அதிசயிக்கை.

தயக்ரீவன்-தசக்கீரிவன்; ராவணன்.

தயங்க-விளங்க.

தயங்குகை - ஒளிவிடுகை; அசைகை.

தயலுண்கை-பிணிப்புண்கை; ஆவது கட்டுப்படுகை.

தயித்தியர்-அசுரர்.

தர்ப்பணம்-கண்ணுடி; பிதிருக்கள் முதலியோர்க்குக் கொடுக்கும் நீர்க்கடன்.

தர்மம்-உலகர் வழக்கு; கருமம்; தெய்வம்.

தர்ஜநபர்த்ஸநம்-அதட்டி உறுக்குவது.

தரங்கர்-அலை; கடல்; கலக்கம்.

தரணி-பூமி; மலை; இரவி.

தரம்-பஹுமானம்; வலிமை; ஒப்பு; தாரதம்யம்.

தரளம்-திரட்சி:முத்து; நடுக்கம்.

தரிசு-கரம்பு; சாகுபடியாகாத நிலம்.

தரிஞ்சகம்-அன்றில்.

தரு-மரம்; கற்பகத்தரு.

தருக்கம்-தர்க்கம்; வாதம்.

தருக்கு-விளையாட்டு; கர்வம்; தர்க்கம். [தருக்கினுற் சமண்செய்து: பெரியதிரு. 2. 1. 7.]

தருக்குகை-சுளிக்கை; வருத்துகை. [மேலால் தருக்குமிடம் பாட்டினெடும்; பெரியதிருவந். 22.]

தருகை-கொடுக்கை; வாங்குகை; விளையாடுகை.

தருமம்-தர்மம்.

தருமராசன்-தர்மன்; புத்தன்; அருகன்.

தருவர்-அரக்கர்.

தரை-தரா; பூமி.

தரையோர்-பூமியிலுள்ளோர்.

தல்லி-தாய்.

தலக்கறுக்க-ஸ்வசமாக.

தலக்கறுகை-லஜ்ஜாஞானசூந்யனுகை; உறவறுகை.

தலக்கு-லஜ்ஜை; சம்பந்தம். [தலக்கற்றுச் சொல்லும்படி

யான ஆற்ருமை: ஈடு, 10. 10. ப்ர.]

**தலே**-சிலாக்யம்.

**தலேக்கட்டு**-முடிவு.

**தலேக்கட்டுகை**-நிறைவேறுகை.

**தலேகுலுக்குகை**-அனுமதி பண்ணுகை; ஒப்புக்கொள்ளுகை.

**தலேக்கொள்கை**- அதிசயிக்கை.

**தலேச்சாவி**-எழுச்சி; ஆதிக்யம்.

**தலேச்சாவிவெட்டுகை**-எழுச்சியறுக்கை. [ஈடு, 2. 7. 4.]

**தலேச்சிறக்கை**-மிகவுமதிகமாகை.

[இன்பந் தலேச் சிறப்ப: திருவாய். 10.7.5.]

**தலேச்சீக்கை**-சிரக்கம்பம் செய்தல்.

**தலேத்தலே**-மேன்மேலே.

**தலேதடுமாறுகை** - கிருத்யாகிருத்யவேவக சூந்யஞகை; (பகுத்தறிவறுகை); சிரக்கம்பம் ஏற்படுகை.

**தலேநீர்ப்பாடு**-முதல்மடை.

**தலேப்பாறை**-முன்னே கொட்டுகிற வாத்தியம்.

**தலேப்பாடு**- தலேப்படுகை.

**தலேப்பெய்கை**-கிட்டுகை;[எஞ்ஞான்று தலேப் பெய்வனே; திருவிருத். 83.] மேல் விழுகை; தலேயோடு தலே கூட்டுகை.

**தலேமை**-ச்ரைஷ்ட்யம்; சிறப்பு.

**தலேயடிப்பு**-சிலாக்கியம்.

**தலேயிலக்கை**-தினச்சம்பளம்; உயர்ந்தசம்பளம்; அஞ்சலி.

**தலேவலித்தான்**-பெரியான்.

**தவ்வை**-அஸ்ரீ; ஜ்யேஷ்டை.

**தவ**-மிக.

**தவநாறுகை**-மிகவும் வாஸனே கமழுகை.

**தவம்**-தவசு; புண்யம்; தோத்திரம் (ஸ்தவம்).

**தவர்**-வில்; துளே.

**தவளம்**-வெளுப்பு; அத்தாலே சுத்தி யோகத்தைச் சொல்கிறது.[என்தவளவண்ணர் தகவுகளே: திருவாய் 2.4.5.]

**தவறு**-குற்றம்.

**தவாவினே**-மலே; முத்தி.

**தவிவு**-நாசம்; விச்சேதம்; (இடையறுகை).

**தவிசு** - மெத்தை; ஆஸநம்; தடுக்கு.

**தவுதல்**–கேடு; சார்வு.

**தழல்**-அக்னி.

**தழிகி**-அரைவடம்; அரைநூல் மாலே.

**தழை**-பீலிக்குடை; [தழைகளும் தொங்கலுந் ததும்பியெங்கும். பெரியாழ்.3.4.1.] தொங்கல்; (மாலே), பிச்சம்; குஞ்சரம்; கருமை; பெருமை; சோலேதழைத்தோங்கல்; காபாலம்.

**தழைக்கை**-ஸம்ருத்த மாகை.

**தழையிடுவான்** - திருப்பணி செய்வான். [திருத்துழாய் முதலிய பச்சிலேயிட்டு ஆராதனம் செய்பவன். தழை; பச்சிலே.]

**தள்ளுகை**-தடுமாறுகை. [தள்ளித் தடர் நடையிட்டு. பெரியாழ். 2.10.6.]

தள்ளுதல்-தளும்புதல்.

தணத்தல்-பிரிதல்.

தளப்படி-சஞ்சலதா. மனக் கஷ்டம்.

தளப்பம்-தளும்புல்; அலைச் சல்.

தளம்-முல்லை; மாதுளம்; ஸ்வ பாவம்; உப்பரிகை; நிலம்; தரணி; சாந்து; இலை; தானி; இதழ்; ஸ்தானம்; பொருட்டை; ஆதாரம்; ஆச் சரியம்; நிலம்; கை; ஸ்வ பாவம்.

தளந்தார்தாவளம் - தளர்ச்சி யுடையாருக்கு ஆச்ரயம்.

தளர்வு-பலஹாநி.

தளவம்-முல்லை.

தளாடிக்காரர்-தலையாரி.

தளா-தளர்ச்சி.

தளிபல்-கள்

தளியை-தூறல்; கோவில்.

தளை-விலங்கு; கட்டு; மொட்டு; சிலம்பு.

தற்செய்கை-தன்னைச்செவ்விய ஞக்குகை. தனது செய்கை தனக்கு அநுரூபம் (ஏற்ற) ஆன செய்கை.

தற்செல்வம்-வலிமை.

தற்பறுகை- பசையறுகை; பல ஹாநி.

தற்பு-ஸ்வபாவம்; உண்மை; மிடுக்கு. [தற்பென்னைத் தானறியானேறும்: நான் முகன். 77.]

தற்றெளிகை- தன்னைத் தெளி கை.

தற்றேறல்-தன்னைத் தெளிந்து தானேதேறல்.

தறி-ஆனைகட்டும்தறிக்கால்.

தறுகண்மை-பொருமை; கொடு மை; வீரம்.

தன்பேறு-ஸ்வலாபம்.

தன்-தன்னுடைய.

தன்கப்பு-தனக்குக் கிடைத்த ஆச்ரயம்.

தன்கணக்கர்- தன்னைப்போலே சீரியராய் இருக்குமவர்.

தன்மை-ஸ்வபாவம்; கிருபை.

தனக்கேற-தன்மனத்திற்குச்சரி யாக.

தனஞ்சயன்-காற்று; தீ; அர் ஜுனன்:

தனம்-பொன்.

தனிசு-கடன்.

தனிமாலை-தீக்ஷை.

தனிமுதல் - மூலப்பிரகிருதி; ஸர்வேச்வரன்; ஸங்கல்ப ஞானம்.

தனிவீரம் - அத்விதீயமான வீரம்; நுட்பம்.

தனு-வில்; உடம்பு.

தா-தாவுகை; வலிமை.; குற் றம்.

தாத்தி-ஆத்தி.

தாதி-பரணி: அடிமையாட்டி; செவிலித்தாய்.

தாது-கேஸரம்; பூந்தாது.

தாடு-தலைமை; வலி.

தாபதர்-தவசிகள்; சடை முடி யர்.

தாமம் - ஒளி; இருப்பிடம்; மாலை.

தாமானதன்மை - பும்ஸ்த்வம். [பெண்ணிலைமை எய்திப் பாடாது ஆழ்வார்கள் தமது நிலையிலே பாடி நிற்றல் தாமான தன்மையாம்.]

தாய்தலை-ப்ரதானமாதல்.

தார்-மாலை; கயிறு; சேனை; பூங்கொத்து.

தாரகை-தரை; பூமி; நக்ஷத்திரம்;

தாரா-பக்ஷி விசேஷம். [தாரா வாரும் வயல் சூழ்ந்த; பெரியதிரு. 1. 5. 10.]

தாரி-வழி.

தாரை-தரணி; தரை.

தாலம்-உணவுக் கலம்; பூமி; நாவு; பனை.

தாலவட்டம்-யானையின் செவி; விசிறி.

தாலு-நாக்கு.

தாவளம்-நிவாஸம்; ஸ்தானம்; (தங்குமிடம்)ரக்ஷகம்;ஆச்ரயம்.

தாவு-வலி; வஞ்சனம்; பகை; கேடு; தாண்டுதல்.

தாவுதல் - கடத்தல்; தாண்டுகை.

தாழ்வர்-தாழ்வரை.

தாழல்-இறைஞ்சுகை; குறைதல்; தங்கல்.

தாழி-கடல்; தாழி (வாயகன்ற சட்டி.)

தாழை-தென்னை.

தாள்-கால்; அடித்தண்டு.

*தாள்வரை-மலையடிவாரம்.

தாளம்-சதி; பனை.

தாறு-ரேகை; [நிழலு மடிதாறுமானேம்: பெரிய திருவந். 31.]

தான் - ஸ்வரூப நிருபணம், [தானேயாகி நிறைந்தானே: திருவாய். 10. 7. 1.]

தான் தோன்றி - ஸ்வதந்திரன்:

தான்மதித்தார்க்கு-தான் பூஜ்யராக எண்ணுவாருக்கு.

தானம்; - உத்தரோத்தரம் அதிசயமானஸ்வரம்; ஸ்தாநம்; கொடை; மதம்; நீராட்டம்; ஸ்வர்க்கம்.

தானனமை - தானன தன்மையை அடைந்தமை; நிஜஸ்வபாவத்தைப் பெறுகை.

தானை-சேனை; தூசு; ஆயுதம்.

திக்குப்படுகை - கதியுண்டாகை; (திக்கு-கதி).

திகிரி-திருவாழி.

திகை- திசை; சுணங்கு, (தேமல்).

திகைக்கை - மதிகலங்குகை; பிரமிக்கை; சோர்கை.

திசைக்கை-மோஹிக்கை; [மதிகேடு].

திசைப்பு-திகைக்கை; திகைக்கையாவது: அறிவு கலங்குகை; மோஹிக்கை.

திட்டை - உரல்; மேடு; திண்ணை.

திடம்-த்ருடம்.

*திடர்-திட்டு; [திடர் விளங்கு கரைப் பொன்னி: பெருமாள். 1.11.] திடமானவர்.

[நின்றவெந்திடரே: திருவாய். 1. 1. 6.]

**திடல்**-ருஜீஷம்: (அஸாரமான இடம்.)

**திண்டி**-யானை. பக்ஷணம்.

**திண்ணம்** - திடம்; பலம்; பொய்; மெய்:

**திண்மை**-திண்ணிமை.

**திணுங்குகை**-கட்டியாகை. [நெய்திணுங்கினுப்போலே திருமாலை. 2. வியா.]

**திணிபை** - செறிவு; கொள்ளுகை. [இருளின் கருந்திணிம்பை: திருவிருத். 72.]

**திதலை**-சுணங்கு (தேமல்)

**திமிர்க்கை**-ஸ்தப்ததை; திமிர்த்துப் போகை.

**திமிரம்**-இருள்; நிரயம்.

**திமிலர்**-நெய்தல் நிலத்தவர்.

**திரணபதி**-வாழை.

**திரள்**-சமுதாயம்.

**திரளவும்**-முழுவதும்.

**திரிஇடாமை**-திரும்பாமை.

**திரிஇடுகை** - தன்மேலேறிட்டுக்கொள்கை.

**திரிகை**-மீள்கை; ஏறிடுகை; இடவாய், வலவாய் ஏறுகை; சுழலுகை.

**திரிதந்தாகிலும்**-சஞ்சரியா நிற்கச் செய்தேயும்.

**திரிந்து**-மீண்டு.

**திரியட்டும்**-திரும்பவும்.

**திரியவடிக்கை**- பயத்தாலே தான் விசாரத்தாலேதான், மனதுஅடித்துக்கொள்கை.

**திரியவிடுகை** - தன்னதைப் பிறருக்கு மாற்றுகை. [உன்க்ஷேத்திரத்தை தயுமென்பேரிலே திரிய விட்டுவை; ஈடு, 4. 9. 6.]

**திரியிடுகை**-திரும்பி விடுகை.

**திரிவு**-அந்யதாபாவம்; வேறுபாடு.

**திரு**-ஸ்ரீ; காந்தி; அழகு; சம்பத்து; ஒளிவிடுகை; ஐச்வரியம்; பளபளப்பு.

**திருக்குகம்**-முற்றம்; புடவை.

**திருச்சிற்ருறு** - திருப்பதியில் பாயும் ஒரு ஆறு.

**திருச்செங்குன்றூர்**- ஒருஊரின் பெயர்.

**திருத்தி**-கட்டளைப்பாடு.

**திருத்தன்**-திருப்தியுடையவன்

**திருத்தி**-திருப்தி.

**திருத்து**-திருத்தம்.

**திருநாராயணபுரத்து வெறுப்பு**-தொட்டியம் திருநாராயணபுரத்தில் பிள்ளை திருநின்றவூரரையர் உடம்பை உபேக்ஷித்தமையால் பட்டருக்கு ஏற்பட்ட வெறுப்பு.

**திருப்பள்ளியறை**- ஸ்வாமி இரவிற் பள்ளிக்கு எழுந்தருளுமிடம்.

**திருமலர்**-தாமரை.

**திருமாதிரம்**-ஒருப்ரதேசம்.

**திருமாமகள்** - லக்ஷ்மி; ஐச்வர்யம்.

**திருமுகம்**-ராஜக்ஞை.

**திருமுகம்படியாவது** - எம்பெருமான் தானே அருளிச்செய்தது.

திருமுற்றம்-கோயில்.

திருவடி-ஸ்வாமி.

திருவடிநிலே-பாதுகை.

திருவற்று-பசையற்று.

திருவிளேயாடு சூழல்-திருவநந் தாழ்வான்குகை; பிடிக்கை; [மணல் மேடாகிய விளே யாடு சூழல் கோபியரோடு கூடுமின்பத்தைக் கொடுப் பதுபோல திருமகளோடு கூடுமின்பத்தைத் திருவ நந்தாழ்வான் கொடுப்பது பற்றி இங்ஙனம் உரைத் தனர் போலும்.]

திருவோலக்கத்திற்படியே - திரு வோலக்கத்திலே யிருக்கு மிடம் போதா விட்டால் அஸத்துக்களேத் தள்ளி விடுவார்கள்; அவ்விதமே என்றபடி.

திரை - தொண்டைமான்; அலே; கடல் பூமி; [வென் வேற்றிரையன் வேங்கட நெடுவரை: அகநா: 85. என்றபடி திருவேங்கடத்து ஈடுபாடு கொண்ட தொண் டைமான் சக்கரவர்த்தி யைக் கூறுவதாக உரைக் கப்பட்டது.]

திரையல்-வெற்றிலேச்சுருள்.

திரையுறி-பின்னலுறி.

திரைவயிற்றுப்பேய் - கானல். [இந்தப்ரகரணத்தில் பேய்த் தேரே வந்திருப்பது கொண்டு கானலென ப்ர மித்து உரைக்கப்பட்டுள் ளது. வயிற்றிக்கில்லாமல் ஒட்டிச் சுருக்கு விழுந்த பேய் என்பதே பொரு ளாகும்.]

திவளுகை-விளங்குகை; அசை கை; ஒளிவிடுகை; [திரு வளும் வெண்மதிபோல்: பெரியதிரு. 2. 7. 1.]

திவிளி-பசுங்காய்.

திளே-நெருக்கம்.

திளேக்கை-களிக்கை.

திளேகொண்ட- பெருமை யுடைய.

திறம்-வ்யாபாரம்; கூறுபாடு; சமூஹம்; ஸாமர்த்யம்; உபாயம்; மர்மம்; இடை யாட்டம்.

திறம்பாமல்-பேராமல்.

திறம்புதல்-தவறுதல்.

திறம்பேல்-தப்பாதே.

திறமை-சாமர்த்யம்; செயல்; அழகு.

திறல்-பராபிபவந ஸாமர்த்தி யம்.

திறவியது-ஒன்ருலும் அழியப் படாதது. [திருநின்ற பக்கந் திறவியது.]

திறை-கொள்கை; தனக்காக் குகை.

தின்னலுறுதியேல்- சாப்பிடுகை யிலே யுற்றிருந்தாயாகில்.

தினே-சிறுமை; அல்பம்; திணே.

தீ-தேஜஸ்; தீங்கு; நிரயம்: தீ; நெருப்பு.

தீக்கரை-முருக்கமரம்.

தீத்து-பூஜிப்பித்து.

*தீத்தொழில்-கெட்ட செயல்; அக்நிகார்யம். [பெரியதிரு. 4. 5. 3.]

தீது-புத்தி பூர்வமாகப் பண்ணின பாவம்; பூர்வாகம். (ப்ரபத்தி செய்வதற்கு முன்பு செய்தபாபம்.)

தீப்புப்பூண்டு-நச்சுப்பூண்டு.

தீம்-இனிமை.

தீம்பர்-கீழ்மக்கள்.

தீம்பு-துர்ஜனம்; விஷமம்.

தீர்-தித்திப்பு.

தீர்த்தத்தன்றேதிருமுளைச்சாற்று-தீர்த்தவாரியன்றே த்வஜாரோஹணம்.

தீர்த்தம்-விழா; நீர்; தீர்த்தம்; அருக்கன்; அரசன்.

தீர்த்தம்ப்ரஸாதிக்கை - தீர்த்தம் ப்ரஸாதிக்கையாவது ஸமாப்தி.

தீர்த்தன்-பரிசுத்தன்.

தீராமாற்ருக- பரிஹாரமில்லாத செயலாக. [பெண்களைத் தீராமாற்ருக நெஞ்சாறல் பண்ணும் கிருஷ்ணன்: திருப்பா. 12. வியா.]

தீவாய்-அநலாஸ்யன். நெருப்பு வாயை உடையவன். [தீவாய் நாகணை.]

தீவு - இடைக்குறை; (நீர் சூழ்ந்த திடல்).

துகள்-தூளி; குற்றம்; புழுதி.

துகிர்-பவளக்கொடி; பவளம்.

துகில்-வஸ்த்ரம்; விருதுக் கொடி.

துகைக்கை-துகைக்கை; மாய்க்கை; மதிக்கை.

துங்கம்-உயர்த்தி.

துடக்கு-சம்பந்தம்.

துடர்-தொடர்;ஸம்பந்தம்;சரப்பளி; விலங்கு.

துடர்ச்சி-செறிவு.

துடவை-விளைநிலம்; உழவு மந்தை. [ஆத்தொழுவோடைதுடவையும்: பெரியாழ். 5.1.5.]

துடி-உடுக்கை; வாத்யம்; வலிய; உதடு.

துடிப்பு - நடுக்கம்; பரபரப்பு. [ரக்ஷ்யம் சுருங்கி ரக்ஷகத்வத்துடிப்பே விஞ்சியிருக்கும்: ஈடு, 8.4.10.]

துடியடி-யானைக் கன்று.

துடை-மாலை; ஸந்தர்ப்பம்; ஓரவயவம்.

துடைகொள்ள-அறிய

துண்டம்-முறி; முகம்.

துணர்- பூங்கொத்து;பூந்தாது.

துணரி - பூங்கொத்து.

துணி-துண்டம்; ஆடை.

துணிகை-அத்யவஸிக்கை.

துணிதல்-தெளிதல்.

துணுக்கம்-பயம்.

துணுக்குத்துணுக்கு-விலக்ஷணமாய் இருக்கிற மாணிக்கங் கைப்புகுந்தால் அது ஸுரக்ஷிதமாய் இருக்கச் செய்தேயும் ஒரு இலை அசங்கிலும் என்னவருகிறதோ என்று உத்ப்ரேக்ஷித்துப் பயத்தினலே திடுக்குத்திடுக்கென்கை.

துணுக்கென்று-பயப்பட்டு.

துணை-ஒப்பு.

துணைவன்-மந்திரி; தோழன்.

துத்தி-பாம்பின் படப்பொறி. [இனத்துத்தி யணிபணை மாயிரங்கள்: பெருமாள். 1.1.]

துதம்-ஸ்தோத்திரம்.

துதைத்தல்-நெருக்கல்.

துப்பகம்-நெய்.

துப்பம்-நெய்.

துப்பு-பவள மணி; துணை; அனுபவம்; ஆக்கம்;சோறுணவு; படைக்கலம்;மிடுக்கு ஸாமர்த்தியம்; அறிவு; உத்ஸாஹம்; வேண்டப்பாடு; சுத்தம்; அழகு.

தும்பி-வண்டு; இபம்(யானை).

தும்பிமணி - ச்லாக்கியமான மணி.

துமிதம்-திவலை.

*துமிலம்-பேராரவாரம். [துமிலமெழப்பறைகொட்டி: பெரியாழ். 3.8.3.]

துமுலம்-பெரும் சப்தம்; துடருகை; கிட்டுகை.

துயக்கு-மனத்திரிவு;ஸம்சயம்.

துயர்-துக்கம்; பாபம்.

துயில்-உறக்கம்; வஸ்த்ரம்.

துரக்கை-ஓட்டுகை.

துரங்கம்-குதிரை; மனம்.

துரத்தல்-ஓட்டுதல்.

துரால்-அவசரம்; ருஜிஷம்; (அஸாரம்).

துரிசு-தோஷம்; ஹேயவிஷய ஸ்பரிசம்.

துருதுருக்கை-பரபரக்கை.

துருப்புக்கூடு - தூற்றுப்பொலி. [துருப்புக் கூடாக அவ்வூரையன்றே இவளுகந்தது: ஈடு 6.5.1.]

துரும்பெழுந்தாட - விகாரத்தையடைய.

துரும்பெழுந்தாடுகை-அசேதனமும் எழுந்தாடும்படியான அழகு.

துருவி-துருப்பிடித்து; தேடி.

துருவுகை-ரந்த்ர முண்டாக்குகை; தேடுகை.

துருவை-ஆடு; பார்வதி.

துலக்கு-மினுக்கு, வெளிப்படுத்துகை.

துலுக்க - அசைக்க.

துலை-ஒப்பு; எதிர் நிறுக்கை; சோஷிக்கை.

துலைகொண்டு - சரியாகக் கொண்டு.

துவக்கு-தோல்; ஸங்கம்; வசீகரிக்கை.

துவக்குகை - வசீகரிக்கை; ஆசைப்படும்படிபண்ணுகை.

துவக்குண்கை—ஈடுபடுகை.

துவசம் - த்வஜம்; துணிக்கொடி.

துவர்-பவளம்; சிவப்பு.

துவர்தல்-உவர்தல்;[கண்ணும் வாயுந்துவர்ந்து: திருவாய் 8.5.2.] ஆடுதல்.

துவரி-இலவம்; காவி நிறம். [துவரியாடையர்: பெரிய திரு: 2.1.6.]

துவரிதழ்-யானை.

துவருகை-உலர்ந்து போகை; தேறுகை.

துவலை-மழைத்தூவல்.

துவள்-குற்றம். [துவளில் மாமணிமாடம் : திருவாய். 6.5.1.]

துவறு-சீற்றம்; விரைவு.

துழதி-பாரம்; துக்கம்.

துழாவல்-ஆராய்தல்; தடுமாற்றம்.

துளக்கம்-நடுக்கம்; சங்கோசம்.

துளங்க-மின்ன; விளங்க; நடுங்க.

துளங்குகை- பயப்படுகை; நடுங்குகை.

துளம்-மாதுளம்; பீலிக்காம்பு.

துளும்பு-ரேகை.

துளை-மூங்கில்; சுடர்ச்சி;

துற்றி-உணவுப் பொருள்.

துற்றுகை-புஜிப்பிக்கை.

துற்றுகை-புஜிக்கை.

துறவி-துறக்கை; விடுகை.

துறைவன்-நெய்தல் நிலத்தலைவன்.

துறைச்சுவடி- ஸ்நாநகட்டபுராணம்; தீர்த்த மாகாத்ம்யம்.

துன்பு-துக்கம்.

துன்னம்-தைக்கை.

துன்னு-முதுகு.

துன்னுகை-நெருங்குகை.

துன்னுகை-மின்னுகை.

துன்னு-புறம்.

தூ-தூய்மை.

தூகணன்-தூக்கணங் குருவி.

தூக்கு-தொங்கல்; கனம்; ஆசார்யன்; நிறுத்தல்; தூக்கணங் குருவி.

தூங்கு-தூக்கமாய், தமோ குணத்தைச் சொல்கிறது.

தூசனம்-தூஷணம்.

தூசி-யுத்தம்; எல்லைக் கோல்.

தூசித்தலை-யுத்த முனை.

தூசு-பஞ்சு; முன்னணிப் படை.

தூட்டி-உடை.

தூண்டி-தானே சொல்லுகை.

தூதர்வாயிலிட்டுநீட்டுகை-தூதரோடே சொல்லியனுப்புகை.

தூதி-அன்னத்தின் சிறகு; தூவி.

தூதை-திப்பிச் சோறு சமைக்கிறபானை.

தூம்பு-வேய்;மரக்கால்; முழை; துளை. [தூம்புடைப்பனைக் கை வேழம்: பெரியதிரு. 4.5.1.]

தூய்மை-சுத்தம்; அழுக்கறுதி; மெய்ம்மை.

தூர்த்தர்-தூர்த்தர்; காமுகர்.

தூர்த்தல்-போக்கல்; சுத்தம்; செய்கை.

தூரல்-நிறைகை; துன்பம்.

தூரிகை-தூலிகை; தூலிகை யாவது சித்ரம் எழுதும் கோல்.

தூரிது - தூரத்திலுள்ளது; மனத்திற்கு ஹேய விஷய ஸ்பர்சம்.

தூவு-தூய்மை; பற்றுக்கோடு; தசை; பகை; வேம்பு; புள்ளிறகு.

தூவுகை-தானம் பண்ணுகை.

தூவி-சிறகு.

தூளி-புழுதி; சுண்ணம்; பூந் தாது; குதிரை; ஆர்ப்பு.

தூளிபம்-நல்லாடை; ஈயம்; எழுதிடுகோல்; முரசு; விட்டம்; எருது.

தூற்றுகை-பழிசொல்கை.

தெக்காநெறி - தென்புலத்திற்குப் போகிற வழி. நெறி - வழி. [சலவரைத் தெக்கா நெறியே போக்குவிக்குஞ் செல்வன்: பெரியாழ். 4. 2. 3.]

தெக்கு-வெறுப்பு; கழுகு.

தெகுசெல்-அறிவீனம்.

தெகுடாடுகை-அலமருகை.

தெங்கள்-நிலே.

தெட்டபழம்-பக்குவமான பழம். [பெரியதிரு. 3. 4. 8.]

தெட்டல்-முற்றல்.

தெட்டி-யானை; செட்டி; பெருமை; நெருக்கம்; பக்குவம்.

தெத்திக்கிடக்கை-நெருங்கிக் கிடக்கை.

தெத்துகை-கிட்டுகை.

தெப்பர்-தர்ப்பர்; தர்ப்பராவது சத்ரு.

தெப்பு-தேசல்.

தெய்யில்-சேறு.

தெய்வம்-நறுநாற்றம்; தெய்வம்; [எட்டுவித மணங்களிலொன்று.]

தெரி-தெரிகை; விசதம்.

தெரிகை-தோன்றுகை; காண்கை; ஆராய்கை.

தெரிசி-குதிரை.

தெரிசொல்-சத்தியம்.

தெரிதல்-விவேகித்தல்;ஆராய்தல்.

தெரிமா-ஸிம்ஹம்.

தெரிமால்-சுழத்தி.

தெரியல்-மாலே.

தெரியுறுதல்-ஆராய்தல்.

தெரிவைமார்-ஸ்திரீகள்.

தெரு-வழி.

தெருட்டு-பூர்ணதா.

தேற்றுகை-தெளிவிக்கை.

தெருள்-ஞானம்.

தெருளாமொழி-முக்த ஜல்பிதம்; (மழலைப் பேச்சு). [தெருளா மொழியானைச் சேர்ந்து: 3-ஆம் திருவந். 29.]

தெருளுதல்-தேறுகை.

தெவ்வம்-சத்ரு.

தெவ்வர்-சத்ருக்கள்.

தெவ்வியல்-பூமாலை.

தெவிட்டல்-ஓவுதல்; கான்றல்; அடைத்தல்; நிறைத்தல்.

தெழ்கு-இடைச்சுரிகை. [இடைவிரவிக் கோத்த எழிற்றெள்கிஞேடும்: பெரியாழ். 1.3.2.]

தெழிகுரல்-கம்பீரமான குரல். [தெழிகுரலருவித் திருவேங்கடத்து: திருவாய். 3.3.1.]

தெழித்து-ஆரவாரித்து; கர்வித்து; முழங்கி.

**தெழிப்பு**-கர்வம்; ஆரவாரம்; முழங்கல். [சிலைக்கை வேடர் தெழிப்பருத சிங்க வேள்குன்றமே: பெரியதிரு. 1.7.2.]

**தெள்குகை**-தேங்குகை. [திரை நீர்த்தெள்கி: பெரியதிரு. 3.4.7.]

**தெள்ளி**-யானை; பாகு.

**தெள்ளிமை**-அறிவுடைமை.

**தெள்ளாயார்**-தெளிந்த அறிவுடையவர்கள். [தெள்ளியார் பலர் கைதொழுந் தேவனார்: நாய்ச்சி. 4.1.]

**தெள்ளுதல்**-கொழித்தல்; தெளிவு.

**தெளிப்பு**-தூவுகை; கொழிக்கை சுத்தமாக்குகை.

**தெற்றெனவு**-தெளிவு;வெட்கக்கேடு. [சோற்றை முன்னிருந்து முற்றத்தான் துற்றியதெற்றெனவும்: பெரிய திரு. 141.]

**தெறிக்கை**-தொடுக்கை; சிதறுகை.

**தெறுக்கால்**-தேள்.

**தென்**-அழகு; தெற்கு; வலி.

**தென்தமிழன்**-தென் தேசத் தமிழன்.

**தென்படுகை**-அகப்படுகை; தோற்றுகை.

**தென்புலம்**-யமபுரம்.

**தென்றி**-சிதறி; தெற்கு; தென்றல்.

**தென்னன்**-தெற்கு ராஜா; பாண்டியன்.

**தென்னுரை**-தமிழ்.

**தே**-தேன்.

**தேக்கம்**-பயம்; தடை; தேங்குகை; ஏப்பம். [அக்நி... தன்னிறம் பெற்றுத் தேக்கமிட்டபடி: திருநெடுந் 20. வியா.]

**தேங்க**-விசாரிக்க.

**தேங்குகை**-ஏங்குகை; பயப்படுகை; அலமருகை.

**தேசம்**-தேஜசு.

**தேசி**-நாய்; அழகு; குதிரை.

**தேசிகர்**-ஞாதாக்கள்; நிலவர்; ஆசாரியர்; தேசாந்தரிகள்.

**தேசிகன்**-குரு; தேசாந்தரி; நிலவன்.

**தேசு**-மதிப்பு; தேஜசு.

**தேஜசு**-மதிப்பு.

**தேட்டம்**-அபேக்ஷிதம்; விருப்பம்; ஸம்பாதிக்கை.

**தேநகை**-விவேகிக்கை. (?)

**தேம்**-தேன்; நாற்றம்; தேசம்; தித்திப்பு.

**தேம்பல்**-மெலிவு; குறைவு. [தேம்பலிளந் திங்கள் சிறை விடுத்து: பெரியதிரு. 11. 8. 7.]

**தேம்புகை**-குறைகை.

**தேமல்**-சுணங்கு.

**தேய்வு**-குறைவு; இழிவு; மெலிவு; அழிவு.

**தேய்வை**-சந்தனக் குழம்பு.

**தேயு**-தீ.

**தேர்க்கால்**-வண்டிச் சக்கரம்.

**தேருகை**-தெளிகை; தேடுகை.

**தேவர்**-தீப்யமானராய் இருப்பவர்; விளங்குபவர்.

தேவாரம்-திருவாராதனம். [உம்முடைய தேவாரமோ: ஈடு, 6. 8. 10.]

தேவில்-கோவில். [கருவுடைத் தேவில்களெல்லாம்: திருவாய். 4. 4. 8.]

தேவு-தெய்வம்; தெய்வத் தன்மை. [தேவுந்தன்னையும் பாயாடத்திருத்தி: திருவாய். 2. 7. 4.]

தேவை-கார்யம்; விதி; நிர்ப்பந்தம்; மரியாதை; அடிமைத்தனம்.

தேற்றம்-நிச்சயம்; அழகு.

தேற்றன்-தெள்ளியவன்.

தேற்றன்மை-தெளிவு. [என்னலதிலனென் றன்னதோர் தேற்றன்மைதானே: பெரிய திரு. 10.9.9.]

தேற்றேகாரம்-அவதாரணப் பொருளது; (நிச்சயப் பொருளது.)

தேறல்-தேன்; தெளிவு.

தேருதவண்ணம் - விச்வஸியாதபடி. [மகனைத் தாய் தேருதவண்ணம்: 2-ஆம் திருவந். 29.]

தேறுதல்-விச்வஸித்தல்; தெளிதல்.

தேன்-வண்டு; மது; அழகு; குளிர்ச்சி; ரஸம்.

தேனு-பசு; எருமை; குதிரை.

தையலார்-ஸ்திரீகள்.

தைவருகை-தடவுகை. [தைவந்த தண்தென்றல்: திருவாய். 5.4.8.]

தொக்க-திரண்ட; நெருங்கி; [தொக்கமேகப் பல்குழாங்கள்: திருவாய்.]

தொக்கம்-திரள்; நெருக்கம்.

தொக்கு-தோல்; (த்வக்கு,) பழத்தோல். [தொக்குக் கழிந்த சுளைபோலே: ஈடு, 10.7.5.]

தொகுதி-திரட்சி.

தொகுக்கை-கூட்டுகை; திரட்டுகை.

தொகுகை-சேருகை.

தொகை-நிரூபகம்; (தொகுத்துக் கூறுகை); ஸங்கம்; (கூட்டம்); கணக்கு.

தொங்கல் - திருவபிஷேகத்திற்குமேலே சாத்தும் மாலையும் வளையமும்; மாலை.

தொங்குகை-நாலுகை; தங்குகை. [நாய்க்குடலுக்கு நறுநெய் தொங்காதாப்போலே: திருப்பா. 25. வியா.] ஸ்திரமாயிருக்கை.

தொட்டல்-உண்டல்; கைதீண்டல்; தோண்டல்.

தொடையல்-மாலை; வாசிகை.

தொட்டாரைத்தொடுகை- பரம்பரையாக ஸம்பந்தம்.

தொட்டுவிடக்கடவேன் - சம்பந்தித்து விடக்கடவேன்.

தொட-அடிக்க.

தொடர்-விலங்கு; சங்கிலி; உறவு; வம்சபரம்பரை.

தொடர்ச்சி-செறிவு; ஸம்பந்தம்.

தொடல்-கடல்.

தொடி-வளை.

தொடு - களவு; [தொடுவே செய்திளவாய்ச்சியர் கண்ணினுள்: திருவாய். 1.7.5.] தோண்டப்பட்பட்டது.

தொடுதல்-அடித்தல். [ததிமுகாதிகளை நான் தொட்டுத் தருகிறேன்: ஈடு, 3. 5. ப்ர.]

தொடுதோல்-செருப்பு.

தொடுப்பு-களவு.

தொடுவு-கனவு.

தொடை-தொடர்ச்சி; பூமாலை; கொத்து; ஆக்ஷேபணை.

தொடை கொள்கை - தோன்றுகை.

தொண்டர்-உபாஸகர்; சீர்த் தொண்டர்; தன்னலமும் பார்ப்போர்; மிக்க சீர்த் தொண்டர்;அநந்ய ப்ரயோஜநர்.

தொண்டை-கோவை; கழுத்து; யானைத்தும்பிக்கை.

தொத்தற-சம்பந்தமற.

தொத்து-சம்பந்தம்; பூங்கொத்து; மாலை.

தொய்யில்-பெண்கள் கொங்கை தோள்களிலெழுதும் கோலம்; அழகு; உழவு; மகிழ்வு; துயரம்; ஈர நிலம்; குழை; கிளர்ச்சி.

தொரம்-குற்றம்.

தொல்-பழையது.

தொல்லை-துன்பம்; பழமை; புகழ்.

*தொல்லையார்கள்- முற்காலத்தவர்.

தொலைக்கை-முடிக்கை.

தொலை-மாளுகை; நசிக்கை.

தொலைய-நடுங்க.

தொலைவன்-க்லேசப்படுபவன்.

தொலைவு-நாசம்.

தொழில்-வேலை; ஆர்ப்பரவு; களவு; பெருமை; ப்ரகாரம்; வ்ருத்தி, (ஜீவனம்).

தொழுகை-ப்ரபத்தி; கும்பிடுகை.

தொழுதி-கூட்டம்; துக்கம்; பறவையொலி; திரட்சி.

தொழுத்தை-வெள்ளாட்டி. [தொழுத்தையோம் தனிமையும்: திருவாய். 10.3.4.]

தொழுத்தைமார்-தாசிகள்; அடியாட்டியர்.

தொழுத்தையோம்-அடிச்சியோம்.

தொழுதை-ஆரவாரம்.

தொழுப்பு-ஆரவாரம்.

தொழும்பர்-க்ஷத்ரர்; நீசர்; தாஸபூதர்.

தொழும்பு-அடிமை.

தொழுவனேன்- கிருஷிபண்ணும் ஹேயன். [பயனாகிய தொழுகையை ஸாதநமாகக் கைக்கொள்ளலின் 'ஹேயன்' என்றார்.]

தொழுவு-வலைவு; வணங்குகை; கிருத்ரிமம்.

தொள்ளி-சேறு.

*தொற்றுதல்-தொடுத்தல். [அதன் கழுத்திலே காக்கைப் பொன்னைத் தொற்றி: ஈடு, 3.1.10.]

தொறு-பசு நிரை; இடையர்; தொழு; அடிமை.

தொறுவர்-இடையர்.

**தொறுவை**-பசுவின் குழாம்; அடிமை.

**தொன்மை**-பழமை.

**தொன்மைக்கேடு**-ஸ்வபாவக் கேடு.

தொன்று-பழமை.

**தொன்னீர்**-கடல்.

**தொன்னை**-இலையினுற் செய்த பாத்திரம்; ஹீநன்.

**தொனிக்கை**-ஆர்ப்பாவம்.

**தோக்கை**-முன்தானை. [பெரிய திரு. 4.4.3.]

**தோட்டி**-அங்குசம்; கதவு.

**தோடகம்**-தாமரை.

**தோடி**-ஓரிராகம்.

**தோடு**-புஷ்பம்; இதழ்; கர்ணு பரணம்.

**தோண்டல்**-ஊற்று.

**தோணி**-மரக்கலம்; தெப்பம்; மதிள்; நீர்; ரேவதி; அம்பு.

**தோத வத்தி**-தௌதவஸ்த்ரம்; (தோய்த்து உலர்த்தின வஸ்திரம்). [தோதவத்தி தூமறையோர்: பெரியாழ். 4. 8. 1.]

**தோய்தல்**-ஆராய்தல்; நனைதல்; மூழ்குதல். [வில்லி றுத்து மெல்லியல் தோள் தோய்ந்தாய்: திருநெடுந். 13.]

**தோரணம்**-குரங்கு.

**தோல்**-இலவு; யானை; துருத்தி; தோற்பலகை; வார்த்தை; புகழ்; அழகு; மூங்கில்.

**தோல்வி**-தோற்கை.

**தோழி**-செவிலி; பாங்கி; அரக்கு.

**தோள்**-புயம்; தொளை; கை.

**தோள்தீண்டி**-தொடர்ந்து பற்றுவது.

**தோள்படிகொள்ளுகை**- சுமை எடுக்கிறவன் சுமையைத் தோளிலே படிய வைத்துக் கொள்கை; படிகொள்கை- படிய வைத்துக் கொள்கை. [தோளைப்படியாகக் கொள்ளுகை; அதாவது ஒன்றன்மே லொன்ருக ஏறுகை. கீழ் நின்ற நிலையையமைத்து மேலே தோள்படி கொள்கிருர்:ஈடு, 1. 1. 1.]

**தோள் மாற்றுகை**-சுமையை ஒரு தோளிலிருந்து மற்ருெரு தோளுக்கு மாற்றுகை.

**தோளாமணி** - துளையாதமணி. [தோளா மணிச் சுடரை: பெரியதிரும. 10.11.9.]

**தோளி**-அரக்கு; டோலி; தோளிப்ரதோளியாய் ஒழுங்கைச் சொல்லுகிறது.

**தோற்புரை**-மேலெழ.

**தோற்றத்திலே**-முதலிலே.

**தோற்றம்**-அவதாரம்; அழகு; மிகுதி; வலி; புகழ்; விளக்கம்; ப்ரகாசம்; கானல்.

**தோற்றரவு**-ஆரம்பம்.

**தோற்றல்**-பிறப்பு; தோன்றல்; வலி; தோற்றல்; தோகை; தொங்கல்; வரால்; சுற்ருல்.

**தோற்றி**-முதலாக.

தோறி-சோறு.

தோன்றல்-ராஜா; மூத்தோன்; பிள்ளை; அழகு; ஸ்வாமி; நாயகன்; முல்லை நிலத் தலைவன்.

தோன்றி-செங்காந்தள்; நெல்லி; உதிரம்.

தோன்றிகர்-வணிகர்.

தோன்றுதல்-ப்ரகாசித்தல்.

தோஷம்-குற்றம்.

நக்கரிக்கை-நகருகை.

நக்கல்-நகை: (சிரிப்பு); உண்டல்.

நக்கன்-நக்நன்; (ஆடையிலி); ருத்ரன்; அருகன்; நரி.

நக்குண்டார் நாவெழார்-நக்கு நக்கையாய், அற்பமாய். அற்பன் ஒருவனுடைய கையிலேவாங்கியுண்டவர், நாவெழார் - ஒன்றுஞ் சொல்லமாட்டார்.

நகடு-வியாதி;சோபை;தேசல்; பேகணிப்பு; அதாவது வைவர்ண்யம்: நிறவேறுபாடு. [மண்தின்னு வந்த நகடு போலன்றிறே: ஈடு, 6.2.ப்ர.]

நகம்-மலை; மரம்; உகிர்.

நகல்-சிரிப்பு. மகிழ்ச்சி; பரிஹாஸம்.

நகில்-முலை.

நகுகை-நப்பளிக்கை;சிரிக்கை.

நகுதல்-சிரித்தல்; ஒழிதல்.

நகை-தந்தபந்தி;(பல்வரிசை); நகை; சிரிப்பு; ஒளி; ஆலத்தி; இடைச்சி.

நங்கு-பரிஹாஸம்.

நங்குமம்-சீனிக் கலப்பை. (?)

நங்கை-பூர்ணை (பெண்களிற் சிறந்தவள்.)

நச்சு-நஞ்சு.

நச்சுப் பூண்டு - நச்சான பூண்டு.

நச்சுவனை - நஞ்சையுடைத் தானவனை.

நச்சுவார்-ஆசைப்படுவார்.

நசை-ஆசை.

நட்டபாஷை-பண்விசேஷம்.

நட்டம்-நடு.

நட்பாக-ஸ்வபாவமாக.

நட்பு-ஸ்நேஹம்.

நடம்-நடனம்; கூத்து.

நடமாட்டம்-கூத்தாட்டம்.

நடலை - நுடக்கம்; வஞ்சனை; பொய்; நோய்; கூத்தாடுகை; துக்கம்.

நடவை-வழி.

*நடாவுதல்-செலுத்துதல்.[இருளார் வினைகெடச் செங்கோனடவுதிர்; திருவிருத். 33.]

நடு-மருங்கு; மத்தியம்.

நடுதல்-ஸ்தாபித்தல்.

நடுவிற்பெருங்குடி- பாகவதாள்.

நடை-சந்தஸ்; ஸ்வபாவம்; கூத்து; ஒழுக்கம்;செல்வம்; வழி நடக்கை; பரிக்கை; நடத்துணை.

நடைகொள்கை- அவ்யாபாரம்; (செய்வதைவிட்டுவிடுகை.)

நடைச்சக்கிரவத்து-நடத்தைக்கு விருதாதுகை.

நண்ணுகை-கிட்டுகை.

**நண்ணுதல்**-அணைதல்.

**நணுங்குகை** - மதுரமாகப் பாடுகை; நெருங்கிக் கலக்கை.

**நதி**-ஆறு; வணக்கம்.

**நந்தர்**-இடையர்.

**நந்தல்**-ஆக்கம்; கேடு.

**நந்தனம்**-சங்கு.

**நந்தி**-சிவன்; விருஷபம்.

**நந்து**-நத்தை; சங்கம்.

***நந்துதல்**-கெடுதல்; அவிதல். [நந்தா விளக்கே: பெரிய திரு. 3. 8. 1.]

**நந்தை**-கபிலைப்பசு; பிரதமை; ஷஷ்டி; ஏகாதசி திதிகள்.

**நப்பிளிக்கை**--சிரிக்கை.

**நம்**-வணக்கம்.

**நம்பி**-பூர்ணன்; மிடுக்கு உடையவன்.

**நம்புதல்** - விஸ்வசித்தல்; ஆசைப்படல். [நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்: கண்ணினுண். 5.]

**நம்மன்**-பூதங்கள். [நம்மன் போல வீழ்த்தமுக்கும் நாட்டுளபாவமெலாம்: பெரியாழ். 5.4.3.]

**நமன்று**-ஸேவித்து. [வானவர் வானவர் கோனோடும் நமன்றெழுந் திருவேங்கடம்: திருவாய். 3. 3. 7.]

**நமஸ்க்காரமாமித்தனை**-அவத்யமாமித்தனை;(குற்றம்). [இது இழிவுக் குறிப்பு; பிராட்டியைப் பிரிந்து பெருமாள் துன்புற்றிருந்தால் அவனது ப்ரணயித்வத்துக்கு (காதலுடைமைக்கு) நமஸ்காரமாமத்தனை யென்றால் அத்தகைய ப்ரணயித்வம் குணமன்று; குற்றமே யெனக் குறிக்குமன்றோ?.]

**நமுக**-உருக; குழைய. [இணைமுலை நமுக: திருவாய். 9. 9. 3.]

**நமுகுகை** - உருகுகை; குழைகை.

**நமைகை**-கிரகிக்கை.

**நமை**-ஒளி; தினவு.

***நமைத்தல்**-தினவெடுத்தல்.

**நமைப்பு**-தினவு.

**நயக்கை**-ஆசைப்படுகை.

**நயம்**-சப்தாதி விஷயம்; இன்பம்; நியாயம்; நன்றி; விருப்பம்; ஆதரம்.

**நயவேன்**-ஆசைப்படேன். [நயவேன் பிறர் பொருளை: 1-ஆம் திருவந். 64.]

**நரகம்**-ஸம்ஸாரம்; [நந்தா நரகத்தழுந்தாவகை: பெரிய திரு. 11.8.9.] யமன் தண்டல்; அகலுகை. [எம்பெருமானை யநுபவிப்பதற்குத் தமக்குத்தகுதியில்லை யென அயோக்யதாநு ஸந்தானம் செய்து அகலுகையை "போய்ப் போய் வெந்நரகிற் பூவியேல்" (பெரிய திருவந். 40.) எனக் கொடிய நரகமாக நம்மாழ்வார் அருளிச் செய்திருப்பது கொண்டு நரகம் என்பதற்கு அகலுகை பொருளாகக் கூறப்பட்டது.]

நரம்பு-தந்திரி; நாடி. (வீணை முதலியவற்றின் தந்திக் கம்பி.)

நரமேதம்-யுத்தம்.

நரலை-கடல்.

நரை-வெள்ளை மயிர்; ஜரை; (மூப்பு).

நரைதிரைமாறி-யௌவனத்தையடைந்து.

நல்கல்-கொடுத்தல்; படைத்தல். [நல்கித்தான் காத்தளிக்கும்: திருவாய். 1. 4. 5.]

நல்குதிரோ-இறுமாந்திருப்பதாகச் சொன்னபடி. [ஒரு வாய்ச்சொல் நன்னீல மகன்றில்காள் நல்குதிரோ நல்கீரோ: திருவாய். 1.4.4.] [இங்கு நீலமகன்றில்கள் தலைவனை கண்ணனோடே உருவத்தால் மாத்திரமின்றிச் செயலாலும் ஒத்து இறுமாந்து மறுத்துவிட்டது போல நல்குதிரோ நல்கீரோ எனக் கேட்ட நயம் தெரிவித்தபடி.]

நல்வினை-ஸுக்ருதம்.

நலங்குகை-முசுங்குகை.

நலம்-பக்தி; யோக்யதை; ஸ்நேஹம்; குணம்; ப்ராணன்; அழகு; பூர்த்தி.

நலிவு-நாசம்; துன்பம்.

நவம்-கூற்று; புதுமை; பூமி; பாம்பு; பழமை; கேண்மை; தொண்டு; கார்காலம்.

நவியம்-கோடாலி; மழு; புதுமை.

நவிலுகை-பரிசயம் பண்ணுகை; சொல்லுகை; நண்ணுகை; வளர்க்கை; பாடுகை. [திருவிருத். 50.]

நவின்று-சொல்லி.

நவை-குற்றம்; துக்கம்.

நள்-நடுவு; செறிவு; இருள்; நட்புக்கொள்ளல்; சப்தானுகாரம்.

நள்ளி-பெண்ணண்டு.

நள்ளிருள்- நடுவான இருள்; சப்தானுகாரம்.

நள்ளு-செறிவு.

நள்ளுகை-கிட்டுகை;செறிகை.

நள்ளேன்-கிட்டேன்.

நள்ளை-செறிவு.

நளம்-அகில்; சிங்கம்.

நளிர்-குளிர்; வெறுப்பு; செறிவு; பெருமை;குளிர்ச்சி; நடுக்கம்.

நற்குறை-ஒத்தார் இல்லாமை.

நற்கேடு-ஸ்வபாவக்கேடு; நன்மையினாலாயகேடு; வெள்ளக் கேடு போன்றவை.

நறவு- பொல்லாங்குகள்; போக்யதை; தேன்.

நறு-வாணியம்;அவிவிவேகம்; வட்டானித்தனம்;தைரியம்; க்ஷுத்ரதை.

நறுமுறுகை-பொருமை; சப்தானுகாரம்; ஒலிக்குறிப்பு.

நறுநாற்றம்-ஸுகந்தம்.

நறை-தேன்.

நன்கு-மிகுதி.

நன்பகல்-உச்சிக் காலம்.

நன்பு-நன்மை; செவ்வையாக. [நன்புருகி ஞானச் சுடர் விளக்கேற்றினேன்: 2-ஆம் திருவந். 1.]

நன்மாடக்கூட்டம் - வித்வான்கள் திரளும் தேசம்.

நன்மை-யோக்யதை; நலம்; சீர்மை.

நன்னே-உபகாரம்.

நனம்-மிகுதி.

நனவு-தெளிவு; இயலுகை; நடத்துகை;ஞாநம்;ஆத்மா.

நனி-மிகுதி; செறிவு; பெருமை.

நனை-மது; கள்; பூமொட்டு.

நா-நாக்கு.

நாக்கு நீளுதல்- அளவு கடந்து பேசுதல்;அதிகமாய்விரும்புதல். [நாக்கு நீள்வன் ஞானமில்லை. திருவாய். 4. 7. 6.]

நாக்குவளைக்கை-தூஷிக்கை.

நாகப்பூ-நாக கேசரம்.

நாகம்-ஸ்வர்க்கம்; ஆகாசம்; அனந்தன்; நாகவிருக்ஷம்; சுரபுன்னை.

நாகரிகர்-நாகரிக முள்ளவர்; விதக்த்தர்; சாமர்த்திய முள்ளவர்.

நாசை-ஆசார்யன்.

நாஞ்சில்-கலப்பை.

நாட்டம்-வாள்; கண்; ஆடல்; திருஷ்டி.

நாட்டுதல்-ஸ்தாபித்தல்.

நாட்பூ-அப்போதலர்ந்தபூ.

நாட-ஆச்ரயிக்க.

நாடல்-தேடல்.

நாடோடி-நாட்டிலே உண்டர் யிருப்பது.

நாண்-அபிமானித் திருக்கை; இல்லாதது சொல்கை; குற்றம்; சாவடி.

நாண்மை-குற்றம்; இல்லாததைச் சொல்கை.

நாணம்-லஜ்ஜை.

நாணி-துர்கை.

நாணுகை-லஜ்ஜிக்கை.

நாத்தி-நாத்தனார்.

நாப்பிடிகொண்ட-கவ்வின.

நாம-ப்ரஸித்தி; பெருமை. [இது வட சொல்.]

நாமகள்-சரஸ்வதி.

நாமங்கை-சரஸ்வதி.

நாமம்-பெருமை; நாமம்.

நாயகப்பத்தி-நடுப்பத்தி.

நாயகம்-நடு; நாயக்கல்.

நாயடியிட்டாப்போலே - மிருதுவாக.

நாயன்-ஸ்வாமி; பர்த்தா.

நாயிறுபாடு - அஸ்தமன வேளை; உதயவேளை.[ஈடு, 6. 7. 3.]

நாராயணகோவலர்-யாதவர்கள்.

நாலத்தடம் - நாலாய்ச் சுற்றுடைத்தாய் இருக்குமிடம்.

நாலவம்-பேரெண்.

நாலி-முத்து; விலங்கின் நடுவிற் சங்கிலி; மடை.

நாலிரண்டுபண்ணே- நாலிரண்டு பேரை; நாலிரண்டு ப்ரகாரம்.

நாவல்-நாவல்; அறை என ஜெயித்தவன் கூறும் சொல்.

நாவலர்கள்-வாக்மிகள்; வித்வாம்சர்.

நாவி-ஜபாதி கர்மம்.

நாழ்-மேணுணிப்பு, குற்றம், இல்லாததைச் சொல்லுகை; அபிமானம்.

நாழல்-நுலிநீ; மாதவி; வ்ருக்ஷ விசேஷம்;

நாள்-தூய்மை; நக்ஷத்திரம்; ஆயுசு.

நாளம்-தண்டு.

நாளி-நாய்; கள்.

நான்-அபிமானம்.

நான்று-நாள்

நானம்-நறுநாற்றம்; மஞ்சள்; நாவி; பரிமளம்; ஞானம்; பிச்சி; கருமுகி;

நானகம்-குதிரை.

நானமர்-நாவி.

நிக்ருதி-வஞ்சனை; தோற்றரவு.

நிகர்-ஒப்பு.

நிகழ்தல்-வர்த்தித்தல்.

நிச்சல்-நித்தியம்.

நிசாசரர்-இராக்கதர்.

நிசிதம்-கூர்மை.

நிணம்-மாம்சம்.

நியாயம்-ப்ரகாரம்; சத்தியம்.

நிர்வ்ருதி-சுகம்.

நிர்விஷயப்ரமம்- விஷயமில்லாதே இருக்க பிரமிக்கை. சுக்தியிலே ரஜத புத்திப் பண்ணுகை; நிரதிஷ்டான ப்ரமம்: நிராலம்பமான ப்ரமம்.

நிரந்வய விநாசம் - சந்தான நாசம்.

நிரம்பா மென்சொல் - மழலைச் சொல்.

நிராச்சிரயம்-நிராலம்பம்.

நிருமித்தல்-நிருபித்தல்; படைத்தல்.

நிரை-சமூஹம்; காலித்திரள்.

நிலத்தலம்-முத்து.

நிலப்பண்பு - நிலஸ்வபாவம்.

நிலம்-பூமி; தனம்.

நிலமிகுதி-பூஸாரம்.

நிலவர்-ஞாதாக்கள்,

நிலா-சந்திரிகை; கலை.

நிலை-ஸ்வபாவம்; நிஷ்டை.

நிலைக்குத்துகை-இருந்த ஸ்தானத்தை அறிகை.

நிலைக்குத்தி-நிலையைக் குறிப்பது.

நிலைமை-ஸ்திதி; ஸ்வபாவம்.

நிவா-வெள்ளாறு. [நடு நாட்டிற் செல்லுமொரு நதி.]

நிழல்தல் - நிறங்கொடுத்தல்; நடத்துதல்; அழகு செய்தல்.

நிறம்பெறுகை - அதிசயம் பெறுகை.

நிறமெழ-நிறமறிய.

நிறை-பூர்த்தி; நிறைவு; மிகுதி; சீர்மை; அடக்கம்.

நிறைநிறை -நிறைத்ததை நிறைக்கை.

நிறைவு-அடக்கம்; பூர்த்தி.

நின்-உனது.

நினைதல்-கலத்தல்; கருதுதல், கூடுதல்.

நீசர்-நீசர்; நீசராவது அறிவிலோர். [நெடுந்தகையை நினையாதார் நீசர்தாமே: பெரிய திரு. 11.7.8.]

நீத்தல்-கடத்தல்; விடுதல்.

நீத்து- நீக்கிவிட்டு.

நீதி-வழி நடப்பு; ஸ்வபாவம்; ஒழுக்கம்; ஆசாரம்;

நீதிவானம்-பரமபதம்.

நீர்-ஜலம்; நீர்மை; ஸ்வபாவம்.

நீர்க்களிப்பு-சைத்யம்:குளிர்ச்சி

நீர்ச்செழும்பு-பாசிபூக்கை.

நீராம்படி-உருகும்படி.

நீருக்கப்பள்ள நாலியான் - நீர் பாயும்படியான பள்ள மடை.

நீரேறு-தாகம்.

நீற்கண்டன்-நீலகண்டன்.

நீறன்-ருத்ரன்.

நீருடி-ருத்ரன். [நீருடி தான் காணமாட்டாத: நான்முகன், 27.]

நுகர்தல்-பருகல்; உண்டல்; அநுபவித்தல்.

நுடங்க-நுடக்கமாவது மயக்கம்; சங்கோசம்; துவட்சி.

நுண்-உள்புகுகை.

நுண்மை-ஸூக்ஷ்மதா; வைலக்ஷண்யம்.

நுணுக்கம்-ஸூக்ஷ்மம்; வைலக்ஷண்யம்.

நுதல்-நெற்றி.

நுதலி-கருதி; சங்கற்பித்து; உண்டாக்கி.

நுடிநுமிட்டா - உங்கள் உங்களுக்கு இஷ்டமான.

நுவலுதல்-சொல்லுதல்.

நுளம்பு-ஒரு கொசு விசேஷம்.

நுனி-கூர்மை; முனை.

நுனியட்டம்-சாபல்யம்.

நுனியாகை - ஸேநாக்ரவர்த்தியாகை; முன்னணியிலிருப்பவனாகை.

நூல்-சாஸ்த்ரம்; ஸூக்ஷ்மம்; அற்பம். நூலென்று நூலிழையாய், அத்தாலே ஸூக்ஷ்மத்தைச் சொல்லிற்று.

நூல் பிடித்துப் பரிமாறுகை-செவ்வையாக நூற்கப் பண்ணுகை;சங்கற்பிக்கை. [நூல்பிடித்து ஒழுங்குபடுத்துவதுபோலவே நூல் (சாஸ்திரம்) பிடித்து அதிற்கூறிய நெறி (ஸாதநம்) யில் ஒழுங்காகப் பயிலுகை; என்பதே சுவைப்பொருள்: ஈடு, 4.7.9.]

நூற்று - மந்தரித்து.

நெக்கு-நெகிழ்ந்து; சிதிலமாய்.

நெஞ்சறவு-ப்ரணய கோபம்.

நெஞ்சாறல் - துக்கம்; விசாரம்; மநக்லேசம்.

நெஞ்சுளுக்கி-வித்தனாய்; ஈடுபட்டு.

நெடுங்கை நீட்டாக-அதிக தூரமாக.

நெடும்பகை தற்செய்யப்போம்-தன்னைச் சரிப்படுத்திக் கொண்டால் பகை

தானேபோம்; தற்செய்ய- தான் செய்ததைச் செய்ய; தற்செய்ய - தன்னை நல மாகப் பண்ணிக் கொண் டால்; போம்-தானே கெட் டுப்போம்.

நெடுமால்-மிக்க வ்யாகுலன்; சர்வாதிகன்.

நெதி-செல்வம்; முத்து.

நெய்த்தல் - ஸ்நிக்த்தமாகை; பளபளப்பு.

நெய்த்து-பளபளத்து; சாகசக் யமாய்.

நெய்தல்-ஆம்பல்; அல்லி.

நெய்திணுங்கிணுப்போலே- நெய் திக்கிணுப்போலே.

நெய்மை-கூர்மை; மிகுதி.

நெய்யாடல்-எண்ணெய் விளை யாட்டு. [திருவிழாக்களி லாடும் மங்கள ஸ்நாநம்; அந்த ப்ரீதிக்குப் போக்கு விட்டு நெய்யாடல் போற் றிக்கொண்டு திரியுமா போலே: திருப்பா. 4. வியா.]

நெய்யுண்ணி-நெய் உண்ணும் ஸ்வபாவமுள்ளவன்.

நெருத்தம்-கருத்து.

நெருநல்-நேற்று.

நெவு-அடக்கம்.

நெளிகை - வாயு ஸ்புரிக்கை; வணக்கம்; நிர்பந்தம்.

நெற்செய்யப் புற்றேயும்-நெல் பயிரிடப் புல்தேயும்.

நெற்பறிமாறுகை-நெல் தூற் றுகை.

நெற்றி-ப்ரயாஸம். [நெற்றி அற்பமாய்ப் பலம் கனக்கப் பெறுவதிறே: ஈடு. 9.1.4.]

நெற்றிக்கை - முனைத்தூசி; [இவற்றுக்கெல்லாம் நாம் நெற்றிக்கை யன்றோ?: ஈடு, 7. 7. 7.]

நெறி-ஒழுக்கம்; ஸ்வபாவம்; மார்க்கம்.

நெறிமை-சேஷ சேஷி பாவ முறைமை.

நெறியாலே - சேஷித்வ முறை யாலே,

நெறை-மிகுதி; சீ; நேர்.

நென்மெலி-நெல்லிலே வைத் துத் தெறிப்பது; ஒரு படை வீட்டின் பெயர்.

நென்னல்-நேற்று.

நென்நேற்று-முதல்நாள்.

நேசம்-கடைகயிறு.

நேயம் - ஸ்நேஹம்; பக்தி; இனிமை; ஸ்மரணம்.

நேர்-ஒப்பு; நிறைவு; வாய்ப்பு; ஸூக்ஷமம்; பொழுது; மிகுதி; செவ்வை.

நேர்கை-ஸூக்ஷ்மம்.

நேர்கோடு நேர் - ஸாக்ஷாத் நேராக.

நேர்த்தரவு - செல்லுஞ் சீட்டு; விசுத்தி ஓலை.

நேர்தல்-சொல்லல்.

நேர்ந்த-எதிரிட்ட.

நேர் நிற்கை-நேராக நிற்கை; நடத்துகை.

நேர்ப்பம்-குடிமை; நேர்த்தி.

நேர்படுகை- சொல்லப்படுகை.

நேர்பாடு - அயத்தினமாக வந்த லாபம்; அயத்நமாக- முயற்சியின்றி.

நேர்மை-வைலக்ஷண்யம்.

நேரான-யதார்த்தமான.

நேரிய காதல் - ஸூக்ஷ்மமான அன்பு.

நேருகை-தகுதி; மெல்லியது; தொழில்; ஸூக்ஷ்மம்; கிட்டுகை; அத்யவஸிக்கை. ஸம்ஹரிக்கை.

நைகை-சிதிலமாகை.

நையாயிகர்-ஷோடச பதார்த்த வாதிகள். [நியாய சாஸ்திரத்தில் ப்ரமாணங்கள் நான்கும், ப்ரமேயங்கள் பன்னிரண்டுமாகப் பதிஞறு பொருள்கள் விளக்கப் படுதலின் நையாயிகரை ஷோடச பதார்த்த வாதிகள் என்றுர்.]

நைவளம் - கான விசேஷம்; நை-கேட்டவர்களை நையப் பண்ணும், வளம் - அழகுடைய பண்.

[நைவளமொன் ருராயா; திருநெடுந் 22. நட்டபாஷையை நைவள மென்கிறது.]

நொக்கென-சீக்கிரமாக.

[நொக்கெனக் கண்ணன் கழல்கள் நினைமினே; திருவாய். 4. 1. 3.]

நொடிக்கை - அழைக்கை; [நெஞ்சைத் தன் பக்கலிலே நொடித்துக்கொண்டு; ஈடு, 5.3.7.] சொல்கை; அழைக்கிற ஸங்கேதம்.

நொடிதல்-சொல்லல்.

நொய்ப்பம்-ஸூக்ஷ்மம். ஸாமர்த்தியம். [கடைந்த நொய்ப்பம். திருப்பா 30. வியா.]

நொய்ப்பு-நொய்மை; எளிமை.

நொழுந்த-சொருக; கோக்க.

நோக்குகை-ரக்ஷிக்கை; பார்க்கை.

நோய்-வ்யாதி; மனோவ்யாதி.

நோவாது-ஸாதநா நுஷ்டானம் பண்ணுது.

நோன்மை-வலிமை.

நோன்பியர்-அஸதஸ்நவர்; வெளிவருவதற்கு அருகதையற்றமவர்; சமணவிரதிகள்.

நோன்பு-ஸாதநம்; ஸாதநாநுஷ்டானம்; பூர்வ ஜன்மக்ருத ஸுக்ருதம்.

பக்குகை-சொல்லுகை; கூப்பிடுகை.

பகடு-எருது; யானை; வலிமை.

பகர்-ஒளி; காந்தி; கதிர்; விளங்கல்.

பகர்கை-விளங்குகை; ஸஞ்சரிக்கை.

பகருகை-சொல்கை.

பகலிருக்கை-கிருஹாத் பஹி: வீட்டிற்கு வெளியே; ஓலக்கம்; [திருக்கடித்தானத்தைப் பகலிருக்கை மாத்திரமாகக் கொண்டு: ஈடு, 8.6.4.] ஏகாந்தஸ்தலம். [அவருந்தாமுமாகப் பகலிலிருக்கையிலே போயிருந்து: திருவிருத். 99.]

பகலோன்-ஸூர்யன்.

பகவர்-ஸந்நியாஸிகள்; குண நிஷ்டர்.

பகழி-அம்பு.

பகுவாய் - காளவாய்; அகல மானவாய். [பகுவாய்வன் பேய்: பெரிய திரு. 6.5.6.]

பகைத்தொடை-பரபாகம்; பல நிறக் கலப்பு.

பங்கம்-ஒடிகை; பரிபவம்.

பங்களப்படை - அஸாரமான - கூட்டுப்படை. [பங்களப் படைகொண்டு தனிவீரஞ் செய்வாரை: ஈடு. 6. 6. 1.]

பங்களம்-கூளம்.

பங்கன்-நாயகன்; காதி.

பங்கி-மயிர்.

பங்கு - நிர்வாஹம்; பாகம்; நொண்டி.

பச்சைப் பசுந்தேவர்-கலப்பற்ற பரதேவதை.

பச்சை-உபஹாரம்; உலுப்பை.

பச்சைப்படாம் - பச்சையிட்ட புடைவை.

பசலை - வைவர்ண்யம்; நிற வேறுபாடு.

பசனைக் கலம் - பச்சைக்கலம்; சுடாத மட்பாண்டம்; [பச ஊக் கலம் நெரித்தாற் போலே: ஈடு. 7. 4. 5.]

பசிக்கிராஹம்-பசிக்கோபம்.

பசுங்கூட்டு-பசுமையிலே கூட்டினகூட்டு; வாஸனைக் கலவை; நவீன ஸம்யோகம்; (புதுக்கலவை.)

பசுந்துவல்-வைவர்ண்யம்;நிற வேறுபாடு.

பசுமை-செவ்வி; பச்சை.

பசை-பிசின்; பற்று; பக்தி.

பஞ்சசயனம்-அழகு; குளிர்ச்சி; பரிமளம்; மிருதுத்வம்; வெண்மை என்னும் ஐந்து தன்மை கொண்ட படுக்கை.

பஞ்சவன்-பாண்டியன்.

பஞ்சுகொட்டான் வாசல்-ஆர்ய படாள் வாயில்;

பட்டம்-லலாட பூஷணம்.

பட்டன்-கற்றறிந்தவன்; பெரியாழ்வார்.

பட்டினம்-பட்டிணம். [கடற் கரையில் பல தீவு பண்டங்கள் விற்கும் ஊர்.]

பட்டைப் பொதிசோறு-கமுகம் பட்டையிலே கட்டின பொதி. சோறு; பொதிந்த-மறைந்த.

படப்பை-நீர்நிலம்; தோப்பு; கொடிக்கால்.

படர்-தூறு; விஸ்தாரம்.

படர்க்கை - ப்ரதம புருஷன்; மூன்றுமிடம்.

படலிகை-பூங்குடலை.

படவடிக்க - ஸ்வவசமாக்குவதற்காக ஹிம்ஸிக்க.

படாக்கள்-குட்டிக்களர்.

படாகை-உபக்ராமம்.

படி-பூமி; ப்ரகாரம்; முடி; ஸ்வபாவம்; ஒப்பு; அழகு; படிகை; தேஹம்.

படிகால்-தலைமுறை.

படிகை-அவஹாகிக்கை; படிந்திருக்கை.

படிசாத்தினுப்போலே - முத்துப் படி; வஜ்ரப்படி சாற்றினுப் போலே திருவாபரணம் சாத்துகை; அதுபோலே.

படித்தொட்டில் - பண்ணுகிற தொட்டில்.

படிமா-ஸாத்ருச்யம்; உபமாநம்.

படியோடுகை-ஜீவனம் பண்ணும்படி செய்கை.

படிறன்-சோரன்.

படிறு-தீம்பு.

படு-படுகை; பட்டுப் போகை; ஆழம்.

படுக்கை-படுக்கை; சயநிக்கை.

படுக்கைப்பற்று-சீதனம்; அந்தப்புரம்.

படுகாடு-வெட்டி விழுந்த காடு.

படுகாடு கிடக்கை-யுத்த பூமியிலே பட்டு கிடக்கை; அவசமாகக் கிடக்கை. [படுகாடு கிடப்ப: பெரியாழ்: 3. 6. 8.]

படுகுலைப் படுகை - குலையிலேயடி பட்டு விழுகை. [அந்தஸ்வாதந்த்ரியம் பொறுக்க மாட்டாமே படுகுலைப் பட்டாற் போலே: 3. 3. 1.]

படுகொலை - குலைபட்டு விழும்படி கொல்லுகை; கோரக் கொலை.

படுபாடர்-கிருஹித கிராஹிகள் (பிடிவாதக்காரர்); [படுபாடரான உங்களுக்கு நான் எத்தைச் சொல்வது: ஈடு. 5. 6. 4.]

படை - சேனை; ஆயுதம்; கலப்பை; பரிகரம்; வாள்.

படைக்குறி-ஸேநா நிரூபணம்.

படையற்றன-கிட்டின வலியிழந்தன. [விரோதித்த இந்திரியங்களும் உன் பக்கலிலே படையற்றன: ஈடு. 2.7.9.]

படையற-அதீனமாக; யுத்தம் இல்லாது ஒழிய.

படையறுக்கை - யுத்தத்திலேயாயுதமில்லாதேயாக்குகை; வசப்படுத்துகை.

படையாணி - உரையாணி; மச்சம்.

பண் - அழகு; ஸௌம்யம்; (அமைவு); காநம் (இசை); கை சோடு; வாஹநபரிஷ்கிரியை, (வாஹனத்தை யலங்கரிக்கை.) [பெரிய திருவடியைப்பண் செய்து: ஈடு, 6. 2. ப்ர.]

பண்டம்-பதார்த்தம்(பொருள்); தனம். [பண்டமாம்பரம சோதி; திருக்குறுந். 11.]

பண்டி - வயிறு; [பண்டிப் பெரும்பதியையாக்கி: 2-ஆம் திருவந் 14.] வண்டி.

பண்ணுன - நல்ல ப்ரகாரத்திலான.

பண்ணை-திரள்; இடைச்சேரி; தோட்டம்; ப்ரகாரம்; தடவை. [ஈடு. 9. 1. 5.]

பண்பு - ஸ்வபாவம்; கோப்பு; இலவு; அகலம்; சீர்மை; வரிசை.

பண்மை-பெருமை; குளிர்ச்சி.

பணி- ஸ்வபாவம்; கார்யம்; கைங்கர்யம்; ஸர்ப்பம்; ஆபரணம்; ப்ரயாஸம்; [ஈடு, 6. 1. 7.] வேலைப்பாடு.

பணிக் கொட்டில்-பாலை பண்ணுகிற கூடம். [அவர்கள் தங்கின பணிக் கொட்டிலிலே சென்று; ஈடு, 9. 1. 2.]

பணிக் கோயில்-கலங்கள் பண்ணுகிற சாலை.

பணிகை-ஸேவிக்கை.

பணித்தல் செய்யாதவர்கள் - நியமிக்க மாட்டாதவர்கள்.

பணிதல்-தாழ்தல்; தொழுகை.

பணிபடும்- வருத்தமுண்டாம். [போய்ப் புகுருகை சாலப் பணியாயிருக்கும்; ஈடு, 6. 1. 7.]

பணிபோந்திருக்கை - அதுவே கவனமாய் இருக்கை.

பணிமானம்-கைங்கர்யபூர்த்தி; பணி; கைங்கர்யம், மானம்-அளவிடுகை; பூர்த்தி செய்கை.

பணிமொழி - கார்யச்சொல்; நைச்யபாஷணம்; தாழ்ந்த சொற்கள்.

பணியாக-அனுபவ யோக்யமாக. [கலம்பக மாலையைப் பணியாக: ஈடு.]

பணிலம்-சங்கு; [வெற்றிப் பணிலம் வாய்வைத்துகந்தான் பண்டு: 3-ஆம் திருவந். 60.]

பணிவகை-சொன்ன ப்ரகாரம்.

பணிவு-தாழ்வு.

பணை - மூங்கில்; கிளைகள்; வாத்யம். கை; நீர்நிலம்; நீர்; முரசு.

பணையம்-வட்டி: ப்ரணயேநதத்தம்; அன்பளிப்பு; கொதுவை.

பத்தம்-உணவு.

பத்தல்-தொட்டி; குழி.

பத்திரம் - சொட்டை, ஓராபரணம்; [வெண்கலப் பத்திரங்கட்டி விளையாடி; பெரியாழ். 1. 9. 5.] ஓலை.

பத்து-பக்தி. [பத்துடையயடியவர்க்கெளியவன்: திருவாய். 1. 3. 1.]

பத்தை-பற்றுதவன்; த்ருணஸமன்; (புல்லியன்).

பத்தொன்பதாம் பாஷை-எதிலுஞ் சேராத புதுமை. [இரண்டிலும் வியாவிருத்தமாய் இது ஒரு பத்தொன்பதாம் பாஷையாயிருந்ததீ: திருப்பா. 12. ஆரு. வியா.]

பதகம் - கொடுமை; பாதகம். [பதக முதலை வாய்ப்பட்ட களிறு; பெரியாழ். 2. 1. 9.] [பதகம் முட்டினவாறே: திருப்பா. 15. ஆரு. வியா.]

பதஞ்செய்கை - பக்குவமாக்குகை.

பதண்பதண் - தவிக்கைக் குறிப்பு. [பதண்பதண் என்றுனிறே: ஈடு, 1.10.6.]

பதம்-சோறு; வழி; கால்; செவ்வி; இயல்பு.

பதலை-கும்பநிரை. (மாடங்களின்மேல் வைக்கும் கலச வரிசை.) [பதலைக்கபோதத் தொனிமாடம்: பெரிய திரு. 3.8.]

பதவி-பதவி; அதிசயம்.

பதவிய - மிருதுவான; உண்டாம்படியான.

பதவியாய் - பதஸ்தனுய்; நேர் வழியில் நிற்பவனுய். [பதவியாய்ப் பாணியானீரேற்று: 2-ஆம் திருவந். 89.]

பதற்றம்-கவரிக்கை; அவஸரப்படுகை.

பதறப்படாமே - நினைவு தப்பாமே. [பதறப்படாமே பழந்தாம்பாலார்த்த உதரம்; பெரியாழ் 1.2.9.]

பதி-ஊர்; திருப்பதி.

பதிகம் - பத்துப் பாசுரங்கள் கொண்ட பகுதி; பாயிரம்.

பதியம்-பாட்டு. [பன்னு திருப்பாவைப் பல்பதியம்; திருப்பா. தனியன்.]

பதைத்தல்-துடித்தல்.

பந்தார்-சத்ருக்கள்.

பந்தம்-ப்ரதிஞ்ஞை; ப்ரபந்தம்; ஸம்பந்தம்; பற்று; கட்டு. [பந்தமறுப்பதோர் மருந்தும்: பெரியதிரு. 5.7.2.]

பந்தர்-நுழையர்; மீன்பள்ளி.

பந்தனை-வருத்தம். [பந்தனை தீரப்பல்லாண்டு: திருப்பல். 6.]

பயத்தல் - பெறுகை; பிள்ளை பெறுகை; பலிக்கை.

பயப்பு - வைவர்ண்யம்; நிற வேறுபாடு. [பயப்பூர்ந்தவே: திருவாய். 5.3.2]

பயமை-பெருமை; குளிர்ச்சி.

பயல்-பாகம்; குறிப்புச்சொல். [பயலான பேச்சாலே கேட்க: திருநெடுந். 21. வியா.]

பயலை-வைவர்ண்யம்.

பயன்-ப்ரயோஜநம்.

பயிர்ப்பு-வைவர்ண்யம். ஒரு விஷயத்தைப் பற்றினுல் விடாதே ஸ்நேஹித்திருக்கை.

பயிலுகை - அப்யஸிக்கை; நெருங்குகை; வர்த்திக்கை; (தங்குகை.)

பயிற்றவல்லார்-அப்யசிக்க வல்லார்.

பயிற்றுதல்- அப்யஸிப்பிக்கை; (கற்பிக்கை); பழக்குகை.

பயின்று-கிட்டி.

பரமன்-தனக்கு மேலில்லாதவன்.

பரல்-பருக்கைக்கல்.

பரவுகை - பரம்புகை; சொல்லுகை; துதிக்கை.

பரவை-ஸமுத்ரம்.

பரவை-ஸமூஹம்; பரப்பு; ஸமுத்ரம்.

பரஹிம்சை-அந்ய ஹிம்சை; மேலான ஹிம்சை.

பராக்கடிக்கை-அந்ய பரதை.

பரி - குதிரை; ஸிம்ஹம்; செருக்கு; பக்ஷபாதம்; செலவு.

பரிகை-ஒருவனுக்கு ஸஹாய மாகை; இரங்குகை; ஸ்நே ஹம் செய்கை.

பரிசல்-ப்ரத்துயபகாரம்; பச் சை; வட்டி; கட்டிக் கொள் கை.

பரிசில்-பாரிதோஷிகம்; (வெகு மதி).

பரிசு-அழகு; பெருமை; ஒக் கம்; ப்ரகாரம்; ஸவபாவம். [பிள்ளை பரிசிது வென்ருல்: பெரிய திரு. 3. 3. 2.]

பரிசை-கேடகம்.

பரிஞை-ஊர்ப்பெயர்.

பரிதி-சூர்யன்.

பரிப்பு-மனேவ்யதை.

பரிமா - குதிரை; வலி; ஸ்வ பாவம்; பள்ளி.

பரிமாற்றம்-அநுபவம்; வியா பார விசேஷம்.

பரிய-தடித்த.

பரிவு-பரியாய்; தனவிரயம்; ஸ்நேஹம்; பக்ஷபாதம்; துக்கம்.

பருகுகை-பானம் பண்ணுகை.

பருங்கி-நசிப்பித்து; (கொன்று) [களிறீர்க்கின்றவனைப் பருங்கி: பெரியாழ். 1. 2. 7.]

பருங்குதல்-கொல்லுதல்; நிர ஸிக்கை.

பருப்பதம்-பர்வதம்.

பருவம்-வயசு.

பரோடர்-பிடித்தது விடாத தூர்த்தர்கள்; மர்க்கட த்ருஷ்டிகள்; (குரங்குப் பார் வையர்.)

பரோக்ஷம்-அப்ரத்யக்ஷம். கட் புலனுகாதது.

பல்-எயிறு.

பல்கி-பஹுவாகி; விஸ்த்தார மாகி.

பல்லிபற்றுகை - பல்லியைப் போலே பிடித்துக் கொள் ளுகை;பாலிபாய்கை; அதா வது தனித்தனியே பாவிக் கை.

பல்லிலே பட்டுத் தெறிக்கை- அவதாரஸாமீப்யம். [இது கருத்துரை: புல் லிலே பட்டது உட்புக்கு அநுபவிக்க இயலாமல் வெளியே தெறிப்பது போல, நம்மாழ்வாருக்குக் கிருஷ்ணுவதார மணித்தாயி ருந்தும் அநுபவிக்க இய லாது போயிற்று என்றபடி. “கைக்கெட்டியது வாய்க் கெட்டவில்லை” என்பது நினைக்கத் தக்கது.]

பலதேவர் - பலதேவர்; நம்பி மூத்தபிரான்.

பலநிலம் - தளத்தின் மேல் தளம்; ஸ்திரீதனமான சீமை

பலம்-மாம்சம்.

பலி-பூஜை.

பலிசு - வர்த்திக்கை; வளரு கை; வட்டி.

பவ்வம்-சமுத்ரம்; பருவகாலம்.

பவக்குவாம்-உண்டாம்.

பவம்-சம்சாரம்.

பவனம்-வாயு.

பவன்-உற்பத்திக் காலம்.

பவுனை-உத்பவிக்கிற; உண்டாகா நிற்கிற.

பவுண்டன்-பௌண்ட்ரீகன்.

பவுழியன்-சேரன். [பஞ்சவன் பவுழியன் சோழன்; பெரிய திரு.7.7.4.]

பள்ளி-பாளையக்காரர்.

பள்ளிக்கலகம்-கீழ் மக்கள் கலஹம். பள்ளிக் கலகத்தில் ஆண்டவனை மிஞ்சுமா போலே.

பள்ளியந்துலாம்-குமரர் தண்டிகை.

பளப்பு-நடுக்கம்.

பளிங்கு-தெளிவு.

பற் கவ்வுகை - கோபத்தாலே உதடு கடிக்கை.

பற்ருசு-ஹேது.

பற்ருர்-பற்ருர்கள் ; சத்ருக்கள்.

பற்றிலார் - பற்றில்லாதவர்கள்; அகிஞ்சநர்.

பறவை-பக்ஷி; வண்டு.

பறை-வாத்யம்.

பனி-குளிர்ச்சி; ஹிமம்; நடுக்கம்; மழுங்கல்; மழை.

பனிக்கை-நடுங்குகை.

பனிநீர்-சமுத்திரம்.

பன்னிய-அதிகமாக.

பன்னுதல்-ஆராய்தல் ; பரம்புதல்.

பனுவல்-நூல்; [நூல் ஆவது சாஸ்த்ரம்.]

பா-பதார்த்தம்; பாபம்; பாட்டு; தூய்மை.

பாகன் - ரக்ஷகன் ; நிர்வாஹகன்; ஸாரதி.

பாகு-பாகன்; பாகன் தொழில்; நிர்வாஹகன்.

பாகுகை-பரம்புகை.

பாகுடம்-பச்சை; உபஹாரம்.

பாங்கன்-தோழன்.

பாங்கல்-அட்டாலை.

பாங்கி-தோழி.

பாசம்-ஸங்கம்; ஆசை; கயிறு; ஸ்நேஹம்.

பாசடை-பச்சிலை.

பாசறவு - அழிவு ; துக்கம் ; பசுமை.

பாசனம்-பாஜநம்; பாத்ரம்.

பாசு-பசுமை; ஸங்கம்; துக்கம்; ஸ்நேஹம் ; நிறமழிவு; பத்து.

பாசுரம்-வாக்யம்.

பாட்டம் பாட்டமாக - அடிக்கடியென்றபடி.

பாடாற்ரு - ஸஹிக்கமாட்டாத; துக்கத்தை சஹிக்காத.

பாடாற்றுகை-பொறுக்கை.

பாடி-கிராமம்.

பாடி காப்பார்-தலையாரிகள்.

பாடு-இடம்; பக்கம்;ஈடுபாடும்; சமீபம் ; துக்கம் ; அஹோராத்ரம்.

பாடு காவல்-அருகு காவல்.

பாடோடிக் கிடத்தல் - துக்கித்து ஒரேயடியாகப் படுத்துக் கொண்டிருக்கை; [ ஈடு, 7. 2. 6. ]

பாடோடி-ஒருவாக்கப் படுத்துக் கொண்டிருக்கை; பாவலும் பள்ளியும்; பாழியும்; படுக்

கையும் சேர்க்கைக்குப் பெயர்.

பாண்-பாட்டு; பாணர்.

பாண்டியனுக்குத்தார் - வேப்பம் பூ.

பாணர் – கானம் செய்வோர்; (இசைப்போர்); கடகர்; (இணைத்து வைப்போர்.)

பாணன் - பாடுவான்; திருக்குலத்தடியான்.

பாணனூர்-ஆசாரியன்; கடகர்.

பாணி-தாளம்; த்வநி; வாத்யம்.

பாணிக்கை - விளம்பிக்கை; தாமஸிக்கை.

பாணிச்சி-காயிகை; பாடவல்லாள்.

பாத்தம் - விஷயம்; அநுபாவ்யம்; பசை; தரம்.

பாத்த பச்சைப்புடாம்-அஹங்காகாரம்.

பாத்திரிகிறபோது - சந்தஸ்ஸு விசாரம் உண்டாகிறபோது.

பாத ஸம்வாதம் - அர்த்தாங்கிகாரம்; இசைவு.

பாது-வாத்து; பொடி; காவல்; பங்கு.

பாதுகாவல்-அந்தப்புரம்.

பாந்தள்-பெரும் பாம்பு.

பாம்பு செத்தது-அநுபாதேயம்; கைக்கொள்ளத் தகாதது.

பாய்-விஸ்தாரம்.

பாய்கை-தாவுகை; குதிக்கை.

பாய்தல் - சீறிக் காய்தல்; உதைக்கை; தள்ளுகை.

பாயல்-உறக்கம்; படுக்கை.

பார்-பூமி; இடம்; காடிந்யம்; நத்தம்; விஷயம்.

பார்க்கவன்-குசவன்.

பார்வை-பக்ஷிக்ரஹண ஸாதந பக்ஷி; மிருகக்ரஹண ஸாதந மிருகம். (பறவை மிருகங்களைப் பிடிப்பதற்கு உபயோகப்படும் பறவையும், மிருகமும்.)

பாரசி நாள்-த்வாதசி.

பாரிக்கை-பரப்புகை; மனோரதிக்கை.

பாரித்துக்கொண்டு - ஏற்கவே கோலிக்கொண்டு.

பாரிப்பு-அலப்ய லாபமநோரதம்; பெருப் பேறு பெற மநோரதிக்கை.

பாரி மாண்டில்யம்-பரமாணு.

பால்-இடம்; பாகம்; ஸ்வபாவம்; இயல்பு; நியாயம்; ஸமீபம்; மகம்.

பால் செல்லுமாப்போலே - பால் காய்ச்சக் காய்ச்சக் குறைந்துவருமாப்போலே.

பாலி பாய்கை - வாய்க்கால் ஜலம் புலங்கள்தோறும் பிரிந்து போகை.

பாலி புகுகை - ப்ரதக் வியாபாரம்; (தனிப்பட்ட செயல்.)

பாலை நிலம்-மரு பூமி.

பாவம்-ஸ்வாதந்திரியம்[பரதந்திரனை ஜீவன் ஸ்வதந்திரனுகை ஸம்ஸாரத்திலுழலுகைக்கு ஹேதுவாயிருத்தலின் அது பாவம் ஆயிற்று; கேடு விளைப்பது பாவமென்க.] அபிப்பிராயம்; ஸ்வபாவம்; ஆசாரம்.

பாவாய்-பெண்ணே ; பாரதந்திரய ஸ்வரூபமுடையவரே.

பாவி-பரவி; வரப்போவது.

பாவுதல்-பரவுதல்.

பாவை-நோன்பு; பதுமை.

பாழி - இடமுடமை ; மிடுக்கு; கோயில் ; இறங்குந்துறை.

பாழிமை-பலம்; இடம்;கார்யம்; சந்தஸ்; பரம்புதல்.

பாற்றுகை-நசிப்பிக்கை; பொடியாக்குகை.

பாற-நொய்யாக.

பாறு-கழுகும்; பருந்தும்.

பான்மை-ஸாரம்; ஸ்வபாவம்.

பானல்-மருத நிலம்; கடல்.

பானு-சூரியன்; கிரணம்.

பாக்ஷிகம் - பலிக்கை ; விபலிக்கை.

பாஷண்டம் - பாபஷண்டம் ; (பாவத்திரள்); வைதிக ஸமயத்திற்குப் புறம்பான கொள்கை.

பிச்சின-முசுங்கின.

பிச்சு-வியாமோஹம்; பைத்தியம்.

பிசல்-தோள் ; [மயிரெழுந்த பிசல்களும்: ஈடு, 3. 5. 4.] பிடர்-கழுத்து; (காளை முதலியவற்றின் திமில்.)

பிசிகிச் சுழிக்கை-அல்பகதியாகச் சுழிக்கை.

பிஞ்ஞகன்-பிநாகி.

பிடர்-கழுத்து; கருவம். [ஈசுவரத்வப் பிடராலன்றியே ; ஈடு 7. 4. 4.]

பிடாம்-பச்சவடம் ; கம்பளி. [ஈடு 4. 9. 4.]

பிடார்-அஹங்காரம்.

பிடி - பொடி; அசோகம்; பெட்டையானை.

பிண்டம் - காரணம்; மூலப்ரகிருதி.

பிண்டி-அசோகம்.

பிண்டியார்-ஜைநர்.

பிணக்கு-பிணங்குகை; வியாவிருத்தி; தூறு,

பிணி வியாதி; - துக்கம் ; கட்டு.

பிணிப்பு-பந்தம்.

பிணை-மான் பேடை; உத்தரவாதம். [பிணைக்கொடுக்கிலும் போகவொட்டாரே ; பெரியாழ். 4. 5. 2.]

பிணைந்து-கலந்து.

பிதிர் - விலக்ஷணம் ; ஈனசெயல்; (சிறப்புடைய செயல்.) [பின்னால் தான் செய்யும் பிதிர்: நான்முகன்: 83.]

பிதிருகை-சிதறுகை ; [பிதிருமனமிலேன் : நான்முகன் 84.]

பிரசம்-தேன்; தேன் கூண்டு; பூச்சிக் கூண்டு; வண்டு.

பிரசவாரி - தேன் வெள்ளம். [பிரசவாரி தன்னிளம்பிடிக் கருள் செய்யும்; பெரிய திரு: 1. 2. 5.]

பிரசஸ்தி மாலை - மாகாத்மியத் தொடர்.

பிரத்யாஹார நியாயம்-ஆதி வர்ணத்தையும் அந்திய வர்

ணத்தையுங் கூட்டிச் சொன்னல் நடுவுள்ளதை யும் கிரஹிக்குமதான ஸம்க்ஞா விசேஷம்.

**பிரமாணித்தார்** - விசுவஸித்தார். [உன்னைப் பிரமாணித்தார் பெற்ற பேறு.]

**பிராக்கள்** - உபகாரர்கள். [ஓத வல்ல பிராக்கள்; திருவாய்: 9. 1. 11.]

**பிராமணன்**-ஆசாரியன்.

**பிராயம்**-வயது.

**பிரால்**-மாம்ஸம்.

**பிரிகதிர்ப் படுகை**-கதிர்பிரிகை;

**பிரிந்து**-பக்ஷபதித்து.

**பிரிநிலை** - ஒருவன் திருடினுல் அவனுக்குப் புறத்திலே யாட்பார்த்து ஸஹாயமாயிருக்கை; ஸாக்ஷி; வியதிரோகோக்தி; (வேறு படுத்துஞ் சொல்.)

**பிலம்**-சுரங்கம்; குகை; பாதாளம்.

**பிலம்பன்**-ப்ரலம்பாஸுரன்.

**பிழக்கு**-பிழை. [பிழக்குடைய விராவணனை: பெரியாழ். 4. 8. 5.]

**பிழை**-குற்றம்; தப்பு.

**பிழைக்க**-தப்ப. [பிழைக்க முயன்றேமோ நெஞ்சமே பேசாய்; பெரிய திருவந். 39.]

**பிழைக்கை**-தப்புகை.

***பிள்** - பிள்ளைத்தனம். [தன் பிள்ளழியாமே எதிரிகளை முடிக்கும்படி: திருவிருத். 14. வியா.]

**பிள்ளாய்**-வழக்குச் சொல்லு; ஆச்சர்யம் இரக்கம் இவற்றைக் குறிப்பது.

**பிள்ளை** - க்ருஷ்ணன்; பூஜ்ய வாசி சப்தம்; ஆழ்வார் என்பதும் இவ்விதமே. [நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை, முதலிய திருநாமங்கள் காண்க.]

**பிள்ளைகள்**-குழந்தைகள்; இளமையுடையோர்.

**பிள்ளைத்தனம்** - அநுவர்த்திக்கிற பால்யம்.

**பிளிறுகை**-சப்திக்கை.

**பிற்காலிக்கை** - தாமஸிக்கை; பின்வாங்குகை.

**பிற்றைப்போது**-பிற்பாடு.

***பிறகிடுதல்** - பின்புறமாக அணிதல்; [பீலித்தழையைப் பிணைத்துப் பிறகிட்டு: பெரியாழ். 2. 6. 1.]

**பிறகுவாளி**-கொக்கி; அத்த வாளம்; பின்புறம் சாத்தும் திருவாபரணம். [பின்பும் பிறகுவாளியுமான அழகை; ஈடு, 8. 8. 9.]

**பிறங்கல்**-மலை.

**பிறங்குகை** - நெருங்குகை; விளங்குகை; மிகுதிகை.

**பிறப்பிலி**-தான்தோன்றி; பிறப்பில்லாதவன்.

**பிறப்பு**-ஆமைத்தாலி. [காசும் பிறப்பும் கலகலப்ப; திருப்பா. 7.]

பிறவிப் பாசம்-ஜந்ம வாசனை; ஜாதி; தர்மம்.

பிறழ்ச்சி - மதமதப்பு; திருப்புகை.

பிறழ-மிளிர; மிக; விளங்க.

பிறிது-அந்நியம்; வேறு.

பிறியல் - ஊரில் ரேகையிலே சிலது பிரித்துக்கொடுத்தல்.

பிறைதொழும் பருவம் - சந்திர தர்சன காலம்;(பிறைதொழுவது.

பின்னரும்-பின்னையும்.

பின்னடி-பின்பு.

பின்னுகை - சதிர்க்கை; பிணைக்கை; கலக்கை.

பின்னே தள்ளுகை - நிர்பந்தப் படுத்துகை; முன்னேற வொட்டாது துன்புறுத்துகை.

பின்னேயென்பது - பூஜ்யம்; இல்லை என்பது. [பின்னே என்பது இரந்தவர்க்கில்லை என்பதற்கு அடையாளம். "பின்னையினும் நாளையினும் இல்லை இனிது" என்ற ஔவையார் வாக்குக் காண்க.]

பீட்கன்று-கீழ்க்கன்று,

பீடு-பெருமை; அதிசயம்.

பீர்-பீர்க்கம்பூ; வைவர்ண்யம்.

பீளை-ருஜீஷம்; பீளைப் பூவும், (கண்மலம்).

புக்கிலம்-இடம்; வீடு; சரீரம்.

புகல்-சரீரம்; சரீர பரிக்ரஹம்; ['இல்' என்பதைச் சரீரப் பொருளில் வழங்குவது போல, இருப்பிடம் என்னும் பொருள் தரும் "புகல்" என்பது சரீரத்தைக் குறிக்குமென்க.]

புகாவிடம் - பாதக பதார்த்தங்கள் கையிலேயகப்படாமல் இருக்கிற இடம்; பிரிவில், எங்கும் பாதிக்கக்கூடிய பொருள்களே மலிந்துள்ளன என்றபடி.

புகுவாயில்-புகுகிற வாசலிலே.

புகையிலுண்பார் - சோம்பர்; [வீட்டிற் புகைந்து சமையலானுலுண்பர்; இன்றேல் வாளாவிருப்பர்.]

புஞ்சி-பஞ்சு.

புட்டி-மத்தியமாங்கம்; இடை.

புடை - பராக்ரமம்; இடம்; பக்கம்; சுற்றம்; பரப்பு; முறை; அபகாரம்.

புண்-மாம்ஸம்.

புணர்தல்-சங்கேதம்; கூடல்.

புணர்ப்பு-பிரேரிக்கை; சம்பந்தம்: சிருஷ்டி; ஸ்வபாவம்; வெற்றி மாலை.

புணரி-அலை; சமூஹம்; உப்பு; கரை.

புணர்வு-சேஷ்டிதம்; ஸமுத்திரம்.

புணை - தெப்பம்; புணையாளி; பரம்; ப்ரதிபூ; உத்தரவாதமானவன்.

புணைதல்-தொடுத்தல்; பந்தித்தல்.

புணைப் பள்ளி-மெத்தை.

புத்தர் - ஆதிக்யமுற்ற பெரியோர்; புத்தமதத்தவர்.

புத்தன் - புத்தன்; புத்தமத ஸ்தாபகர்.

புத்து-பௌத்த மதம்; [புத் தொடு சமணமெல்லாம்; திருமாலை. 7.] ஒரு நரக விசேஷம்; (மகப்பேறில் லாதார் அடைவது.)

புத்தேளிர்-தேவதைகள்.

புதஞ் செய்து-தாவி; [வெண் டிரைப் புரவி யென்னப் புதஞ்செய்து; பெரிய திரு. 9. 3. 7.]

புதல்வர்-புத்திரர்கள்.

புதா-பெருநாரை.

புதியதுண்கை - ஏகதேசானுப வம்; விளைந்த தாந்யத்தை நன்னுளிற் பெருமாளுக்குக் காட்டிப் புதிதாயுண்கை. [பெரியாழ். 5. 3. 3.]

புதுக் கணிப்பு-நவீன ஜோதி; புத்தொளி பெறுகை.

புதுக்கோமுற்றவர்-புதிய ராஜாக்கள்.

புந்தி-புத்தி; மனம்; புதன்; வெளி நிலம்.

புமடக்கி - ச்மசாநாதிபன்; அவாச்யன்; (சுடுகாட்டுக் காரன்; சொல்லத் தகாத வன்.)

புய்த்தல்-ஆகர்ஷகம்; இழுப் பது; ஆகர்ஷகம், வாங்குத லாய் விடுகையும்; போத லும்; இயத்தலும்.

புயக்கவடியிட்டு - மெள்ளவடி யிட்டு.

புயக்கறுகை - வைவர்ண் யத்தை பஜிக்கை.

புயக்கு-வருஷாகாலம்; பசுமை.

புயல்-மழை; மேகம்; நீர்.

புயற் காலம்-கார்காலம்.

புயக்கு-ஆகர்ஷகம்; போதல்.

புரக்கை-அங்குரிக்கை.

புரத்தல்-காத்தல்.

புரவர்-தலையாரி.

புரளுகை- உருளுகையாய், விநாசமென்றபடி.

புரவி-குதிரை.

புரவு-ஸூக்ஷ்மம்.

புராணர்-பழையவர்.

புரி-வலம்புரி; பின்னுகை.

புரிகை - செயல்; விருப்பம்; கொடுக்கை; ஆதரிக்கை; கரக்கை; அனுஷ்டிக்கை; மீளுகை; அவிழ்கை; திரும் பிப் பார்க்கை.

புரி குழல்-அலகு கோல்; திர ளான மயிர்முடி.

புரிசை-மதிள்; பட்டணம்.

புரிந்ததும்-ஆதரித்ததும்.

புரிந்து-திரும்பி; ஆதரித்து.

புரிநூல்-முப்புரி நூல்.

புரிதல்-கொடுத்தல்; வாங்கல்; செய்தல்; மீளுகை; மிகுதி.

புரிப்பிக்கை - திரும்பப் பண் ணுகை.

புரிப்பு-திருடம்.

புரிவுடைமை - ஆசை; ஸ்நே ஹம்.

புரை-ஒப்பு; ஸம்சயம்; ரந்திரம்.

புரையற-ரந்திரமன்றிக்கே.

புரைவாய்-இடம்.

புல்குகை - கட்டிக்கொள்கை; ஊடுகை.

புல்குமனே-தழுவணே.

புல்லல்-புணேதல்.

புல்லறிவு-விபரீத ஞானம்; அஜ்ஞானம்.

புல்லி-புல்கி.

புல்லிமை - பொல்லாங்கு; க்ஷுத்ரதை.

புல்லியன்-க்ஷுத்ரன்.

புல்லிலே - புல்கப்பட்ட இலே; மிருதுவான விலே; மூங்கில்; பனே.

புலக்கணவு-புன்மை.

புலத்தல் - நிரைத்தல்; நீத்தல்; அறிவுறுத்தல்.

புலத்தி-வண்ணுத்தி.

புலந்து-வண்டு.

புலப்படுதல்-காணப்படுதல்.

புலம் பரந்து-வயலிற் பரம்பி.

புலம்பு-தனிமை ; நடுக்கம் ; கூப்பிடுகை; அழைக்கை.

புலம்புகை-த்வநிக்கை.

புலமை-காநம் ; காயக கிருத்யம்.

புலரி - விடிவோரை ; பூமி; பிரிவு; துக்கம்; விடி காற்று; லீலே; சங்கற்பம்; ஆனேத் தொழில்.

புலருகை-உலருகை.

புலவல்-வெறுப்பு; புலால்.

புலவி-ஊடல்; துக்கம்.

புலன்-அழகு; இந்திரியம்; சுவை ஒளி முதலிய விஷயங்கள்.

புலால்-மாம்ஸம்.

புலாகின்ற- வெறி நாற்றம் வீசுகின்ற.

புலாவுகை - சப்திக்கை; பிரகாசிக்கை; விடிவு.

புலேயறம்-நீசதர்மம்.

புவி-பூமி; ஸ்தாநம்.

புள்ளினம் - உபய விபூதியையும் ஏற்கும் ஆசாரிய கோஷ்டி.[ஸ்வாபதேசத்தில் இரு சிறைகளுடைய பறவைகள் ஜ்ஞாநாநுஷ்டானங்கள் வாய்ந்த ஆசாரியர்களாகக் கொள்ளப் படும்.]

புள்ளுவம்-பொய் ; வஞ்சநம் ; கபடம்.

புளுகு-பொய்.

புற்கவ்வல்-அபஜயம்; புல்லேக் கவ்வல்-அபஜய கிருத்யம்.

புறக்கு - புல்லியது ; அவத்தியம்.

புறங் காட்டுகை - முதுகு காட்டல்; தோற்ருேடுகை.

புறம்-புச்சம்; முதுகு; இடம்.

புறவில் - பரியந்தம் ; பக்கப்ரதேசம்; ஊரைச் சூழ்ந்த சுடுகாடு; பூ மரங்கள்; தோப்பு.

புறவு-பரியந்தம்; பூ மரங்கள்.

புன்கண்மை - பேகணிப்பு; கண் கலக்கம்.

புன் சொல்-புழிப்புவார்த்தை.

புன்மை-துக்கம்; விஷயாந்தர ப்ராவண்யம்; துர்மார்க்கம்.

புனம்-நிலம்.

புனைகை-சூடுகை: கட்டுகை; அலங்கரிக்கை; வருணிக்கை.

பூ-பூமி; பொழுது; காலம்.

பூச்சி-பூவிலே யுண்டானவள்.

பூசல்-கூப்பீடு; யுத்தம்; வருத்தம்.

பூண்-ஆபரணம்.

பூணி-பசு.

பூணிக்கை - பிரதிக்ஞை பண்ணுகை. [ஈடு. 10. 8. 5.]

பூத்தரு புணர்ச்சி-அருங் கொம்பிலே பூவிருந்தால் அதைக் கண்டு பறித்துத் தரவேணுமென்ன, நாயகன், தன்னைப் பேணுமல் பறித்துக் கொடுத்தால் அதுக்காக ஆலிங்கனம் பண்ணுகை; பூத்தரு புணர்ச்சி; புனல் தரு புணர்ச்சி; களிறுதரு புணர்ச்சி எனப் புணர்ச்சி மூன்று வகைப்படும். புனல்தரு புணர்ச்சியாவது - நீரிலே யழுந்துகையிலே நாயகன் உதவியெடுத்தால் அதுக்குத் தோற்று ஆபத்திலே ரக்ஷிப்பதே யென்று ஆலிங்கனம் பண்ணிக் கொள்ளுகை. களிறுதறு புணர்ச்சியாவது-மதயானை துரத்திக் கொண்டு வர, அதன் கையிலே யகப்படாதபடி தப்புவித்தால் அதற்குத் தோற்று ஆலிங்கனம் பண்ணிக் கொள்ளுகை.

பூதி-புழுதி.

பூநெய்-தேன்.

பூம்-அழகு; பொலிவு.

பூமகள்-பெரிய பிராட்டியார்.

பூமகன்-பிரும்மா.

பூர்வரங்கம்-கூத்தாடுகிறதற்கு முன்பாட்டம்; நாடகமாரம்பிப்பதற்கு முன் நடக்கும் நிகழ்ச்சி.

பூரிக்கும்-நிரம்பும்; உடல் பூரிக்கும்.

பூரியர்-சப்பரர்; பொல்லாங்குடையோர்.

பூரி-பொல்லாங்கு.

பூருவர்-பூர்வீகர்.

பூவுக்கிட்டோம்-காமுகர்; ஸ்த்ரீகளுக்கிட்டதை பூவுக்கிட்டோமென்று சொல்லுகை; ஸங்கேதச் சொல்; (குறிப்புச் சொல்). [பூவுக்கிட்டோம் போலும்: ஈடு, 8. 2. 6.]

பூவேளைக்காரர் - பூவில்லாவிடில் மாந்தும் ஸுகுமாரர். [பூவேளைக்காரரைப் போலே ... முடிவாரொருவரிறே; ஈடு 5. 1. 9.]

பூவை - நாண்வர்தி; தமால விருக்ஷம்.

பூவைப்பூ-காக்கணம் பூ.

பூனை-பூண்டு விசேஷம்.

பூன-சிலைமரம்.

பெண்கள் படும் நீர் வாய்ப்பு-பெண்கள்-தேவிமார், படும்-அகப்படுப்படியான, நீர்-நீர்மையினுலே; வாய்ப்பு - சுபமாக முடிக்கை.

பெண்ணை-பனை மரம்.

பெய்கை-இடுகை;கொடுக்கை; உண்டாக்குகை; அலங் கரிக்கை.

பெயர்ந்திடுகை - பொய் சொல் லுகை.

பெரிய முதலியார் - நாத முனி கள்.

பெருங்கடல் மண்டினுப்போலே-சமுத்திரம் கோத்தாப் போல; ஆதிக்யத்தைச் சொன்னபடி.

பெருந்தானம்-பெரிய ஸ்வரம்.

பெருந்தூறு-ஸம்ஸாரம்.

பெரு நிலே - பக்ஷபாதம்; ஸாக்ஷி; விடாப் பிடி.

பெரு நீள்-பெரிய வளர்ச்சி.

பெரும்பால்-ப்ராயேண; (அநே கமாக); மிகவும்.

பெரும் பாழ்-மூலப் பிரகிருதி.

பெருமக்கள் -பெரியோர்; ஸ்வாமிகள்.

பெற் பிறவி - விக்ரஹம்.

பெற்றம்-பசு; கன்றும் பெருமை யும். [பெற்ற மாளிகை; பெரிய திரு. 10. 1. 10.]

பெற்ருல்-எண்ணிஞல்.

பெற்றி - பின்னேயு மெண்ணி ஞல்; பெருமை; இயல்பு; பிரகாரம்.

பெருப் பேறு-அலப்ய லாபம்; (பெறுதற்கரிய பாக்யம்.)

பேகட்டு-பிராமக வாக்கியம். (மயக்கும் பேச்சு.)

பேகணிப்பு-வைவர்ண்யம்; துக் கம்.

பேசப்பிக்குகை- வார்த்தை சொல்லில் ஸௌகுமார்யத் தாலே அந்யதாவாகை; (வேறுபாடுறுகை.)

பேணத்தகும்-ஆசைப்படத் தகும்.

பேணல்-ஆசைப்படுதல்; ஆத ரித்தல்.

பேணுதல்-ஆசைப்படுதல்; ஆதரித்தல்.

பேது-எளிவரவு; பேதைத் தனம்.

பேதுற்று-ஆசைப்பட்டு; கிலே சித்து; நெஞ்சழிந்து; விவர் ணமாய்; கலங்கி.

பேதுறவு-அஞ்சுகை.

பேதுறுகை-பற்றுகை; அறிவு கெடும் துக்கம்.

பேதை-அறிவிலி; பருவம். [ஐந்து முதல் ஏழு வயது வரையிலுமுள்ள பெண், பேதை எனப்படுவாள்.]

பேதைத்தனம் - அறிவின்மை; பருவம்.

பேதைமை-அஞ்ஞானம்.

பேய்த்தேர்-கானல்.

பேர்-பேருகை; எண்ணுகை; திரும்பிப் பார்க்கையும்.

பேர்த்தும்-பின்னேயும்; வேறும்; எண்ணிஞல்.

பேரணி-ஸேநாவ்யூஹம்.

பேரழகு-ஸமுதாய சோபை.

பேரழல்-வடவாமுகாக்னி.

பேரா-வேறு நிலேயடைந்து; பேருகை, சலிக்கையாய் அவஸ்த்தாந்தரத்தை யடைந்து என்றபடி.

பேராமை-நீங்காமை.

பேராளன்-பெரியோன்.

பேருகை-உலாவுகை; வளருகை; வேறுபடுகை.

பேழ்-பெருமை.

பேழ்வாய்-பெரியவாய். [பேழ்வாய்த் தெள்ளிய சிங்கம்: பெரியதிரு. 2. 3. 8.]

பேழை-பெட்டி; இடமுடமை.

பேறு-சுபம்; ஸிருஷ்டிக்கை; லாபம்.

பைங்கூழ்-இளம் பயிர்.

பைசல்-பிள்ளை.

பை சல் கை சு நோய்முக்கைசு-பைசலென்று பிள்ளைக்குப் பெயர். கையென்றுஒருசிருங்கைக்குப் பெயர். நோய்-வியாதி. முக்கைசு-மூன்று சிருங்கை; ஒரு சிருங்கைப் பிள்ளைக்கு மூன்று சிருங்கை வியாதி என்றபடி. பைசல் கைசல் என்று மந்திரங்களிலே பயாவஹமான வார்த்தை சொல்லுதலுமாம்.

பைதல்-இளையது; பையல். [சிறுகிளிப்பைதலே: திருவாய். 9. 5. 6.]

பைம்-பசுமை; விஸ்தாரம்; குளிர்ச்சி; அழகு;படம்; படமாவது பாம்பின் பணம்.

பைம்மை-அழகு; குளிர்ச்சி.

பைய-மெள்ள; பொய்க்க.

பையாக்க-பயஸக்தனுக; அஞ்ச.

பொகடுதல்-போடுதல்; புகுகையும்.

பொங்கத்தம்பொங்கே- சப்தாநுகாரம்; போரில் தோற்றவரிடுமபயக்குரல். [பெரிய திரு. 10. 2.]

பொங்குகை-மிகுதி.

பொங்குவீடு-மதகு; கலிங்கல்.

பொட்ட-பொட்டென; விரைவாக; முழுதும். [பொட்டத்துற்றி மாரிப்பகை புணர்த்த: பெரியாழ்.3.5.1.]

பொட்டு-வயிறு; பதர்.

பொடிகை-வைகை; நிந்திக்கை.

பொடுக்கென-சடக்கென; சீக்கிரமாக.

பொத்தல்-துளைத்தல்.

பொதளி-ஸமூஹம்; செறிவு.

பொதி-கட்டு; மூட்டை.

பொதுக்க-அடக்க.

பொதுநாயகம்-சர்வநிர்வாகம்.

பொதும்பி-குழியும்; ஸாரமும்.

பொந்து-வளை.

பொய்-பிரகிருதி.

பொய்க்க-மெள்ள.

பொய்ந்நிலம்-தரை காணவொண்ணாத சேறு. [வன் சோற்றள்ளற் பொய்ந் நிலத்தே: திருவிருத். 100. என்னுமிடத்துக்கு ஏற்பப் பொருள் கூறுவதாக ஆசிரியர் கருதுகிறார்.]

பொய்ம்மை-பொய்.

பொருக்குதல்-ஊஹித்தல்.

பொருகை-செறிகை; யுத்தம் பண்ணுகை.

பொருத்தம்-ஸத்ருசம்; தகுதி.

பொருந்துதல்-இசைதல்; சேருதல்.

பொருநல்– திருத்தாமிரபருணி.

பொருப்பு-மலை; அழகும்.

பொருமுகை-குடவயிறு படுகை; [பொருமையால் வயிறு பொருமுகை.]

பொருவு-ஒப்பு; தடை; யுத்தம்; செறிவு.

பொருள்வயினதிகாரம்- அர்த்தார்ஜநப்ரகாரம்;பொருளீட்டுந்திறம்.

பொருள்-சப்த அர்த்தம்; உபாயம்.

பொருளே-ஆதரணீயமோ; சரக்கல்ல என்றபடி. [புகழும்புகழ் மற்றெனக்குமோர் பொருளே: திருவாய். 8.7.5. என்னுமிடத்திற்குப் பொருள் கூறப்படுகிறது.]

பொல்லல்-துளைத்தல்.

பொலம்-பொன்.

பொலிகை - தகுதி, ஸமிருத்தி.

பொலிவு-அழகு; ஸம்ருத்தி.

பொழிதல்-சொரிதல்; வருஷிக்கை.

பொழில்-தோப்பு; லோகம்.

பொழுது-சூர்யன், காலம்.

பொற்கால் பொலிய - நன்மைக் கேதுவாக; நல்லடிக் காலமாக.

பொற்பு-அழகு; ஸமீபம்;பலம்.

பொற்றை-கற்பாறை;களர்காடு [திருச்சந்; 52. வியா.] மலை;

பொருவானை - வியர்த்தமான ஆனை.

பொறி-லாஞ்சனம்; புள்ளி; அழகு; பெருச்சாளிப் பொறி.

பொறிகை-எண்ணேற்கை.

பொறிபுறந்தடவி - ஸ்நிக்ததையை; பசையை யாரோபணம் பண்ணி மேலெழ; [நெற்பொரியிற் பாகுவைத்துப்பசையை ஏற்றுவது போல ஒன்றிலில்லாத இனிமையை ஏறிடுகை.] உடம்புமினுக்கி.

பொறை-கிருபை; அபராதஸஹத்வம்; துக்காஸஹிஷ்ணுத்வம். (குற்றத்தை ஸஹிப்பது; பிறர்படுந் துன்பத்தை ஸஹிக்கமாட்டாமை.)

பொன் - வேண்டப்பாடு; அதாவது ஸ்ப்ருஹணீயதை; பெருமை.

பொன்ற-நசிக்க.

பொன்றி-சரீரம்.

பொன்றிப் போகை - அழிந்து போகுகை.

பொன்றுவிக்கை-முடிக்கை.

போ - முன்னிலையே வலொருமை; போஎன விளித்தல்.

போக்கடி-பரிஹாரம்; உபாயம்.

போக்கி - ஒழிய. [கல்யாணகுணவிஷயமான இத்தனை போக்கிப் புறம் போயிற்றில்லை: ஈடு, 3. 1. 6. ]

போக்கு - புணர்ந்துடன் போக்கு. [போக்கெல்லாம் பாலை என்னும் வெண்பா இங்கெடுத்துக் காட்டப்பட்டுள்ளது. பாலை முதலிய நிலங்களும்விளக்கிக் கூறப் பட்டுள்ளன.]

போக்குவிட்டு - போகவிட்டு. [ஹர்ஷத்துக்குப் போக்கு விட்டுப்பாடி: ஈடு 1. 6. 1.]

போகப்பற்றி-போய்.

போங்கு-வழி.

போட்கன் - உள்ளிலாதவன்; வியர்த்தன்; குணசூந்யன்.

போத்துகை-வாங்குகை.

போதகம்-யானை, குட்டியும்.

போதந்த - போகவிட்ட, வர விட்ட வென்றபடி.

போதர-மிகவும்.

போதராய்-வாராய்.

போதி-அரசமரம்; அமணரும்.

போது-புதுப்பூ; அலருகிற பூ. வேளை.

போது செய்கை-மொட்டிக்கை; அலருகை; காலம் தாழ்க்கை.

போய்ப்பாடு-இடமுடமை;வலி; புகழுடைமை.

போர்-யுத்தம்; ஆயுதம்; நெல் லுப் போர்.

போர்த்தல்-மூடுதல்.

போர-உண்டாக; வார.

போரப்பொலிய-மிகவும் செழிப் பாக; போர - அதிகமாக; பொலிய-சம்ருத்தியாக.

போர விடுகை-வரவிடுகை.

போரு கிடாய்-போகிடாய்.

போருகை-போகை; வருகை.

போருமாய்த்து-பூரணமாய்த்து

போலி - ஏகதேச ஸத்ருசம்; சிறிது ஒப்பு.

போற்றல்-புகழுதல்; போத்து தல்.

போற்றுதல்-புகழுதல்.

போனகம்-திருப்போனகம்;பெரியோர் அமுது செய்த உணவு.

போனுற் படுவதைத் தான் படப் பெற்றேனே-பிரிந்துபோனல் முடியப் பெற்றேனே.

பௌழியன்-ரிக்வேதி.

மக்கள்-மனுஷ்யர்.

மக்கள் மனம் மாதர்க்குத் தெரியும் - குழந்தைகள் மநோபாவம் பெண்டிருக்கே தெரியும்.

மக்காணி- ஸ்தூல சரீரம்.

மகம் - யக்ஞம்; (வேள்வி).

மகன்றில் - அன்றிலிலே பேதம்;(வகை).

மகாவிருக்ஷம் - இலவ மரம்; கள்ளி.

மங்குகை - க்ஷயிக்கை. (குறைகை).

மங்குதல் - இருளுதல்; துவளுதல்.

மங்குல் - ஆகாசம்: மேகம்; துவட்சி; அறிவின்மை; பற்றினதை விடாமை.

மச்சம் - அடையாளம்.

மச்சு - மேற்றனம்.

மசக்குப் பரல் - மசக்கின விளுதுலுங்கா விரை; ஸம்சயத்தைப் பண்ணும் விரை. [தன்னோடு மசக்குப் பரலிடலாம்படியான தேவ ஜாதியையும்: ஈடு, 2. 2. 5.]

மஞ்ஞை - மயில்.

மஞ்சரி - பூங்கொத்து.

மஞ்சாட்டம் - விளையாட்டம்.

மஞ்சாடி - கழஞ்சி ; மஞ்சாடியென்னும் நிறுக்கிற எடைக்குப் பேர்.

மஞ்சியாக - ஸமூஹமாக.

மஞ்சு - அழகு ; ஆபரணம்; இளமை ; மேகம்; முகடு ; காஞ்சம் ; யானை முதுகு; ஆட்டம் ; சலனம்.

மட்டிக்கை - மர்த்திக்கை.

மட்டு - தேன்.

மடக்குயில் - பெண்குயில்.

மடங்கல் - ஸிம்ஹம்.

மடந்தை - யுவதி.

மடப்படம்-பற்றினது விடாமை; அறிவின்மை ; சாபலம் ; பவ்யதை; அழகு; லஜ்ஜை.

மடம் - மடப்பம்.

மடல் - தளம் ; பனையோலை; (இதழ்).

மடி - புடவை ; சோம்பல்.

மடிச்சரக்கு - புடவை.

மடுக்கை - பாநம் பண்ணுகை.

மடுத்த - ப்ரவ்ருத்தமான; (பெருகின.)

மடுத்துப்பிடிக்கை - கைமடக்கிப் பிடிக்கை.

மண்டுகை-விரும்புகை; தள்ளுதல்.

மண்ணை-ஆற்றுக்கும் பட்டணத்திற்கும் பெயர்; (?) மழுங்குகை; மூடன்.

மண்பத்து-அஸாரம்.

மண்பாடு - மண்மிகுதி; பூமிபலம்.

மண்மகள்-பூமிப்பிராட்டி.

மணக்குகை-உகப்பிக்கை.

மணத்தல்-கலத்தல்.

மணம்-கல்யாணம்; பரிமளம்; இயற்கை; கைகோக்கை; மகிஷ் ஸ்வேதம்; ஸம்ஸர்கம்.

மணிமுரசு-விவாஹ தூரிய நாதம்; (மணப்பறை).

மணவிலக்கு - ஓரகத்துறை. [கருமாணிக்க மலை என்கிற திருவாய்மொழி.]

மணுட்டி-கலைவாணி, பெண்டாட்டி.

மணி-அழகு; நிறம்; நீலமணி; விலக்ஷணம்; பாறை; ஓதி - மயிர்முடி.

மணிமானம்- அவயவசோபை.

மணியறை-மாணிக்கப் பாறை.

மணியிலணிநிற மாயன்-மணியைக் காட்டிலும் அழகிய நிறம் படைத்த மாயன். மணியில்,மணியைக்காட்டிலும்; அஞ்சாம் வேற்றுமை; பஞ்சமீவிபக்தி.

மத்தளம்-முழக்கு வாத்தியம்.

மத்தளி-சிறுமத்தளம்.

மதம்-கர்வம்; களிப்பு.

மதமதப்பு-திமிர்; உணர்வறுகை; செழிப்பு,

மதமத்தப்பூ-ஊமத்தம்பூ.

மதலை-பிள்ளை; குழந்தை; தூண்; மழலை.

மதலைத்த-திரண்ட.

மதலைத்தலை-பிள்ளைதூண்தலை.

மதவு-பிள்ளை.

மதி-ஞானம்; சந்திரன்.

மதிசூடி-ருத்திரன்.

மதித்த - சந்தோஷப்பட்ட; பஹுமதி பண்ணின.

மதிப்பன்-இலவமரம்; மதியையுடையவன்; ஞானி; புத்திமான்; மதிப்புடையவன்.

மதிப்பு-மேன்மை: ஆதிக்கம்; எண்ணிக்கை.

மதியம்-சந்திரன்.

மதுகரம்-வண்டு.

மந்தாரம்-கற்பகம்.

மந்தி-பெண்குரங்கு.

மந்திரம் - சர்வேஸ்வரன்; ஏகாந்தமும்.

மந்திரித்து-மந்திரம் ஜபித்து; ஆலோசனை பண்ணி.

மயக்கம்-கலவி, கூடலும்.

மயக்கல்-செறிவு.

மயக்கு - தெரியாச்செயல்; மோகம்; மனத்திரிவு; மதிபிரமம்; கலவி; கூடல்; ஆனந்தம்; விபரியயம்: மாறுபாடு.

மயக்குகை - மதிமயங்கப்பண்ணுகை.

மயங்கல்-கூடல்; கலவி.

மயங்கி - மோஹித்து; அறிவிழந்து.

மயங்குகை-ஹ்ருதய காலுஷ்யம்;[மனக்கலக்கம்.]

மயல் - பிச்சு; விஸ்வந்தி; பிராந்தி; இருள்.

மயிர்ப்பாடுண்டாய்த்து - மயிரினுடைய வைலக்ஷண்யம் தோற்றிற்று.

மயிரெறிகை-மயிர்க்குச்சு.

மரத்தாலே-மத்தாலே.

மரிபிரஷ்டம்-செம்மட்டை.

மருகி-மருமகள்.

மருங்கு-இடை-சமீபம்; அரையும்; அசலும்.

மருட்சி-அறிவுகேடு.

மருட்டு-பிரம்மஹத்தி.

மருண்டு-அறிவிழந்து.

மருத்துவன் - ஆசாரியன்; வைத்தியன்.

மருதநிலம்-கிருஹம்; நதிதீரம்.

மருதர் - மருத்துக்கள்; சப்த மருத்துக்கள்.

மருந்து-பரிஹாரம்.

மருப்பு-கொம்பு.

மருவலர்-சத்ருக்கள்.

மருளிந்தம் - கானவிசேஷம்; (இசை).

மல்-மிடுக்கு - பெருமை; சாமர்த்தியம்; மிகுதி; மல்லர்.

மல்க- சமர்த்தமாக;மிகுதியாக.

மல்குதல்-மிகுதியாதல்.

மல்லல்-ஆரவாரம்; பெருமை; சம்பத்து; மிடுக்கு; சமர்த்து.

மல்லே-விஸ்தாரம்; ஸம்பத்து.

மலக்குதல் - கலக்குதல். [மலக்கு நாவுடையேற்கு : திருவாய். 6.4.9.]

மலங்கு-மத்ஸ்ய விசேஷம்.

மலிதல்-மிகுதி.

மலேத்தல்-போரிடுகை.

மலேமகள்-பார்வதி.

மலேயமான்கள் - ஆத்மவிசேஷத்தில் தலேயாரிகள். (திருக்கோவலூரைச் சேர்ந்த அரசர் மலேயமான் எனப்படுகிறுர்கள். அவர்கள் பரிவுடன் திருக்கோவலூர் எம்பெருமானேப் பாது காத்து வந்தனர். ஆதலினவர்களே ஆத்மாவைக் காவல்காக்கும் தலேயாரியாகக்குறிப்பிடுகிறுர். "பொற்புடையமலேயரையன்பணிய நின்ற பூங்கோவலூர்" [திருநெடுந்.]என்ற ஸ்ரீஸூக்தியும் வியாகிக்யாநமு மீண்டு அநுஸந்திக்கத்தக்கன.)

மலேயாளர்வளேப்பு - மலேயாளிகள் ஒருவன் கையிலேயொன்றுவாங்கநிணேத்தால் வாங்கியல்லது போகார்களாய் வளேப்புக் கிடப்பார்கள். அந்த வளேப்பைச் சொல்கிறது. [நாழிகை முப்பது சென்றுலும் மலேயாளர் வளேப்புப் போலே ஓரடி பேராதாய்த்து:ஈடு, 10.3.3]

*மலேயாளரூட்டு - மலேயாளிகள்போற் பலநாள் பட்டினி கிடக்கவும் சேர்த்துப் பல நாளுண்ணவும் வல்லராந் தன்மை. [மலேயாளரூட்டுப் போலே அனுபவிக்கவும் வல்லர்களாய்: திருநெடுந். 1. வியா.]

மழலே-பால்யம்; இனிமை.

மழலேச்சொல் - பாலர் சொல்லும் வார்த்தை.

மழறுகை-அபிபவம்; கலக்கம்.

மழறுதேன்-கலங்கின தேன். [மழறு தேன்மொழியார்கள்:திருவாய். 6.2.5.]

மழு-பரசு.

மழுவாளி-ருத்ரன்.

மழை-மேகம்; குளிர்ச்சி; வருஷம்; ஆகாசம்.

மன்னர்-வலேயரும் உழவரும்.

மற்றைப்படியாகில் - அபஜயமாகில்; கோபமாகில்.

மறப்பு-விஸ்மிருதி.

மறி-குட்டி; இளமை; அலே; சப்தம்; குதிரைக்குட்டி.

மறிகிலி-விதி.

மறிதல்-விரிதல்.

மறம் - ஸ்த்ரீத்வாபிமானத்தால் வந்த கர்வம்; கோபம்; தறுகண்மை; அருளின்மை; கொடுமை.

மறுக்குகை - மனந்திரியப் பண்ணுகை.

மறுக்குதல்-கலக்குதல்.

மறுகரை-அக்கரை.

மறுகல்-வயிற்றெரிச்சல்; கலக்கம்; இலங்குகை; ஸ்வபாவ பேதம்.

மறுகுகை-தபிக்கை.

மறுத்தும்-மீட்டும்.

மறுதலைக்கை-எதிரிடுகை.

மறுநனைய - மறுபாடுருவும்படி நனைய; ஸம்ச்லேஷிக்க; கைகோக்க.

மறுபாடுறுவ - உட்புக்குப் பின்னே புறப்பட.

மறுமுட்டு பொருதபடி - பின்னை யொரு காரியத்திற் காகாத படி.

மறுமை-அதிர்ஷ்டம்; மேலுலகம்.

மன்-ராஜா; சுவாமி.

மன்னன்-ராஜா.

மன்னுடை -மன்னனையுடைய.

மன்னுதல் - நிலைப்பாடு; பொருத்தம்.

மன்றல் - விவாஹம்.

மன்றில் - பொதுநிலம் ;

மன்னு - நாற்சந்தி; பொதுச் சாவடி; அம்பலம்.

மனத்திரிவு - மனச்சாபலம் ; ஸம்சயம்; விபர்யயம்; [விபரீதவுணர்வு.]

மனிச்சு - மானுஷ்யம் ; (மனிதத்தன்மை); பௌருஷம்.

மனிச்சுக்கை - மனுஷ்யன் என்கைக்கு.

மனைகை - உண்டாக்குகை ; ஸ்ருஷ்டிக்கை. [ஒருவன் மனைந்து கொண்டுவர ஒருவன் அழித்துக் கொண்டு வரும்படி: ஈடு,6. 9. 1.]

மா - கறுப்பு, பெருமை ; ஆனை ; குதிரை ; ஸிம்ஹம் ; மான் ; அழகு ; வண்டு ; நீட்சி ; நிறம். மணம் ; பூஜ்யதை ; ச்லாக்யம் : பெருமை ; அரி ; சீதேவி; செல்வம் ; ஆடை ; கருமை;மாறு;பகர்; தெள்ளுகுணத்தேறு.

மாகோல் - குதிரைக் கசை ; தாத்துக்கோல்.

மாகம்-மஹாகம்: பரமாகாசம்.

மாசு - குற்றம்.

மாட்சி - ஒளி ; அழகு.

மாட்டுகை - எரியிடுகை; சுடர்; வெட்டுகை ; போக்குகை.

மாட்டெறிந்தான் - நிச்சயித்தான்.

மாட்டேறின - வ்யாவ்ருத்தங்களாக நிறுத்தின.

மாடேறு - மனசு சம்மதித்து எழுதிக் கொடுக்கை.

மாடம் - கிருஹம்.

மாடு - தனம் ; ஸமீபம் ; இடமுடைமை ; பசு.

மாண் - பிரும்ஹச்சாரி; அழகு; நன்மை ; பெரியவளவு : பரபாகம்.

மாண்பு - அவதாரம். அழகு ; ஸ்திரீத்வம்; புணைச்சிமை; மிடுக்கு ;

மாணிக்கம் - பத்ம ராகம்

மாத்து - கொண்டாடப் படுகை ; செருக்கு; உடைத் தாகை.

மாத்ஸர்யம் - மாச்சரியம்; பொருமை.

மாதர் - ஸ்திரீகள் ; அழகு ; ஆசை ; ஸ்நேஹம்.

மாதவி - குருக்கத்தி.

மாதிரம் - திக்கு.

மாது - பெண் ; மார்தவம் ; அழகு.

மாதுமை - மேன்மை.

மாந்தர் - மனுஷ்யர்.

மாந்துகை - மயங்குகை ; புஜிக்கை.

மாம்பழவுண்ணி- மாம்பழத் தோடு சம்பந்த மில்லாத ஒரு பூச்சி. [ஈடு. 9. 9. 6.]

மாமான்மக்கள் - அம்மான் பிள்ளைகள்; அத்தைமகள்.

மாமை - தேக காந்தி ; அழகு ; அவயவ சோபை.

மாய்கை - முடிகை ; நசிக்கை ; துக்கப்படுகை.

மாயம் - ஆச்சர்யம்; பந்தனம்; அழகு ; அபிநிவேசம் ; இச்சை ; ஞானம் ; நகரம்.

மாயவன் - ஆச்சர்யகுண சிரேஷ்ட்டிதமும் சௌகுமார்யமும் உடையவன்.

மாயன் - கரியன்.

*மார்தட்டுகை - உற்சாகத் துடன் முற்படுகை ; போட் டியிடுகை.

மார் மட்டு - அளவுபட்டு.

மார்வெழுத்து - தாஸ்யம். (அடிமை என்பதற்கு அறி குறியாக மார்பிலே ஸ்வாமி பேரை எழுதிக் கொள் ளுகை.)

மாரதர் - மஹாரதர்.

மாரி - மேகம் ; வர்ஷாகாலம்.

மால்-வ்யாமோஹம் ; ப்ராந்தி; கறுப்பு ; வாத்ஸல்யம். உயர்த்தி ; வேறொன்றை நினையாதிருக்கை ; கலக் கம்.

மாலுகை - உகளிக்கை.

மாலுதல் - மயங்குதல்.

மாலுறுகை - பிச்சேறுகை.

மாலை - சாயங்காலம்; ராத்திரி ;

மாழாத்தல் - மயங்குகை. [மாழாந்து தேம்புதியால் ; திருவாய். 2. 1. 6,]

மாற்றம்-ப்ரத்யுத்தரம்; வினை விற்கு விடை.

மாற்றலர்-சத்ருக்கள்.

மாறு-ஒப்பு; சாத்ரவம்; மிடுக்கு.

மாறுகை-பொருகை; ஸங்கிர மிக்கை; ஸம்பந்திக்கை.

மாற்றோலைப்பட்டவர்-ஓலை மாறு டப்பட்டவர். ஒரு கணக் கிலிருந்து வேறு கணக்கிற் சேர்க்கப்பட்டவர். [எம்மை மாற்றோலைப் பட்டவர் கூட் டத்து வைத்துக் கொள்கிற் றிரே: நாய்ச்சி. 10.2.7.]

மான்-அழகு;மாழை; மௌக்த் யம்; இளமை; மாந்தல்; உண்ணுதல்; மயங்குதல்; மாது; அழகு; ஸ்நேஹம்.

மானம்-அளவு; பெருமை.

மாணவி-மஹாநவமி; அலங் காரம். [ஈடு, 10.9.4.]

மாணவிச்சோலை - சொக்கப் பானை. [மாணவிச் சோலை போலே ஆவதழிவதான: ஈடு, 6. 9. 1.] மாணவிக்

குச் சோலே செய்பவர்கள் அத்தைச் சொல்லுவர்கள். மஹாநவமிக்கு ராஜா கொலு வீற்றிருக்கிற பஜார் வெளிகளிலே கமுகு பலா முதலான மரங்களை வெட்டிக் கொண்டு வந்து சோலே செய்பவார்கள். அத்தைச் சொல்கிறது. மஹா நவமி-நவராத்ரி நவமி.

மிகுதி-தோற்றம்; அழகு.

மிகை-அதிகம்; பாரம்.

மிடி-தாரித்ரயம்.

மிடை-க்லேசம்; கோபம்; நெருக்கம்; சிந்திக்கை.

மிடைகை-நெருங்குகை.

மிடைந்த-நெருங்கின.

மிண்டர்-தூர்த்தர்.

மிதி-பூமி.

மிலேக்கை- ஸங்கிரமித்துச் சாதிக்கை; கனேக்கை. [உராமிலேக்கக் குருட்டாமிலேக்கும்: திருவிருத். 94.]

மிளிர-ஒளிவிட.

மிளிருகை-விகஸிக்கை; சஞ்சரிக்கை; சஞ்சலிக்கை; இடம் வலங்கொள்கை. [கெண்டையொண்கண் மிளிர:பெரியதிரு. 3.7.2.]

மினே-சிறு தூறு.

மிறுக்கு-துக்கம்; வருத்தம்; நிஷ்ட்டூரம்; மிடுக்கு. [பெரியாழ். 3.4.10.]

மிறுங்கு-முகுரம்; கண்ணுடி; கடினம்.

மினுங்குகை-ப்ரகாசிக்கை.

மின்மினி பறக்கை-ஆகாரத்தை கிரஹிக்கப்போகாதபடி இருக்கை. தெளிவாக விஷயத்தை க்ரஹிக்க மாட்டாமை.

மீ-மேல்.

மீசுண்ணி-உச்சிஷ்ட்ட போஜிகள்; எச்சில் நுகர்வோர். [மீசு-மீதம்; உண்ணி.]

மீண்டு-திரியிட்டு.

மீமிசை-மிக்கது; மேன்மேல்.

மீமீது-மேலாகி மேன்மையைச் சொல்கிறது.

மீளி-சிங்கம்; வலி; பாலே நிலேத் தலேமகன்; மிருத்யு.

மீளே-தலேயோடே.

மீன்-நட்சத்ரம்; மத்ஸ்யம்.

முக்கியம்-முக்கியமானது; முக்கியமாவது வேண்டப்பாடு. வேண்டப்பாடு-அதிசயம்.

முக்குகை-முழுக்குகை.

முக்குணக்கு-மூன்று வளேத்தலாய் இருக்கை.

முக்கோட்டை-துர்க்கை; கோயில்; விநாயகன் கோயில். [கவி பாடுவிக்குமிடம். திருமங்கையாழ்வாரைக் கவி பாடுவித்த முக்கோட்டை திருக்கண்ணபுரம் என்பர்.]

முகக்கை-கிரஹிக்கை; அளவிட்டறிகை; அநுபவிக்கை.

முகடு-உச்சி.

முகப்பட்டம்-கண்ணே மறைக்கக் கட்டும் பட்டம்.

முகப்பிலே-முன்னே.

முகப்பு-முன்.

முகபேதம்-முகபேதம்; ஆகார பேதம்.

முகரி-பூர்ணதை; விதக்ததை; திறன்.

முகில்-மேகம்.

முகிழ்நகை-தநசித்தம்; [காதலாலன்றிப் பணத்திற் காசை கொண்டு நகைத்தல்.] சுத்தியோகம். [வெண்ணிறம் வாய்ந்த தூய நகை பரிசுத்தியுடைமையைக் காட்டுகிறது.]

முகிழ்முலை-பக்தியின் அங்குரம். [கொங்கைக்குஸ்வாபதேசப் பொருள் பக்தி. ஆகவே கொங்கை முகிழ்ப்பது பக்தி முளைப்பதைக் காட்டுகிறது.]

முகுந்தன்-மோக்ஷப்ரதன்.

முகை-அரும்பு.

முங்கு - 'நநமேயம்' என்று இருக்கை.
வெட்டுப்பட்டு நிமிர்ந்து இருதுண்டாய் விழுந்தாலும் விழுவேன்; யாரையும் வணங்கேனென்றிருக்கும் இராவணனைப் போல தலை வணங்காது நிமிர்ந்து இறுமாந்திருக்கை.

முசுகுவாலெடுத்தாப் போலே-அஸூயையையும், கோபமும் கொண்டு முசுகுவால் எடுக்குமாப்போலே.

முசுமுசுப்பு-இன்னுமை.

முட்கோல்-குதிரை நடத்துகிற தாத்துக்கோல்.

முட்டாக்கிட்டுக் கிடக்க-ஸ்வாநுபாவம்; ஏகாந்தம்.

முட்டாணி-விலங்கிற்குத்தைக்கும் ஆணி.

முட்டு-ப்ரதிஹதி; விலங்கு; தள்ளப்போகாதபடி தாங்குவது.

முட்டுக்கோல்-கன்னக்கோல்.

முடி-மயிர் முடி; களை.

முடியாமை-கிடையாமை.

முடை-துர்க்கந்தம்.

முண்டகம்-தாழை.

முண்டம்-கபாலம்.

முண்டர்-சைவர்.

முத்தம்-சண்ணம்.

முத்தன் - மோக்ஷப்ரதன்; ஆநந்த ஸ்வரூபன்.

முத்தி செய்கை-விடுவிக்கை.

முத்து - ஆநந்தம்; வீதி; அழகு.

முதம்-சிரேஷ்ட்டம்.

முதல்-கைம்முதல்.

முதல் முன்னம் - பழையதாக; மிகவும் முன்பு.

முதலி-ப்ரதாநன்.

முதலியார்-அதிபதி; சிரேஷ்ட்டர்.

முதன்மை-காரணம்.

முதற்கொள்ள-அளவிட

முதறுகள்-பூதம்.

முதுகிட்டான் - அம்பறுத் தூணியை முதுகில் கட்டிப் போகிறவன்.

முதுமை-பெருமை; உயர்த்தி; பழமை.

முத்தக்காசு-கோரைக் கிழங்கு.

முந்தானை-மடி.

முந்துற முன்னம் — ப்ரப்ரதமம்; முதன்முதல்.

முயங்க - கட்டிக்கொள்ள; நெருங்க.

முயல் - உத்சாஹம் ; முசல்; முயல்; யத்னம்.

முயற்சி-உத்ஸாகம்; உத்யோகம்.

முரசு-வாத்யவிசேஷம்.

முரண்-பலம்; மிடுக்கு; வக்ரம்.

முரி-சஞ்சரிக்கை; பெருமை.

முருகன்-சுப்ரமணியன்.

முருகு-தேன்.

முல்லை-யாழ்; குழல்.

முலையெழுந்தார்-ஸ்த்ரீகள்.

முழுங்கைத் தண்ணீ - ஒருவன் தண்ணீரைக் குடித்தால் மற்றொருவன் அவன் முழங்கையிலே ஒழுகுகிற தண்ணீரைக் குடிக்கை.

முழலை-வேங்கைப் புலி.

முழவம்-மத்தளம்; வாத்யம்:

முழுகி-அவகாஹித்து.

முமுசி முட்டி-அவகாஹித்து;

முழத்த-நிரம்பின.

முழை-த்வாரம்.

முளரி - தாமரை; முள்ளு; சிறு சுள்ளி.

முளி - கொழுந்து; தளிர்; உலர்ந்தது.

முளிந்தீந்த-உலர்ந்துதீய்ந்த.

முற்கொழுந்து - பசுக்களின் முன்னேமுகந்துகொள்கை.

முற்கோலி-மேலொற்றி.

முற்றம்-வெளி.

முற்றூட்டாக - பூர்ணனுபவமாக.

முறியாழி-முறிந்தமோதிரம்.

முறுகல்-ஹேயம்.

முறை-பர்யாயம்.

முறைபட-ந்யாயமாக.

முன்றில்-முற்றம்.

முன்னிவந்து - முன்னேவந்து.

முன்னீர்-ஸமுத்ரம்.

முன்னேட்டுக்கொள்ள - மேலெண்ண.

முன்னேட்டுக் கொள்கை - வருகிற கார்யத்திற்கு முன்னே ஆலோசிக்க.

முன்னேட்டுக்கொடுக்கை- ஒரு காரியத்திற்கு முன்னே ஆரோபிக்கை.

முனவே-முன்னே.

முனி-துறந்தவன்.

முனிகை-சாதுவம்; சிறுகை.

முனிவு-வெறுப்பு; பொடிகை.

முனிவர்-குணநிஷ்டர்.

முனை-திரள்; யுத்தம்; முகம்; சித்தம்; சீற்றம்.

முனைந்த-மிக்கமுயன்ற.

முனையே-முன்னே.

முனைவன்-ப்ரதாநன்.

முக்குறிஞ்சுகை-முமுசுகை.

மூக்கை-நசிக்கை.

மூக்குவலி-மூர்க்கபலம்.

மூசுகை-மொய்க்கை; விடாதே யிருக்கை.

மூத்தபிள்ளை - செல்வப்பிள்ளை.

மூது-பழமை.

மூரி-பெருமை; வலி; இடம்:

மூரிநிமிருகை - சோம்பல் முறிக்கை.

மூரிநீர் - ஸஞ்சரிக்கிற நீர்; ஸமுத்ரம்; இடபம்.

மூரிமடிகை-முறிகை.

மூலையடி-யதேச்சம்; தோற்றினபடி யெல்லாம்.

மூவாமை-நசியாமை.

மூழ்த்த-நிரம்பின.

மூன்றுதமிழ்-இயல்; இசை; நாடகம்.

மெச்சு-மதிப்பு; சந்தோஷம்.

மெச்சுதல்-ச்லாகித்தல்.

மெய்-உடம்பு; சத்யம்; ஆத்மா; ஸ்வபாவம்.

மெய்க்காட்டு - எண்ணிக்கை கொடுக்கை.

மெய்சிலிர்க்கை- ரோமாஞ்சம்.

மெய்ப்பொருள்-ஆத்மா.

மெய்ப்பாடு-யாதார்த்யம்; மெய்யாக்குகை.

மெய்மை-மெய்; முழுச்சொல்.

மெய்யாகிறது - பகவத்விஷய ஞானம்.

மெலிவு-நைவு; உடம்பிளைக்கை.

மெழுக்குவாசி - ஸ்நிக்ததை; எண்ணெய்ப் பசையைத் தேய்க்கை; தேய்-கல்லாலே தேய்க்கை;

மேகர் - ஒருஜாதியார்; அரசர் போகும்போது முன்னே நீர் தெளிப்பர். [ஈடு, 10.10. பிர.]

மேகலை - வஸ்த்ரம்; அரை நாண்; மாலை.

மேகுகை - ப்ரகாசிக்கை.

மேத்து - ச்ரத்தை.

மேதி - எருமை.

மேம்பாடு - அபிமானம்.

மேய் - பொருந்தி; கிட்டி; ஆதாரத்தைப் பண்ணி.

மேல் - பண்டு; மேலையார்; முன்னே; மேல்; கீழ்.

மேல்தண்டல் - தாவுக்குப் பெரியோன்.

மேல்தோன்றி - வ்ருக்ஷவிசேஷம்.

மேலாப்பு - மேல்கட்டி.

மேட்டு - மேல் விழுந்து.

மேலெழுத்து - சம்மதித்து எழுதிக் கொடுக்கை; சம்மதி.

மேவுகை - பொருந்துகை; அத்யவசிக்கை; ப்ராபித்தம்.

மேற்பால் - மேலைதிக்கு.

மேறு - மேல்.

மேன்மை - பெருமை.

மேணுணிப்பு - அதிசயம்; கர்வம்.

மேனாள் - பூர்வகாலம்.

மேனி - நிறம்.

மை - இருள்; கறுப்பு; அஞ்சனம்; மை.

மைந்த - கருத்த.

மைந்தன் - மிடுக்கன் ; ராஜா ; வலிமை வாய்ந்தவன்; யௌவன முள்ளவன்.

மையல் - வ்யாமோஹம் ; மயங்குகை ; அறிவுகேடு.

மையாந்து - மயங்கி.

மொக்கல் - குமிழி.

மொகடு - முதுகெலும்பு.

மொகடோர்வியராய் - முதுகெலும்புரமுடையராய், ஞானிகளாய் என்றபடி.

மொய்- அழகு; செறிவு ; பெருமை; வலி; மிகுதி.

மொய்குழல் - ஸ்வாபதேசத்தில்ப்ரார்த்தநாரூபப்ரபத்தி.

மொய்த்தல் - தள்ளுதல் ; தீர விளிதல்.

மொய்ம்பு - மிடுக்கு.

மொருந்த - தூறுமண்டின ; திறந்த.

மோசகர் - திருடர்.

மோடி - காடு ; பிடாரி.

மோடு - பிசுல் ; தோள் ; பெருமை.

மோத - அடிக்க.

மோம்பழம் - மோக்கிறபழம்; போக்யம்.

மோய் - மாதா.

மோவாயெழுந்தார் - புருஷர்கள்.

மோழை - கீழாறு ; நரகம்.

வக்கரன் - தந்தவக்ரன்.

வக்கென்றிருக்கை-வேட்கையாயிருக்கை.

வகுப்பு - கட்டளை.

வக்குரிக்க - வெடிக்க ; வேக.

வகுத்தசேஷி - ப்ராப்த சேஷி.

வகை - ப்ரகாரம்.

வங்கம் - மரக்கலம் ; கப்பல்.

வங்கணம் - ஸ்நேஹம் ; வம்சம்.

வசிசெய்கை - வசீகரிக்கை.

வசை - குற்றம்.

வஞ்சம் - வஞ்சனை.

வட்கு - வெட்கம்.

வடி - வடிக்கை ; சாணை பிடிக்கை ; அழகு ; மாவடு.

வடிம்பிடுகை - ப்ரேரிக்கை.

வடிவு - மேனி ; அழகு ; ஸ்வபாவம்.

வடு - அவத்யம் ; குற்றம்.

வண்டலிடுகை - வண்டற்படுகை.

வண்டானம் - குருகு ; நீர்க்கோழி.

வண்டு-நாயகன்; வண்டு.

வண்ணம்-ஜாதி; நிறம்; ஸ்வபாவம்.

வது-மது; மணம்; கல்யாணம்.

வதுவை-கல்யாணம்; பரிமளம்.

வந்தி-வனை; வகை;ப்ராகாரம்.

வந்திக்கை - ஸ்தோத்திரம் செய்கை; ஸேவிக்கை.

வம்பு-புதுமை.

வயிரம்-வஜ்ரம்; முற்றல்; பகை.

வயிரமேகன்-ஒரு ராஜா.

வயிறுதாரி-பஹீபக்ஷி; பெருந்தீனிக்காரன்.

வயிறுபிடிக்கை- கிலேசந்திஞலேயாதல்; பயத்திஞலேயாதல் வயிறு பிடித்துக் கொள்கை.

வயிறுவாய்க்கை-கர்ப்பம் தரித்தல்.

வரம்-பலம்; ச்ரேஷ்டம்.

வரம்பு-அணை; தடை; அவதி.

வரலாறு-ஹேது.

வரி-ரேகை; அழகு; கீற்று.

வரிசை-ஆதிக்யம்.

வரிந்து-கட்டி.

வருட-துடைகுத்த.

வருத்தம்-துக்கம்; மனக்கிலேசம்.

வருத்தித்த-வர்திப்பித்த; உண்டாக்கின,

வரைகை-குறைகை.

வரைந்துகொண்டு-வரித்துக் கொண்டு.

வரையாதே-ஒன்றுந் தப்பாதே.

வரையிட்டுக்காட்டுகை - ஆறு வடிகிறபோது வரையிட்டுக் காட்டுகை; ஆறு பெருகுகிறபோது மேலும் அடையாளங்காட்டுகை.

வரையிடுகை-குறைந்து வருகை.

வலக்குறி - பகவத்சின்னம்.

வலம்-பலம். குறி-சின்னம்.

வலம்-துணிவு; பலம்; ச்ரேஷ்டம்; அநுகூலம்.

வல்லாராடுகை - ஸமர்த்தனை வன் ஆடுகை; விஷ்ணு ந்ருத்தம்.

வலிக்கை-இழுக்கை.

வலிமை-சீர்மை.

வலே-தேகம்.

வவ்வல்-குளிருகை; கவ்வுகை; உண்கை; வாங்குகை.

வழக்கு-முறை; ப்ராப்தம்.

வழி-வாசல்; நடு; ஒழுங்கு; ப்ராப்யம்; மார்க்கம்.

வழிப்படுகை-ஆச்ரயிக்கை.

வழியடிப்பார்-வழி பறிக்கிறவர்கள்.

வள்-வளேவு; கூர்மை.

வள்ளீ-வல்லீ.

வள்ளுகிர்-கூர்மையையுடைய நகம்.

வளம்-மிகுதி; ஸம்பத்து; அழகு; போக்யவஸ்து; பெருத்த; ஆயாஸம்.

வளவன்-சோழன்.

வளே-சங்கம்; பாழி; கைவளே; ஸ்வாபதேசத்தில் அஸாதாரணச்சின்னம்.

வளேதல்-போக்கறுதல்.

வளேப்பிடுகை - ஆளேயிட்டுத் தகைந்து கொள்ளுகை.

வளேப்பு-மறிப்பு.

வளேப்புக்கிடக்கை-மறிப்பிருக்கை.

வளேயல்-கைவளே; விலங்கு.

வ ஊ வ ண ர் - நம்பிழுத்த பிரான்.

வறண்ட-கொதித்த.

வறமுறுகல்-அஸாரம்.

வறுநாற்றம்-வருத்த த்ரவ்யத் தின் நாற்றம்.

வறுநிலம்-வெறுந்தரை.

வன்சேறு-வட்டிச்சேறு.

வன்மை-காடிந்யம்; மிடுக்கு.

வன்னியப்பற்று- பா ஊ ய ப் பற்று; பாஊயகாரர்.

வன்னியம்-குறும்பு; மத்ஸரம்.

வனந்துகல்-துக்கப்படுத்தல்.

வனப்பு-அழகு; பெருமை;நாநா வர்ணம்.

வனம்-சமர்த்தி; அழகு; சம் பத்து; சமஸ்தமும்.

வஊதல்-செய்தல்.

வாங்குதல்-வஊதல்; வலித் தல்.

வா ச ம்-வாசஊ; குளிர்ச்சி.

வாசல்-வழி.

வாசி-அதிசயம்; குதிரை.

வாசிகை-மாஊ.

வாட்டம்-ஸங்கோசம்.

வாட்தீயீடாக-தீக்ஷ்ணமாக.

வாட-நசிக்க.

வாணன்- பா ஞ ஸ ு ர ன் ; மஹாபலி; நிர்வாஹகன்.

வாஞள்-ஆயுசு; வாழ்கிற காலம்.

வாணிபம்-ப்ரயோஜநம்.

வாணியம்-வாணிஜ்யம்; வ்யா பாரம்.

வாஞுதல் - வ ா ள் நு த ல்; வாளோடே கூடினது;தஊ யுடைய ஸ்திரீ என்று அந்யாபதேசம். ஸ்வாப தேசத்தில் தாந்தி; தாந்தி யை யுடையவர்கள்.

வாணிறம்-வெளுத்த நிறம்.

வாய்-வாய்ப்பு;ஸ்வரம்; இடம்.

வாய்க்கை-பலிக்கை.

வாய்கரை-மேலெழ; ஆற் றருகு; கதியின்மை.

வாய்கை-கிட்டுகை; மெய்; ஒட்டி; அழகு; உவமை.

வாய்த்தஊ-மூலம்;முதலிடம்.

வாய்புகுசோறு - வ ா யி ற் சோறு.

வாய்புகுநீர்-த ன க் கு ள் ளே ய ழு த் தி க் கொள்ளுகை; ஜீவனம்.

வாய்மடிகை-சக்தியில்லாமை.

வாய்வாய்-கபோ ல தா டனம்; கன்னத்திலடித்தல்.

வாய்வார்கள்-வாய்ந்தவர்கள்.

வாய்விடாச்சாதி-வ ா ர் த் தை சொல்லவறியாதவன்.

வாய்விடுகை-வ ா சீ க ம ா கச் சொல்லுகை; வாய்விட்டுச் சொல்லுகை.

வாய்வெருவுகை- நிஊப்பின்றி வாயாலே சொல்லுகை.

வாயலகு-மூக்கு.

வாயாடி-வாசாலகன்; வாக்கிலே வர்த்திக்கிறவன்; சொற்படி செய்கிறவன்.

வாயில்வழி-நிறம்; வாசல்வழி.

வாயிறு-கோக்கிராசம்.

வாயிலொட்டி-ஸங்கற்பித்து.

வாயுறை-அருகம் புல்; கபலம்.

வாயோலை - நெல்லுக்குழிக்குப் போடுகிறசீட்டு.

வார்-ஜலம்; சூட்சி; வாரி நிற்கை; பூர்ணம்; நீட்சி; பூர்த்தி; மு லை க் க ச் சு; நெடுமை.

வார்தல்-ஒழுகுதல்; பேர்தல்; நெடுமை.

வாரர்-வட்டக்கடை; வட்டமாகச் சொல்லுகிற கடை; பங்கு முறை.

வாராநின்ற-வந்து கொண்டிருந்த.

வாரி-ஸமுத்ரம்.

வாரிப்பிடியாகப்பிடிக்க - ஒ ரு க் காலே பிடிக்க.

வாருகை-அதிகமாகை.

வால்-வலியது; வெ ளு ப் பு; மிகுதி; பலம்.

வாலாட்டு-கர்வம்; மதிப்பு.

வாலாட்டுகை-கர்விக்கை.

வாலியது-வலியது; பெருமையுடையது.

வாவப்பு-நேர்மாடு.

வாழ்முதல்-வாழ்ச்சிக்கு ப்ரதம ஸாக்ருதம்.

வாள்-காந்தி; அழகு; மிடுக்கு; கத்தி; ஆயுதம்.

வாளேறு காணத்தேளேறுபோமாப்போலே-அதிக துக்கத்தைக் கண்டால் அல்பதுக்கம்போம்; தேளேறு: தேள் கொட்டின உபத்ரவம்.

வான்-பெருமை; ஆகாசம்; மேகம் ; மூலப்பிரகிருதி. நிமிடம்; வீரம்; அதிசயம்.

விசை-வேகம்.

விசைப்பு-அதிசயம்.

விஞ்சை பாணவர் - வித்தியாதரர்.

வடுகன் விடுநகம்-வடுகன் கட்டுகிற கிட்டி.

வியுஷ்டி - விடிவு - அதாவது பலம்-பயன்.

வில்-தேஜஸ்.

விலங்கல்-மலை.

விழுது-வெண்ணெய்.

விளரி-ஆரம்; ஸ் வ ர ம ா ன தைவதம் ; விளரியென்ற பண்; வெளுப்பு; சேறு.

விளிதீந்த-விழந்தற்ற.

விளியாவார்க்க - கோபித்துக் கட்ட.

விலங்கு-மான் குரங்கு முதலாகிய திர்யக் ஜாதிகள்.

வீடு - விடுகை; க் ரு ஹ ம்; மோக்ஷம்.

வீரக்கழல் - கொடையாலும், வீரத்தாலும் கட்டும் கழல்.

வீரப்பாடு-வெற்றி.

வீவு-நாசம்.

வீழ் - விழ; மேல்விழவென்றுமாம்.

வீழ்துணை-விழுந்துணை; விரும்பும் நட்பு.

வீறு-அதிசயம்; கர்வம்; வீற்றிருக்கை.

வெகுண்டு-கோபித்து.

வெஞ்சமம்-யுத்தம்.

வெப்பம்-துக்கம்.

வெல்-வெல்லுகை; ஜயிக்கை.

வெளிறு-மாலின்யம்.

வெற்றி-ஜயம்.

வேட்கை-ஆசை.

வேண்டப்பாடு-வால்லப்யம்.

வேரி-பரிமளம்

வேல்-வெல்லுகை; ஜயிக்கை.

வேற்று-வேவு பார்த்து.

வேனல்-கிரணம்.

வைகல்-நாள்தோறும்.

வைகி-தங்கி.

வைகின-தங்கின.

வைப்பு-நிக்ஷேபம்.

வ்யங்கியம் - த்வனி; சோத்தியம்; தாத்பர்யம்.

வ்யாஸபதஞ் செலுத்துகை-வ்யாஸரைப் போலே...யத்தை யதிஷ்டிக்க வல்லவர்கள்.

வ்ருத்தம்-வட்டணி, ஆகாரம்.

வ்யுஷ்டி-விடிவு; நற்பயன்.